# விவிலியத்தில் மறைத்தூதுப்பணி

## இன்றைய சவால்களும் அணுகுமுறைகளும்

தொகுப்பாசிரியர்

அருள்பணி. சூ. சந்தியாகு ராசா

| | | |
|---|---|---|
| **நூல்** | : | **விவிலியத்தில் மறைத்தூதுப்பணி** |
| | | இன்றைய சவால்களும் அணுகுமுறைகளும் |
| **தொகுப்பாசிரியர்** | : | **அருள்பணி. சூ. சந்தியாகு ராசா** |
| **முதல் பதிப்பு** | : | நவம்பர் 2018 |
| **பக்கங்கள்** | : | xiv + 217 |
| **பிரதிகள்** | : | 2000 |
| **விலை** | : | ரூ. 100/- |
| **தாள்** | : | எஸ். எஸ். மேப்லித்தோ 18.1 (ஜி.எஸ்.எம். 68) |
| **அச்சு** | : | ஆண்டோ பதிப்பகம், சிவகாசி |
| **கிடைக்குமிடம்** | : | தேடல் வெளியீடுகள்<br>புனித பவுல் குருத்துவக் கல்லூரி<br>திருச்சிராப்பள்ளி - 620 001<br>(0431-2412500) |


# உள்ளடக்கம்

**ஆசியுரை** v

**அணிந்துரை** vii

**தொகுப்பாசிரியர் உரை** xi

1. மறைத்தூதுப்பணி: விவிலிய உலகும் இன்றும் 01
   *மேதகு ஆயர் முனைவர் அந்தோணி பீட்டர் அபீர்*
2. பழைய ஏற்பாட்டில் மறைத்தூதுப்பணி 24
   *அருள்பணி. முனைவர் டைனிசியஸ் லாரன்ஸ்*
3. மகிழ்ந்திரு! நினைத்திரு! 51
   சஉ 11:4-12:8 காட்டும் அகநோக்கு மறைத்தூதுப்பணி
   *அருள்பணி. முனைவர் யேசு கருணாநிதி*
4. இறையாட்சி முழக்கம்: இயேசுவின் திருத்தூதுரைப்பணி 68
   *அருள்பணி. முனைவர் ச. ஸ்தனிஸ்லாஸ்*
5. இயேசுவின் மறைத்தூதுப்பணியாளர்கள் 87
   சபை உரையாளர்களா? சமூகப் போராளிகளா?
   *அருள்பணி. முனைவர் செ. மைக்கில் ராஜ்*
6. இயேசுவின் மறைத்தூது ஆணை (மத் 28:16-20) 111
   *அருள்பணி. முனைவர் மா. உபால்டு*
7. பவுலின் மறைத்தூதுப்பணி 133
   *அருள்பணி. முனைவர் வ. இரபேல்*
8. திருஅவையின் படிப்பினைகளில் மறைத்தூதுப்பணி 153
   *அருள்பணி. முனைவர் சூ. சந்தியாகு ராசா*
9. தமிழகத்தில் மறைத்தூதுப்பணி: சவால்களும் அணுகுமுறைகளும் 173
   *மேதகு ஆயர் முனைவர் நசரேன் சூசை*
10. இன்றைய தமிழகச் சூழலில் அருள்பணி அக்கறைகள் 195
    *அருள்பணி. முனைவர் அ. ஆல்பர்ட்*

மேதகு முனைவர் அந்தோனி பாப்புசாமி
மதுரை உயர்மறைமாவட்டப் பேராயர்
பேராயர் இல்லம்
மதுரை - 625 007



# ஆசியுரை

“இன்றைய திருஅவைசார் கல்வி, குறிப்பாக இறையியல், என்றும் இளமையான, ஈர்க்கக்கூடிய இயேசுவின் நற்செய்திக்கான ஆன்மிக, அறிவுசார், மற்றும் இருத்தியல் அறிமுகத்தை வழங்குவதாக இருந்து, ஒட்டுமொத்த உலகில் இன்று எழும் முரண்பாடுகளை, பிரச்சினைகளை எதிர்கொண்டு, மற்ற கலைப்பிரிவுகள் மற்றும் துறைகளோடு இணைந்து நற்செய்தி அறிவிப்புக்கான புதிய வடிவங்களை உருவாக்க வேண்டும்” (*உண்மையின் மகிழ்ச்சி,* 4) என்று அறிவுறுத்துகின்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்நற்செய்தி அறிவிப்புப்பணியை முன்னிறுத்தி, அதை இறையியல் ஆய்வுக்கு உட்படுத்தி, இன்றைய நம் சூழலுக்கேற்ப அதை மறுவடிவமைக்கவும் செயல்படுத்தவும் தேவையான காரணிகளைக் கண்டறியும்முகத்தான், *விவிலியத்தில் மறைத்தூதுப்பணி: இன்றைய சவால்களும் அணுகுமுறைகளும்* என்ற தலைப்பில் இந்த ஆண்டு நவம்பர் மாதம் 22, 23 ஆகிய நாள்களில், திருச்சி புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் இறையியல் ஆய்வரங்கம் நடத்தப்பெறுவது குறித்து நான் மகிழ்கிறேன். மறைத்தூதுப்பணி பற்றிய விவிலியக் கண்ணோட்டம், திருஅவையின் போதனைகளில் மறைத்தூதுப்பணி, தமிழக மறைத்தூதுப்பணி சந்திக்கும் சவால்கள் மற்றும் அதில் மேற்கொள்ளும் அணுகுமுறைகள், மற்றும் தமிழகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய புதிய அருள்பணிகள் என்னும் தலைப்புக்களில் ஆய்வுத்தாள்கள் வாசிக்கப்படுகின்றன. இறையியல் மாணவர்கள் தாங்கள் பயிலும் பாடங்களோடு திருஅவையின் இன்றைய பணிகளை அறியவும், அறிவதன் வழியாகத் தங்கள் கண்ணோட்டத்தைக் கூர்மைப்படுத்தி அதற்கேற்ப தங்கள் தயாரிப்பை ஒருமுகப்படுத்தவும் இந்த ஆய்வரங்கம் உதவும் என்பதில் ஐயமில்லை. மேலும், நம் தமிழகத் திருஅவையின் இன்றைய அருள்பணிகளைத் திறனாய்வு செய்து, நாம் செய்துவரும் பணிகளை

மேம்படுத்துவதும், புதிய பணி முன்னெடுப்புக்களைக் கண்டறிவதும் இந்த ஆய்வரங்கின் நோக்கமாக இருக்கிறது.

பல்வேறு மொழி, பண்பாடு, சமயம் எனப் பன்முகத்தன்மை இயல்பாகவே மேலோங்கி இருக்கும் நம் இந்திய நாட்டில், 'ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே சமயம்' என ஒற்றைத்தன்மை வலிந்து புகுத்தப்பட்டு, சமய அடிப்படைவாதம் மேலோங்கி நிற்கும் இக்காலத்தில் நம் மறைத்தூதுப்பணி முன்னைய காலத்தைவிட இன்னும் அவசியமாகிறது. மறைத்தூதுப்பணியின் நோக்கம் கிறித்தவத்தின் நம்பிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது அல்ல; மாறாக, நாம் இருக்கும், இயங்கும் தளங்களில் கிறிஸ்துவின் மதிப்பீடுகளை வாழ்வது. "நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்" (யோவா 13:35) என்று 'அன்பு' என்ற ஒற்றைச் சொல்லைச் சீடத்துவத்தின் அளவுகோலாக வைக்கிறார் இயேசு. ஆக, நம் இறைநம்பிக்கையில் வேரூன்றி, பிறரன்பில் ஒருவர் மற்றவருக்குச் சேவைசெய்யும் போதெல்லாம் நாம் மறைத்தூதுப்பணி செய்கிறோம்.

'மறைத்தூதுப்பணி' பற்றிய தங்கள் தேடல்களை ஆய்வரங்கத்தில் ஆய்வுத்தாள்களாகச் சமர்ப்பிக்கும் மற்றும் நூலில் கட்டுரைகளாகப் பதிவுசெய்யும் ஆயர்களையும் அருள்தந்தையர்களையும் வாழ்த்துகிறேன். மேலும், இந்த ஆய்வரங்கத்தில் பங்கேற்கும் அருள்தந்தையர்கள், இருபால் துறவியர்கள், பொதுநிலையினர், மற்றும் இறையியல் மாணவர்களுக்கும் என் வாழ்த்துகள். இந்த ஆய்வரங்கத்தைத் திட்டமிட்டுச் செயல்படுத்தும் புனித பவுல் குருத்துவக் கல்லூரி **அதிபர் அருள்திரு. ஆரோக்கியராஜ்** மற்றும் **இறையியல் துறைத் தலைவர் அருள்திரு. சூ. சந்தியாகு ராசா** ஆகியோருக்கும் சிறப்பான பாராட்டுக்கள்.

உங்கள் அனைவருக்கும் இறையாசீர் உரித்தாகுக!

† அந்தோனி பாப்புசாமி
பேராயர், மதுரை உயர்மறைமாவட்டம்
ஆயர்நிர்வாகக் குழுத் தலைவர்,
புனித பவுல் குருத்துவக் கல்லூரி

மதுரை
01.11.2018



# அணிந்துரை

நமது புனித பவுல் குருமடத்தில் ஆண்டுதோறும் கருத்தாய்வரங்கம் நடக்கும்போது, அந்த ஆய்வரங்கத்தின் சொற்பொழிவுகளை ஒரு நூலாக வெளியிடும் பழக்கம் நடைமுறையில் உள்ளது. இப்பின்னணியில்தான் இந்தாண்டு நடைபெற்ற *விவிலியத்தில் மறைத்தூதுப்பணி: இன்றைய சவால்களும் அணுகுமுறைகளும்* என்னும் இறையியல் ஆய்வரங்கத்தின் கட்டுரைகள் இந்நூலில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

மறைத்தூதுப்பணி என்பது இன்றோ நேற்றோ தொடங்கியது அல்ல. பழைய ஏற்பாட்டிலேயே இதற்கான அடித்தளம் இடப்பட்டுள்ளதை நாம் காணலாம். புதிய ஏற்பாட்டில் தம் போதனை, கட்டளை ஆகியவற்றின் வழியாக, நம் ஆண்டவர் இயேசுவே இதை 2000 ஆண்டுகளுக்கு முன் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார். அவருடைய பணி தம் தந்தையாம் கடவுளையும் அவருடைய மீட்புத் திட்டத்தையும் முழுமனித விடுதலையையும் மையமாகக் கொண்டிருந்தது. இப்பணிக்காகவே தாம் வந்ததாகவும் அவர் கூறுகிறார்: "நாம் அடுத்த ஊர்களுக்குப் போவோம், வாருங்கள்; அங்கும் நான் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும். ஏனெனில் இதற்காகவே நான் வந்திருக்கிறேன்" (மாற் 1:38). மேலும் அவர், "நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்... நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்" (மத் 28:19-20) என்றும் கூறினார்.

பெந்தகோஸ்து நாள் அன்று தங்கள்மீது பிளவுண்ட தீ நாவு வடிவத்தில் இறங்கிவந்த தூய ஆவியாரால் திருத்தூதர்கள் ஆட்கொள்ளப்பட்டனர். உலகெங்கும் சென்று இறையாட்சியை அறிவிக்கும் மறைத்தூதுப்பணியை ஆற்றினர். எடுத்துக்காட்டாக, புனித பேதுரு ஒரே நேரத்தில் 3000 பேருக்குத் திருமுழுக்குக் கொடுத்தார் (திப 2:1-2,41). புனித பவுலடியாரும், நான் "கடவுளின் நற்செய்திப் பணிக்கென ஒதுக்கி வைக்கப்பட்டவன்" (உரோ 1:1) என்று கூறினார்.

இன்று மறைத்தூதுப்பணி என்பது ஆயர்களின் பணி மட்டுமோ, அருள்பணியாளர்களின் பணி மட்டுமோ கிடையாது. ஏனெனில், 'திருஅவையைப் பரப்பும் கடமை திருமுழுக்குப் பெற்ற அனைவருக்கும் உண்டு' என்பது திருஅவையின் போதனை.

இப்பின்னணியில்தான் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் *நற்செய்தி அறிவிப்பு பணி* என்னும் ஏடு பின்வருமாறு கூறுகிறது: ''நற்செய்தி அறிவிப்பதே பயணம் செய்யும் திருஅவையின் இயல்பான பணி'' (*திந*, 2). மேலும், ''திருஅவையின் உள்ளியல்பிலிருந்து நற்செய்திப்பணி பிறக்கிறது'' (*திந*, 6) என்றும் கூறியுள்ளது. ஆகவே, மறைத்தூதுப்பணி என்பது திருஅவையின் இயல்பு, உயிர்மூச்சு, உயிர்நாடி ஆகும். வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமென்றால், மறைத்தூதுப்பணி இல்லாமல் திருஅவை இல்லை. மறைத்தூதுப்பணி என்பது வெறும் நற்செய்திப் பணியை ஆற்றுவது மட்டும் அல்ல; மாறாக, அதையும் கடந்து இறைவனின் அன்பு, இரக்கம், மன்னிப்பு, அவர்தரும் புதுவாழ்வு, அருள்வளங்கள், நற்செய்தி மதிப்பீடுகள், இறையாட்சியின் விழுமியங்கள் போன்றவற்றையும் மானுடத்துக்குப் பறைசாற்றுவதாக இருக்கவேண்டும்.

ஆகவே இம்மறைத்தூதுப்பணி திருமுழுக்குப் பெற்ற நம் அனைவரின் கடமையாகும். ஆனால், பல வேளைகளில் கிறிஸ்துமீது கொண்டுள்ள நம்பிக்கையை அறிக்கையிடுவதோடு நாம் நின்றுவிடுகின்றோம். இது போதாது. மாறாக, நாம் எதை நம்புகிறோமோ அதைச் செயலில் வெளிப்படுத்தவும் வாழ்ந்து காட்டவும் அழைக்கப்படுகின்றோம். இவ்வாறு, நமது வாழ்வினாலும் நாம் மறைத்தூதுப்பணியை ஆற்ற வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். ஏனெனில், ''மனித வரலாற்றில் நற்செய்தியானது சுதந்திரம், முன்னேற்றம் ஆகியவற்றிற்குச் சாதகமான புளிப்பு மாவாய் இருந்து வந்துள்ளது'' (*திந*, 8) என்று திருச்சங்கம் கூறியுள்ளது. மேலும் *இன்றைய உலகில் திருஅவை* என்னும் ஏடு பின்வருமாறு கூறுகிறது: ''கிறிஸ்துவின் நற்செய்தி வீழ்ந்த மனிதரின் வாழ்வையும் பண்பாட்டையும் இடையறாது புதுப்பிக்கின்றது... தவறுகளையும் தீமைகளையும் எதிர்த்து நின்று முறியடிக்கிறது... மக்களின் ஒழுக்கநெறியைத் தூய்மைப்படுத்தி மேம்படுத்துகிறது (*இஉதி*, 58). ஆனால், நடைமுறையில் இது பெரும்பாலும் நடைபெறுவது இல்லை. இதனால்தான் காந்தியும் கூட, ''நான் கிறிஸ்துவை அன்பு செய்கிறேன்; ஆனால் கிறித்தவர்களை அல்ல; ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவின் போதனையை வாழ்வாக்குவது இல்லை'' என்று கூறினார்.

கிறிஸ்துவின் இத்தகைய மறைத்தூதுப்பணி என்பது இன்று நமது திருஅவையின் பணி; நமது பணி. அதை நாம் தொடர்ந்து ஆற்ற வேண்டும்.



இதுவே திருஅவையினுடைய செயல்பாடாகவும் இருப்பாகவும் இருக்க வேண்டும்.

இந்நூலில் இரு ஆயர்களும் ஐந்து அருள்பணியாளர்களும் ஆற்றிய சொற்பொழிவுகளும் மேலும் மூன்று கட்டுரைகளுமாக மொத்தம் பத்துக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் பழைய ஏற்பாட்டுப் பார்வையிலும், இயேசுவின் பார்வையிலும், புனித பவுலின் பார்வையிலும், திருஅவையின் போதனையிலும் மறைத்தூதுப்பணி எவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதை அவர்கள் எடுத்துரைக்கின்றனர். மேலும், இன்றைய சூழலில் நமது தமிழகத்தில் மறைத்தூதுப்பணி எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? அவற்றை நாம் எப்படி எதிர்கொள்ள வேண்டும்? நாம் முன்னெடுக்க வேண்டிய புதிய அருள்பணிகள் யாவை என்பது பற்றியும் தெளிவாக விளக்கியுள்ளனர். இக்கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து மிக அழகிய முறையில் அச்சிட்டுத் *தேடல் வெளியீடுகள்* வழியாக நம் கைகளில் ஒரு நூலாக வெளிக்கொணர உழைத்த எமது புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் **இறையியல் துறைத் தலைவர் அருள்பணி. முனைவர் கூ. சந்தியாகு ராசா** அவர்களுக்கு நம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், கட்டுரையாசிரியர்கள் அனைவருக்கும் நம்முடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று மறைத்தூதுப்பணி ஆற்றக் கடமைப்பட்டிருக்கும் ஆயர்கள், அருள்பணியாளர்கள், பொதுநிலையினர் குறிப்பாக, அருள்சகோதரிகள், நற்செய்திப் பணியாளர்கள் ஆகிய அனைவருக்கும் இந்நூல் ஒரு மிகச் சிறந்த தூண்டுதலாகவும் வழிகாட்டியாகவும் கையேடாகவும் திகழும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இந்நூலைப் படிக்கும் அனைவரும் ஆண்டவர் இயேசு தங்களிடம் ஒப்படைத்துள்ள மறைத்தூதுப்பணியை, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, சிறந்த முறையில் செயல்படுத்த வேண்டும். ஏனெனில் திருஅவை ''நற்செய்தியின் தூதுரையால் உலகம் அனைத்தையும் ஒளிரச் செய்கிறது'' (இஉதி, 92). அப்பணியை திறம்பட ஆற்றுவதற்கு இந்நூல் ஒரு கருவியாக அமையும் என்பது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. தழைத்தோங்கட்டும் நமது மறைத்தூதுப்பணி!

**திருச்சி** **அருள்பணி. முனைவர் ச. ஆரோக்கியராஜ்**
**01.11.2018** **அதிபர், புனித பவுல் குருத்துவக் கல்லூரி**

# தொகுப்பாசிரியர் உரை

*விவிலியத்தில் மறைத்தூதுப்பணி* – இந்தத் தலைப்பே சிலருக்குச் சில கேள்விகளை எழுப்பலாம். மறைத்தூதுப்பணி என்றாலே அது சமய விரிவாக்கம்தானே; அப்படியிருக்கையில் விவிலியம் மறைத்தூதுப்பணிபற்றி எங்குக் கூறுகின்றது எனச் சிலர் கேட்கலாம். ஆனால், விவிலியத்தை ஆழ்ந்து வாசிக்கும்போது மறைத்தூதுப்பணிதான் விவிலியத்தின் மையக் கருத்து என்பது தெள்ளத் தெளிவாகும். இருப்பினும், விவிலியப் பார்வையில் மறைத்தூதுப்பணி என்பது சமய விரிவாக்கம் என்ற பொருளில் காணப்படவில்லை; மாறாக, கடவுளால் தெரிவுசெய்யப்பட்ட சமூகம் தங்களைச் சுற்றி வாழும் ஏனைய சமூகங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டான சமூகமாக, சமயமாக, வாழக் கடவுளால் அழைக்கப்பட்ட ஒன்று எனும் நோக்கில் காணப்பட வேண்டும். இவ்வாறாக, மறைத்தூதுப்பணியின் ஊற்றாகவும் ஆசிரியராகவும் கடவுளே விளங்குகின்றார் என்ற பார்வையில்தான் இது புரியப்பட வேண்டும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எகிப்தில் பல்வேறு சமய நம்பிக்கைகளுடன் பல்வேறு இனக்குழுக்களாக, அடிமைகளாக வாழ்ந்த மக்களைக் கடவுள் தெரிவுசெய்து அவர்களைத் தமது மக்களாக்கினார்: "உங்களை நான் என் மக்களாகத் தேர்ந்தெடுப்பேன். உங்களுக்குக் கடவுளாக நான் இருப்பேன்" (விப 6:7) என அவர்களுடன் உடன்படிக்கை செய்தார்; அவர்கள் ஒரு புதிய சமயக் கடவுள் நம்பிக்கையுடன் ஒரு புதிய குழுவாக வாழ அழைப்பு விடுத்தார். இதன்மூலம், அவர்கள் தங்களைச் சுற்றி வாழும் ஏனைய சமூகங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக வாழ அழைக்கப்பட்டனர். இவ்வாறாக, ஓர் அன்புச் சமூகமாக, நீதியைக் கடைப்பிடிக்கும் சமூகமாகத் தங்களின் எடுத்துக்காட்டான வாழ்வின் மூலம் ஏனைய சமூகங்களுக்கு தங்களின் இறை/மறைநம்பிக்கையைத் தூதுரைக்கும் சமூகமாக வாழ்ந்தார்கள். இருப்பினும், மானிட பலவீனம் காரணமாக ஏனைய சமூகங்களைப்போல இஸ்ரயேல் மக்களும் வாழ முற்பட்டபோதுதான் இஸ்ரயேல் மக்கள் மீண்டும் உடன்படிக்கைச் சமூகமாக, தங்களின் கடவுள்/சமய நம்பிக்கையை வெளிப்படுத்தும் சமூகமாக வாழ இறைவாக்கினர்கள் அழைப்பு விடுத்தார்கள். இவ்வாறாக, அவர்கள் குறிப்பிட்ட இறைநம்பிக்கையை வாழ அழைக்கப்பட்டவர்கள் என்பது அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் புதிய உடன்படிக்கைச் சமூகமாக – இறையாட்சிச் சமூகமாக – வாழ இயேசுவின் அழைப்பும் அறைகூவலும் காணப்படுகின்றது. ஒரே தந்தையின் பிள்ளைகள் எனும் சகோதரத்துவ உறவோடு வாழ வேண்டும் என்பதே இயேசுவின் கனவு. இவ்வாறாக, இறையாட்சிச் சமூகம் ஏனைய சமூகங்களுக்கு ஒரு மாதிரி சமூகமாக வாழ்வதே மறைத்தூதுப்பணிதான். தொடக்கத் திருஅவை ஓரளவிற்கு இயேசுவின் கனவை நனவாக்குவதற்கு முயன்றது; அது தம் வாழ்வால் தமது சமய நம்பிக்கையை அறிவித்தது; புளிப்பு மாவாக, ஒளியாக இருந்து ஏனைய சமயத்தவரை ஈர்த்தது.

இருப்பினும், நான்காம் நூற்றாண்டு தொடங்கி கிறித்தவம் அரசு சமயமாக மாறிய பின்பு கிறிஸ்துவின் இறையாட்சிக் கனவு மெல்ல மெல்ல மங்க ஆரம்பித்தது. திருஅவையே ஒரு புதிய பரிமாணம் எடுத்தது. திருஅவை என்றாலே திருஅவையின் பல்வேறு நிலைகளில் காணப்படும் பல்வேறு படிநிலை அமைப்புகள், மரபுகள், நிர்வாகச் செயல்பாட்டு முறைகள், கண்டிக்கும் மொழிநடை, கோட்பாடுகள் போன்றவைதான் என்றாகிவிட்டது. மேலும், இறையாட்சிக்கான அழுத்தம் குறைந்து திருஅவை விரிவாக்கம் அழுத்தம் பெற்றது. எனவேதான், இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூட மறைத்தூதுப்பணி என்பதை திருஅவை விரிவாக்கம் எனக் கருதி எல்லா மக்களையும் கிறித்தவ சமயத்துக்குள் கொணர வேண்டும் எனக் கூறியது. இருப்பினும், இரண்டாம் வத்திக்கான் சங்கமும் அதற்குப் பிந்திய திருஅவையின் போதனைகளும் நற்செய்திப்பணி என்பது உலகையே இறையாட்சிச் சமூகமாக மாற்றும் செயலாகும் எனக் கூறுகின்றன; அதற்குத் திருஅவை உப்பாக, ஒளியாக, புளிப்பு மாவாக இறையாட்சியின் கருவியாகச் செயல்பட வேண்டும் என்கின்றன. மேலும், இறையாட்சிக் கனவை நனவாக்குவது திருஅவையின் கடமை மட்டுமல்ல; இது அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ள கடமை என்கின்றன.

இத்தகைய பார்வைகளோடும் அழுத்தங்களோடும்தான் *விவிலியத்தில் மறைத்தூதுப்பணி: இன்றைய சவால்களும் அணுகுமுறைகளும்* எனும் இந்நூல் வெளிவருகின்றது. இந்நூல் 2018ஆம் ஆண்டு நவம்பர் 22, 23 தேதிகளில் எமது பவுல் குருத்துவக் கல்லூரியில் **விவிலியத்தில் மறைத்தூதுப்பணி: இன்றைய சவால்களும் அணுகுமுறைகளும்** எனும் தலைப்பில் நடைபெற உள்ள இறையியல் ஆய்வரங்கத்தில் வாசிக்கப்பட உள்ள ஏழு கட்டுரைகளையும், ஏனைய மூன்று கட்டுரைகளையும் கொண்டுள்ளது.




இக்கட்டுரைகளை எழுதி வழங்கிய ஆயர்கள், அருள்பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய எம் பவுல் குருத்துவக் கல்லூரியின் ஆயர் நிர்வாகக் குழுத் தலைவரும், தமிழக ஆயர் பேரவைத் தலைவருமாகிய மதுரை உயர்மறைமாவட்டப் பேராயர் *மேதகு முனைவர் அந்தோணி பாப்புசாமி* அவர்களுக்கு எனது நன்றி. இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய எம் பவுல் குருத்துவக் கல்லூரி அதிபர் *முனைவர் அருள்பணி. ச. ஆரோக்கியராஜ்* அவர்களுக்கும் எனது நன்றி. கட்டுரைகள் அனைத்தையும் மொழித்திருத்தம் செய்த *அருள்பணி. அமுதன் அடிகள்* அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. இந்நூல் வெளிவர உதவிய எம் குருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் என் நன்றிகள்.

சிறப்பான முறையில் கணினியில் ஏற்றி நூல் வடிவம் கொடுத்தவர் எம் அலுவலகப் பணியாளர் அ. ஜான்சி. அவருக்கும் என் நன்றி. நூலை அழகுற அச்சிட்டுத் தந்தவர்கள் சிவகாசி, ஆண்டோ அச்சகத்தார். அவர்களுக்கும் நன்றி.

அன்புடன்

புனித பவுல் குருத்துவக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி — அருள்பணி. சூ. சந்தியாகு ராசா
09.11.2018 — தலைவர், இறையியல் துறை



# 1. மறைத்தூதுப்பணி விவிலிய உலகும் இன்றும்

*மேதகு ஆயர் முனைவர் அந்தோணி பீட்டர் அபீர்*
*சுல்தான்பேட் (பாலக்காடு) மறைமாவட்டம்*

## முன்னுரை

கொல்கொத்தா! இங்கே கைவிடப்பட்ட நிலையில் பலர் இறந்தனர். பல குழந்தைகள் அநாதைகளாகத் தெருவில் வீசப்பட்டனர். அது 1948! அன்னை தெரெசா அவர்களுக்கு அன்பும் ஆதரவும் அளித்து 1997வரை இறை இரக்கத்தின் தூதராகத் திகழ்ந்தார். எல் சால்வதோர் தெற்கு அமெரிக்காவில் உள்ள ஒரு நாடு. ஆஸ்கார் ரொமேரோ இங்கே 1977இல் பேராயராக நியமிக்கப்பட்டார். அந்நாட்டில் நிலவிய இராணுவ அடக்குமுறைகள், அநீதி, அக்கிரமங்கள் ஆகியவற்றிற்கு எதிராகத் தொடர்ந்து போராடினார். அதற்காகவே 1980இல் கொலை செய்யப்பட்டார். இவ்விருவரும் வெவ்வேறு முறையில் மறைத்தூதுப் பணியாளர்களாகத் திகழ்ந்தனர்.

இயேசு, தாம் விண்ணேற்பு அடைவதற்கு முன் “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” என்று தம் சீடர்களுக்குக் கட்டளை அளித்தார் (மாற் 16:15). இக்கட்டளையின் பின்னணியில் நோக்கும்போது திருஅவையின் அடிப்படைத்தன்மையே மறைத்தூதுப்பணிதான் என்பது நமக்குப் புரிகிறது.[1] அதனால்தான் ‘தூதுரைக்காமல் நாங்கள் இருக்க முடியாது’ என்று புனித பேதுருவும் (திப 4:20), ‘போதிக்காமல் என்னால் இருக்க முடியாது’ என்று புனித பவுலும் (1 கொரி 9:16) ஆணித்தரமாக எடுத்துக்கூறி திருஅவையின் தூதுரைப்பணியின் கடமையையும் முக்கியத்துவத்தையும் அன்றே எடுத்துரைத்தனர். கிறித்தவர் ஒவ்வொருவரும் இதைத்தான் முதன்மையான நோக்கமாகக் கொண்டிருக்க

வேண்டும் என்பதை அன்றே புனித பவுல் (2 திமொ 4:2) கற்பித்தார். அவரைத் தொடர்ந்து வந்த திருஅவையின் படிப்பினைகளும்[2] வலியுறுத்தின.[3] இறைவாக்கினர் யோனா தொடங்கி பவுல், தோமா மற்றும் அவர்களைத் தொடர்ந்து வந்த மறைப்பணியாளர்கள், பிற இனத்தாருக்கும், பிற சமய நம்பிக்கை கொண்டவர்களுக்கும் நற்செய்தியை அறிவிப்பதுதான் முறையான மறைத்தூதுப்பணி என்று கருதினர். தொடக்கத்தில் ஆண்டவரின் இரண்டாம் வருகைக்கு மக்களைத் தயார் செய்யும் நோக்கில்தான் மறைத்தூதுப்பணி செயல்பட்டது.[4] ஆனால், நாளடைவில் சமூக, வரலாற்றுச் சூழலில் மறைத்தூதுப்பணி நடைபெறத் தொடங்கி, "கிறிஸ்துவின் உயிர்ப்பு எவ்வாறு அனைத்து மக்களுக்கும் அவரவர் நிலையில் பொருந்துகிறது"[5] என்ற முறையில் தெளிவும் கூர்மையும் பெற்றது.[6] இத்தருணத்தில், மறைத்தூதுப்பணியினை இன்றைய சவால்களின் பின்னணியில் எப்படி மேன்மையுற ஆற்ற முடியும் என்று இவண் காண்போம்.

## விவிலியமே மறைத்தூதுப் புத்தகம்!

இறைத்தூதுப்பணியின் விளைவே திருவிவிலியம்! ஆபிரகாம் தொடங்கி ஈசாக்கு, யாக்கோபு போன்ற குலமுதுவர்களுக்கும், மோசே போன்ற மாபெரும் விடுதலை வீரர்களுக்கும், தாவீது போன்ற அரசர்களுக்கும், எசாயா போன்ற இறைவாக்கினர்களுக்கும் கடவுள் தம் மீட்புத்திட்டத்தையும் வெளிப்பாட்டையும் அறியச் செய்தார். இறைவெளிப்பாட்டுச் செய்திகளைக் கேட்டறிந்த இஸ்ரயேலர், பின்னர், தொடக்க காலக் கிறித்தவர்கள் தங்களின் வழிவந்தோருக்குத் தூதுரைத்தனர். இதற்குக் கடவுளே கூறிய வழிமுறை: "நீ அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல். உன் வீட்டில் இருக்கும்போதும், உன் வழிப்பயணத்தின்போதும், நீ படுக்கும்போதும், எழும்போதும் அவற்றைப் பற்றிப் பேசு, உன் கையில் அடையாளமாக அவற்றைக் கட்டிக்கொள். உன் கண்களுக்கிடையே அடையாளப் பட்டமாக அவை இருக்கட்டும். உன் வீட்டின் கதவு நிலைகளிலும் நுழைவாயில்களிலும் அவற்றை எழுது" (இச 6:7-9). இதற்கு ஏற்ப இறைநம்பிக்கையுள்ள மக்கள் இறைவெளிப்பாட்டை வாய்மொழி மரபிலும் எழுத்து மரபிலும் தொடர்ந்து வரும் சந்ததியினருக்கு அளித்தனர். அவர்களது உயிருள்ள மரபுவழித் தூதுரைப்பணி மிக மேன்மையானது.[7]





பழைய, புதிய ஏற்பாட்டுக் காலங்களில் இறைவெளிப்பாட்டின் தூதுரைப்பணி பலவித நம்பிக்கை மரபுகளில் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இந்த மரபுகள்கூட அவரவர் வாழ்க்கைச் சூழலில் *(Sitz im Leben)* உருவாகியது என்பது அறிஞர்களின் கருத்து.[8] இஸ்ரயேல் மக்கள் தாங்கள் கேட்டறிந்த வெளிப்பாடுகளில் மட்டுமின்றி, அவர்களது வரலாற்று நிகழ்வுகளிலும் இறைச் செய்தியைக் கண்டனர் என்பதுடன், அவற்றை அடுத்துவரும் சந்ததியினருக்கும் எடுத்துச் சென்றனர்.[9] ஆபிரகாம், மோசே, தாவீது போன்ற இறைத்தூதர்கள் மூலம் யாவே கடவுள், இஸ்ரயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பின்னணியில் இறைவெளிப்பாடு எடுத்துரைக்கப்பட்டது என்பதும் உண்மையே.[10]

புதிய ஏற்பாட்டுப் பின்னணியில் நோக்கும்போது இயேசு போதித்தவை திருத்தூதர்களின் மறைத்தூது வழியாக வாய்மொழி மற்றும் எழுத்து மரபுகளாக உருவாயின. இவற்றை 'மக்களிடையே ஒப்படைத்தவாறே' எல்லாவற்றையும் கருத்தாய் ஆய்ந்து ஒழுங்குபடுத்திச் சிலர் எழுதி வைத்தனர் (லூக் 1:2-4). அவையே புதிய ஏற்பாடு என்ற மறைத்தூது நூலாகும். எனவே, மறைத்தூதுப் பணியின் அடிப்படைச் செய்தி கடவுளும் அவர் திருமகன் இயேசு கிறிஸ்துவும் மனிதருக்கு அளிக்கும் மீட்பு என்றால் (தொநூ 12:3; லூக் 2:11), இஸ்ரயேல் மக்களும் தொடக்கத் திருஅவையும் அதற்கு வடிவம் கொடுத்தனர்; அவற்றுக்கு அவ்வப்போது சிலர் எழுத்து வடிவில் உருக்கொடுத்து, திருவிவிலியம் என்ற மறைத்தூதுரையை அளித்தனர்.

## பழைய ஏற்பாட்டுக் காலத்தில்

'பசார்' *(basar)* என்ற எபிரேய வார்த்தையையும், 'எவாங்கலித்சோ' என்ற கிரேக்க வார்த்தையையும் மறைத்தூது அறிவிப்பு என மொழியாக்கம் செய்கிறோம். இதற்கு 'வெற்றியின் நற்செய்தியை அறிவித்தல்' என்பதே அடிப்படைப் பொருள். அதுவும், போரின் வெற்றியை அறிவித்தலையே இவ்வார்த்தைகள் குறித்தன.[11] பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இதைப் பயன்படுத்தியபோது பெரும்பாலும் இஸ்ரயேல் மக்கள் அல்லது யாவே கடவுள் அடைந்த வெற்றிச் செய்தி அறிவித்தலைக் குறிக்கப் பயன்படுத்தினர் (1 சாமு 31:9; 2சாமு 18:31; 1அர 1:42; எசா 40:9, 41:27, 52:7, 61:1, திபா 20). இது

தூதுரை என்றாலும் மறைத்தூதுப்பணியை இறைவாக்கினர்கள் மூலமே இறைவன் எடுத்துச் சென்றதைக் காண முடிகிறது. இணைச்சட்ட நூல் மரபுப்படி மோசே, தெபோரா, சாமுவேல் போன்றோர் (இச 18:15-18) இறைச்செய்தியைப் பெற்று, மக்களுக்கு மறைத்தூது அளித்தனர். கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு அளிக்கும் மீட்பு என்ற வெற்றிச் செய்தியிலேயே இவர்களது மறைத்தூதுப்பணி நிலை கொண்டது.[12] இருப்பினும், மோசே தொடங்கி பழைய ஏற்பாட்டின் இறுதி இறைவாக்கினர் என்று கருதப்படும் மலாக்கி வரை[13] யாவரும் கடவுளின் தூதுவர் அல்லது இடைநிலையாளர் என்ற நிலையில்தான் இறைத்தூது அளித்தனர் (ஆமோ 7:2,4; செக் 1:7-17; 1 அரச 22; எசா 6; மீக் 3). 'யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகிறேனோ...' (எரே 1:7), 'என் சொற்களை உன் வாயில் வைக்கிறேன்' (எரே 1:9) என்று எரேமியாவிடமும், 'மானிடா, நீ காண்பதைத் தின்று விடு' (எசே 3:1), 'நான் உனக்குக் கூறும் சொற்களை எல்லாம்...' (எசே 3:10) என்று எசேக்கியேலிடமும் ''நீ புறப்பட்டு நினிவே நகருக்குப் போய், அதற்கு வரவிருக்கின்ற அழிவைப்பற்றி அறிவி'' என்று யோனாவிடமும் (1:2) கடவுள் கூறிய வார்த்தைகளை நோக்கும்போதும், ''இஸ்ரயேல் சென்று இறைவாக்கு உரைத்திடு'' என்று கடவுளே தன்னை அனுப்பியதாக ஆமோஸ் கூறும் சாட்சியத்தைக் காணும்போதும் (7:15) மேலே குறிப்பிட்ட கருத்து தெளிவாகிறது. மேலும், இவர்களது அடிப்படை மந்திரமே, ''ஆண்டவர் கூறுவது இதுவே'' என்பதுதான்.[14] தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை விடுத்து, தங்கள் சொந்தச் செய்தியை அல்லாமல், கடவுளின் தூண்டுதலால் அவர்கள் பெற்ற செய்தியையே மக்களுக்குத் தூதுரைத்தனர் என்பது இதனால் புலப்படுகிறது.

இறைவாக்கு நூல்களை ஆழ்ந்து நோக்கும்போது பழைய ஏற்பாட்டு மறைத்தூதுப்பணியின் மற்றொரு தன்மை வெளிப்படுகிறது. அஞ்சாதீர்கள், கடவுள் உங்களைக் கைவிட மாட்டார்; கடவுள் நல்ல ஆயனாக இருந்து (எசே 34), 'புதிய இதயத்தை அளித்து' (எசே 11:19; 36:26) புதுவாழ்வு அளிப்பார் (எசே 36:16). வீழ்ந்து கிடக்கும் தாவீதின் கூடாரத்தை மீண்டும் உயர்த்துவார் (ஆமோ 9:11) - இதுபோன்ற நம்பிக்கையூட்டும் நற்செய்தி அறிவிப்புகள் பல காலக் கட்டங்களில் அளிக்கப்பட்டது உண்மைதான். ஆனால், பழைய ஏற்பாட்டின் அடிப்படைத் தூதுரைப்பணி என்னவெனில், உடன்படிக்கை வாழ்வை மறந்து, அதற்கு எதிராக வாழும் இஸ்ரயேல் மக்கள், திருந்தி வாழ/திரும்பி வர வேண்டும் என்பதுதான். இதன் பின்னணியில் அவர்களது அடிப்படைத் தூதுரைப்பணி





எச்சரிக்கைச் செய்தியாக இருந்தது[15] (எசா 30:12-14; எசே 6:10-12,17-19, 11:13). இறைவாக்கு நூல்களை மேலோட்டமாகப் படித்தாலே இவ்வுண்மை நமக்குத் தெளிவாகும்.

## சவால்கள் நிறைந்த பணி

மோசே கடவுளின் திட்டத்தை எடுத்துரைத்து, அதற்கேற்ப இஸ்ரயேல் மக்களை வழிநடத்தியபோது அவர்கள் அவருக்கு எதிராக முறுமுறுத்தனர் (விப 16:2,7; 15:24; 17:3; எண் 14:2; 16:41). ஒரு சில காலக் கட்டத்தில் மக்கள், ''வணங்காக் கழுத்துள்ள மக்களாக'' இருந்தனர் என்பது மட்டுமில்லாமல் (விப 32:9; 33:3,5; 34:9; இச 9:6,13; 10:16; 21:27; நெகே 9:16,17,29; எரே 7:26; 17:23; 19:15) அவர்களைத் துன்புறுத்தவும் செய்தனர் (எகா. எலியா, எரேமியா, ஆமோஸ்). எந்த அளவுக்கு அவர்கள் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்ததென்றால் ''நான் பேசும்பொழுதெல்லாம் 'வன்முறை, அழிவு' என்றே கத்த வேண்டியுள்ளது... என் நண்பர்கள் கூட என் வீழ்ச்சிக்காகக் காத்திருக்கிறார்கள்'' என்று எரேமியா புலம்பினார் (28:8-10). ஆமோஸ் விரட்டி விடப்படுவதாக மிகவும் வன்மையாக எச்சரிக்கப்பட்டார் (7:10-13). தம் மறைத்தூதுப் பணியினால் மோசே கடுமையான பாலைவனப் பயணத்தையும், எசேக்கியேல் அடிமைத்தன வாழ்வையும், எலியா தம் உயிருக்கான ஆபத்தையும் (1அர 19:10) சந்தித்தனர். ''நான் பிறந்த நாள் சபிக்கப்படும்'' என்று தான் வாக்களிக்கப்பட்டதற்கு மாறாக (1:19), கடவுள் தன்னை ஏமாற்றி விட்டாரோ என்று தம் போராட்டத்தின் காரணமாக எரேமியா உணர்ந்தார் (20:7). இறுதியில், அவர் தம் உயிரையே கொடுக்க நேர்ந்தது (43:7).[16] இவை யாவும் புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் திருஅவையின் நீண்ட வரலாற்றிலும் மறைத்தூதுப்பணியின் சவால்களுக்கு முன்னோடிகளாக உள்ளன.

## புதிய ஏற்பாட்டுக் காலத்தில்

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நிகழ்ந்த மறைத்தூதுப் பணிகளை, இயேசுவின் காலம் என்றும், தொடக்கத் திருஅவையின் காலம் என்றும் நாம் இரு நிலைகளில் காணலாம். கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் மறைத்தூதுப்பணி ஓர் இருண்ட காலத்தைச் சந்தித்தது. எனவே இக் காலக்

கட்டத்தில் தானியேல் நூல், ஏனோக்கு நூல் போன்ற வெளிப்பாட்டு இலக்கியங்கள் தோன்றி, இறைவாக்கினர்களின் மறைத்தூதுப்பணி இல்லாத நிலையைப் போக்கின.[17] இஸ்ரயேலரின் நம்பிக்கையற்ற வாழ்க்கைச் சூழலில் நம்பிக்கையைக் கொடுத்து, வெற்றி நிச்சயம் என்ற மறைத்தூது நற்செய்தியை வெளிப்பாட்டு இலக்கியங்கள் அளித்தன. அதனால்தான், வெளிப்பாட்டு இலக்கியத்தை 'இறைவாக்கு நூல்களின் குழந்தை' என்று அறிஞர்கள் கூறுவர்.[18] அதே நேரத்தில் இவ்வெளிப்பாட்டு இலக்கியங்களை இறைவாக்கு மறைத்தூது நூல்கள் என்பதும் பொருந்தும்.[19] இஸ்ரயேல் மக்கள் செலுக்கியருக்கு எதிரான மக்கபேயர் போராட்டத்திலும் பின்னர் உரோமையர் ஆக்கிரமிப்பிலும் துன்புற்ற காலத்தில் இஸ்ரயேலர் இக் காலக் கட்டத்தில் தங்களின் எதிரிகள் மீது தாங்கள் அடையவிருக்கும் வெற்றிகளை எதிர்நோக்கி இருந்தனர்.[20] அதே நேரத்தில் நம்பிக்கையுள்ள இறைவாக்கினர் ஒருவர் தோன்றுவார் (1மக் 14:41; 4:45-46) என்ற நம்பிக்கையுடனும் காத்திருந்தனர். இத்தருணத்தில்தான், இயேசுவின் காலத்தைத் தொடங்கி வைப்பவராகவும், பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைக்கும் பாலமாகவும் புனித திருமுழுக்கு யோவான்[21] வந்தார். இவர், ''விரியன் பாம்புக் குட்டிகளே...'' என்ற எச்சரிக்கையோடு (மத் 3:7-10) மனமாற்றத்திற்கான அழைத்தலைத் தம் தூதுரைப் பணியாகச் செய்தார். அது மட்டுமல்ல, ''உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறி'' (யோவா 1:29) என்றும், ''பதரை அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பார்'' (மத் 3:12) என்றும் இயேசு கிறிஸ்து என்ற மீட்பரைப்பற்றி இருநிலைகளில் மறைத்தூதுரைத்தார்.

சமூக, சமய அநீதிகளை நேரிடையாக, யாருக்கும் அஞ்சாமல் தூதுரைத்து, அதற்கு விலையாகத் தம் உயிரையே கையளித்த மறைத்தூதுப் பணியாளர் திருமுழுக்கு யோவான். அவரது பணியின் தன்மையினால் அவருக்குப் பின்வந்த இயேசுவின் வாழ்வுக்கும் இறைத்தூதுப்பணிக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தார். தாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் என்ற இறுமாப்புடன் இருந்த இஸ்ரயேலரைச் சாடினார் (மத் 3:9). பாவிகள், வரிதண்டுபவர்கள், அநீதி இழைக்கும் காவலர்கள், சதுசேயர்கள், பரிசேயர்கள், ஏன், ஏரோதுகூட அவரின் பார்வையில் தப்பவில்லை (லூக் 3:12,14; மத் 6:18, 21:32). மனமாற்றமும் மன்னிப்புமே அவரது மறைத்தூதுப் பணியின் நோக்கமாக இருந்தது (மாற் 1:4; காண் மாற் 1:2-6; மத் 3:7-10; லூக் 3:7-9). இத்தருணத்தில்தான் ''காலம் நிறைவேறி விட்டது. இறையாட்சி நெருங்கி





வந்துவிட்டது, மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்'' என்று கூறி (மாற் 1:15) இயேசு தம் மறைத்தூதுப்பணியைத் தொடங்கினார்.

## இயேசுவின் தூதுரைப்பணி

முற்றிலும் புதிய, மாறுபட்ட மறைத்தூதுப்பணியாளராக இயேசுவை நற்செய்தியாளர்கள் காட்டுகின்றனர். திருமுழுக்கு யோவான்போல் மனமாற்றத்தை முன் வைத்துத் தம் தூதுரைப்பணியை இயேசு தொடங்காமல், கடவுளின் இரக்கத்தை (இறையாட்சி) முன்வைத்துத் தம் மறைத்தூதுப்பணியை ஆற்றத் தொடங்கினார்.[22] இயேசு போதித்த இறையாட்சியை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். 'பசிலேயா' என்ற கிரேக்க வார்த்தையைத்தான் 'இறையாட்சி' என்று தமிழில் மொழி பெயர்க்கிறோம். ஓர் அரசன் ஆட்சி செய்யும் நாட்டைக் குறிப்பது போன்றல்ல இது. அதாவது, இது ஓர் இடத்தைக் குறிக்காது. மாறாக, ''ஆண்டவர் ஆட்சி செய்கிறார்'' என்ற நம்பிக்கைக்கு (திபா 9:1, 94:3, 96:10, 97:1, 99:1) ஏற்ப இதைப் புரிந்துகொள்ள வேண்டும். தம் எண்ணத்திற்கு ஏற்ப நாம் வாழ்வதற்காகக் கடவுளே மனிதர்மேல் பொழியும் இறை இரக்கத்தைக் குறிக்கிறது இது. அத்துடன் அவர்மேல் முழுநம்பிக்கை கொண்டு வாழும் ஏழை, எளிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கடவுள் அளிக்கும் விடுதலை வாழ்வையும் இது குறிக்கிறது. ஆதலின் இறையாட்சி என்பது மனிதரில் இறைவனின் செயல்பாட்டைக் குறிக்கிறது. அதுவும், இரக்கமும் அன்பும் நிறைந்த அவரது உடனிருப்பைக் குறிக்கிறது. எனவே, இறையாட்சி என்பதை அரசியல்தன்மையிலும் சமூக நிர்வாகத்தன்மையிலும் காணக்கூடாது (உரோ 14:17-18).[23]

இயேசு தம் மறைத்தூதுப் பணியினால் பாவிகள், ஏழை, எளியவர், ஒடுக்கப்பட்டோர் ஆகியோருக்குக் கடவுள் பொழியும் இரக்கத்தையும் விடுதலை/ மீட்பையும் முதன்மையாக எடுத்துரைத்தார். அவருடைய மலைப்பொழிவு (மத் 5-7) மற்றும் உவமைகள், புதுமைகள் யாவும் இதே மீட்புத்தன்மையைக் கொண்டிருந்தன. அச்சமும் தண்டனையும் தரக்கூடிய நீதிபதியாக பழைய ஏற்பாட்டுப் பாணியில் கடவுளை அவர் காட்டவில்லை. மாறாக, பாவிகள் திரும்பிவரக் காத்திருக்கும் தந்தையாக, இழந்து போனவர் திரும்பிவரும்போது மிகுந்த மகிழ்ச்சியுறும் இரக்கத் தந்தையாகக் (லூக் 15) கடவுளை இயேசு படம்

பிடித்துக் காட்டினார். எனவேதான், தமது தூதுரைப்பணியின் வழியாக உலகின் மீட்பர், அதுவும் ஒடுக்கப்பட்டோரின் மீட்பர் என்று அவர் தம்மையே வெளிப்படுத்தினார் (லூக் 4:18-19) என்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் கருதுகிறார்.[24]

இயேசுவின் மறைத்தூதுப்பணி பாலஸ்தீனப் பகுதிக்குள் மட்டுமே இருந்தது. பன்னிரு திருத்தூதர்களைத் தூதுரைப்பணிக்கு அனுப்பும்போது, ''பிற இனத்தவரின் பகுதிக்குச் செல்ல வேண்டாம்'' என்று பணித்தார் (மத் 10:5). மேலும், ''இஸ்ரயேல் குலத்தவரிடம் மட்டுமே நான் அனுப்பப்பட்டேன்'' என்று கனானேயப் பெண்ணுக்கு அவர் பதிலளித்தார் (மத் 15:24). இவற்றைப் படிக்கும்போது நமக்கு சற்றே நெருடல் ஏற்படுவது உண்டு. ஆனால் இதன் பின்னணியை ஆராய்ந்து அறியும்போது இயேசுவின் மனநிலை நமக்குப் புலனாகும். தம் சீடர்களை இயேசு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே அனுப்பியதை, அதனால் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மட்டுமே (இஸ்ரயேலர் குலம்) செல்லவேண்டும் என்பதால் இவ்வாறு குறிப்பிடுகிறார் என்று நாம் கொள்ளவேண்டும். கனானேயப் பெண்ணிடம், ''இஸ்ரயேல் குலத்தவரிடம் மட்டுமே நான் அனுப்பப்பட்டேன்'' என்று கூறுவது, இயேசு அவருக்கு அளித்த நம்பிக்கைச் சோதனையாகும். எனவே, அவர் எந்தவித இனத்துக்கோ, இடத்துக்கோ, மொழிக்கோ உட்பட்டவர் அல்லர். அதனால்தான், மறைத்தூது அளிக்க இஸ்ரயேலுக்குப் புறம்பே உள்ள தீர், சீதோனுக்கும் (மாற் 8:24-27), யோர்தானுக்கு அப்பாலும் அவர் தூதுரைக்கச் சென்றார். மேலும், ''உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்'' என்று தம் சீடர்களுக்குக் கட்டளை அளித்தார் (மாற் 16:15).

இயேசுவின் மறைத்தூதுப்பணியில் மனமாற்றத்திற்கான அழைப்பு இருந்தது உண்மையே. ஆனால், இதில் மதமாற்றம் என்ற நிலைக்கு இடமேயில்லை. சக்கேயு போன்ற இஸ்ரயேலர் (லூக் 19), கனானேயப் பெண் (மத் 15:21-28), சமாரியப் பெண் (யோவா 4), உரோமையரான நூற்றுவர் தலைவர் (லூக் 7:1-10) போன்ற பலதரப்பட்ட மக்களுக்கும் இயேசுவின் மறைத்தூது சென்றது. மக்களின் உள்ளம் வானகத் தந்தையின் இரக்கத்தை அறியவேண்டும், கடவுளுக்கு உகந்தமுறையில் வாழ வேண்டும் என்பதே இயேசுவின் நோக்கம். இருப்பினும், மனம் மாறாவிடில் அழிவு உண்டு என்று எச்சரிக்கவும் தவறவில்லை (லூக் 13:1-9). அத்துடன், சமூக, சமய, அரசியல்





அக்கிரமங்களுக்குச் சவுக்கடி கொடுத்து நீதியை நிலைநாட்டும் விதத்தில் அவரது மறைத்தூதுப்பணி இருந்தது உணமையே. ''நாசரேத்தூர் நற்செய்தி'' முழக்கத்தில் தொடங்கி (லூக் 4:16-28), ஏரோது அந்திப்பாசை 'நரி' என்று கூறி (லூக் 13:32), அரசியல் செல்வாக்குள்ள சதுசேயர்களின் அநீதிகளை எடுத்துரைத்து (மத் 23), இறுதியில் பிலாத்தின் கொள்கைப் பிடிப்பற்ற நிலையைச் சாடி (யோவா 19:11) நீதியின்பால் தமக்கிருந்த பசியை மட்டுமல்லாமல், நீதிசார்ந்த மறைத்தூதுப்பணியையும் வெளிப்படுத்தினார். ஆதலின், இயேசுவின் மறைத்தூதுரையின் அடிப்படைப் போதனையே மக்கள் நீதிநெறிக்கேற்ப வாழவேண்டும் என்பதுதான் (மத் 21:32; மாற் 6:20). இது மனமாற்றத்தில் தொடங்கி (லூக் 3:7-9) நீதியின்படி வாழ்வதில் (லூக் 3:10-14) வெளிப்படுகிறது. திருமுழுக்கு யோவான் அளித்த மனமாற்றத்திற்கான அழைப்பை இயேசு இறை இரக்கத்தின் பின்னணியில் தந்து மக்களின் மனதில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தினார்.[25]

தமக்கு முன்பிருந்த மறைத்தூதுப்பணியாளர்களைவிட இயேசு அதிகமாகவே எதிர்ப்பைச் சந்தித்தார் (மத் 2:1; லூக் 4). அவரது மறைத்தூதுப்பணியையே யூதத்தலைவர்கள் சந்தேகித்தனர், எதிர்த்தனர் (லூக் 7:39). நயீன் ஊர்க் கைம்பெண்ணின் மகனுக்கு இயேசு உயிர்கொடுத்தபோது, ''நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றி இருக்கிறார்'' என்று பொது மக்கள் காட்டிய ஆச்சரியத்தை (லூக் 7:16) யூதத் தலைவர்களால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. யூத மக்கள்கூட்டம் இயேசுவை ஒரு மறைத்தூதுப் பணியாளர் என்று ஏற்றுக் கொண்டதால் அவரைக் கைது செய்ய யூதத் தலைவர்கள் தயங்கினாலும் (மத் 21:46) பின்னர் அவரைக் கபடமாகக் கைது செய்து (மத் 26:50) மிகவும் கொடூரமாகவும் இழிவாகவும் நடத்தினர் (மத் 26:62-68; மாற் 14:53-65; லூக் 22:54-55). இயேசு தம் மறைத்தூதுப்பணியின் தொடக்கத்திலேயே இந்த எதிர்ப்புநிலையை உணர்ந்து வெளிப்படுத்தினார் (லூக் 4:24; மாற் 6:4; மத் 13:57). இயேசு தம் எதிர்ப்புகள் மத்தியிலும் தம் தூதுரைப்பணியை மிகவும் உற்சாகத்துடனும் வேகத்துடனும் துணிந்து ஆற்றினார்.[26]

மறைத்தூதுப்பணி தொடர்ந்து நடைபெற வேண்டுமென்பதை இயேசு தெளிவாகவே அறிந்திருந்தார். அதனால்தான், சீடர்களைத் தேர்ந்தெடுத்து (மத் 4:19; மாற் 1:17), தனிப்பட்ட பயிற்சியளித்து (மாற் 4:33-34), கட்டளையையும்

அளித்தார். இக்கட்டளையை ஒத்தமை நற்செய்தியாளர் தருவதை நோக்கவேண்டும்.

**அ. மாற் 16:15:** "படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்."

நற்செய்தி சென்றடைய வேண்டிய பொதுத்தன்மையை இது குறிக்கிறது. மாற்கு நற்செய்தி தோன்றிய காலக் கட்டத்தில் (கிபி 65) தொடக்கத் திருஅவை இயேசுவின் கட்டளையைப் புரிந்து கொண்ட விதத்தையும் இது குறிக்கிறது.

**ஆ. மத் 28:16-20:** "மறைத்தூது அளித்து, எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள், திருமுழுக்கும் கொடுங்கள்."

நாளடைவில், சீடர்கள் புரிந்து கொண்ட மறைத்தூதுப்பணியின் நோக்கம் இங்கே தெளிவுபடுகிறது. அதாவது,

1) எல்லாருக்கும் நற்செய்தி
2) சீடராக்குங்கள்
3) தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்.

**இ. லூக் 24:47-48; திப 1:8:** லூக்கா தம் இரு நூல்களிலும் தாம் வாழ்ந்த, பணி செய்த பிறவினக் கிறித்தவர்களுக்கு இயேசுவின் நற்செய்தியைத் தொகுத்து அளிக்கும் பாணியைக் காண்கிறோம். அதாவது,

1) எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளுக்கும் மறைத்தூதுரைக்கப்பட வேண்டும்.
2) பாவமன்னிப்புப் பெற மனம் மாற அழைப்பு.
3) சாட்சிகளாக இருங்கள் என்ற அழைப்பு.

மறைத்தூதுப்பணியின் அடுத்த கட்டத்துக்கு இது நம்மை இட்டுச் செல்கிறது.

## திருத்தூதர்களின் காலம்

எருசலேம் தொடங்கி 'உலகின் கடை எல்லை வரை எனக்குச் சாட்சிகளாக இருப்பீர்கள்' என்ற இயேசுவின் கட்டளையைப் புரிந்து கொண்ட திருத்தூதர்கள் உடனே செயல்படத் தொடங்கவில்லை. தூய ஆவியாரின் வருகைக்காகக் காத்திருந்தனர். தூய ஆவியாரின் சக்தியும் இயேசுவின் கட்டளையும் சேர்ந்து (திப 2:3) அவர்களுக்கு உத்வேகத்தையும் புதுவாழ்வையும் அளித்தது. புதுயுகம்





பிறந்தது. அவர்களது தூதுரையைக் கேட்ட யாவரும் மலைத்துப் போகும் அளவில் அவர்களது மொழிப் பிரவாகம், செயல்பாட்டின் வீரியம் வெளிப்பட்டது. அதைக் கேட்ட மக்களில் உடனே தாக்கத்தை ஏற்படுத்தி, "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்கும் அளவுக்கு விளைவை ஏற்படுத்தியது (திப 2:37). இயேசுவே ஆண்டவர் என்று பலர் நம்பலாயினர் (திப 4:4); ஆயிரக்கணக்கானோர் திருமுழுக்குப் பெற்றனர் (திப 2:41); கடவுளின் வார்த்தை பரவியது என்று இதை உருவகமாகக் கூறுவார் திருத்தூதர் பணிகள் ஆசிரியர் (6:7; 12:24; 19:20).

திருத்தூதர்களுடைய மறைத்தூதுப்பணியின் தனித்தன்மைகளை ஆராயும்பொழுது நாம் காணும் முதல் செய்தி: மறைத்தூதுப்பணியை அவர்கள் முனைந்து ஆற்றினர் என்பதுதான். பெரும் கூட்டத்தினரிடையே (திப 2:14; 3:12; 7:1; 13:16; 22:1), தொழுகைக் கூடத்தில் (திப 3:4), வீடு வீடாக (திப 5:42), தலைமைச் சங்கத்துக்கு முன்பு (திப 4:1; 23:1), மற்றும் அகிரிப்பா அரசன் முன்பு (திப 26:1) என்று, "வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்கவில்லை என்றாலும்" (2 திமோ 4:2) திருத்தூதர்கள் எல்லாச் சூழல்களையும் பயன்படுத்திக் கொண்டனர். இயேசுவின் நற்செய்தியை யூதரிடமிருந்து, அதாவது எருசலேம் தொடங்கி, சமாரியா, பின்பு பிற இனத்தார் யாவருக்கும் பறைசாற்றினர். மேலும், பொது மேடைகளில் பறைசாற்றினர் என்பது மட்டுமல்ல, தாங்கள் அளிக்கும் இறைச்செய்தி மக்கள் மனத்தில் ஆணித்தரமாகப் பதியும் வண்ணம் அவர்களுக்குக் 'கற்பித்தார்கள்' (திப 2:42).

திருத்தூதர்களின் மறைத்தூதுப்பணியின் மிகவும் குறிப்பிடத்தக்க தன்மை என்னவெனில், அவர்களின் சாட்சிய வாழ்வு. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிய நிலை தொடங்கி (திப 1:22), திருத்தூதர்களின் சாட்சி வாழ்வை பல இடங்களில் கோடிட்டுக்காட்டுகிறது திருத்தூதர் பணிகள் (2:32; 3:16; 5:32; 6:13; 7:58; 10:39,41; 13:31; 21:15; 26:6). அவர்களது நட்புறவிலும் (2:42; 4:32), இறை வேண்டலிலும் (2:42,46; 3:1; 4:32; 5:12; 21:42), நேர்மையாக நடந்து கொள்வதிலும் (11:17; 16:16-30), அதுவும் குறிப்பாக, தூதுரைப்பணியின் பொருட்டுத் துன்பங்களை ஏற்பதிலும் (5:40; 7:59; 9:1-3; 12:1-16; 13:41; 14:2,22; 16:22; 20:23) திருத்தூதர்கள் தங்கள் சாட்சிய வாழ்வை வெளிப்படுத்தி, தங்களுடைய மறைத்தூதுப்பணிக்கு மெருகூட்டினர். மேற்கண்ட சாட்சியக் கூறுகளில் இயேசுவின் நற்செய்தியை

அனைத்து மக்களுக்கும் மன உறுதியுடனும் ஆணித்தரமாகவும் அவர்களால் பறைசாற்ற முடிந்தது[27] (4:2; 5:25,28,42; 13:12; 15:1; 17:19; 18:11).

## பவுலின் மறைத்தூதுப்பணி

திருஅவையின் மறைத்தூதுப்பணிக்கு மாபெரும் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் இருப்பவர் புனித பவுல்.[28] மறைத்தூது அறிவிக்கத் தம் தாயின் வயிற்றிலிருந்தே அழைக்கப்பட்டதாகக் கூறும் பவுல் (கலா 1:15), 'புற இனத்தாருக்கு நற்செய்தி' என்று தமக்கு அளிக்கப்பட்ட இலக்கைத் தெளிவாக உணர்ந்திருந்தார் (கலா 2:9). இப்பணிக்காகவே கடவுளால் தாம் ஒதுக்கி வைக்கப்பட்டதாகவும் (உரோ 1:1) இவர் கூறுகிறார். இதையே லூக்காவும் உறுதிப்படுத்தினார் (திப 9:15). இவரது மறைத்தூதுப்பணியின் தீவிரத்தையும் கிறித்தவ ஆன்மிக வாழ்வின் முதிர்ச்சியையும் இவரில் காணும்போது இவர் நற்செய்தியின் தூதுவரா? அல்லது கிறித்தவ ஆன்மிகத் துறவியா என்று வியக்க வேண்டியுள்ளது.[29]

''நான் திருத்தூதன் இல்லையா?'' என்று ஆதங்கத்துடன் கேள்வி கேட்டு (1 கொரி 9:1-2), தம் மறைத்தூதுப்பணி எந்த மனிதரிடமிருந்தும் வரவில்லை, தமக்கு முன்பு திருத்தூதர்களாக அழைக்கப்பட்டவர்களிடமிருந்தும் வரவில்லை (கலா 1:17), இது கடவுளின் சிறப்பு அழைப்பு (உரோ 1:1; கலா 1:15) என்று கூறி, கடவுள் தமக்கு அளித்த மறைத்தூதுப்பணியாளர் என்ற அருள் வீணாகி விடவில்லை என்பதைத் தெளிவுற வெளிப்படுத்துகிறார் (1 கொாரி 15:9-10). மறைத்தூது அளிப்பது தம்மேல் ஒப்படைக்கப்பட்ட கடமை என்பதால் (1 கொரி 9:16) அதில் பெருமைப்படாமல், அதை நிறைவேற்றக் குடும்ப உறவு, விருந்துண்பது, உழைப்பிற்கான ஊதியம் பெறுவது போன்ற அனைத்துச் சலுகைகளையும் தியாகம் செய்து (1 கொரி 1:1-15,19-21) ''ஒரு சிலரையேனும் மீட்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாமானேன்'' (1 கொரி 9:22) என்றுரைத்தார். தமக்கு இருக்கும் சமூக / குடும்பப் பெருமை எல்லாவற்றையும் குப்பை என்று கருதி (பிலி 3:5-6), யாருக்கும் சுமையாக இல்லாமல் கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றினார் பவுல் (1தெச 2:9). அவர் அறிவித்த நற்செய்தி எது? சுருங்கக்கூறின், இயேசு கிறிஸ்துதான் அவரது நற்செய்தி (உரோ 1:3). குறிப்பாகக் கூறவேண்டுமெனில், ''சிலுவையில் அறையுண்ட இயேசுவைத் தவிர வேறு எதையும்'' அவர் அறிவிக்க விரும்பவில்லை (1கொரி 2:2). கிறிஸ்துவின் சிலுவை அவருக்குத் துன்பத்தையும் தோல்வியையும் குறிக்கவில்லை. மாறாக, கடவுளின் வல்லமையையும் (1 கொரி 1:24) மனித விடுதலைக்கான நம்பிக்கையையும் குறித்தது. அதில் மட்டுமே அவருக்குப் பெருமை (கலா 6:14). ஆதலின், சிலுவையில் தொங்கும் இயேசு அவருக்கு உலகின் பாவத்தைப் போக்கும் இறை இரக்கத்தின் அடையாளமாவார்.[30]





## தூதுரைப்பணியில் சாட்சிய வாழ்வு

பவுலின் தூதுரைப்பணிபற்றி மிகவும் விரிவாக ஆராய்ச்சி செய்த ரோலண்ட் ஆலன் கூறுவார்: 'பவுல் தம் மறைத்தூதுப்பணியில் எந்த மனித சக்தியையும், தன் அறிவுபலத்தை அல்லது ஞானத்தையும் நம்பிச் செயல்பட்டதில்லை. முழுக்க முழுக்கக் கடவுளின் தூண்டுதலையும், அவர் காட்டிய வழிமுறைகளையும் பின்பற்றினார் என்பது தூதுரைப்பணியின் வேகத்தில் நாம் காணமுடிகிறது.[31]

பவுல் தம் மறைத்தூதுப்பணியில் தம் வார்த்தைகளை விடத் தமது சாட்சிய வாழ்வையே பாடமாக மக்களுக்குத் தந்தார் என்று அறிகிறோம். கண்ணீரோடும் கவலையோடும் எழுதி நம்பிக்கை கொண்டோரை உறுதிப்படுத்திய பவுல் (2 கொரி 2:4), அவர்களது நல வாழ்வுக்காக ''மீண்டும் பேறுகால வேதனை அடையவும்'' (கலா 4:19) தம் ''இரத்தத்தையே சிந்த வேண்டி இருப்பினும் எனக்கு அது மகிழ்ச்சியே'' என்று கூறவும் (பிலி 2:17) முடிந்ததென்றால் தம் மறைத்தூதுப்பணி சென்றடையும் மக்களுக்காக அவர் தேர்ந்துகொண்ட தியாகத்தை அறிய முடிகிறது. கிறிஸ்துவைத் தம் சொந்த வாழ்வில் ஆதாயமாக்கிக் கொள்ளத் தமக்கிருந்த உலகப் பெருமைகள் யாவற்றையும் துறக்கத் துணிந்தார் (பிலி 3:5-8). ''நற்செய்திக்காகவே நான் குற்றம் செய்தவனைப்போலச் சிறையிலிடப்பட்டுத் துன்புறுகிறேன்'' (2 திமொ 2:9) என்று தெளிவுபடுத்திய அவர், மறைத்தூதுப்பணிக்காகத் தாம் அடைந்த துன்பங்கள், போராட்டங்கள், வேதனைகள் யாவற்றையும் (உரோ 9:2; 1 கொரி 4:11-13; 15:31; 2 கொரி 4:7-11; 6:8-10; 11:25-29; 1 தெச 2:2; 2 திமொ 4:16) தம் உடலால் கிறிஸ்துவைப் பெருமை பாராட்டுவதாகவும் (பிலி 1:20), கிறிஸ்து மேலும் படவேண்டிய வேதனைகளில் குறைவாய் இருப்பதைத் தம் உடலால்

நிறைவு செய்வதாகவும் கூறுகிறார் (கொலோ 1:24). மறைத்தூதுப்பணியில் நாம் சந்திக்கும் சவால்களை எத்தகைய மனநிலையில் தாங்கிக்கொள்ளவேண்டும் என்பதற்குப் புனித பவுலை விட வேறு முன்மாதிரி இல்லை. தம் மறைத்தூதுப்பணியில் "குறிக்கோள் இன்றி ஓடாமலும், காற்றைக் குத்துபவரைப்போல் இல்லாமலும்" இருக்க வேண்டும் என்பதில் கருத்தாய் இருந்தார் அவர் (1 கொரி 9:26). மேலும், பிறருக்கு நற்செய்தியை அறிவிக்கின்ற தாமே அதற்குத் தகுதியற்றவராக ஆகிவிடக்கூடாது என்பதில் கவனம் செலுத்தினார் (1 கொரி 9:27). தமது சொந்தச் சாட்சிய வாழ்வுதான் மிகப் பெரிய நற்செய்திப் பாடமுறை என்று அவர் வெளிப்படுத்தினார். அதனால்தான் அவர் "என்னைப் போல் ஆகுங்கள்" என்று தைரியமாகக் கூற முடிந்தது (கலா 4:12). மறைத்தூதுப்பணியில் அவரும் அவரது அறிவிப்பு முறைகளும் நமக்கு மிகப் பெரும் உந்துசக்தி மட்டுமல்ல, சவாலும் கூட!

## தொடர்ந்து வரும் திருஅவையின் மறைத்தூதுப்பணி

புனித பவுல் மேற்கு ஆசியாவின் கிழக்கே எருசலேம் தொடங்கி மேற்கே இல்லிரிக்கம் வரை (மாசிதோனியாப் பகுதி) எங்கும் சுற்றி கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து முடித்துவிட்டார் (உரோ 15:19). இது சுமார் கி.பி.58இல் நடந்தது. கிறிஸ்துவின் பெயரைக் கேள்விப்படாத இடங்களில் மட்டும் மறைத்தூதுப்பணியை அறிவிப்பது அவரது நோக்கமாக இருந்தது. எனவே, அப்பகுதியில் இனி தேவையில்லை என்று அறிந்த பவுல் உரோமை வழியாக ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று மறைத்தூதுப்பணியாற்ற விரும்பினார் (உரோ 15:20-24). அப்படியெனில், புதுப் புது இடங்களில் கிறிஸ்துவின் சீடர்களை உருவாக்கி, குட்டித் திருஅவைகளை நிறுவுவதுதான் அவரது மறைத்தூதுப்பணியின் நோக்கமாக இருந்தது. இதே காலக் கட்டத்தில் மற்ற திருத்தூதர்களும் மற்ற கிரேக்கப் பகுதிகளுக்கும் அர்மேனியா, எத்தியோப்பியா, பாரசீகம், ஏன் இந்தியாவுக்கும் கூடச் சென்று மறைத்தூதுப்பணியாற்றினர். புனித தோமா கி.பி.52இல் தென் இந்தியாவில் திருஅவையை நிறுவினார்.[32] தொடக்கத் திருஅவையின் மறைத்தூதுப்பணியின் விளைவினால் கிறித்தவர்களின் எண்ணிக்கை விரைவாகப் பரவியதற்கு அடிப்படையில் இரு காரணங்கள் இருந்தன. அன்றைய உரோமைப் பேரரசு பல சமயங்களும்





கலாச்சாரங்களும் பேரரசில் நிலவுவது பற்றிக் கவலைப்படவில்லை. பேரரசுக்கு வரிகட்டி, சமூகத்தில் எந்தவிதக் குழப்பமும் ஏற்படுத்தாமல் இருக்கவேண்டும். இதைத்தான் "உரோமை அமைதி" என்று அழைத்தனர். அதனால், உலகின் எல்லாச் சாலைகளும் உரோமை நோக்கிச் சென்றன என்ற சூழல் நிலவியது.

தொடக்கக் கிறித்தவர்கள் தாங்கள் இயேசுவின் சீடர்கள் என்பதில் பெருமை கொண்டு, கிறித்தவ ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினர். இவர்களின் நம்பிக்கை-உறுதிப்பாடு வேதனைக்குரிய விளைவை ஏற்படுத்தியது என்பது உண்மையே. அதாவது, உரோமைப் பேரரசர் நீரோ தொடங்கி தொமீசியன், ட்ராஜன், மாற்குஸ் அவுரேலியஸ் போன்ற பேரரசர்கள் கொடிய வேத கலாபனைகளை ஏற்படுத்தினர்.[33] கிறித்தவர்கள் உயிர்துறந்து இரத்தச் சாட்சியம் அளித்தனர்.[34] "ஆட்டுக்குட்டி சிந்திய இரத்தத்தாலும், தாங்கள் பகர்ந்த சான்றாலும் அவர்கள் அவனை வென்றார்கள். அவர்கள் உயிர்மீது ஆசை வைக்கவில்லை. இறக்கவும் தயங்கவில்லை" என்ற திருவெளிப்பாட்டு வரிகள் (12:11) இதற்குச் சான்றாகும். இயேசுவுக்காக இறப்பதில் அந்தியோக்கு இஞ்ஞாசியார் போன்றோர் பெருமைப்பட்டனர். மத்தியக் காலத்தில் இருந்ததுபோல் நேரடி மறைத்தூதுப்பணி அன்று அனுமதிக்கப்படவில்லைதான். ஆனால், மறைத்தூதுப்பணியாளர்களைவிட கிறித்தவர்களின் இரத்தச் சாட்சியம் பல மக்களை கிறிஸ்துவின் பக்கம் சேர்த்தது.[35] அதனால்தான், "கிறித்தவர்களின் இரத்தம் திருஅவையின் வித்து" என்று தெர்த்துல்லியன் கூறினார்.[36] சுருங்கக்கூறின், மறைத்தூதுப்பணிக்கான விரிவான திட்டம் ஏதும் வகுக்காமல் கிறித்தவர்கள் தங்கள் கிறித்தவ ஒழுக்க வாழ்விலும், அதனால் வரும் நெருக்கடிகளை மிகவும் மகிழ்வுடன் ஏற்பதிலும் கொண்ட உறுதியான நிலைப்பாடு பல மக்களை கிறிஸ்துவிடம் அழைத்து வந்தது.[37] அத்துடன் ஏழை, எளியவர், அடிமைகள், சமூகத்தின் விளிம்பில் நிற்பவர்கள் மேல் அவர்கள் காட்டிய கனிவும் இரக்கமும் மறைத்தூதுப்பணிக்குச் சிறப்பு சேர்த்தன. 2 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து புனித அந்தோணியார் போன்ற தவ முனிவர்களின் எடுத்துக்காட்டான சாட்சிய வாழ்வும், வடக்கு எகிப்தியப் பாலைவனத்தில் கிறித்தவ எண்ணிக்கையை அதிகமாக்கிப் பல துறவிகளை உருவாக்கியது மட்டுமல்ல, அப்பகுதி "துறவிகளின் நகரம்" என்று அழைக்கப்படும் அளவுக்கு அவரின் தாக்கம் இருந்ததாக புனித அத்தனாசியுஸ்

எழுதுகிறார்.[38] அதுவும், இத்தகைய துறவியர் இல்லங்களே மறைத்தூது இல்லங்களாக இருந்தன என்று கருதப்பட்டது.[39]

கி.பி. 313இல் மிலான் நகரில் பேரரசர் கான்ஸ்தாந்தின் கிறித்தவராகி, அவரைத் தொடர்ந்து 380இல் முதலாம் தியோடோசியுஸ் கிறித்தவச் சமயத்தை உரோமைப் பேரரசின் சமயமாக ஏற்றுக் கொண்ட பின்னர் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் கிறித்தவத்தைத் தழுவத்தொடங்கின. கிறித்தவச் சாட்சிய வாழ்வினால் பெரும்பாலும் இது நடந்தது என்பதைவிட, அரசியல் ஆதிக்கத்தால் இது நிகழ்ந்தது என்பதே உண்மை.[40] திருத்தந்தை பெரிய கிரகோரியாரின் (590-604) தூண்டுதலால் கான்ட்ரிடர்பரியைச் சேர்ந்த அகுஸ்தினார் இங்கிலாந்தில் திருத்தூதுப்பணியாற்றினார். தொடர்ந்து, ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்க ஆட்சியின் ஆசீரால் மறைத்தூதுப்பணி விரிவடைந்தது. திருத்தந்தை பெரிய கிரகோரியார் எடுத்த முயற்சியால் உரோமைப்பேரரசின் முழு ஆதரவாலும், பின்னர் ஆதிக்க ஐரோப்பிய நாடுகள் அளித்த பெரும் ஆதரவின் பின்னணியிலும் பிற நாடுகளில் கிறித்தவர்களின் எண்ணிக்கை பெரும் அளவில் பரவி, கிறித்தவம் ''இறக்குமதி செய்யப்பட்ட சமயம்'' என்று ஆசியாவில், மிகவும் குறிப்பாக இந்தியாவில், முத்திரை குத்தப்பட்டது. அதனால் கிறித்தவத்துக்கு இருக்கும் 'அந்நியர்' என்ற பெயர் இன்றளவிலும் நீங்கியபாடில்லை. உரோமைப் பேரரசையே ஆட்டம் காணவைத்த அன்றைய மறைத்தூதுப்பணி நாளடைவில் பேரரசுகளுக்குப் பாதுகாப்புச் சக்தியாக மாறிவிட்டது. 'கிறிஸ்துவின் அமைதி' *(Pax Christi)* ஒருவகையில் 'உரோமை அமைதிக்கு' *(Pax Romana)* அடிபணிந்துவிட்டது என்றே கூறவேண்டும்.[41] அதேபோன்று மறைத்தூதுப்பணியிலும் கிறித்தவ உலகில் இயேசுவின் நற்செய்திக்கு 'எதிர்ச்சாட்சிய நிலை' தோன்றியது. சிலுவையின் பெயரில் 11,12,13ஆம் நூற்றாண்டுகளில் பாலஸ்தீனாவில் இஸ்லாமியருக்கு எதிராகப் போர்கள், இரண்டு உலகப் போர்கள் ஆகியவற்றை முன்னின்று நடத்தியது கிறித்தவ நாடுகள். மறைத்தூதுப்பணியாளர்களை உலகெங்கும் அனுப்பிய அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள்தான் குண்டுகள் பொழிந்து 21 நாடுகளைத் தாக்கின.[42]





## திருஅவையின் தொடர்ந்த வழிகாட்டுதல்

மறைத்தூதுப்பணியில் கடந்த கால வரலாற்றின் சரியான பாதையையும் அதே நேரத்தில் இடறிச் சென்ற பாதையையும் அறிந்த இரண்டாம் வத்திக்கான் சங்கத் தந்தையர்கள் திருஅவையின் நற்செய்திப் பணிக்குப் புதுவாழ்வு கொடுத்தனர். மறைத்தூது அளித்து மக்களைத் திருஅவையின் உறுப்பினராகச் சேர்ப்பது மறைத்தூதுப்பணி என்றாலும் இயேசுவின் இரக்கத்தையும் அன்பையும் மையமாக வைத்து மக்களிடையே சாட்சிய வாழ்வு அளிப்பதே நற்செய்திக்கான தூதுரைப்பணி என்ற தொடக்கத் திருஅவையின் வழிமுறையை மீண்டும் வலியுறுத்தியது. திருஅவையின் மத்திய காலக் கட்டத்தில், புனித பிரான்சிஸ் அசீசியார், மற்றும் அவரது துறவிகள், அவர்களைத் தொடர்ந்து பணியாற்றிய மற்ற மறைப்பணியாளர்கள் யாவரும் கட்டாய மதமாற்றத்தை வலியுறுத்தவில்லை. புனித பிரான்சிஸ் சேவியர் போன்ற போர்த்துகீசிய மறைப்பணியாளர்கள்கூட இதனைப் பின்பற்றவில்லை.[43]

இந்தக் கிறித்தவச் சாட்சிய வாழ்வை மிகவே வலியுறுத்திய இரண்டாம் வத்திக்கான் சங்கம்[44] அதற்கேற்ற முறையில் குட்டித் திருஅவைகளை உருவாக்க வேண்டும் என்ற உத்வேகத்தை அளித்தது.[45] இதைத் தொடர்ந்து வந்த திருத்தந்தையர்களின் தூதுரை மடல்களும்[46] சாட்சிய வாழ்வுக்கு முக்கியத்துவம் அளித்ததுடன், சவால்கள் நிறைந்த இன்றைய நவீன உலகில் திருஅவை எப்படி எல்லா மக்களுக்கும் நல்வாழ்வு அளிக்கும் அருள் அடையாளமாகத் திகழ முடியும் என்று வலியுறுத்தின.[47] தூதுரைப் பணியாளர்கள் தங்கள் ''பாதுகாப்பான அறை''யிலிருந்து வெளியே வந்து, ஓரங்கட்டப்பட்ட மக்களிடம் தங்கள் கால்கள் அசுத்தம் அடைவதையும் பொருட்படுத்தாமல் தெருவுக்குச் செல்ல வேண்டுமென்று மிகவும் ஆணித்தரமாகக் கூறி, புதிய பாதையைத் திறந்து வைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.[48]

## மறைத்தூதுப்பணியின் சவால்கள்

மறைத்தூதுப்பணியின் சவால்கள் பற்றி இறைவாக்கினர் வாழ்வில் (எரே 9:18; 20:10,38; ஆமோ 7:12) கண்டோம். இயேசுவின் எச்சரிப்பிலும் (லூக் 9:6; 10:11; 12:12; 12:32) இவற்றை நாம் காண்பதுடன், 'கொல்லும் நஞ்சையையும் குடிக்க நேரிடும்' என்ற அவரது முன்னறிவிப்பையும் மறந்துவிட

முடியாது (மாற் 16:18). தொடக்கக் கிறித்தவர்கள் இச்சவால்களை அதிகமே சந்தித்ததால், ‘‘நாம் பல வேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்பட வேண்டும்’’ என்று அவர்கள் உறுதியாக இருந்தனர் (திப 14:22; திவெ 12:11; 13:5-10). தொடர்ந்து வந்த நீண்ட வரலாற்றில் மறைத்தூதுப்பணி அரசியல் ஆதிக்கம், அடக்குமுறை, பணியாளர்களின் எதிர்ச்சாட்சிய வாழ்வு என்று பல சவால்களைச் சந்தித்தது உண்மை.[49] இந்தியாவைப் பொருத்த அளவில் ஆங்கிலேய ஆட்சிமுறை கிறித்தவ மக்களைக் கவர்ந்தாலும் கிறித்தவரின் சமூக வாழ்வு மக்களைக் கவரவில்லை.[50] காலனி ஆட்சியின் கூலிகளாகவும் ஐரோப்பாவிலிருந்து கொண்டுவரும் செல்வத்தை அளிப்பவர்களாகவும் நற்செய்தியாளர்கள் கருதப்பட்டனர்.[51] இந்நாட்டின் கல்வி முன்னேற்றத்துக்காக நாம் கட்டி எழுப்பிய பள்ளி, கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் பணம் விளைவிக்கும் இயந்திரங்களாகவும் கருதப்படுகின்றன. கிறித்தவத்தின் அடையாளங்களாக இவை பார்க்கப்படுகின்றன. இவை பற்றிய மக்களின் எதிர்மறையான கருத்துப் பரவல் மறைத்தூதுப்பணிக்குப் பெரும் சவாலாக உள்ளது. அதனால், இன்றைய அரசியல்வாதிகள் மக்களைப் பிரித்தெடுத்துச் சுய லாபம் காணும் நோக்கில் கிறித்தவத்தை வெளிநாட்டுச் சமயம் என்று திரும்பத் திரும்பக் கூறி நம்மை அந்நியப்படுத்துவதை நாம் எப்படிக் களைய முடியும் என்பதும் பெரும் சவாலே.

இந்தியாவில், பல சமயத்தவர் வாழ்கின்றனர். ஆனால் சமீப காலத்தில் பகைமையை விதைத்து, பிரிவினையை உருவாக்கி, ஓட்டு அரசியல் லாபம்காண முயற்சி செய்யும் பல இந்துத்துவா அமைப்புகள், அதற்குத் துணைபோகும் அரசுகள் மறைத்தூதுப்பணிக்குச் சவாலே.[52] இந்தியாவின் பன்னிரண்டு மாநிலங்களில் நிலவும் மதமாற்றத் தடைச் சட்டம் மறைத்தூதுப்பணிக்கு பெரும் சவாலாக உள்ளது. அத்துடன், கடந்த ஆண்டுகளில், எதை உண்பது, உடுப்பது, வழிபடுவது, பேசுவது போன்றவற்றைக் வரையிட்டுக்கூறும் அரசும், அரசு அதிகாரிகளும், இந்தியா ‘‘ஒரே தேசம், ஒரே கலாச்சாரம்’’ என்ற போலியான முழக்கத்தை இட்டு, ‘பசுவைக் காப்போம்’ என்ற பெயரில் பலரைக் கொல்வதும் நமக்குப் பெரும் சவால்தான். [53] ‘‘உச்சநீதிமன்றமே நம்முடைய கையில்தான், எனவே அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது உறுதி’’ என்று உத்திரபிரதேச அமைச்சர் முகுத் பிகாரி வர்மா சமீபத்தில் கூறியது கொடிய பிரிவுச் சூழலை அரசியல் அதிகாரப் பின்னணியில் ஏற்படுத்துகிறது என்றால்[54] இத்தகைய





சூழலில் மறைத்தூது அறிவித்தல் எத்துணைச் சவால் நிறைந்தது என்று சொல்லத் தேவையில்லை. பிற சமய மற்றும் கிறித்தவச் சமய அடிப்படைவாதிகள், விவிலியம் சார்ந்த அடிப்படைவாதிகள் விவிலிய மறைத்தூதுப்பணிக்குச் சவால்களே. இந்தியாவின் பல்சமயச் சூழலில், திருஅவை எப்படி எல்லாருடைய மீட்புக்கான அருள் அடையாளம் என்பதை அறிவிப்பதும்[55] அதே நேரத்தில் இயேசுதான் கடவுளின் ஒரே வெளிப்பாடு என்று[56] மறைத்தூது அளிப்பதும் நமக்கு எளிதான பணியல்ல. இத்துடன் பல கலாச்சாரத்தைக் கொண்டிருக்கும் இந்தியச் சூழலில் நற்செய்திக் கலாச்சாரத்தை உருவாக்குவதிலும்[57] சுற்றுச்சூழல் பாதிப்புகளை அகற்றி நல்லதொரு ‘பூமித்தாயை’ ஏற்படுத்துவதிலும்[58] நமது மறைத்தூதுப்பணி எப்படி இருக்கவேண்டும் என்பதும் சவால்களே. சமீபத்தில் உலக திருஅவையிலும், ஏன் இந்தியத் திருஅவையிலும் கூட, எழுந்துள்ள அருள்பணியாளர்களின் ‘கொடுஞ்செயல்கள்’ (Abuse) காரணத்தால் மறைத்தூதுப் பணியாளர்கள்மீது சந்தேகப்பார்வை எழுந்துள்ளது. இதுவும் நாம் சந்திக்கும் இன்றையச் சவால்தான்.

## முடிவுரை

மறைத்தூதுப்பணியின் தோற்றம், தன்மை, வரலாற்று வடிவங்கள், மற்றும் அதில் நாம் சந்திக்கும் சவால்கள்பற்றி இதுவரை கண்டோம். இச்சூழலில் நாம் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை இங்குத் தருகிறேன். ‘‘இயேசுவே நம் ஆண்டவர் என்று எல்லா நாவுமே அறிக்கையிட வேண்டும்’’ (பிலி 2:11) என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். ஏனெனில் இயேசுவழிதான் உலக மீட்பு என்பதில் ஐயமில்லை.[59] இந்த நம்பிக்கையுடன் இயேசுவின் மறைத்தூதுக் கட்டளையும் நமக்கு உந்து சக்தியாக உள்ளது என்பதை உணர்ந்து, திருமுழுக்குப் பெற்ற அனைத்துக் கிறித்தவர்களும் மறைத்தூதுப்பணிக்கு அழைக்கப்படுகின்றனர்.[60] அது கடமையாகவும் மாறுகிறது.

இதில் பலவிதமான சவால்கள் இருப்பினும், மலிந்துவரும் பல போராட்டங்கள், நெருக்கடிகள் மத்தியில் அந்தந்த இடம், காலம், சமூக மற்றும் அரசியல் சூழல்களுக்கேற்ப நமது மறைத்தூதுப்பணி புதுமுகப் பொலிவுடன் பயணிக்க வேண்டும். மறைத்தூதுப்பணியினை மேற்கொள்வதின்

அடிப்படையானது சாட்சியவாழ்வில்தான் அமைகிறது[61] என்பதை மறந்துவிடமுடியாது. நற்செய்தி மனிதருக்கு வாழ்வு கொடுக்கும் இறைச்சக்தியைக் கொண்டுள்ளது (உரோ 1:16) என்பது மட்டுமில்லாமல் இறைவார்த்தை இருபக்கமும் கூர்மை வாய்ந்தது (எபி 4:12). எனவே, தொடக்கத் திருஅவையில் நாம் கண்டதுபோல் (திப 2:42-47) பணியாளர்கள் முதலில் தங்கள் சொந்த, குடும்ப மற்றும் சமூக வாழ்வினால் மறைத்தூது அறிவிக்க வேண்டும். நமது வாழ்வே பாடமாக அமையவேண்டும். இதைத்தான் அண்மைக் காலத்தில் திருஅவை மிகவும் வலியுறுத்துகிறது.[62] நேரடி மறைத்தூதுப்பணியில் ஈடுபடுவோர் வாழ்வும் நற்செய்திக்கு ஏற்றாற்போல் அமையவேண்டும் (1கொரி 9:26). நம்முடைய மறைத்தூதுப்பணி மக்களின் சமய, சமூக வாழ்வுடன் பின்னிப்பிணைந்து செல்கிறதா? 'மக்களது அரசியல், சமூக, விடுதலைப் போராட்டங்களிலும் நமது ஆக்கப்பூர்வமான பங்களிப்பு இருக்கிறதா? அதுவே மிகச் சிறந்த சாட்சிய வாழ்வு மறைத்தூதுப்பணியாகும்.'[63]

நமது மறைத்தூதுப்பணியின் விளைவை நாம் கடவுளிடமே விட்டுவிட வேண்டும். அவரே மனிதரின் உள்ளங்களை அறிவார் (1சாமு 16:7). நமது தூதுரைப்பணி மதமாற்றத்தில் முடிய வேண்டுமென்பதில்லை. சிறப்பான என் தூதுரையைக் கேட்பவர்கள், என் வாழ்வைக் காண்பவர்கள்; இயேசுவுக்கான மனமாற்றத்தை முதலில் அடைவார்கள். "இம் மனமாற்றம் ஒரு தொடக்கநிலை" என்று வத்திக்கான் சங்கம் கூறுகிறது.[64] அதோடு, இதை ஒரு தொடர்நிலை என்றும் கருதவேண்டும். நமது மறைத்தூது வழியாக மக்கள் ஓர் அருள்பயணத்தைத் தொடங்குவர். மனப்பாங்கிலும் ஒழுக்கத்திலும் படிப்படியாக மனமாற்றத்தைப் பெறுவர். எனவே திருச்சங்கம் சுட்டிக்காட்டுவதுபோல் மறைத்தூதுப்பணியில் கட்டாயத் திணிப்பையோ, தகுதியற்ற முறைகளையோ பயன்படுத்தி, ஆசை காட்டி ஏமாற்றுவதை அறவே தவிர்க்க வேண்டும்.[65] எனவே, மக்கள் எந்தச் சமயத்தவராக அல்லது இனத்தவராக இருப்பினும் நமது மறைத்தூதுப்பணியில் நாம் கடைப்பிடிக்கும் அணுகுமுறையினால், 'வாழ்வின் வார்த்தையை அவர்கள் பற்றிக்கொள்வார்கள்' (பிலி 2:16).





## அடிக்குறிப்புகள்

1. Vat II: *Ad Gentes,* 2.
2. *Evangelii Nuntiandi,* 24; *Redemptoris Missio*, 1.
3. Ref. W. Hering, *Das Missionsverständnis in der ökumenische - evangelikalen Auseinander Setzung - ein inner Protestantische problems* (St. Augustine, 1980), 190.
4. Jürgen Moltmann, *Theology of Hope* (London, 1969), 261.
5. Ernst Käsemann, *Der Ruf Zur Freiheit* (Tübingen, 1972), 258.
6. *Evangelii Nuntiandi,* 18.
7. R.E. Brown & Co, "Tests and Versions", *JBC* (Bangalore, 2009), 1084.
8. Rudofl Bultmann, *History of the Synoptic Tradition* (London, 1963), 4.
9. Cf. Zacharias Mattam, *Opening the Bible* (Bangalore, 1988), 2; John W. Miller, *Meet the Prophets* (New York, 1987), 14.
10. Cf. R. E. Brown, *An Introduction to New Testament* (NY, 1996), 3.
11. Cf. R. E. Brown, *An Introduction to New Testament,* 9.
12. David L. Petersen, "Introduction to Prophetic Literature", *New Interpreter's Bible,* Vol VI (Nashville, 1994), 2.
13. John W. Miller, *Meet the Prophets* (New York, 1987), 232.
14. எசாயா 172 முறை; எரேமியா 52 முறை; எசேக்கியேல் 133 முறை; ஆமோஸ் 22 முறை; செக்கரியா 34 முறை; மலாக்கி 32 முறை.
15. J. L. McKenzie, *Dictionary of the Bible* (Bangalore, 1983), 697.
16. John Miller, 163.
17. D.S. Russell, *Apocalyptic: Ancient and Modern* (Philadelphia, 1978) 2; H.H. Rowley, *The Relevance of Apocalyptic: A Study of Jewish and Christian Apocalypses from Daniel to the Revelation* (Green Wood, 1980), 15.
18. Rowland, *Open Heaven: A Study of Apocalyptic in Judaism and Early Christianity* (London, 1982), 245-246.
19. Antonysamy Peter Abir, *The Cosmic Conflict of the Church* (Franfurt am Main, 1995), 22-23.
20. Edward Schilebeeckx, *Jesus, an Experiment in Christology* (London, 1982), 129.
21. Albert Nolan, *Jesus before Christianity* (Mumbai, 2007), 34. `
22. L. Legrand, *The Word is near You,* Vol. II (Bangalore, 2002), 1.
23. John P. Meier, "Jesus", *NJBC* (Bangalore, 2009), 1320; Also cf. Albert Nolan, *Jesus before Christianity,* 79.
24. Benedict XVI, *Jesus of Nazareth,* Vol. I (New York, 2007), 65.

25. Mcknight, “Justice, Righteousness”, *Dictionary of Jesus and the Gospels* (Leicester, 1992), 413.
26. Geza Vermes, *Jesus the Jew* (London, 1983), 89.
27. R. E. Brown, *An Introduction to the New Testament,* 289.
28. Joseph A. Fitzmyer, *According to Paul* (New York, 1993), 106.
29. காண் அ. பீட்டர் அபீர், *பவுல் துறவியா? தூதுவரா?* (திண்டிவனம், 2008), 4.
30. Cf. Francis Pereira, “The Christology of St. Paul”, in Kurian Kummumpuram and Rekha. M. Chennattue (eds.), *The Relevance of St. Paul: An Indian Reading of His Letters* (Mumbai, 2009), 94-95.
31. Cf. Rollan Allan, *Missionary Methods: St. Paul's or Ours”* (Michigan, 1999), 17.
32. *Ecclesia in Asia,* No. 9.
33. பேரரசர் கான்ஸ்டன்டைன் கிறித்தவராக மாறும்வரை (+313) இந்நிலை தொடர்ந்தது.
34. Richard Bauckhoun, *The Climax of Prophecy* (Edinburch, 1999), 441; Ethelber Stauffen *Christ and the Caesars* (London, 1955), 220; Raymond E. Brown and John P. Meier, *Antioch and Rome* (New York, 1982), 170-171.
35. Crum, 266-267; Bragum Stone, 234; Harnack, 261.
36. Tertullian, “The Apology”, ch 50 in *Ante-Nicene Fathers,* Vol III, ed. Alexander Roberts of James Ponuldson (MA, 1995), 406.
37. Erie G. Tosi, *Evangelism in the Early Church* (Toronto, 2011), 16-17.
38. Athanasius, *Life of St. Anthony,* Trans. by E. A. Wallis Bridge (London, 2005), Ch. 14.
39. Tosi, 32.
40. Jules Gomes, *Mission, Myth & Money in a Multicoloured World* (Bangalore, 2003), 20.
41. Jules Gomes, 27.
42. Jules Gomes, 60.
43. Sebastian Karotemprel (ed.), *Following Christ in Mission* (Bombay, 1995), 33.
44. *Ad Gentes,* 6.
45. *Ad Gentes,* 19-20.
46. Paul VI, *Evangelii Nuntiandi;* John Paul II, *Redemptoris Missio.*
47. Eugen Nunnenmacher, “The Missionary Nature of the Chruch”, in *Mission for the Third Millennium* (Rome, 1993), 140-144.
48. Francis, *Evangelii Gaudium,* 20, 49.
49. Jules Gomes, 19-92.
50. Cf. Arun Shourie, *Missionaries in India* (New Delhi, 1994), 4-7.





51. Arun Snourie, 35.
52. Neera Nanda, *The God Market: How Globalization is making India more Hindu* (New York, 2009), 160-161.
53. *Hindu* (Kozhikode edition), 8 Sep. 2018, p.1.
54. *தினகரன்* (கோவை பதிப்பு), 11 செப். 2018, பக். 12.
55. *Ad Gentes,* 1; Edward Schillebeeckx, *Word and Church* (London, 1971), 91.
56. Cf. Special Assembly for Asia of the Synod of Bishops, “Relatio ante disceptionem”. *L'osservatore Romano* (22 April, 1988), 5; *Ecclesia in Asia,* 20.
57. Cf. *Ecclesia in Asia,* 75-80; also J. Prasad Pinto, “Mission as Inculturation”, in Joseph Mattam & Sebastian Kim (eds.), *Dimensions of Mission in India* (Bombay, 1995), 156-157.
58. Francis, *Laudato Si,* 20.
59. Vat II, *Sacrosanctum Concilium,* 5; *Ad Gentes,* 3.
60. *Ad Gentes,* 2, 35; *Ecclesia in Asia,* 42. Cf. John Patrick Brennan, *Christian Mission in a Pluralistc World* (Bombay, 1991), 119.
61. L. Legrand, *Mission in the Bible* (New York, 1992), 144.
62. *Ad Gentes,* 6; Paul VI, *Evangelii Nuntiandi,* 79; Francis, *Evangelii Gaudium,* 24.
63. L. Legrand, *Mission in the Bible,* 143.
64. *Ad Gentes,* 13.
65. *Ad Gentes,* 13.

# 2. பழைய ஏற்பாட்டில் மறைத்தூதுப்பணி

*அருள்பணி. முனைவர் டைனிசியஸ் லாரன்ஸ்*
*புனித பவுல் குருத்துவக் கல்லூரி, திருச்சி*

பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையே உள்ள மிகப்பெரிய வேறுபாடே மறைத்தூதுப்பணிதான் எனச் சிலர் கருதுகின்றனர். "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) என இயேசு தாம் இறந்து உயிர்த்தெழுந்த பின்னர் கொடுத்த கட்டளையிலிருந்துதான் மறைத்தூதுப்பணி விவிலியத்தில் உதயமானது; எனவே அதற்கு முன்னர், குறிப்பாகப் பழைய ஏற்பாட்டில் மறைத்தூதுப்பணி என ஒன்று இருக்கவில்லை என அவர்கள் எண்ணுகின்றனர்.[1] மறைத்தூதுப்பணி என்பதை ஒரு மறையின் இறைநம்பிக்கை முன்வைக்கின்ற மானிட நல்வாழ்விற்கான அனைத்துச் சிந்தனைகளுக்கும் செயல்வடிவம் கொடுப்பதே என்ற பரந்த பொருளில் புரிந்துகொள்ளாமல், ஒரு மறையின் கோட்பாடுகளை மட்டும் பிறருக்கு அறிவித்து, அம்மறையை ஒரு நிறுவனமாகக் கட்டியெழுப்ப முயல்வதே என்ற குறுகிய பார்வையில் புரிந்துகொள்ள விழைந்ததன் வெளிப்பாடே இது.[2] மறைத்தூதுப்பணியை மேற்கண்ட பரந்த பார்வையில் புரிந்துகொள்ளும்போது, அது பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் பொதுவானதே என்பது தெளிவாகும். இப்பார்வையை உள்வாங்கியதனாலேயே கார்னல் கோயர்னர், மறைத்தூதுப்பணிதான் விவிலியத்தின் மையக்கருத்து; அதுவே விவிலியத்தில் உள்ள அனைத்து நூல்களையும் இணைக்கின்ற ஆற்றல் என்று குறிப்பிடுகின்றார்.[3] மேலும் லூசியன் லெக்ரான், மறைத்தூதுப்பணி பற்றிய நம் சிந்தனை விவிலியத்தின் தொடக்கத்திலிருந்தே தொடங்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது, பழைய ஏற்பாட்டில் இருந்து மறைத்தூதுப்பணி பற்றிய புதிய பார்வைகளை நாம் பெற முடியும் என வலியுறுத்துகின்றார்.[4] இறைவன் இஸ்ரயேலைத் தேர்ந்தெடுத்தது





ஒரு பணிக்காகவே. பணியின்றி இறைவன் இஸ்ரயேலைத் தேர்ந்தெடுத்ததற்குப் பொருளில்லை.[5] அப்பணி இறைவனின் எதிர்பார்ப்பிற்கேற்ப, தன்னை அடிமைத்தனங்கள் இல்லாத ஒரு விடுதலைச் சமுதாயமாகக் கட்டியெழுப்பி, அந்த இலக்கைத் தன்னைச் சுற்றிவாழும் அனைவரும் அடையச் செய்வதே. இதுவே மறைத்தூதுப்பணி. இதுவே இஸ்ரயேல் பிற இனத்தாருக்கு ஒளி (எசா 49:6) என்பதன் பொருள். இம்மறைத்தூதுப்பணி பழைய ஏற்பாட்டில் எத்தகைய வடிவங்களை எடுத்தது, எத்தகைய சவால்களைக் கடந்து வந்தது என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரை.

## மறைத்தூதுப்பணி: சொல்லாய்வும் வரையறையும்

மறைத்தூதுப்பணியைக் குறிக்கப் பழைய ஏற்பாடு பயன்படுத்தும் சொற்களுள் பின்வரும் மூன்று எபிரேயச் சொற்கள் முக்கியத்துவம் வாய்ந்தன:

### (i) *காறா* (*qara'*)

இதற்கு நிகரான கிரேக்கச் சொல் *காலயோ* (*kaleō*). இச்சொல்லின் பொருள் "அழைத்தல்" என்பது (விப 1:18; எசா 40:26). ஒரு குறிப்பிட்ட பணியை நிறைவேற்ற ஒருவர் மற்றவரை அழைப்பதை இது குறித்தது. அப்பணியின் பொருட்டு அழைக்கப்பட்டவர் ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்குச் செல்ல வேண்டிய சூழல்கள் எழுந்தன. அதாவது தான் வாழ்ந்த ஊர், உற்றார், மற்றும் உறவினரை விட்டுவிட்டு வேறு ஓர் இடத்திற்குச் செல்ல, அழைக்கப்பட்டவர் பணிக்கப்பட்டார். அழைத்தவர் இறைவனாக இருக்கும்போது, அழைக்கப்பட்டவர் புதிய இடத்தில் பெரியதொரு இனமாக்கப்படுவார் என்ற வாக்குறுதியும் இறைவனால் தரப்பட்டது. இங்ஙனம் ஒரு நபரைத் தேர்ந்தெடுத்து, அவரைத் தம் பணிக்கென மற்றொருவர் பயன்படுத்துவதை இச்சொல் குறித்து நின்றது (விப 3:14; 7:11).[6]

### (ii) *ஷலாஹ்* (*shalah*)

இதற்கு நிகரான கிரேக்கச் சொல் *அப்போஸ்தெல்லோ* (*apostellō*). இச்சொல்லின் பொருள் "அனுப்புதல்" என்பது (விப 3:10; நீத 6:14). செய்தி ஒன்றை நேரடியாக ஒருவருக்குத் தெரியப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இன்று பல இருக்கின்றன. ஆனால் பழங்காலத்தில் அப்படி இருக்கவில்லை. அத்தகைய சூழலில் செய்தியாளர் ஒருவர் அனுப்பப்பட்டார். இங்ஙனம் அனுப்பப்பட்டவர்

மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவராகக் கருதப்பட்டார். ஏனென்றால் அனுப்பியவருக்கும் அனுப்பப்பட்ட மக்களுக்குமிடையே அவர் பாலமாகத் திகழ்ந்தார். அனுப்பியவர் கூறிய செய்தியை அவர் மிகச் சரியாக எடுத்தறிவித்தார். அனுப்பியவரின் உள்ளத்து உணர்வுகளை அவர் மிக நேர்த்தியாகப் பிரதிபலித்தார். எனவே அனுப்பப்பட்டவர் தம்மை அனுப்பியவரைப் பற்றிய ஆழமான அறிவும் அனுபவமும் கொண்டிருக்க வேண்டிய தேவை இருந்தது. மேலும், அனுப்பப்பட்டவர் தாம் அறிவித்த செய்தியில் நம்பிக்கை உடையவராகவும், அச்செய்தியைத் தாமே வாழ்ந்துகாட்டுபவராகவும் இருக்கவேண்டியிருந்தது. எனவே ஒருவிதத்தில் செய்தியாளரும் செய்தியும் ஒன்றே என்ற நிலை நிலவியது (எசே 3:22-27; 5:1-17).[7]

### (iii) *பசார்* (*basar*)

இதற்கு நிகரான கிரேக்கச் சொல் *எவாங்கலித்சோ* (*euangelizō*). இச்சொல்லின் பொருள் ''அறிவித்தல்'' என்பது (திபா 40:9; எசா 40:9). நல்ல செய்தி ஒன்றை அறிவிப்பதை இது உணர்த்தியது. உதாரணமாக, ஆண்மகன் ஒருவரின் பிறப்பு (எரே 20:15), போரில் பெற்ற வெற்றி (1 சாமு 31:9) போன்ற சமயக் கலப்பில்லாத, சமூக நிகழ்வுகளை அறிவிக்கின்ற சூழல்களில் இச்சொல் தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்டது. இதுவே பின்னர் இறைவனின் உண்மை, நீதி, இரக்கம் போன்றவற்றை எடுத்தறிவிக்கும் சமயச் சூழல்களிலும் பயன்படுத்தப்பட்டது (எசா 61:1). மகிழ்ச்சி என்பது அறிவித்தலின் மையமாக இங்கே இடம் பெற்றது. தாம் அறிவிக்கின்ற செய்தி கொண்டுவரும் மகிழ்ச்சியை உள்ளூர உணர்ந்தவராக, அதைத் தம்வயப்படுத்தியவராக, தாம் வாழும் சமூகத்திற்கு ஏற்ற விதத்தில் அதை எடுத்தறிவிக்கும் ஆற்றல் பெற்றவராக அறிவிப்பவர் இருந்தார். தாம் அறிவித்த வாழ்வு தரும் வாக்கால் முற்றிலும் மாற்றம் பெற்றவராக அறிவிப்பவர் மாறினார். இது அவரை வியப்பு, நம்பிக்கை, துணிவு போன்ற நல்லுணர்வுகளுக்கு இட்டுச் சென்றது (விப 12:27; 14:31).[8]

மேற்குறிப்பிடப்பட்ட மூன்று சொற்களும் பழைய ஏற்பாட்டில் மறைத்தூதுப்பணிச் சூழல்களில் பயன்படுத்தப்பட்டன. இச்சொற்களின் பொருளையும் இவை பயன்படுத்தப்படும் சூழல்களையும் கருத்தில் கொண்டு பழைய ஏற்பாட்டு மறைத்தூதுப்பணியைப் பின்வருமாறு வரையறுக்கலாம்:





இஸ்ரயேல் குழு தனது இறைநம்பிக்கையையும், அந்த இறைநம்பிக்கை முன்வைத்த அனைத்துவிதமான கடமைகளையும், தனது குழுவிற்கும், தனது குழுவைச் சாராத பிறருக்கும் அறிவித்துச் செயல்வடிவம் கொடுக்க எடுத்த அனைத்து முயற்சிகளுமே மறைத்தூதுப்பணி என்பது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், மறைத்தூதுப்பணியானது சமூக, சமய, பொருளாதார, அரசியல், பண்பாட்டுத் தடைகளைத் தாண்டி, மக்கள் அனைவரின் நல்வாழ்வுக்கான யாவே இறைவனின் திட்டத்தையும் திருவுளத்தையும் முழக்கமிட்டு அறிவிப்பதையும், அவ்வாறு அறிவித்தவற்றை முனைப்போடு செயல்படுத்துவதையும் உணர்த்துவதே.[9]

## இறைவனே முதல் மறைத்தூதுப்பணியாளர்

டேவிட் போஷ் கருத்துப்படி, பழைய ஏற்பாட்டில் மறைத்தூதுப்பணியாளர் என ஒருவர் உண்டென்றால் அது இறைவன் மட்டுமே. அவரே அனைத்து மக்களும் எருசலேமில் ஒன்றுகூடி, தம் கட்டளைகளை ஏற்று, உடன்படிக்கையின் மக்களாக மாறி, சகோதர சகோதரிகளாக வாழ வழிகாட்டுபவர்.[10] இக்கருத்தின் பொருள், மறைத்தூதுப்பணியில் மனிதர்கள் யாரும் பங்குபெறவில்லை என்பதல்ல; மாறாக, மனிதர்கள் ஆற்றும் மறைத்தூதுப்பணி, இறைவனின் மறைத்தூதுப்பணியில் இருந்தே பிறப்பெடுக்கிறது என்பதே. மேலும், இறைவன் தமது மறைத்தூதுப்பணி இலக்கை அடைவதற்கு மனிதர்களைக் கருவிகளாகப் பயன்படுத்துகின்றார் என்பதையும் இதன் மூலம் நாம் புரிந்துகொள்கின்றோம்.

இறைவனின் மறைத்தூதுப்பணியின் இலக்கு, மக்கள் அனைவரின் நல்வாழ்வு அன்றி வேறொன்றுமல்ல. மக்கள் தம்மை அறிந்து அன்புசெய்ய வேண்டும் என இறைவன் நினைப்பது, மனித மாண்பும் சமநீதியும் இம்மண்ணில் மலர வேண்டும் என்ற தமது நோக்கம் நிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே.[11] ஏனென்றால், விவிலியக் கடவுள் வானத்தின் அரியணையில் வாளாது இருந்து ஓய்பவரல்ல. மாறாக, அவர் மக்களை நேசிக்கின்ற கடவுள். அவர் மக்களின் இன்ப துன்பங்களில் பங்குபெறுபவர். அவர் உடைக்கப்பட்டவர்கள், ஓரங்கட்டப்பட்டவர்கள், அநீதியின் கோரப்பிடியில் சிக்கித் தவிப்பவர்கள் போன்றோரெல்லாம் நல்வாழ்வு பெற வேண்டுமென்று விரும்புபவர். எனவே இறைவனின் அந்த விடுதலைச் செய்தியை மக்களுக்கு

அறிவிப்பதும், அதன் மூலம் எல்லோரும் எல்லாம் பெற்று வாழும் புது உலகை இம்மண்ணில் மலரச்செய்வதுமே அவரது மறைத்தூதுப்பணியின் இலக்கு.

தங்கள் இறைவனைப் பற்றிய இஸ்ரயேலரின் புரிதல், அவர்களின் மறைத்தூதுப்பணிக்கு மிகவும் அடித்தளமாய் அமைந்தது.[12] இஸ்ரயேலரின் கடவுளான யாவே, இஸ்ரயேலரைச் சுற்றி வாழ்ந்த பிற மக்களின் கடவுள்களிடமிருந்து அடிப்படையில் வேறுபட்டவர். பிற மக்களின் கடவுள்கள் ஆண்டான்-அடிமைச் சமுதாயத்தை ஏற்று நிலைப்படுத்தியவர்கள். பல்வேறு சமூகப் பொருளாதார முரண்பாடுகளுக்கு வழிவகுத்தவர்கள். இதன் விளைவாக, கல்லுடைப்பவர்கள், கூலிக்கு வேலை செய்பவர்கள், கூலி பெறாதவர்கள், நிலமற்றவர்கள், ஏழைகள், அடிமைகள், அகதிகள், நாடுகடத்தப்பட்டவர்கள், ஒரு நாட்டை விட்டு மற்றொரு நாட்டில் அடைக்கலம் புகுந்தவர்கள், ஆள்வோர் காப்பிலிருந்தோ, தண்டனையிலிருந்தோ, பகைமையிலிருந்தோ, இடரிலிருந்தோ தப்பி ஓடியவர்கள் போன்றவர்களெல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஆனால் யாவே இறைவன், அநீத சமூகப் பொருளாதார அமைப்பால் பாதிக்கப்பட்ட இந்த மக்களின் சார்பாகச் செயல்பட்டவர். இவர்களை அடிமைப்படுத்திய சமூகப் பொருளாதார அமைப்புகளுக்கு முற்றிலும் மாறுபட்ட ஓர் அமைப்பை, யாவருக்கும் சமத்துவம் அளிக்கும் ஓர் அமைப்பை, ஒரு சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்தியவர். இவர்களை ஒன்றிணைத்து ஓரினமாக்கி அடிமைத்தனங்களிலிருந்தும் குழப்பங்களிலிருந்தும் அவர்களை விடுவித்தவர்.[13] இந்த யாவே இறைவனின் விடுதலைச் செயல்பாட்டில் வேரூன்றியதே இஸ்ரயேலரின் மறைத்தூதுப்பணி.

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவர் சார்பாகவும், அநீத அமைப்புகளை எதிர்த்துப் போர்புரிகின்ற போர்வீரராகப் பார்க்கப்பட்ட யாவே இறைவன், முதலில் இஸ்ரயேலரின் கடவுள் மட்டுமே என்றுதான் புரிந்துகொள்ளப்பட்டார். ஆனால் படிப்படியாக அவர் அனைத்து மக்களுக்கும் கடவுள் (எசா 13:1-20:6; 1 குறி 16:26); அனைவரும் அவரது விடுதலைச் செயல்பாடுகளை உணர்ந்து ஏற்றுக்கொள்ள அழைக்கப்பட்டவர்கள் (திபா 96; 97); அனைத்து மக்கள் மத்தியிலும் அவர் ஆற்றல் மிக்கவராகச் செயல்படுபவர் (எரே 27:5-8; ஆமோ 9:7); அனைவரையும் அவர் அறவாழ்வு வாழ அழைப்பவர் (எசா 14:4ஆ-21; ஆமோ 1-2); அனைவருக்கும் மன்னிப்பும் ஆசியும் அருள்பவர் (திபா 103:12; எசா 1:18) என்பன போன்ற பார்வைகளெல்லாம் உருவாயின.[14] எனவே





இஸ்ரயேலரை யாவே இறைவன் தேர்ந்தெடுத்தது அவர்களுக்கு அவர் கொடுத்த ஒரு தனிச்சிறப்பு அன்று; மாறாக அது ஒரு பணிப்பொறுப்பு. அனைத்து மக்களுக்கும் ஒளியாக, விடுதலையின் முன்னோடியாகத் திகழ வேண்டும் என்பதே அப்பணிப்பொறுப்பின் சாரம். இதுவே இஸ்ரயேலரின் மறைத்தூதுப்பணிக்கு அடிப்படை (இச 7:6; எசா 43:1).

## மறைத்தூதுப்பணியின் இரு முக்கிய நிலைகள்

பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்படும் மறைத்தூதுப்பணியில் பின்வரும் இரு முக்கிய நிலைகளைக் காண முடியும்:[15]

### (i) உள்நோக்கு நிலை (centripetal stage)

இது இஸ்ரயேலுக்கு ஆற்றப்பட்ட மறைத்தூதுப்பணியைக் குறிக்கின்றது. மோசேயின் தலைமையின் கீழ், இஸ்ரயேல் ஒரு கூட்டமைப்பாக உருவான பின்னர், இஸ்ரயேலுக்கு ஆற்றப்பட்ட மறைத்தூதுப்பணியை இந்நிலையில் குறிப்பிடலாம். மோசேக்கு முந்திய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்ற குலமுதுவர்கள் காலம் கூட இஸ்ரயேலை மையப்படுத்தியே இயங்கியது என்றாலும், அக்காலத்தை இஸ்ரயேல் உருவாக்கத்திற்கான ஒரு தயாரிப்புக் காலமாக, இஸ்ரயேலரை மட்டுமன்று, மாறாக மக்களினத்தார் அனைவரின் நல்வாழ்வையும் மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்ட காலமாகக் கொள்வதே சிறப்பு. இங்ஙனம் பார்க்கும்போது, உள்நோக்கு நிலையிலான இஸ்ரயேலின் மறைத்தூதுப்பணியானது, மோசேயின் வழிநடத்துதலில் இஸ்ரயேல் உருவாக்கம், யோசுவாவின் தலைமையின் கீழ் நாட்டைக் கைப்பற்றல், நீதித்தலைவர்களின் வழிநடத்துதலில் வளர்ச்சி பெறல், அரசர்களின் தலைமையின் கீழ் வெற்றியும் தோல்வியும் காணல், இறைவாக்கினர்களின் கண்டனத்திற்கும் ஆறுதலுக்கும் உள்ளாதல், எஸ்ரா, நெகேமியா போன்றவர்களின் கீழ் மறுஉருவாக்கம் பெறல், மக்கபேயர் புரட்சியால் எழுச்சி பெறல் என்ற காலச்சுவடுகளை மையம் கொண்டது. இக்காலகட்டங்களில் யாவே இறைவன் தந்த வாழ்வின் செய்தியானது, இஸ்ரயேலுக்கு அறிவிக்கப்பட்டு, அது புறக்கணிக்கப்பட்ட ஒவ்வொரு தருணத்திலும் மறு நற்செய்தி அறிவிப்பு (re-evangelization) என்பது போல, மீண்டும் மீண்டும் அது எடுத்துரைக்கப்படுவதையும் காண்கின்றோம். மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு

காலக்கட்டத்தையும், அக்காலக்கட்டத்தின் சிறப்புச் செயல்பாடுகளையும் மறைத்தூதுப்பணிப் பார்வையில் சற்று விரிவாகக் கீழே காண்போம்.

### மோசேயும் இஸ்ரயேல் உருவாக்கமும்

முட்புதர் ஒன்றில் எழுந்த தீப்பிழம்பிலிருந்து, ''மோசே, மோசே'' என அழைத்து, ''இப்போதே போ... என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்'' (விப 3:4,10) என அனுப்பப்பட்டதில் இருந்து உதயமானதே மோசேயின் மறைத்தூதுப்பணி. இப்பணியின்பொருட்டுத் தயங்கிய மோசே, ''நான் உன்னோடு இருப்பேன்'' (விப 3:12) என்ற இறைவனின் வாக்கால் வலுவூட்டப்பட்டார். இவ்வாக்கில் நம்பிக்கைகொண்டு, தம் முன்னோர் வழிவந்த மக்களோடு தம்மை இணைத்துக்கொள்ள, அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுக்க, யாவே இறைவனின் மறைத்தூதராக, எகிப்து நோக்கி அவர் பயணமானார்.

மோசேயின் மறைத்தூதுப்பணி, அடிமைப்படுத்தப்பட்டிருந்த தம் மக்களுக்கு யாவே இறைவனின் பரிவு, உடனிருப்பு, மற்றும் விடுதலைக்கான முதல்முயற்சி ஆகியவற்றை உணர்த்துவதாகவும், அடிமைப்படுத்திய அநீத அமைப்பைத் துணிவோடு தட்டிக்கேட்பதாகவும் அமைந்தது. இப்பணி அவருக்கு எளிதானதாக இருக்கவில்லை. ''அவர்கள் என்னை நம்ப மாட்டார்கள்; என் பேச்சைக் கேட்கவும் மாட்டார்கள்'' (விப 4:1) என மோசே கூறியதற்கேற்ப, அவரின் மக்களே அவருக்கெதிராகப் பல சூழல்களில் முணுமுணுத்தனர். பார்வோனும் மோசேயின் மக்களுக்கு உடனே விடுதலை தந்துவிடவில்லை. பத்துப் பெருந்துன்பங்களை உள்ளடக்கிய பல போராட்டங்கள், பார்வோன் தன் மனத்தை மாற்றிக்கொள்ளத் தேவைப்பட்டன. எனினும் மோசே என்னும் சிறந்த ஆளுமையின் அர்ப்பணம் மற்றும் தொடர்முயற்சியாலும், யாவே இறைவனின் உடனிருப்பாலும் முழுவிடுதலை என்பது சாத்தியமாயிற்று.

மோசேயின் மறைத்தூதுப்பணியில் பாஸ்கா, உடன்படிக்கை என்னும் இரு கூறுகளும் ஒரு மனிதரின் இரு கண்கள் போல மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தனவாய் அமைந்தன. இவை இரண்டையும் அன்றைய சமூகப் பின்னணியில் இருந்துதான் மோசே உள்வாங்கினார். ஆடு, மாடு மேய்ப்போர் தங்கள் மந்தையின் அபிவிருத்திக்காகக் கொண்டாடிய விழாவிலிருந்து உருவானதே பாஸ்கா. அதுபோல, அரசர்களுக்கிடையே செய்யப்பட்ட





ஒப்பந்தகளிலிருந்து உருவானதே உடன்படிக்கை. இங்ஙனம் மறைத்தூதுப்பணியில் பண்பாட்டுமயமாக்கல் மூலம், தான் சார்ந்திருந்த சமுதாயத்தில் வழக்கிலிருந்த நலமான கூறுகளை மோசே தமதாக்கிக்கொண்டார். அவ்வாறு உள்வாங்கிய கூறுகளுக்குப் புதிய பொருள் கொடுத்து, தம் பணியில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும் கருவிகளாக அவற்றை அவர் பயன்படுத்தினார். இதனால், அடிமைத்தனத்திலிருந்து பெற்ற விடுதலையை நினைவூட்டும் அடையாளமாகப் பாஸ்காவும், இறைவன் தந்தை, அடுத்திருப்போர் எல்லோரும் சகோதர சகோதரிகளே என்ற உறவை உறுதிப்படுத்தும் சின்னமாக உடன்படிக்கையும் அமைந்தன.

இஸ்ரயேல் என்ற இனத்தின் உருவாக்கம் மறைத்தூதுப்பணிக்கு ஓர் ஒப்பற்ற சான்று. பஞ்சத்தின் விளைவாகக் கானானிலிருந்து எகிப்து என்ற வளமான நாட்டிற்குப் பிழைப்புத் தேடிச் சென்ற யாக்கோபின் பன்னிரு மகன்களின் வழிவந்தவர்களே இஸ்ரயேலர் என்றுதான் மேலெழுந்த வாரியாகப் பார்ப்போர் உணர்வர். ஆனால் உண்மையில் அன்றைய இஸ்ரயேலர் என்போர், ஒரே இனத்தைச் சார்ந்தவர்களோ, ஒரே மொழியைப் பேசியவர்களோ, ஒரே கடவுளில் நம்பிக்கை கொண்டிருந்தவர்களோ அல்லர் என்பதே இன்று ஏற்றுக்கொள்ளப்படும் கருத்து. இதன்படி அவர்கள் பல்வேறு இனத்தவர்களின், பல மொழியைப் பேசியவர்களின், பல கடவுள்களில் நம்பிக்கை கொண்டிருந்தவர்களின் கூட்டுக் குழுவினர் ஆவர் (விப 12:38). நார்மன் கோட்வால்டு மற்றும் ஜான் பிரைட் கருத்துப்படி, மேற்கு ஆசிய நாடுகளில் கி.மு.2000 ஆண்டை ஒட்டிக் கொள்ளைக்காரர்களாக, படைவீரர்களாக, அகதிகளாக வாழ்ந்து வந்த எந்த குடியுரிமையும் பெறாத *ஹபிரு* என்ற இனக்குழுவினரே இஸ்ரயேலரின் நேரடி மூதாதையர்கள் ஆவர். மேலும், இவர்களைப்போல அடிமைப்படுத்தப்பட்டிருந்த *ஹிக்சோஸ்* இனத்தவர்கள், யாக்கோபின் வழிவந்தவர்கள், மற்றும் பல பிற இனக் குழுவினரை இணைத்து உருவானதே இஸ்ரயேல் இனம். இவர்கள் அனைவரையும் ஒன்றாக இணைத்தது, அன்று அவர்கள் அனுபவித்த அடிமைத்தனம் ஒன்றே.[16] எனவே மோசேயின் மறைத்தூதுப்பணி, யாவே இறைவனை அறியாத பலருக்கும் அவரை அறிவித்து, அவர்கள் மூலம் இஸ்ரயேல் என்ற கூட்டுக்குழுவை உருவாக்கி, அக்குழு அன்றிருந்த அடிமைத்தனங்கள் அனைத்திற்கும் எதிரான

சமூக விடுதலையின் மாதிரியாய் திகழ, மாற்றுச் சமுதாயத்தின் முன்னோடியாய் விளங்க, முழுமுதற் பொருளாய் அமைந்தது (விப 4:1-5:21).

## யோசுவாவும் நாட்டைக் கைப்பற்றலும்

மோசேயைத் தொடர்ந்து, இஸ்ரயேலரின் மறைத்தூதுப்பணியாளராக, யோசுவாவை இறைவன் தேர்ந்துகொண்டார் (யோசு 1:1-2). தமது பணியில் யோசுவா பாஸ்கா, விருத்தசேதனம், உடன்படிக்கை, திருச்சட்டம் போன்ற இஸ்ரயேலரின் சமய அடிப்படைகளைப் புதுப்பிக்கின்றவராகச் செயல்பட்டார் (யோசு 5:2-11; 8:30-35). மக்களின் அனைத்துப் பிரிவினர் மீதும் சம ஈடுபாடும் அக்கறையும் கொண்டவராக அவர் திகழ்ந்தார் (யோசு 17:3-4; 21:4-41). நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே எப்போதும் ஊழியம் செய்வோம் என்று அவர் முழக்கமிட்டு அறிவித்தார் (யோசு 24:15). ஆனால் அவரது மறைத்தூதுப்பணியின் அடிப்படைச் செயல்பாடாக அமைந்தது நாட்டைக் கைப்பற்றியதும் அதை இஸ்ரயேலருக்குப் பகிர்ந்து கொடுத்ததுமே. இறைவன் தம்மிடம் ஒப்படைத்த அப்பணியை (யோசு 1:6) யோசுவா சிறப்புற நிறைவேற்றி, நாடோடிகளாக அலைந்த மக்கள், உரிமை நாட்டில் வாழ உதவுவதும் மறைத்தூதுப்பணியின் அங்கமே என்பதை எண்பித்தார்.

## நீதித்தலைவர்களும் மக்கள் விடுதலையும்

யோசுவாவின் காலத்திற்குப் பின்னர், அரசராட்சி அறிமுகப்படுத்தப்படும் வரை, யோசுவாவைப் போலத் தேசியத் தலைவர் என ஒருவர் இஸ்ரயேலில் இருக்கவில்லை. மாறாக, இக்காலத்தில் இஸ்ரயேலர் வெவ்வேறு நீதித்தலைவர்களால் வழிநடத்தப்பட்ட தனித்தனிக் குலங்களாகவும், ஆனால் யாவே இறைவனாலும் தங்கள் சமய மரபுகளாலும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு கூட்டமைப்பாகவுமே விளங்கினர். நீதித்தலைவர்கள் அனைவரையும் அவரவர் காலச் சூழலில் எழச்செய்து, அவர்களைப் பணிக்கென அனுப்பிவைத்தவர் இறைவனே என்றுதான் விவிலியம் சித்தரிக்கின்றது (நீத 3:9,15). இவ்விவரிப்பில் கிதியோனின் அழைப்பு (நீத 6:11-24), மற்றும் சிம்சோனின் ‘‘நாசீர்’’ பிறப்பு (நீத 13:1-7) ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன. நீதித்தலைவர்கள், இஸ்ரயேல் மக்களுக்குப் பணியாற்ற இறைவனால் அனுப்பப்பட்டதால் அவர்கள் மறைத்தூதுப்பணியாளர்களே.





ஆனால் அவர்களின் மறைத்தூதுப்பணி சற்று மாறுபாடானது. ‘‘நீதித்தலைவர்’’ என்ற சொல் ‘‘நீதி வழங்குபவர்’’ என்ற பொருளிலல்ல; மாறாக, ‘‘போரை முன்னின்று நடத்துபவர்’’ என்ற பொருளிலேயே இங்கு அதிகம் புரிந்துகொள்ளப்பட வேண்டியது. இதற்கு, நீதித்தலைவர் தெபோரா விதிவிலக்கு என்பதை மறுப்பதற்கில்லை. ஏனென்றால் தெபோரா போருக்கு வழிகாட்டியவர் மட்டுமல்ல; மாறாக, மக்களுக்கு நீதி வழங்கும் பணியையும் செய்தவர் (நீத 4:4-7). இஸ்ரயேலின் தாய்போல அவர் தோன்றியவர் (நீத 5:7). எனினும் நீதித்தலைவர்கள் பலரும் பகைவர்களின் ஒடுக்குமுறைகளிலிருந்து மக்களை விடுவிக்கின்ற போர்த் தலைவர்களாக, அதன் பயனாக மக்களை அமைதியோடு வாழச்செய்கின்ற ஆட்சியாளர்களாகப் பணியாற்றினர்.

தங்கள் பணியில் இறைவனின் நம்பிக்கைக்குரியவர்களாக எல்லா நீதித்தலைவர்களும் எப்போதும் இருந்தார்கள் எனச் சொல்வதற்கில்லை. பாகாலின் பீடத்தை இடித்தெறிந்து, அசேரக் கம்பத்தை வீழ்த்தி, பிற தெய்வ வழிபாட்டைத் தொடக்கத்தில் அழித்தொழித்த கிதியோன், இறுதியில் அவரே ஏப்போது ஒன்றைச் செய்து, இஸ்ரயேலர் யாவேயை மறந்து அந்த ஏப்போதை வணங்கக் காரணமானார் (நீத 6:25-27; 8:22-28). அதுபோல சிம்சோன், பெண்கள் மீது கொண்ட அதீத ஆசையால், பலவீனமானவராக, தம் மக்களைப் பாதுகாக்க இயலாதவராக மாறிப்போனார் (நீத 14:1-16:31). எனினும், நம்பிக்கைக்குரியவர்களாக இல்லாதோரையும் பலவீனர்களையும் இறைவன் தமது பணியில் பயன்படுத்தினார் என்பது நம்மைச் சிந்திக்க அழைக்கின்றது.

## அரசர்களும் நன்மை தீமைகளும்

அம்மோனியர், பெலிஸ்தியர் போன்றவர்களிடமிருந்து மிகுந்த அரசியல் நெருக்கடியை எதிர்கொண்ட இஸ்ரயேலர், தங்களுக்கு நீதி வழங்கவும் போர்களை முன்னின்று நடத்தவும், அரசர் வேண்டுமெனக் கோரினர் (1 சாமு 8:19-20). இக்கோரிக்கை, இறைவனே இஸ்ரயேலின் நிரந்தர அரசர் (விப 15:18) என்ற நீண்டகால நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்கியது. எனினும் மக்கள் குரலே வென்றது. சவுல் இஸ்ரயேலின் முதல் அரசராகத் திருப்பொழிவு பெற்றார் (1 சாமு 10:1). ‘‘திருப்பொழிவு’’ ஒருவருக்குத் தனிப்பட்ட விதத்தில் பெருமையையும் சிறப்பையும் கொண்டுவருதல்ல; மாறாக, இறைவனின் மறைத்தூதுப்பணியாளராக அவர் அழைக்கப்பட்டிருப்பதையும்

அனுப்பப்படவிருப்பதையும் அவருக்கு உணர்த்துவதே; இறைவனின் பிரதிநிதியாக, அவர் மக்கள் முன்னின்று செயல்பட வேண்டிய பணிப்பொறுப்பைச் சுட்டிக்காட்டுவதே. எனவே இஸ்ரயேலின் அரசர்களெல்லாம், இஸ்ரயேல் மக்கள் மத்தியில் உண்மை, நீதி, சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையிலான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப, இப்பணிக்குத் தடையாய் இருக்கும் அனைத்தையும் தகர்க்க அனுப்பப்பட்ட மறைத்தூதுப்பணியாளர்களே.

அரசர்கள் தங்கள் பணியின் மூலம், நாட்டின் எல்லைகளை விரிவாக்கியது, மக்களுக்கு நீதியும் பாதுகாப்பும் அளித்தது, சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை முன்னெடுத்தது, ஆலயம் அமைத்து யாவே வழிபாட்டை நிலைநிறுத்தியது என்று பல சிறப்பான செயல்பாடுகளை முன்னெடுத்தனர். சவுல், தாவீது, சாலமோன், எசேக்கியா, யோசியா போன்ற அரசர்களெல்லாம் மேற்கண்ட பணிகளில் குறிப்பிடத்தக்கவர்கள். எனினும் நீதித்தலைவர்களைப்போலவே, இறைவனின் நம்பிக்கைக்குரியவர்களாக எல்லா அரசர்களும் எல்லா நேரத்திலும் இருக்கவில்லை. இஸ்ரயேலின் உண்மையான அரசரான யாவேயின் பிரதிநிதிகளாய் இருந்து ஆட்சி செய்யவேண்டிய அரசர்களுள் பலர் தீமைகளுக்கு வித்திட்டனர். நிலக்குவிப்பிலும், செல்வச்செருக்கிலும், அதிகாரபோதையிலும், ஒழுக்கமற்ற வாழ்விலும் சிக்கித் தவித்தனர். யாவே இறைவனை மறந்து, சிலைவழிபாடு எங்கும் பரவக் காரணமாயினர். அரசர், அரசு அதிகாரிகள், மக்கள் என்ற படிநிலை அமைப்பு உருவாகி, மையத்திலிருந்து விளிம்புக்கு மக்கள் தள்ளப்பட வழிவகுத்தனர். மாற்றுச் சமுதாயமாகத் திகழ வேண்டிய இஸ்ரயேல், மற்ற நாடுகளைப்போல் அநீதி நிறைந்த சமுதாயமாக மாறத் துணைபோயினர். கடும் வரி விதிப்பு, கட்டாய வேலைத்திட்டம் போன்றவற்றினால் மக்கள் குரல்வளைகளை நெரித்தனர். உடன்படிக்கைச் சமுதாயம் மறைந்து, ஏழைகள், கைம்பெண்கள், தந்தையை இழந்தோர் போன்றோரெல்லாம் ஒடுக்கப்படும் நிலைக்கு வித்திட்டனர். இதனால், நாடு இரண்டாக உடையவும், அதன் விளைவாக அரசியல் பலம் இழந்து, நாட்டு மக்கள் அசீரியர்களாலும் பாபிலோனியர்களாலும் அடிமைப்படுத்தப்படவும் காரணியாயினர். இங்ஙனம் மறைத்தூதுப்பணியாளர்களாகச் செயலாற்ற அனுப்பப்பட்ட அரசர்களுள் பலர், இறைவனையும் மக்களையும் மறந்து, உடன்படிக்கை முன்வைத்த





கடமைகளைக் காற்றில் பறக்கவிட்டனர். தங்கள் சுயநல நோக்கங்களை மட்டுமே நிறைவேற்றிக்கொள்ளும் கொடுங்கோலர்களாக மாறி, தங்கள் அழைப்பின் நோக்கத்தை நிறைவேற்றத் தவறிய ஆட்சியாளர்களாக உருவெடுத்தனர்.

## இறைவாக்கினர்களும் மாற்றுச் சமுதாயமும்

உடன்படிக்கைச் சமுதாயம் சிதைவுற்ற அரசராட்சிக் காலத்தில், மீண்டும் மாற்றுச் சமுதாய இலக்கை வலியுறுத்த இறைவனால் அழைக்கப்பட்டு இஸ்ரயேலில் அனுப்பப்பட்ட மறைத்தூதுப்பணியாளர்களே இறைவாக்கினர்கள். இவர்களின் பணி, தாங்கள் பெற்ற அழைப்பில் வேரூன்றியதாகவே என்றும் இருந்தது. மாக்ஸ் வெபர் கருத்துப்படி, "ஒரு குருவிடமிருந்து இறைவாக்கினர் ஒருவரை வேறுபடுத்திக்காட்டுவது, அவர் இறைவனிடமிருந்து பெற்ற தனிப்பட்ட அழைப்பே."[17] ஆனால் அந்த அழைப்பு, ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலில், அச்சூழல் முன்வைத்த பல்வேறு சமூக அவலங்களில், அவற்றை மாற்றத் துணிந்த ஆழமான உள்ள உறுதிப்பாட்டில் உணரப்பட்டதே. தங்கள் அழைப்பின் பொருட்டு, இறைவாக்கினர்கள் முதலில் தயங்கினாலும் இறைவனால் அவர்கள் உறுதியூட்டப்பட்டார்கள்.

எனவே, தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கு உண்மையுள்ளவர்களாய், சமுதாயத்தில் புரையோடிக்கிடந்த தீமைகளைத் தோலுரித்துக்காட்டி, அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் மருத்துவர்களாய் இறைவாக்கினர்கள் செயல்பட்டார்கள். சமூக அநீதிகளைச் சாடிய ஆமோஸ், இறையன்பின் இலக்கணமாய் நிகழ்ந்த ஓசேயா, நீதியுள்ள அரசரின் வரவை அறிவித்த முதலாம் எசாயா, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலாய் ஒலித்த மீக்கா, புதிய உடன்படிக்கையின் அறிவிப்பாளரான எரேமியா, விடுதலையின் அறைகூவலான எசேக்கியேல் மற்றும் பிற இறைவாக்கினர்கள் அனைவருமே மறைத்தூதுப்பணியின் மூலம் ஆட்சியாளர்களையும் மக்களையும் நெறிப்படுத்த முயன்றனர். சமூக மனச்சான்றாய் திகழ்ந்து, இறைவாக்கை அஞ்சா நெஞ்சுடன் எடுத்துரைத்தனர். இஸ்ரயேலின் சமய அடையாளமான உடன்படிக்கை உறவைப் புதுப்பித்தனர். நீதியும் அமைதியும் நிறைந்த மாற்றுச் சமுதாயம் மலரப் பாடுபட்டனர்.

ஆபிரகாம் கெஷல் "இறைவாக்கினராக இருப்பது ஒரு பெரும் பேறு; ஆனால் அது ஒரு பெரும் அபாயமும் கூட"[18] என்கின்றார். இதற்கேற்ப,

தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மறைத்தூதுப்பணியின் பொருட்டு, மிகுந்த துன்பங்களையும் இறைவாக்கினர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. உதாரணமாக, எரேமியா அவரின் தந்தை வீட்டாராலே பழித்துரைக்கப்பட்டார் (எரே 12:6). தலைவர்களால் அடித்து உதைக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார் (எரே 37:11-15). ''ஆண்டவர் பெயரால் இறைவாக்கு உரைக்காதே; உரைத்தால் எங்கள் கைகளாலே சாவாய்'' என்று அனத்தோத்தின் ஆட்களால் அச்சுறுத்தப்பட்டார் (எரே 11:21). ''நீ கண்டிப்பாய்ச் சாக வேண்டும்'' (எரே 26:8-11) என்று மக்கள் பலரால் சபிக்கப்பட்டார். இந்த வேதனையின் பொருட்டு எரேமியா மனமுடைந்து, ''ஆண்டவரே! நீர் என்னை ஏமாற்றிவிட்டீர்; நானும் ஏமாந்து போனேன்'' (எரே 20:7) என்று புலம்பினார். எனினும், ''உம் சொல் என் இதயத்தில் பற்றியெறியும் தீ போல இருக்கின்றது. அது என் எலும்புகளுக்குள் அடைபட்டுக் கிடக்கின்றது. அதனை அடக்கிவைத்துச் சோர்ந்து போனேன்; இனி என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது'' (எரே 20:9) என்று கூறி இறைவார்த்தையை மீண்டும் முழக்கமிடத் துணிந்தார். இவ்வாறு மறைத்தூதுப்பணியின் பொருட்டு எத்தகைய துன்பங்களை அனுபவித்தாலும், இறைவாக்கினர்கள் நிலைகுலைந்திடவில்லை; தங்கள் பணியினின்று பின்வாங்கவில்லை.

### எஸ்ரா, நெகேமியாவும் சீர்திருத்தங்களும்

பாபிலோனிய அடிமைத்தளையிலிருந்து தங்கள் தாய்நாடு திரும்ப, பாரசீக மன்னர் சைரஸ் என்பவரால் இஸ்ரயேலர் அனுமதிக்கப்பட்டபோது (எஸ்ரா 1:2-4), நான்கு குழுக்களாக அவர்கள் யூதாவுக்குத் திரும்பினர். முதல் இரு குழுக்களுக்கும் முறையே சேஸ்பட்சர் மற்றும் செருபாபேல் ஆகியோர் தலைமையேற்றனர் (எஸ்ரா 1:11-2:1). மூன்றாம், நான்காம் குழுக்கள் முறையே எஸ்ரா மற்றும் நெகேமியா ஆகியோர் தலைமையில் நாடு திரும்பின (எஸ்ரா 7:1-10; நெகே 2:1-10). மேற்கண்ட நால்வரும் இப்பணிக்கென இறைவனால் தூண்டப்பட்டவர்களே (எஸ்ரா 1:5); அவரின் அருட்கரத்தால் இஸ்ரயேலரிடம் அனுப்பிவைக்கப்பட்ட மறைத்தூதுப்பணியாளர்களே. இவர்களில் எஸ்ரா மற்றும் நெகேமியா, இஸ்ரயேலின் தனித்தன்மை மற்றும் மக்கள் நலன் ஆகியவற்றைக் காக்கும் பொருட்டுப் பல சீர்திருத்தங்களை முன்னெடுத்தனர் (எஸ்ரா 9-10; நெகே 5; 10; 13).





அச்சீர்திருத்தங்களுள் அதிக முக்கியத்துவம் பெறுவது, இஸ்ரயேலர் பிற இனத்தாரோடு செய்திருந்த கலப்புத் திருமணங்களைப் பிரித்தது (எஸ்ரா 10:44; நெகே 10:30). கலப்புத் திருமணங்கள் சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் வழிமுறைகளுள் ஒன்றாயிருக்க, அவற்றைப் பிரிப்பதை எப்படிச் சீர்திருத்தம் எனக் கருத முடியும்? என்ற வினா நம் மனங்களில் எழலாம். இக்கேள்விக்கான விடையை அச்சீர்திருத்தம் நடைபெற்ற காலத்தில் இருந்துதான் நாம் பெற வேண்டும். பாபிலோனில் சுமார் எழுபது ஆண்டுகள் அடிமைகளாக இன்னலுற்றுத் திரும்பிய சூழலில், தங்கள் அடிமைத்தளைக்கான காரணம் என்ன என்று இஸ்ரயேலர் எண்ணிப்பார்த்தனர். தங்கள் இனத்தின் புனிதத்தை, மாற்றுச் சமுதாயமாக வாழ்வதற்கான அழைப்பை, உடன்படிக்கையின் மக்களாக வாழ வேண்டிய இலக்கை வாழத் தவறியதே அதற்கான காரணம் என்று உணர்ந்தனர். இதனாலேயே பல்வேறு பிரிவினைகள், ஒடுக்குமுறைகள், ஏற்றத்தாழ்வுகள் போன்றன தங்கள் இனத்திற்குள்ளேயே தோன்றி, வலிமையிழந்தவர்களாக, எதிரிகள் முன் தாங்கள் வீழ்ச்சியுறக் காரணமானதை எண்ணிப்பார்த்தனர். எனவே பிற இனக் கலப்பு, மீண்டும் அந்த இனங்களின் அடிமைத்தனக் கருத்தியல்களையும் அமைப்புகளையும் உள்வாங்கிவிட வாய்ப்பாகிவிடக் கூடும் எனக் கருதினர். இதுவே பிற இனத்தாரோடு செய்திருந்த கலப்புத் திருமணங்களைப் பிரிக்க வழிவகுத்தது. எனினும், இது விவிலியத்தில் எல்லாக் காலத்திலும் நடைபெற்ற ஒன்று அல்ல என்பதையும், இஸ்ரயேல் மாந்தர் பலர், பிற இனப் பெண்களைத் திருமணம் செய்துகொண்டதையும் (தொநூ 16:3; 41:45; விப 2:21; 12:1; ரூத் 4:10; 2 சாமு 3:3) இங்கே நினைவில் கொள்ள வேண்டும். மேலும், விவிலியம் கூறுவதைப்போல, எஸ்ராவும் நெகேமியாவும் கலப்புத் திருமணங்களைப் பிரித்திருந்தால்கூட, அதனால் கைம்பெண்கள் மற்றும் தந்தையை இழந்தோர் ஆக்கப்பட்டோர் மேல், அவர்களுக்குக் காட்டப்பட வேண்டிய கரிசனையாக விவிலியம் முன்வைப்பதை, நிச்சயம் காட்டத் தவறியிருக்கமாட்டார்கள் என்றும் கருத இயலும் (விப 22:21-24; இச 14:29; 16:11,14; 24:17). எனவே, இச்சீர்திருத்தம் அன்றைய காலச்சூழலில் இஸ்ரயேலின் தனித்தன்மையை காக்கத் தேவைப்பட்ட ஒன்று; ஆனால் அது இன்று நமக்குப் பாடமாகத் தேவையில்லை.

நெகேமியாவின் பணிகளுள் குறிப்பிடத்தக்க வேறொன்றும் உண்டு. அதுவே வறுமையினால், உண்ண உணவின்றி, உயிர் வாழ வழியின்றி, தங்கள்

உடைமைகளை எல்லாம் அடைமானம் வைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட, தங்கள் கடன்களுக்காகப் பெற்ற பிள்ளைகளையே அடிமைகளாக விற்றுவிட வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்ட மிகப் பலருக்கு உதவ முன்வந்தது. இவர்களுக்குக் கடன்கொடுத்தவர்களிடம், தாங்கள் கொடுத்த கடன் முழுவதையும் கேளாது விடும்படி நெகேமியா கேட்டுக்கொண்டார். தாமும் தம் சொல்லுக்குச் சான்று பகரும் வண்ணம், தம்மிடம் கடன் பெற்றவர்களின் கடன் முழுவதையும் கேளாது விட்டார். கடன்கொடுத்தவர்கள் அனைவரும் இதைப்பார்த்துத் தாங்கள் கொடுத்த கடனையும் நெகேமியாவைப் போன்று கேளாது விட்டனர். இங்ஙனம் வறுமையில் உழல்வோருக்குத் தோள்கொடுப்பதும், அவர்களின் நிலை ஏற்றம் பெற உழைப்பதும் மறைத்தூதுப்பணியே என நெகேமியா எண்பித்தார் (நெகே 5:1-13).

### மக்கபேயர்களும் சமூகக் கிளர்ச்சியும்

கி.மு. இரண்டு மற்றும் முதல் நூற்றாண்டுகளில் கிரேக்கமயமாக்கல் மூலம் யூதர்களைப் பலவாறு துன்புறுத்திவந்த செலூக்கிய ஆட்சியை எதிர்த்து, சமய மற்றும் அரசியல் சுதந்திரம் வேண்டிக் கிளர்ச்சி செய்தவர்களே மக்கபேயர்கள். செலூக்கிய மன்னன் அந்தியோக்கு எப்பிபான் காலத்தில், இக்கிளர்ச்சி அதன் உச்சநிலையை அடைந்தது. ஏனென்றால் கிரேக்க மொழி, கிரேக்கப் பண்பாடு, கிரேக்க சமயம் ஆகியவற்றை யூதர்கள் மேல் திணித்து, யூத சமய நெறியை முற்றிலும் அழித்தொழிக்க, அவர் உறுதி பூண்டிருந்தார் (1 மக் 1:20-24,54-61). இதனை எதிர்த்து மத்தத்தியா மற்றும் அவரின் மகன்கள் யூதா, யோனத்தான், சீமோன் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராகத் தலைமையேற்றுப் போராடினர். இறைவன் மேல் ஆழ்ந்த பற்றுக்கொண்டு, உடன்படிக்கை மற்றும் திருச்சட்டத்தின் காவலர்களாக, தங்கள் சமய நம்பிக்கையை வலுப்படுத்தும் மறைத்தூதுப்பணியாளர்களாக அவர்கள் செயல்பட்டனர். தங்கள் போராட்டத்தின் பயனாக, சமய மற்றும் அரசியல் சுதந்திரத்தை வென்றெடுத்தனர். எனினும், இவர்கள் செய்த கிளர்ச்சி, ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் விடுதலைக்காக முன்னெடுத்த வழிமுறை என்றுதான் பார்க்கப்பட வேண்டுமேயன்றி, அது எக்காலத்திற்கும் மாதிரி என்றாகிடத் தேவையில்லை. மேலும் மறைத்தூதுப்பணியாளர்களாகக் "கிளர்ச்சி" என்ற மாற்று அணுகுமுறையோடு தங்கள் பணியை ஆரம்பித்த மக்கபேயர்கள்,





இறுதியில் அதிகார வேட்கை கொண்டு, தலைமைக்குரு பதவியைத் தங்களுக்கெனப் பறித்துக்கொண்டனர் (1 மக் 10:21). இது திருச்சட்டத்திற்கு முரணான செயல் எனக்கருதி, திருச்சட்டத்தைக் கடைபிடிப்பதில் தீவிரம் காட்டியோர் மக்கபேயர்களிடமிருந்து விலகினர். இதனால் இஸ்ரயேலில் பிளவு ஏற்பட்டு எஸ்ஸீனியர், பரிசேயர் போன்றோர் தோன்றினர்.[19]

### (ii) வெளிநோக்கு நிலை (centrifugal stage)

இது இஸ்ரயேல் அல்லாத பிற மக்களுக்கு ஆற்றப்பட்ட மறைத்தூதுப்பணியைக் குறிக்கின்றது. இப்பணியானது, "மக்களினங்கள் அனைத்திற்குமான" மற்றும் "இஸ்ரயேலைச் சுற்றிவாழ்ந்த பிற இனங்களுக்கான" என்ற இரு வடிவங்களை எடுத்தது. மக்களினங்களை, குறிப்பாகப் பிற இன மக்களைக் குறிக்க பழைய ஏற்பாடு *அம்மீம்* (*'ammîm*: தொநூ 28:3; எசா 2:3), *கோயீம்* (*goyîm*: தொநூ 10:5; இச 7:1) என்ற இரண்டு எபிரேயச் சொற்களைப் பயன்படுத்துகின்றது. இச்சொற்கள் முறையே "மக்கள்," "பிற இனத்தார்" எனப் பொருள்படுகின்றன. பழைய ஏற்பாட்டில் இச்சொற்கள் அதிகம் பயன்படுத்தப்படுவதைப் பார்க்கும்போது, எந்த அளவு அங்கு இஸ்ரயேல் இனத்தாருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றதோ, அதே அளவு மக்களினங்கள் அனைவருக்கும், குறிப்பாக இஸ்ரயேலைச் சுற்றி வாழ்ந்த பிற இன மக்களுக்கும் கொடுக்கப்படுவது தெளிவாகின்றது. படைப்பின் தொடக்கத்தில், இவ்வுலகப் படைப்புகளோடு, இறைவன் "மனித" இனத்தைத்தான் படைத்தார்; "இஸ்ரயேல்" இனத்தை அல்ல. இஸ்ரயேல் இனம் என்பது பலதரப்பட்ட மக்களிடமிருந்து, இறைவனின் தனி அழைப்பினால் உருவான ஒன்று; தனிப் படைப்பினால் அல்ல. மேலும் இஸ்ரயேல் இனம் அழைக்கப்பட்டதே, தன்னை ஒரு மாதிரிச் சமுதாயமாகக் கட்டியெழுப்பி, அனைத்து மக்களும் அந்த இலக்கை அடையச் செய்ய வேண்டும் என்பதற்காகவே. இவ்வாறு மனித இனம் அனைத்தின் நல்வாழ்வை, குறிப்பாக இஸ்ரயேலைச் சுற்றிவாழ்ந்த பிற இன மக்களின் நல்வாழ்வை முன்னிறுத்திய சிந்தனைகளும் செயல்பாடுகளும் பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் காணக்கிடக்கின்றன. எனினும் தொடக்கநூல், திருப்பாடல்கள், இறைவாக்கினர் நூல்கள், மற்றும் ஞான நூல்களில் அவை தனிச்சிறப்பான வடிவங்களை எடுக்கின்றன. அவற்றுள் சில முக்கிய சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் மறைத்தூதுப்பணிப் பார்வையில் சற்று விரிவாகக் கீழே காண்போம்.

## தொடக்கநூலும் மக்களினங்களுக்கான ஆசியும்

தொடக்கநூலின் முதல் பதினொரு அதிகாரங்களும் மக்களினங்கள் அனைவருக்குமான மறைத்தூதுப்பணி அடிப்படைகளைக் கொண்டுள்ளன.[20] ஏனென்றால் இங்கு, இறைவன் உலகு உருவாகும் முன்னரே இருந்தது; இயற்கையையும் மக்களினங்களின் தொடக்கமாக மானிடரையும் அவர் படைத்தது; படைக்கப்பட்ட மானிடர் நிறைவாழ்வு பெறும் அடையாளமாக ஏதேன் தோட்டத்தில் அவர்களை அவர் குடியமர்த்தியது; கீழ்ப்படியாமையால் மானிடர் அந்த வாழ்வை இழந்தபோது ஏதேன் தோட்டத்திலிருந்து அவர்களை அவர் வெளியேற்றியது; வெள்ளப்பெருக்கின் மூலம் தீமையை அழித்து உலகை அவர் புதுப்பித்தது என்று மானிடரின் இயல்பும் அந்த இயல்பைப் புதுப்பித்து அவர்கள் அனைவருக்கும் நல்வாழ்வு அளிக்கும் இறைவனின் திட்டமும் வெளிப்படுத்தப்படுகின்றன. இதையே ரோஜர் ஹெட்லண்ட், இறைவனின் கைவேலைப்பாடான படைப்பு, மானிடரைப் படைத்ததில்தான் நிறைவடைகின்றது; அம்மானிடப் படைப்பு மக்களினங்கள் அனைவருக்கும் வாழ்வளிக்கும் இறைத்திட்டத்தின் பொதுவான தொடக்கமே; இவ்வாறு, விவிலியத்தின் முதல் பணி மக்களினங்கள் அனைத்தையும் மையம் கொண்டது, மாறாக, இஸ்ரயேலரை மட்டும் அது மையம் கொண்டதல்ல எனக் குறிப்பிடுகின்றார்.[21] மக்களினங்கள் அனைத்திற்குமான இந்த மறைத்தூதுப்பணி, ஆபிரகாமின் அழைப்பில் மிகச் சிறப்பாக வெளிப்படுகின்றது. ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, ''உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்'' (தொநூ 12:3) என்றுரைத்தது இதையே சுட்டிக்காட்டுகின்றது. ஆபிரகாம் இஸ்ரயேலருக்கு மட்டுமல்ல; மாறாக, மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்திற்கும் மறைத்தூதுப்பணியாளராகச் செயல்பட்டு, அவர்களுக்கு இறையாசியைக் கொண்டுவரப் பணிக்கப்பட்டவர். இம்மறைத்தூதுப்பணிப் பொறுப்பு மூன்று முறை ஆபிரகாமிற்கு வலியுறுத்தப்பட்டது (தொநூ 12:3; 18:18; 22:18). ஆபிரகாமிடம் இப்பணி ஒப்படைக்கப்படும் முன்னர், இறைவன் ஆபிரகாமைப் பார்த்து, ''உனக்கு ஆசி வழங்குவேன்... நீயே ஆசியாக விளங்குவாய்'' (தொநூ 12:2) என மொழிந்த வாக்குறுதி இங்கு நம் கவனத்தை ஈர்க்கின்றது. இறைவன் ஒருவருக்கு வழங்கும் ஆசி, தனக்கென வைத்துக்கொள்வதற்கல்ல; மாறாக, அது பிறரோடு பகிர்ந்துகொள்ளப்படுவதற்காக. இங்ஙனம் ஆபிரகாம் தாம்





பெற்ற இறையாசியை, இறையன்பை மண்ணுலகின் மக்களினங்களோடு பகிர்ந்துகொண்ட ஒப்பற்ற மறைத்தூதுப்பணியாளராகத் திகழ்ந்தார். பாபேல் கோபுரம் நிகழ்வின் இறுதியில் ஆண்டவர் உலகெங்கும் சிதறுண்டு போகச் செய்த மக்களினங்களை (தொநூ 11:9), மீண்டும் இறைவனில் ஒன்றிணைத்து வாழ்வு பெறச்செய்யும் கருவியாக அவர் மாறினார். ஆபிரகாமிடம் ஒப்படைக்கப்பட்ட இப்பணிப்பொறுப்பு அவரது வழித்தோன்றல்களான ஈசாக்கு (தொநூ 26:4ஆ), யாக்கோபு (தொநூ 28:14ஆ) ஆகியவர்களுக்கும் தரப்பட்டது. இவ்வாறு, குலமுதுவர்களின் மறைத்தூதுப்பணி எந்த ஒரு தனி இனத்திற்குமானதன்று; மாறாக, அது மக்களினங்கள் அனைத்திற்கும் பொதுவானதே என்ற கருத்து தொடக்கநூலின் பின்பகுதிகளில் பளிச்சிடுகின்றது.

## திருப்பாடல்களும் பிற இன மக்கள் ஆண்டவரை அறிதலும்

பழைய ஏற்பாட்டில் நமக்கு மிகவும் அறிமுகமான நூலாக திருப்பாடல்கள் இருப்பதைப்போலவே, இஸ்ரயேலருக்கும் அந்நூல் இருந்தது. அந்நூலின் பாடல்கள் பலவற்றில், இஸ்ரயேலின் ஆண்டவரை அனைத்துலக மக்களும் மற்றும் இஸ்ரயேலைச் சுற்றி வாழ்ந்த பிற இன மக்களும் அறிந்து, அவரது வழியில் நடந்து, வாழ்வு பெறுவதற்கான அழைப்பு மிகவும் அழுத்தமாகத் தரப்படுகின்றது. இதுவே மறைத்தூதுப்பணியின் நோக்கம்.[22] ''பிற இனத்தாரே! நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்! மக்களினத்தாரே! நீங்கள் அனைவரும் அவரைப் புகழுங்கள்! ஏனெனில், ஆண்டவர் நமக்குக் காட்டும் மாறாத அன்பு மிகப் பெரியது; அவரது உண்மை என்றென்றும் நிலைத்துள்ளது'' என்ற திபா 117:1-2 வசனங்கள் இதற்குச் சிறந்த உதாரணம். ''கடவுளே மக்களினத்தார் உம்மைப் புகழ்வார்களாக! மக்கள் எல்லோரும் உம்மைப் போற்றுவார்களாக! வேற்று நாட்டினர் அக்களித்து மகிழ்ச்சியுடன் பாடிடுவராக! ஏனெனில், நீர் மக்களினங்களை நேர்மையுடன் ஆளுகின்றீர்; உலகின் நாடுகளை வழிநடத்துகின்றீர்'' என்ற திபா 67:3-4 வசனங்களும் இந்த உணர்வை வெளிப்படுத்தும் மற்றொரு பகுதியே. ''அனைத்துலகோரே! கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்! அவரது பெயரின் மாட்சியைப் புகழ்ந்து பாடுங்கள்; அவரது புகழை மேன்மைப்படுத்துங்கள்'' என்ற திபா 66:1-2 வசனங்களும் இதே எண்ணத்தைப் பிரதிபலிக்கும் மற்றொரு எடுத்துக்காட்டே. மேலும், ஆண்டவரை மக்களினங்களுக்கும் பிற இன மக்களுக்கும் எடுத்தறிவிக்கும் மறைத்தூதுப்பணிப் பொறுப்பு திருப்பாடல்கள் பலவற்றில்

இஸ்ரயேலிடம் ஒப்படைக்கப்படுகின்றது. ''சீயோனில் தங்கியிருக்கும் ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்; அவருடைய செயல்களை மக்களினத்தாரிடையே அறிவியுங்கள்'' என்ற திபா 9:11 வசனம் இதையே சுட்டிக்காட்டுகின்றது. ''பிற இனத்தார்க்கு அவரது மாட்சியை எடுத்துரையுங்கள்; அனைத்து மக்களினங்களுக்கும் அவர்தம் வியத்தகு செயல்களை அறிவியுங்கள்'' என்ற திபா 96:3 வசனமும் இக்கருத்தை வலியுறுத்தும் மற்றொரு பகுதியே. ''உம்முடைய அன்பர்கள் உம்மைப் போற்றுவார்கள். அவர்கள் உமது அரசின் மாட்சியை அறிவிப்பார்கள்; உமது வல்லமையைப் பற்றிப் பேசுவார்கள். மானிடர்க்கு உம் வல்லமைச் செயல்களையும் உமது அரசுக்குரிய மாட்சியின் பேரொளியையும் புலப்படுத்துவார்கள்'' என்ற திபா 145:10ஆ-12 வசனங்களும் மேற்குறிப்பிடப்பட்ட பணியையே உணர்த்துகின்றன. இவ்வாறு மக்களினங்கள் அனைத்திற்கும் மற்றும் இஸ்ரயேலைச் சுற்றி வாழ்ந்த பிற இன மக்களுக்குமான மறைத்தூதுப்பணி திருப்பாடல்களில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

## இறைவாக்கினர்களும் நாடுகளுக்கான இறைவாக்குரைத்தலும்

அனைத்துலக மக்களுக்குமான மறைத்தூதுப்பணி என்பது இறைவாக்கினர் நூல்கள் முன்வைக்கும் சிறந்த கருத்துக்களுள் ஒன்று. தமஸ்கு, பெலிஸ்தியா, தீர், ஏதோம், அம்மோனியா, மோவாபு ஆகிய நாடுகள்மீது ஆமோஸ் எழுப்பிய கண்டனக்குரல், போர்க்காலங்களில் அந்நாடுகள் புரிந்த மனிதநேயமற்ற செயல்களைச் சுட்டிக்காட்டி, ஆண்டவர் அவற்றைத் தண்டிப்பார் எனக் கண்டித்து, அவை மனந்திரும்ப அழைப்பு விடுத்தது (ஆமோ 1:3-2:3). அதுபோல, முதலாம் எசாயா தமது நூலின் 13-23 அதிகாரங்களில் பாபிலோன், பெலிஸ்தியர், ஏதோம், மோவாபு, சிரியா, சூடான், எகிப்து, அரேபியா, செபுனா, தீர் ஆகிய நாடுகளுக்கெதிராக இறைவாக்குரைத்து, அவர்கள் மனந்திரும்பி ஆண்டவரின் வழியில் நடக்க அழைப்பு விடுத்தார். பிற இனத்தார்க்கான இம்மறைத்தூதுப்பணி, எரேமியாவிற்கு அவரது அழைப்பின்போதே தெளிவுபடுத்தப்பட்டது: ''தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்குமுன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்குமுன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்; மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்'' (எரே 1:5) என்ற இறைவனின் கூற்று அதற்குச் சான்று. இவ்வழைப்பிற்கேற்ப, எரேமியாவும் தன் பணியில் இஸ்ரயேலைச் சுற்றிவாழ்ந்த





நாடுகள் பலவற்றிற்கும் இறைவாக்குரைத்து, அவை ஆண்டவரின் வழியை அறிந்துகொள்ளச் செய்தார் (எரே 25:15-38,46-51). எசேக்கியேல் 25-32 அதிகாரங்களும் மேற்கண்ட சிந்தனையை ஒத்த பகுதிகளே. இச்சிந்தனை இரண்டாம் எசாயாவின் நூலிலும் பளிச்சிடுகின்றது: ''ஆண்டவராகிய நான் நீதியை நிலைநாட்டுமாறு உம்மை அழைத்தேன்; உம் கையைப் பற்றிப் பிடித்து, உம்மைப் பாதுகாப்பேன்; மக்களுக்கு உடன்படிக்கையாகவும் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் நீர் இருக்குமாறு செய்வேன்'' (எசா 42:6); ''உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாக ஏற்படுத்துவேன்'' (எசா 49:6ஆ) என்ற துன்புறும் ஊழியரின் பணியைப் பற்றிய பகுதிகள் அதற்குச் சான்று. மூன்றாம் எசாயாவும் இச்சிந்தனைக்குப் புறம்பானவரல்ல: ''பிற இனத்தார் உன் ஒளி நோக்கி வருவர்; மன்னர் உன் உதயக் கதிர்நோக்கி நடைபோடுவர்'' (எசா 60:3) என்ற பகுதி, நாடுகளுக்கான இஸ்ரயேலின் மறைத்தூதுப்பணியின் விழைவை உணர்த்துவதே. இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாக அமைவதுதான், நினிவேயில் வாழ்ந்த பிற இன மக்களை மனம் மாறும்படி அழைக்க யோனா அனுப்பப்பட்டது. நினிவே இஸ்ரயேலின் மிகப் பழைய, கொடிய எதிரியான அசீரியருடைய தலைநகர். இந்நகருக்கு எதிரான கண்டனக்குரல்தான் நாகூம் நூல் முழுவதும் காணப்படுவது. எனினும், இஸ்ரயேலரின் எதிரிகளின் நலனிலும் அக்கறை கொண்ட இறைவன், யோனாவை மறைத்தூதுப்பணியாளராக நினிவேக்கு அனுப்பினார். யோனாவின் பணியின் பொருட்டு நினிவேயில் அனைவரும் மனம்மாறி இறைவனிடம் திரும்பினர். எனினும் இப்பணிக்கான யோனாவின் நீண்ட தயக்கமும், நினிவே மக்கள் மனம்மாறியதைக் குறித்து அவர் சினமுறுவதும், பிற இன மக்களுக்கு ஆண்டவரின் வாக்கு எடுத்துச்செல்லப்படுவதை இஸ்ரயேல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்றுக்கொள்ளாததை வெளிப்படுத்துகின்ற பகுதிகளே என்று விவிலிய அறிஞர்கள் கருதுகின்றனர்.[23]

## ஞான நூல்களும் மானிட வாழ்வின் மதிப்பீடுகளும்

விவிலிய ஞான நூல்கள் மானிட வாழ்வை அதிகம் மையம் கொண்டவையல்லவா? அவற்றிற்கும் மறைத்தூதுப்பணிக்கும் என்ன பெரிய தொடர்பு இருக்க முடியும்? என்பன போன்ற வினாக்கள் நம் மனங்களில் எழலாம். விவிலிய ஞான நூல்கள் அதிகம் மனித மையம் கொண்டவையே.

அவை மனிதர்களின் இன்பம்-துன்பம், வெற்றி-தோல்வி, உடல்நலம்-நோய், வளமை-வறுமை, உறவு-பிரிவு, வாழ்வு-இறப்பு என்பன பற்றியே அதிகம் பேசுகின்றன. அவை இஸ்ரயேலின் சமய வாழ்வுக்கு அடிப்படைகளாகத் திகழும் தேர்வு, வாக்குறுதி, விடுதலை, உடன்படிக்கை, திருச்சட்டம், ஆலயம், வழிபாடு, விழாக்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. எனினும் இவை எவ்வகையிலும் கடவுள் மறுப்பு நூல்கள் அல்ல; மாறாக, இறைநம்பிக்கையாளர் அனைவருக்கும் பொதுவான, சமய வேறுபாடுகளைக் கடந்த ஒரே இறைவனை, படைப்பின் கடவுளை, பராமரிக்கும் வல்லவரை மனித அனுபவங்கள் மூலம் உணர்ந்து வாழ்வாக்க அழைக்கின்ற நூல்களே. எனவே மனித வாழ்வை அதிகம் மையம் கொண்டு அவை எழுதப்பட்டாலும், இறைவனும் உலகமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவர்களல்ல; படைத்தவரும் படைப்பும் எதிர்த் துருவங்களல்ல என்பதையே அவை வலியுறுத்துகின்றன.[24] அந்த இறைவனை அறிவிக்கின்ற மறைத்தூதுப்பணி அனைவருக்கும் பொதுவானது; மானிடர் எல்லோருக்கும் நிறைவேற்றப்பட வேண்டியது என்பதே ஞான நூல்கள் முன்வைக்கின்ற பார்வை. மேலும், ஞானம், நன்மை, உண்மை போன்ற உயர்ந்த மதிப்பீடுகளெல்லாம் எவருடைய தனியுடைமையும் அன்று; மாறாக, அது உலகில் வாழும் எல்லோருக்கும் பொதுவானது. எனவே, விவிலிய ஞான நூல்கள் விவிலியத்திற்கு வெளியே உள்ளப் பன்னாட்டு ஞான இலக்கியங்களோடு ஒப்பிட்டு நோக்க, அதன் மூலம் மானிடர் அனைவரோடும் உரையாடலையும் உறவையும் வளர்க்க, சமய வேறுபாடுகளைக் கடந்த இறைமை முன்வைக்கின்ற மறைத்தூதுப்பணி இலக்கை கூட்டுத்தோழமையோடு செயலாக்கச் சிறந்த கருவிகளாய் உள்ளன.

## மறைத்தூதுப்பணி: அணுகுமுறைகளும் நோக்கங்களும்

உள்நோக்கு, வெளிநோக்கு நிலைகளில் மறைத்தூதுப்பணியானது எவ்வாறு பழைய ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது; அங்கு அப்பணிக்கான அடிப்படைகள் என்னென்ன உள்ளன என மேற்கண்ட பகுதிகள் விளக்கின. அப்பணிகள் முன்வைக்கின்ற பல்வேறு அணுகுமுறைகளில் முக்கியத்துவம் வாய்ந்த சில அணுகுமுறைகள் கீழே தொகுக்கப்படுகின்றன. ஒவ்வொரு அணுகுமுறையோடும், அதைச் செயல்படுத்துவதற்கான நோக்கமும்





இணைத்தே தரப்படுகின்றது. இந்த அணுகுமுறைகளெல்லாம் ஒன்றோடொன்று தொடர்பில்லாத தனித்தனிச் சிந்தனைகளல்ல; மாறாக, அவை ஒன்றொடொன்று நெருங்கிய தொடர்புடைய, ஒன்றை மற்றொன்று நிறைவாக்குகின்ற தன்மையுடையன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

### (i) கற்பித்து வழிநடத்துதல்

பழைய ஏற்பாட்டு மறைத்தூதுப்பணியாளர்கள் பலரிடம் வெளிப்படும் ஓர் அணுகுமுறையும் நோக்கமும், மானிட நல்வாழ்விற்கான இறைவனின் திட்டத்தை, தங்களைச் சார்ந்திருந்த மக்களுக்குக் கற்பித்து, அதன்படி அவர்களை வழிநடத்துவது ஆகும். குலமுதுவர்கள், இறைவாக்கினர்கள், ஞானியர் ஆகியோரிடம் இது தனிச்சிறப்பான வடிவங்களை எடுத்தது. இவர்களில் பலர் இறைவனோடு உரையாடியவர்கள்; அவரால் அழைக்கப்பட்டவர்கள்; அவரோடு உடன்படிக்கை உறவில் ஒன்றிணைந்தவர்கள்; அவருக்கும் மக்களுக்கும் இடையே இடைநிலையாளர்களாகச் செயல்பட்டவர்கள் (தொநூ 12:1-3; 15:1-21; 18:16-33). இவ்வாறு தாங்கள் அனுபவித்து அறிந்த படைப்பின் இறைவனை, இஸ்ரயேலர் சார்பாக வரலாற்றில் குறுக்கிட்டு எகிப்திய அடிமைத்தளையிலிருந்து விடுதலை அளித்த இறைவனை, உடன்படிக்கை உறவில் அனைவரையும் ஒன்றிணைத்த இறைவனை, அவர்கள் தங்களோடிருந்த பிறருக்கும் அறிவித்தார்கள். அருளுரைகள் (எசே 20:1-49), அறிவுரைகள் (எசா 1:16-17), சான்றுரைகள் (எசே 16:1-22), ஞான உரைகள் (நீமொ 10:1-22:16), சட்டங்கள் (விப 20:22-23:33), அடையாளச் செயல்கள் (ஓசே 1-3) என்னும் பலவற்றின் மூலம் அவர்கள் மக்களுக்குக் கற்பித்தார்கள். தாங்கள் கற்பித்தவற்றின்படி அன்றாட வாழ்க்கையில் மக்களை அவர்கள் வழிநடத்தினார்கள்.

### (ii) தீமைக்கெதிரான போராட்டம்

இஸ்ரயேலின் கடவுள் நீதியின் கடவுள் (எசா 30:18). அவர் பிறரை ஒடுக்குவோரின் திட்டங்களைத் தகர்த்தெறிந்து, வீழ்ந்தோரைக் கைதூக்கிக் காப்பவர்; திக்கற்றோரின் சார்பாகச் செயல்பட்டுச் சமூகத்தீமைகளைத் தட்டிக்கேட்பவர். இந்த இறைவனின் தீமைக்கெதிரான போராட்டத்தை உள்வாங்கிய பழைய ஏற்பாட்டு மறைத்தூதுப்பணியாளர்கள் பலர், தாங்களும் தங்கள் மறைத்தூதுப்பணியின் அணுகுமுறையாகவும் நோக்கமாகவும்

தீமைக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். அடக்குமுறையின் கொடூர அடையாளமாகத் திகழ்ந்த பார்வோனுக்கு எதிராகக் குரல்கொடுத்த மோசே; மிதியானியர், அம்மோனியர், பெலிஸ்தியர், அசீரியர், பாபிலோனியர் போன்ற எதிரி நாட்டவர்களின் அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடிய நீதித்தலைவர்கள் மற்றும் அரசர்கள்; அதிகாரக் குவிப்பாலும் ஆணவப் போக்காலும் மக்களைக் கசக்கிப் பிழிந்த உள்நாட்டு ஒடுக்குமுறையாளர்களாக மாறிப்போன அரசர்களைக் கண்டித்த இறைவாக்கினர்கள்; கிரேக்கப் பண்பாட்டுத் திணிப்பை எதிர்த்துப் போராடிய மக்கபேயர்கள் போன்றவர்களெல்லாம் தீமையை எதிர்த்துப் போராடும் மறைத்தூதுப்பணியாளர்களுக்கு உதாரணங்களே.

### (iii) மாற்றுச்சமுதாயம் படைத்தல்

"இஸ்ரயேல்" அன்றைய உலகில் ஒரு மாற்றுச்சமுதாயமாகவே யாவே இறைவனால் உருவாக்கப்பட்டது; எகிப்தின் அடக்குமுறைகளுக்கு எதிரான சமநீதியும் மனித மாண்பும் மேலோங்கும் விடுதலைச் சமுதாயமாக அது மலர்ந்தது. இந்த மாற்றுச்சமுதாயம் மோசே, யோசுவா போன்ற மறைத்தூதுப்பணியாளர்களின் கடும் உழைப்பின் பலனாகக் கிடைத்தது. மாற்றுச்சமுதாயமாக ஒழுக வேண்டிய இஸ்ரயேல், அரசராட்சிக் காலத்தில் அநீதி மலிந்த ஒன்றாகி நலிந்தது. அப்போது இறைவாக்கினர்கள் மீண்டும் தங்கள் வேர்களுக்குச் செல்ல, மாற்றுச்சமுதாய இலக்கைப் புதுப்பிக்க, மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். தங்கள் சமய நம்பிக்கையின் அடிப்படைகள் மேல் கட்டியெழுப்பப்பட்ட புதிய சமுதாயம் மீண்டும் மலரக் குரல்கொடுத்தனர். நிலத்தை இழந்தோர், கைம்பெண்கள், தந்தையை இழந்தோர், ஒடுக்கப்பட்டோர், வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டோர், அகதிகள், திருநங்கையர் போன்ற அனைவரும் பராமரிக்கப்படுகின்ற சமுதாயத்தைப் படைக்க அவர்கள் உழைத்தனர் (எசா 1:16-17; 5:8-10; 56:1-8; எரே 5:20-28; 21:12-14; 22:1-5). இவ்வாறு மாற்றுச்சமுதாயம் படைக்கும் இலக்கைத் தங்கள் மறைத்தூதுப்பணியின் அணுகுமுறையாகவும் நோக்கமாகவும் ஆக்கினர்.

### (iv) அனைவரையும் ஈடுபடுத்துதல்

யாவே இறைவன் தமது மறைத்தூதுப்பணியை இஸ்ரயேலரோடு முடித்துக்கொண்டவரல்ல; மாறாக, அனைத்து மக்களும் வாழ்வடையும் பொருட்டு அதைப் பரவலாக்கியவர். அவ்வாறே தம்





மறைத்தூதுப்பணியாளர்களாக அவர் இஸ்ரயேலரை மட்டும் தேர்ந்துகொள்ளவில்லை; மாறாக இஸ்ரயேலைச் சுற்றிவாழ்ந்த பிற இன மக்கள் பலரையும் தேர்ந்துகொண்டார்: ஆபிரகாமுக்கு ஆசி அளித்த சாலேம் அரசர் மெல்கிசெதேக்கு (தொநூ 14:18-20), மோசேயின் பணியில் அவரை உறுதிப்படுத்திய மிதியானின் அர்ச்சகர் இத்திரோ (விப 18:1-12), இஸ்ரயேலுக்கு ஆசி கூறிய இறைவாக்கினர் பிலயாம் (எண் 22-24), எரிக்கோவைக் கைப்பற்ற உதவிய விலைமாது இராகாபு (யோசு 2:1-21), இஸ்ரயேலின் கடவுளைத் தம் கடவுளாக ஏற்றுக்கொண்ட சிரியாவின் படைத்தலைவர் நாமான் (2 அர 5:1-19), தாவீதின் மூதாதையரான ரூத்து (ரூத் 4:13), பாபிலோனிய அடிமைத்தளையிலிருந்து இஸ்ரயேலருக்கு விடுதலை அளித்த அரசர் சைரஸ் (எசா 45:1-9) போன்றவர்களெல்லாம் அதற்கு உதாரணங்கள்.[25] இவ்வாறு, மறைத்தூதுப்பணி என்பது அனைவருக்குமானது, அது அனைவரும் இணைந்து ஆற்றவேண்டியது என்ற அணுகுமுறைக்கும் நோக்கத்திற்கும் பழைய ஏற்பாடு சான்று பகர்கின்றது.

### (v) இறைநம்பிக்கை உருவாக்கம்

இஸ்ரயேலரின் கடவுள் வரலாற்றில் வாழ்பவர்; மக்கள் நடுவில் உறைபவர்; அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை பெற்றுத்தருபவர்; ஒடுக்கப்பட்டோரின் குரலாக ஒலிப்பவர்; இருளின் சக்திகளை அழிக்கும் ஒளியாய்த் திகழ்பவர். இவையெல்லாம் இஸ்ரயேலரின் மனதில் நீங்கா இடம் பிடித்திருந்தன. இறைவனின் இந்த மாபெரும் செயல்களே இஸ்ரயேலரின் இறைநம்பிக்கைக்கு அடித்தளமாய் அமைந்தன. அந்த உயிரூட்டும் இறைநம்பிக்கையில் இருந்துதான் அவர்களின் பிற செயல்பாடுகள் பிறப்பெடுத்தன. எனவே இந்த இறைநம்பிக்கையை மக்கள் மனங்களில் மீண்டும் ஆழப்படுத்தி, அவர்களைக் கடவுளின் மக்களாக வளர்த்தெடுப்பது மறைத்தூதுப்பணியாளர்களின் அடிப்படை அணுகுமுறையாகவும் நோக்கமாகவும் இருந்தது.

## முடிவுரை

எம்மாவு சென்றுகொண்டிருந்த சீடர்கள், தங்களுடன் வழிநடந்த இயேசுவை, அவரின் பாடுகள், மாட்சி ஆகியவற்றின் பின்புலத்தில்

உணர்ந்துகொள்ளத் தவறியபோது, மோசேமுதல் இறைவாக்கினர்வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்டுள்ள யாவற்றையும் இயேசு அவர்களுக்கு விளக்கினார். இதனால், பின்னர் அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" எனப் பேசிக் கொண்டனர். அந்நேரமே அவர்கள் எருசலேமுக்குத் திரும்பிச் சென்று, மறைத்தூதுப்பணியாளர்களாக, ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டதை அங்கிருந்த அனைவருக்கும் எடுத்துரைத்தார்கள் (லூக் 24:13–35). இந்நிகழ்வானது, இயேசுவை ஆழமாக அறிந்துகொள்ளவும் அறிக்கையிடவும் பழைய ஏற்பாடு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும், இயேசு மற்றும் அவரது சீடர்களின் மறைத்தூதுப்பணி, பழைய ஏற்பாட்டில் வேரூன்றியதே என்பதையும் உணர்த்துகின்றது.

மக்களினங்கள் அனைத்தும் வாழ்வுபெற வேண்டும் என்பதே பழைய ஏற்பாடு முன்வைக்கும் இறைத்திட்டம்; மாறாக, அது இஸ்ரயேலரை மட்டும் மையப்படுத்தியதன்று. இத்திட்டத்தை நிறைவேற்றும் கருவிகளாக மறைத்தூதுப்பணியாளர்கள் பலரை இறைவன் தேர்ந்துகொண்டார். இப்பணியாளர்களில் இஸ்ரயேலர், பிற இனத்தார் என அவர் வேறுபாடு காட்டவில்லை. இவர்களின் பணி, தங்களை அழைத்த இறைவனின் திட்டத்தில் வேரூன்றியதாகவே இருந்தது. ஆனால் அந்த இறைத்திட்டம், அவர்கள் வாழ்ந்த வெவ்வேறு சூழல்கள் மூலம் தான் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அடிமைத்தனங்களுக்கு மத்தியில் விடுதலையை வென்றெடுக்கும் வீரர்களாக, நாடற்ற சூழலில் நாட்டைக் கைப்பற்றி மக்களை அங்குக் குடியமரச் செய்யும் போராளிகளாக, அநீதியின் பல வடிவங்களுக்கு நடுவே நீதியை முழங்கும் பண்பாளர்களாக, சமூகச் சீர்கேடுகளுக்கு மத்தியில் சமூகச் சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் செம்மல்களாக, இறைநம்பிக்கையில் தளர்ச்சியுறும்போது அந்நம்பிக்கையில் மக்களை உறுதிப்படுத்தும் அருளாளர்களாக மாறுவதே மறைத்தூதுப்பணியாளர்களுக்கான இறைத்திட்டம். இத்திட்டத்திற்குத் தங்களை முழுவதும் அர்ப்பணித்துப் பணியாற்றியவர்களே மறைத்தூதுப்பணியாளர்கள்.[26]

இன்று நம் நாட்டிலும், மறைத்தூதுப்பணியாளர்களுக்கான இறைத்திட்டம் இன்றைய சமூகச் சூழலிலிருந்தே தேர்ந்து தெளியப்பட





வேண்டும். வறுமை, சாதியம், இலஞ்சம், ஊழல், சமய அடிப்படைவாதம், கல்வியின்மை, வேலையில்லாத் திண்டாட்டம், வன்முறை, பாலினச் சமத்துவமின்மை, மருத்துவ வசதியின்மை, போதைப் பழக்கம், வரதட்சணை, பாலியல் வன்கொடுமை, குழந்தைத் தொழிலாளர், மணவிலக்கு இன்னும் இதுபோல எத்தனையோ சவால்களை எதிர்கொள்ளும் இந்தியச் சமுதாயத்தில், மறைத்தூதுப்பணியாளர்களின் பணி இவற்றை மையம் கொண்டதாகவே அமையவேண்டும். இவற்றை எதிர்கொள்ள இறைவன் அறிவுறுத்துவதை அறிவிக்கின்றவர்களாக, அறிவித்ததைச் செயல்படுத்துகின்றவர்களாக மறைத்தூதுப்பணியாளர்கள் மாறவேண்டும்.[27] ஏனென்றால், விவிலியக் கடவுளின் மறைத்தூதுப்பணி இலக்கு, மக்கள் அனைவரின் நல்வாழ்வும் அவர்களின் ஒருங்கிணைந்த மேம்பாடுமே அன்றி வேறொன்றுமல்ல. இம்மறைத்தூதுப்பணியாளர்கள் என்போர், திருநிலைகளில் வாழ்கின்றவர்கள் மட்டுமல்ல; மாறாக, இறைநம்பிக்கையாளர்கள் அனைவரும் மறைத்தூதுப்பணியாளர்களே. இஸ்ரயேல் உலகிற்கு ஒளி என்பதன் உண்மைச் செயலாக்கம் அதுவே (எசா 49:6)!

## அடிக்குறிப்புகள்

1. Cf. Cristian Dumitrescu, *Mission Theology in the Old Testament: A New Paradigm, Journal of Adventist Mission Studies* 4 (2008): 43; Charles Scobie H. H., "Israel and the Nations: An Essay in Biblical Theology," *Tyndale Bulletin* 43/2 (1992): 286.
2. Cf. James Chukwuma Okoye, *Israel and the Nations: A Mission Theology of the Old Testament* (Maryknoll: Orbis, 2006), 16.
3. Cf. Cornell Goerner, *All Nations in God's Purpose* (Nashville: Broadman, 1979), 11.
4. Cf. Lucien Legrand, *Unity and Plurality: Mission in the Bible* (Maryknoll: Orbis, 1990), 1.
5. Cf. Dumitrescu, *Mission Theology in the Old Testament*, 50.
6. Cf. Ludwig Koehler and Walter Baumgartner, "*qara*" *The Hebrew and Aramaic Lexicon of the Old Testament* 2:1128–32.
7. Cf. _____, "*shalah*" *The Hebrew and Aramaic Lexicon of the Old Testament* 2:1511–19.

8. Cf. _____, "*basar*" *The Hebrew and Aramaic Lexicon of the Old Testament* 1:163–64.

9. Cf. Timothy A. Lenchak, "Mission," *The Collegeville Pastoral Dictionary of Biblical Theology* (ed. Carroll Stuhlmueller): 631.

10. Cf. David J. Bosch, *Transforming Mission: Paradigm Shifts in Theology and Mission* (Maryknoll: Orbis, 1991), 1719.

11. Cf. Jiri Moskala, "The Mission of God's People in the OT,"*Journal of the Adventist Theological Society* 19/1-2 (2008): 42.

12. Cf. Lenchak, Mission, 631.

13. Cf. Anthony R. Ceresko, *The Old Testament: A Liberation Perspective* (Mumbai: St. Paul's, 2001), 96–97.

14. Cf. Lenchak, Mission, 631.

15. Cf. Moskala, The Mission of God's People in the OT, 43–44.

16. Cf. Norman K. Gottwald, *The Tribes of Yahweh* (Maryknoll: Orbis, 1985), 390–96; John Bright, *A History of Israel* (London: SCM, 1972), 130.

17. Max Weber, *The Sociology of Religion* (London: Meuthuen, 1965), 46.

18. Cf. Abraham J. Heschel, *The Prophets* (New York: Harper & Row, 1962), I: 17–18.

19. Cf. Anthony J. Saldarini, "Essenes," *Harper's Bible Dictionary*: 279–80; Anthony J. Saldarini, "Pharisees," *Harper's Bible Dictionary*: 782–83.

20. Cf. Walter C. Kaiser, *Mission in the Old Testament: Israel as a Light to the Nations* (Grand Rapids: Baker, 2012), 1–5.

21. Cf. Roger E. Hedlund, *The Mission of the Church in the World* (Grand Rapids: Baker, 1985), 83.

22. Cf. Nehemiah Teams, "Summary of Missions in the Old Testament," n.p. [cited 10 Nov 2018]. Online: http://www.nehemiahteams.com/uploads/1/0/4/3/10430011/missions_in_the_old_testament.pdf

23. Cf. Lenchak, Mission, 633; Moskala, The Mission of God's People in the OT, 43; Joseph Kollackal, "Israel and their Mission to the Gentiles," *Bible Bhashyam* X (1984): 243–44.

24. Cf. Rui de Menezes, *Wisdom Traditions of Israel* (Mumbai: St. Paul's, 2013), 15–17.

25. Cf. Moskala, The Mission of God's People in the OT, 55–57.

26. Cf. Paul Kalluveettil, "Theory Mission: Its Biblical Vision," *Third Millennium* XVI (2013): 26–27.

27. Cf. John Sankarathil, "Prophetic Mission and Its Challenges for the Religious in India," *Indian Journal of Spirituality* XIV (2001): 318–20.



# 3. மகிழ்ந்திரு! நினைத்திரு!

## சஉ 11:4–12:8 காட்டும் அகநோக்கு மறைத்தூதுப்பணி

*அருள்பணி. முனைவர் யேசு கருணாநிதி*
*புனித பவுல் குருத்துவக் கல்லூரி, திருச்சி*

### 1. முகவுரை

மீட்பின் கதவுகள் கிறிஸ்துவால், புறவினத்தாருக்கும் திறந்துவிடப்பட்டன என்று உரோமையருக்கு எழுதிய திருமடலில் முன்மொழியும் பவுல், "ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப்பெறுவர்" என்ற யோவேல் இறைவாக்கினரின் முன்னறிவிப்பை (யோவே 2:32) மேற்கோள்காட்டிவிட்டு, "ஆனால், அவர்மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி, அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவார்கள்? தாங்கள் கேள்வியுறாத ஒருவர்மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்றுபற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்? அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள்?" (உரோ 10:14–15) என்று நற்செய்தி அறிவிப்பின் படிநிலைகளை வரிசையாக அடுக்குகின்றார். பவுலைப் பொறுத்தவரையில் நற்செய்தி அறிவிப்பின் நோக்கம் அல்லது இலக்கு என்பது 'கிறிஸ்துவின்மேல் கொள்ளும் நம்பிக்கை'. இந்த நோக்கம் நிறைவேற (அ) அறிவிப்பவர், (ஆ) அறிவிப்புப் பொருள், (இ) அனுப்புபவர் என்னும் மூன்று காரணிகள் அவசியம். இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் நடந்த அனைத்து நற்செய்தி அறிவிப்பு அல்லது மறைத்தூதுப் பணிகளிலும் அறிவிப்புப் பொருள் மற்றும் அனுப்புபவர் கிறிஸ்துவாகவே இருக்கின்றார். பழைய ஏற்பாட்டு ஐந்நூல் மற்றும் இறைவாக்கு நூல்களில் யாவே இறைவன் அறிவிப்புப் பொருளாகவும்,

அனுப்புவராகவும் இருக்கின்றர். ஆனால், சில இடங்களில் – குறிப்பாக, ஞானநூல்களில் – யாரும் அனுப்பாமலேயே, எந்தவொரு புற அறிவிப்புப் பொருளும் இல்லாமல் மறைத்தூதுப்பணி நடந்தேறியுள்ளது. கடவுளின்மேல் நம்பிக்கை என்னும் எந்தவொரு புறநோக்கும் இல்லாமல் நடைபெற்ற இம்மறைத்தூதுப்பணியின் இலக்கு, அவசியம், மற்றும் செய்முறை ஆகியவற்றை ஆராய நாம் தேர்ந்தெடுக்கும் பகுதி சஉ 11:4–12:8. மேற்காணும் பாடத்தை ஆராயும் முகத்தான் மறைத்தூதுப்பணியின் இரண்டாம் முகமான 'அகநோக்கு மறைத்தூதுப்பணி' தெளிவாகிறது. 'கிறிஸ்து' அல்லது 'கடவுளை' அறிவிப்புப்பொருளாக முன்வைக்காமல், 'திருமுழுக்கு', 'மதமாற்றம்', 'மனமாற்றம்' போன்ற எந்தப் புற, அக அடையாளங்களையும் முன்னிறுத்தாமல் தனிமனித அறநெறி உருவாக்கம் மட்டுமே முன்வைக்கப்படும் இத்தகைய மறைத்தூதுப்பணி நாம் வாழும் இன்றைய பல்சமய, சமயச் சார்பற்ற, பின்நவீனத்துவ, மீநடப்பியல் (Surrealism) உலகிற்கு ஏற்புடையதாக இருக்கும் என்ற நம்பிக்கையும் துளிர்விடுகிறது.

இந்தக் கட்டுரை மூன்று உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது (அ) முதல் பிரிவில், நம் பாடத்தின் (சஉ 11:4–12:8) ஆசிரியர், மற்றும் பாடத்தின் வரலாற்று, இலக்கிய, இறையியல் சூழல் ஆராயப்படும். (ஆ) இரண்டாம் பிரிவு பாடத்தைத் தனிப் பகுதியாக வரையறை செய்து, அதைக் கட்டமைத்து, அதில் மேலோங்கி நிற்கும் நான்கு சொல்லாடல்களை முதன்மைப்படுத்திப் பகுப்பாய்வு செய்யும். (இ) மூன்றாம் பிரிவில், பாடம் தன்னகத்தே கொண்டிருக்கின்ற மறைத்தூதுப்பணித் தளத்தையும், கூறுகளையும் முன்வைத்து, இக்கூறுகள் நம் இன்றைய மறைத்தூதுப்பணிக்காக அறிவுறுத்தும் அணுகுமுறைகளை நாம் ஆய்ந்தெடுப்போம்.

## 2. சஉ 11:4–12:8 – ஆசிரியரும் பாடச் சூழலும்

நம் ஆய்வுக் கட்டுரையின் முதற்பகுதியான இப்பகுதியில் சஉ 11:4–12:8ன் ஆசிரியர் வரலாற்று நபரா (Historical Person) அல்லது இலக்கிய நபரா (Literary Person) என்ற புரிதலும், நம் ஆய்வுப்பாடத்தின் வரலாற்று, இலக்கிய, இறையியல் சூழல் புரிதலும் முன்னெடுக்கப்படுகிறது.





### 2.1. ஆசிரியர்

சஉ 12:8ல் இப்பாடத்தின் ஆசிரியர் 'சபை உரையாளர்' எனக் கொடுக்கப்பட்டுள்ளது. 'சபை உரையாளர்' என்ற பெயர் சபை உரையாளர் நூல் முழுவதிலும் ஏழு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.[1] 'கொஹலெத்' என்னும் எபிரேயச் சொல் ஒருவரின் பட்டம், அல்லது பணி, அல்லது தனிப்பட்ட பெயராகவும் இருக்கலாம். சஉ 1:12ல் ஆசிரியர் தன்னை ஒரு வரலாற்று நபராகவே அடையாளப்படுத்துகிறார். இது ஒரு மறைமுகமான குறிப்பே. ஆனால், 'சபை உரையாளர்' என்பது ஓர் இலக்கிய நபர் என்பதும், இந்த முகத்திரையை அணிந்துகொண்டு ஆசிரியர் தன் சமகால இறையியலைப் போதிக்கின்றார் என்பதும் பலரின் கருத்து.[2] கிரேக்கர்கள் யூதர்களை ஆட்சி செய்தபோது எருசலேமில் வாழ்ந்த ஒரு யூத ஞானியே சபை உரையாளர் என்பர் சிலர். இந்த நூல் எழுதப்பட்ட ஆண்டு ஏறக்குறைய கி.மு.250, இடம் எருசலேம்.[3] இரண்டாம் ஆலயக் காலம் (Second Temple Period) என்று சொல்லப்படுகின்ற கி.மு. 530 – கி.பி.70களில் இறைவாக்கு மிகவும் அரிதாக இருந்தது. அசீரிய, பாபிலோனிய, பாரசீக, எகிப்திய மற்றும் கிரேக்க ஆட்சியாளர்களுக்குக் கீழிருந்த மக்கள் தங்களின் சமூக வாழ்க்கையின் அவலநிலையை எண்ணி விரக்தியில் இருந்தனர். தங்களின் அடையாளங்களாக தாங்கள் எண்ணிய தங்களின் நிலம், ஆலயம், உடன்படிக்கை, திருச்சட்டம், ஓய்வுநாள் ஆகியவை தங்களிடமிருந்து பறிக்கப்பட்டு, தாங்கள் பிறநாடுகளில் கைதிகளாகவும், சொந்த நாட்டில் அகதிகளாகவும் நடத்தப்பட்ட நிலையில் பெரிய சிந்தனை மாற்றம் நிகழ்ந்தது. ஒரே நாடு, ஒரே இனம், ஒரே கடவுள் என்று வெளியில் அடையாளங்களைத் தேடியலைவதை விடுத்து, தேடல் தனிப்பட்ட நபரை முன்னிறுத்தி, அவரின் மகிழ்ச்சியே மையம் என்ற நிலை உருவானது. இப்படியாக, தேடல், சமூகத்திலிருந்து (collective) தனிநபரை (individual) நோக்கியும், பாரம்பரிய அடையாளங்களிலிருந்து (traditional symbols) தனிநபர் மகிழ்ச்சி (*summum bonum*) நோக்கியும் திரும்பியது. எனவே, வாழ்வின் பொருள் மற்றும் மாண்பு அகம் சார்ந்தது என்றும், அது தேசியம், மெசியா, நிலம், மற்றும் கோவில் சார்ந்ததல்ல என்றும் சபை உரையாளர் யூதச் சிந்தனையைப் புரட்டிப்போடுகின்றார்.[4]

## 2.2. வரலாற்று, இலக்கிய, இறையியல் சூழல்

சஉ 11:4-12:8ன் வரலாற்றுச் சூழலைப்பற்றி ஆராயும்போது, (அ) இப்பாடத்தில் உள்ள அயல்மொழி (பாரசீக) உருவகங்கள் மற்றும் சொல்லாடல்கள், (ஆ) அரமேயச் சொற்றொடர்கள், மற்றும் (இ) கிரேக்கமய சிந்தனைகள் ஆகிய மூன்றும் பாரசீக, கிரேக்க கலாச்சாரம் யூதர்களின்மேல் கொண்டுள்ள தாக்கத்தை வெளிப்படுத்துவதை நாம் உணர்கிறோம். ஆக, இப்பாடப்பகுதி பாரசீக, கிரேக்க, எகிப்திய ஆட்சிக்காலத்தில், அல்லது அந்த ஆட்சிக்காலத்திற்குப் பின் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

எகிப்திய இலக்கியங்களான காஜேமேனி, த்தாஹொத்தேப், நெஃபெர்த்தி, ஓங்ஷெஷொங்கி, மற்றும் சுமேரிய அறிவுரைப் பகுதிகளான ஷூரப்பாக்கு, மற்றும் அரமேயத்தின் அஹிக்கார் போன்றவை சஉ 11:4-12:8ஐ ஒத்திருக்கின்றன.[5] ஆக, இப்பாடத்தின் உள்ளடக்கம் மேற்காணும் இலக்கியப் பகுதிகளிலும் காணக்கிடக்கின்றது. சபை உரையாளர் இவற்றைக் கற்றதன் பின்புலத்தில் தன் பாடலை எழுதினாரா, அல்லது இவரின் பாடல்களுக்கும் மேற்காணும் பாடல்களுக்கும் உள்ள தொடர்பு வெறும் தற்செயல் நிகழ்வா என்பது தெரியவில்லை.

கடவுளின் பெயரை 'யாவே' என ஒருமுறைகூட பதிவு செய்யாத சபை உரையாளர் இப்பாடத்தில் 'கடவுள்' மற்றும் 'படைத்தவர்' என்ற இரண்டு பெயர்களைக் கையாளுகின்றார். இவ்வாறாக, கடவுளின் வெளிப்படுத்தப்பட்ட தனிப்பெயரான 'யாவே' அல்லது 'ஆண்டவர்' என்பதை விடுப்பதன் வழியாகவும், பொதுப்படையான 'கடவுள்' மற்றும் 'படைத்தவர்' என்னும் பெயர்களைக் கையாள்வதன் வழியாகவும் ஆசிரியர் தம் பாடத்தை எல்லாருக்கும் பொதுவான ஒன்றாக ஆக்க முயல்கின்றார். மேலும், கோவில் மறைவிற்குப் பின் ஏற்பட்ட 'ஆண்டவர் மறைவுச்' சிந்தனைகூட இதன் பின்புலத்தில் இருக்கலாம். கோவிலும், அங்கே குடியிருந்த ஆண்டவரின் / இறைவனின் பெயரும் மறைந்துவிட, என்றும் நிலைத்திருக்கும் படைப்பு வரலாற்றுப் பெயரான 'கடவுள்' என்ற பெயரைப் பயன்படுத்துகின்றார் சபை உரையாளர்.





# 3. பாட வரையறையும் பகுப்பாய்வும்

நம் ஆய்வுப்பாடத்தின் ஆசிரியர் மற்றும் சூழலைப் புரிந்துகொண்ட நாம் பாடத்தின் பகுப்பாய்வுக்குக் கடந்து செல்வோம். சஉ 11:4-12:8ஐ தனிப்பட்ட இலக்கியப் பகுதியாக வரையறுப்பதற்கான காரணிகளையும், பாடத்தின் கட்டமைப்பையும் பாடத்தில் உள்ள நான்கு முக்கியச் சொல்லாடல்களை முதன்மைப்படுத்திய பகுப்பாய்வையும் ஈண்டுக் காண்போம்.

## 3.1. பாட வரையறை

சஉ 11:4-12:8ஐ பின்வரும் காரணங்களுக்காகத் தனியானதொரு பகுதியாக நாம் பிரிக்கலாம்: (அ) 'காற்று' (11:4) என்ற வார்த்தையில் தொடங்கி, அதே வார்த்தையோடு பாடம் முடிகிறது (12:7). (ஆ) விதை விதைப்பதில் தொடங்கி (உருவகமாக, மனித உடலுறவு) விதை மடிவதில் (உடல் அழிவதில்) முடிகிறது. (இ) 'மகிழ்ந்திரு,' 'நினைத்திரு' என்னும் இரண்டு சொற்கள் கட்டளைச் சொற்களாக முன்வைக்கப்படுவதோடு, இச்சொற்களைச் சுற்றியே பாடம் அமைகிறது. (ஈ) இப்பாடத்திற்கு முந்தைய (11:1-3) மற்றும் பிந்தைய (12:9-14) பகுதிகள் எல்லாருக்கும் பொதுவானவையாகவும், இப்பாடம் (11:4-12:8) மட்டும் தன் கண்முன் நிற்கும் இளவல் ஒருவருக்கு அல்லது பலருக்கு ஆசிரியர் கொடுக்கும் அறிவுரைப் பகுதியாகவும் உள்ளது. மற்றும் (உ) இப்பகுதி முழுவதும் மனித வாழ்வின் தொடக்கமுதல் இறுதிவரை உள்ள நிகழ்வுகளைத் தொகுத்துச் சொல்லும் கதையாடல் பாடலாக (narrative poem) உள்ளது.

## 3.2. கட்டமைப்பு

இப்பாடத்தின் கட்டமைப்பை நாம் பின்வருமாறு வடிவமைத்துக் கொள்வோம்.

A முன்னுரை (11:4)
B உயிர் நுழைதல் (11:5-6)
C ஒளி இருக்கும் போது மகிழ்ந்திரு (11:7-10)
D உன்னைப் படைத்தவரை நினை (12:1அ)
C' துயர நாள்கள் வருமுன் நினை (12:1ஆ-5அ)
B' உயிர் வெளியேறுதல் (12:5ஆ-7)
A' முடிவுரை (12:8)

இக்கட்டமைப்பின்படி 'படைத்தவரை நினைத்திரு' என்பது பாடத்தின் மையமாக இருந்து, 'மகிழ்ந்திரு' என்பது வாழ்க்கையின் தொடக்கமுதல், இறுதிவரை மனித வாழ்வின் எல்லா நிலைகளிலும் நடக்க வேண்டும் என்பது அடுத்தடுத்த அடுக்காகப் பதிவு செய்யப்படுகிறது. மேலும், 'எல்லாம் வீண்' என்று பாடத்தின் இறுதியில் காணும் சொல்லாடல், இதற்கு முந்திச் சொல்லப்பட்ட 'மகிழ்ந்திரு', 'நினைத்திரு' என்பதற்கு வேகமும், பொருளும் தருவதாக அமைந்துள்ளது.

## 3.3. பகுப்பாய்வு

நாம் பாடத்தைக் கட்டமைத்துள்ளதன்படி, இந்தக் கட்டமைப்பு உருவாகத் துணைநிற்கும் நான்கு சொல்லாடல்களைப் பாடத்தின் பின்புலத்திலும் ஒட்டுமொத்த சபை உரையாளர் நூலின் பின்புலத்திலும் பகுப்பாய்வு செய்வோம்.

### 3.3.1. 'வீண்'

நம் பகுப்பாய்வை முடிவுரை (12:8)யிலிருந்து தொடங்குவோம். சபை உரையாளர் நூலின் முக்கிய கருத்தான வீண் (எபிரேயத்தில், 'ஹேவல்') என்ற சொல்லாடல் நம் பாடத்தில் 11:8 (1 முறை), 11:10 (1 முறை), மற்றும் 12:8 (3 முறை) என மூன்று இடங்களில் 5 முறை பயன்படுத்தப்படுகிறது.[6] சஉ நூலின் தொடக்கம் (1:2) மற்றும் முடிவு (12:8) என இரண்டு இடங்களில் வருவதை வைத்து இந்நூல் ஆசிரியர் இந்த வார்த்தையை 'உள்ளடக்கி' (inclusion) அல்லது 'அடைப்புக்குறியாக'ப் (bracketing) பயன்படுத்துவதாக நாம் எடுத்துக்கொள்ளலாம்.[7] 'ஹேவல்' என்பது 'நிலையற்றதன்மை' அல்லது 'வெறுமை' அல்லது 'பயனற்ற தன்மை' (11:8,10) என்றும், 'பொருளற்றது' அல்லது 'அர்த்தம் தராதது' (12:8) என்றும் இங்கே புரிந்துகொள்ளப்பட வேண்டும்.[8]

### 3.3.2. 'எல்லாம்'

12:8ல் உள்ள மற்றொரு வார்த்தை 'எல்லாம்' (எபிரேயத்தில் 'க்ஹோல்'). நம் பாடப்பகுதியில் இதே வார்த்தையை 6 முறை (11:5, 8(2x), 9, 11:8) பயன்படுத்துகிறார் ஆசிரியர். 'எல்லாம்' என்பது சூரியனுக்குக் கீழ் இருக்கும் எல்லாம் எனப் பொருள்கொண்டாலும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய வார்த்தை அல்ல இது. ஏனெனில், 'எல்லாம்' எனப் பொருள்கொண்டாலும் 'எல்லாவற்றையும்' உள்ளடக்கிய வார்த்தை அல்ல இது. ஏனெனில், 'எல்லாம்'





வீண் என்று சொல்லும் ஆசிரியர் கடவுளையும் கடவுளை நோக்கிய பயத்தையும் வீண் என்று ஒருபோதும் சொல்லவில்லை (காண். 2:26; 3:14-15; 11:9-10; 12:1,9,13-14). ஆக, 'மகிழ்ந்திருத்தலும்' 'நினைத்திருத்தலும்' வீண் அல்ல.

### 3.3.3. 'மகிழ்ந்திரு'

'ஹேவல்' மற்றும் 'க்ஹோல்' என்னும் வார்த்தைகளைத் தொடர்ந்து நம் பாடத்தில் மையமாக இருக்கும் மூன்றாவது வார்த்தை 'மகிழ்ந்திரு' அல்லது 'மகிழ்ச்சி' (ஸிம்க்ஹா). 'மகிழ்ந்திரு' என்ற வார்த்தை சபை உரையாளர் நூலில் 15 முறையும், நம் பாடத்தில் 2 முறையும் (11:8,9) வருகின்றது. நம் பாடத்தில் இச்சொல் கட்டளைச் சொல்லாகவே உள்ளது. 11:7ல் 'இனிமை' என்ற சொல்லும் 'மகிழ்ச்சி' என்ற சொல்லின் பொருளைக் கொண்டதே. 11:8ல் 'மகிழ்ந்திரு' என்ற அழைப்பு அல்லது கட்டளை எல்லாருக்கும் பொதுவானதாகவும் அதே நேரத்தில் உயிர்வாழும் அனைத்து நாள்களிலும் 'மகிழ்ந்திருக்க' அழைப்பதாகவும் இருக்கிறது. மேலும், ஆசிரியர், 'மகிழ்ச்சியில்' உடல், மூளை, மனம் என்ற படிநிலைகளையோ, அல்லது 'இன்பம்', 'சிற்றின்பம்', 'பேரின்பம்', 'ஆனந்தம்' என்ற வேறுபாடுகளையோ முன்வைக்கவில்லை.[9] ஆனால், 11:9ல் 'இளைஞனே' என்று முன்னிலையில் இருப்பவரை அழைத்து ஒருமையில் கட்டளையிடுவதுபோலவும் 'இளமைப்பருவத்தில்' மகிழ்ந்திருக்க வேண்டும் என்றும் பாடம் இருக்கிறது. மேலும், இந்த மகிழ்ச்சி 'இளைஞன் தன் மனம் விரும்புவதைச் செய்வதிலும் கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுவதிலும் உள்ளது' என மறைமுகமாகச் சொல்லப்பட்டாலும் தான் இறுதியில் பெறப்போகும் தீர்ப்பை இளைஞன் மனதில் வைத்திருக்க வேண்டும் என்ற எச்சரிக்கையும் கொடுக்கப்படுகிறது. அத்தோடு, மகிழ்ச்சிக்குத் தடையாக இருக்கின்ற அகக் காரணியும் ('மனச்சோர்வு' அல்லது 'மனக்கவலை') புறக் காரணியும் ('உடலில் வலி') அகற்றப்பட வேண்டும் (காண் 11:10) என்ற அறிவுரையும் கட்டளைச் சொற்களாகவே இளைஞனுக்குத் தரப்படுகின்றன.

### 3.3.4. 'நினைத்திரு'

இறுதியாக, 'நினைத்திரு' ('ஸ்சகார்') என்ற சொல்லாடல் சபை உரையாளர் நூலில் 4 முறை (5:19, 9:15, 11:8, 12:1) வருகின்றது. 11:8ல் நினைவுப் பொருள் 'வரவிருக்கும் இருள்சூழ் நாள்கள்' என்றும், 12:1-ல் நினைவுப் பொருள் 'உன்னைப் படைத்தவர்' என்றும் தரப்பட்டுள்ளது. 'இருள்சூழ் நாள்கள்' என்னும்

சொல்லாடல் ‘நரகத்தையோ, பாதாளத்தையோ, மறுவுலக வாழ்வையோ’ குறிப்பது அல்ல.[10] மாறாக, இளமைப்பருவத்தைத் தொடர்ந்து வரும் ‘முதுமைப்பருவத்தையே’ அது குறிக்கிறது. இவ்வாறாக, இளைஞன் தன் மண்ணக நாள்களையும், தான் மண்ணகத்தில் உலா வரத் தன்னைப் படைத்த இறைவனையும் மனதில் வைக்க அழைப்புப் பெறுகிறான். ‘நினைத்தல்’ என்னும் செயல் இதயத்தின் செயல் என்று எபிரேயச் சமூகம் நம்பியது.[11]

‘மகிழ்ந்திரு’ மற்றும் ‘நினைத்திரு’ என்னும் இரு சொற்களும் இணைந்து இச 16:11-12 மற்றும் திபா 97:12ல் வருகின்றன. ‘அறுவடை விழாக் கொண்டாட்டம்’ (இச 16:11-12) பற்றிய அறிவுரைப் பகுதியில் ‘மகிழ்ந்திருத்தல்’ என்பது கடவுள்முன் நிகழும் செயலாகவும், ‘நினைத்திருத்தல்’ என்பது ‘எகிப்தின் அடிமைத்தனத்தையும் இறைவனின் அரும்பெரும் செயலையும் நினைவுகூர்வதாகவும் உள்ளது. திபா 97:12ல் ‘மகிழ்ந்திருத்தலும்’, ‘நினைத்திருத்தலும்’ இறைவனை மையமாகக் கொண்டுள்ளன. ஆனால், சஉ 11:4-12:8ல் மட்டுமே ‘மகிழ்ந்திருத்தல்’ கடவுள்மையத்திலிருந்து, உலகுமையத்திற்குக் கடந்து வருகின்றது. ஆக, கடவுளின் இரக்கம் அல்லது நன்மைத்தனத்தை அனுபவித்திராத ஒருவரும் – ஏன் கடவுளின் இருப்பை மறுக்கும் ஒருவரும் – மகிழ்ந்திருக்க முடியும்.

இவ்வாறாக, ‘எல்லாம்’ – ‘வீண்’ என்ற நிலையிலும், ‘மகிழ்ந்திருத்தலும்,’ ‘நினைத்திருத்தலும்’ வாழ்வின் மிக முக்கியமான கூறுகள் என்பதை நமது பாடப்பகுதி வலியுறுத்துகிறது. ‘எல்லாம்’ – ‘வீண்’ என்னும் சொல்லாடல்கள் பாடத்தின் முதல் மற்றும் இறுதியாகவும், ‘மகிழ்ந்திருத்தல்’ – ‘நினைத்திருத்தல்’ என்னும் சொல்லாடல்கள் பாடத்தின் மையமாகவும் இருக்கின்றன.

## 4. அகநோக்கு மறைத்தூதுப்பணி – களமும் கூறுகளும் அணுகுமுறைகளும்

ஒவ்வொரு மறைத்தூதுப்பணிக்கும் களம் அவசியம். களத்தைப் பொறுத்தே பணியின் கூறுகளும் அணுகுமுறைகளும் அமையும். சஉ 11:4-12:8ன் களம் அதன் வரலாற்று, இலக்கிய, இறையியல் சூழலிலிருந்து ஓரளவு தெளிவாக இருந்தாலும், பாடம் உணர்த்தும் களம் ஆறு காரணிகளைக்





கொண்டுள்ளது என்பதையும், மேலும், இக்களம் நிர்ணயிக்கும் ஆறு மறைத்தூதுப்பணிக் கூறுகளையும், அவற்றின் பின்புலத்தில் நம் இன்றைய மறைத்தூதுப்பணிக்கான மாற்று அணுகுமுறைகளையும் இப்பகுதி ஆராய்கிறது.

### 4.1. மறைத்தூதுப்பணிக் களம்

சஉ 11:4-12:8ல் உள்ள மறைத்தூதுப்பணிக் களம் ஆறு காரணிகளைக் கொண்டிருக்கின்றது. இக்காரணிகளே மறைத்தூதுப்பணியின் இயங்குதளமாக இருக்கின்றன.

#### 4.1.1. வீண் (Vanity)

சபை உரையாளர் சூரியனுக்குக் கீழ் இருக்கும் அனைத்தும் வீண் (காண். 1:9) என்கிறார். மனித வாழ்க்கையில் இளமைக்குப் பின்வரும் இருளின் நாள்களும் (11:8), குழந்தைப் பருவமும், இளமையும் (11:9), எல்லாமும் (12:8) வீண் என்கிறார். மிகக் குறுகிய காலம் நிலைக்கக்கூடியதும், எந்தவொரு பயனும் இல்லாததுமாகிய ஓர் உலகத்தில் மனிதர்கள் வாழ்கின்றனர்.

#### 4.1.2. மாற்றம் (Transience)

ஆண் பெண்ணிடம் விதையை விதைக்கிறான் (11:4,6). அந்த விதை பெண்ணின் வயிற்றில் உயிராகிறது (11:5). பின் குழந்தை பிறக்கிறது (‘ஒளியைக் காணுதல்’ என்பது ‘பிறத்தலின்’ உருவகம்) (11:7). குழந்தைப் பருவம் மறைந்து இளமைப்பருவம் (11:10), தொடர்ந்து முதுமை (12:1ஆ-5), இறுதியாக, இறப்பு (12:6-7) என மனித வாழ்க்கை வேகமாக மாறுகிறது.

#### 4.1.3. சலிப்பு (Boredom)

“அனைத்தும் சலிப்பையே தருகின்றன. அதைச் சொற்களால் எடுத்துரைக்க இயலாது. எவ்வளவு பார்த்தாலும் கண்ணின் ஆவல் தீர்வதில்லை. எவ்வளவு கேட்டாலும் காதின் வேட்கை தணிவதில்லை” (1:8) என்று தம் நூலின் முன்னுரையில் மொழிகிறார் சபை உரையாளர். மனித வாழ்க்கையின் பருவமாற்றங்கள் சலிப்பைத் தருகின்றன என்பதை அவர் பயன்படுத்தும் சொல்லாடல்கள் வழியாக நாம் புரிந்துகொள்கிறோம். ஏனெனில், முதுமை பற்றிய வருணனையை (காண். 12:1ஆ-5) வாசிக்கும்போதே, ‘வாழ்க்கை இவ்வளவுதானா’ என்ற சலிப்பை வாசகரிடம் உருவாக்கிவிடுகின்றார் சபை

உரையாளர். மேலும், இளைஞனுக்கு அறிவுறுத்தப்படுகின்ற 'மனதின் விருப்பங்களும்', 'கண்களின் நாட்டங்களும்' (காண். 11:9), காலப்போக்கில் சலிப்பையே தரக்கூடியவை.

#### 4.1.4. உறுதியற்ற தன்மை (Uncertainty)

"காற்றின் போக்கையோ, கருவுற்ற பெண்ணின் வயிற்றில் உயிர் வளரும் வகையையோ நீ அறிய இயலாது. அவ்வாறே, அனைத்தையும் செய்கிற கடவுளின் செயல்களையும் உன்னால் அறியமுடியாது" (11:5) என்கிறார் சபை உரையாளர். இது மனிதர்களின் குறைவான அறிவை ஒருபுறமும், மனித வாழ்வின் உறுதியற்ற தன்மையை மறுபுறமும் குறிக்கிறது. 'பல நேரங்களில், 'இது இப்படி இருக்க வேண்டும்' என்றும், 'இது இப்படி இருக்கக் கூடாது' என்றும் திட்டமிட்டு வாழ விரும்புகிறது மனித மனம். ஆனால், மனிதத் திட்டங்களும், எண்ணங்களும் அப்படியே நடந்துவிடுவதில்லை.

#### 4.1.5. உணர்வுப் பொறிகள் (Sensories)

பார்த்தல், கேட்டல், நுகர்தல், தொடுதல், சுவைத்தல் என்னும் ஐம்புலன்கள் வழியாக நாம் இந்த உலகத்தையும் உலகத்தின் எதார்த்தங்களையும் அனுபவிக்கிறோம். "ஒளி", "கதிரவன்", "கண்கள்", "இருள்", "கண்களின் நாட்டம்", "உடலுக்கு ஊறு", "பகலொளி", "நிலா", "விண்மீன்கள்", "மங்கலாய்த் தெரிதல்", "நடுக்கம்", "தளர்வு", "சந்தடி கேட்டல்", "கீச்சொலி", "உறக்கம்", "நடை தடுமாற்றம்", "அழுதல்", "புலம்புதல்", "ஓய்வு" என மனித உணர்வுகள் தொடர்பான வார்த்தைகள் நம் பாடத்தில் நிறையக் காணக்கிடக்கின்றன. ஆக, மறைத்தூதுப்பணிக் களத்தில் உணர்வுப் பொறிகளின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது.

#### 4.1.6. இரு துருவங்கள் (Polarities)

"பகல் – இரவு" (11:6), "அறிதல் – அறியாமை" (11:5,6,9), "கடவுள் – மனிதர்" (12:1, 11:5, 11:9, 12:7, 11:5, 11:8, 11:10 மற்றும் 12:7), "ஒளி – இரவு" (11:7, 11:8), "நல்லது – தீயது" (11:7, 11:8, 12:1), "உயிர் – உடல்" (11:4, 12:7, 11:10), "வருதல் – போதல்" (11:9, 12:5) என ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு துருவங்கள் நிறைந்த உலகம்தான் மனிதர்களின் வாழ்வியல் களமாக இருக்கின்றது.





### 4.2. அகநோக்கு மறைத்தூதுப்பணிக் கூறுகள்

மேற்காணும் ஆறு காரணிகளால் கட்டுவிக்கப்பட்ட மறைத்தூதுப்பணித் தளத்தில் தம் கண்முன் நிற்கும் இளைஞன் வழியாக, அனைவருக்கும் 'நற்செய்தி அறிவிக்கும்' சபை உரையாளர் பின்வரும் நிலைகளில் வாழ்வை தகவமைத்துக்கொள்ள அறிவுறுத்துகிறார். ஆக, இவரின் இந்த அறிவுரைகளிலேயே மறைத்தூதுப்பணி 'புறத்திலிருந்து அகத்திற்கு' மாற்றம் பெறத் தொடங்குகிறது.

#### 4.2.1. அந்தந்த நேரத்தை வாழ்தல் (*Carpe Diem*)

"காற்று தக்கவாறு இல்லையென்று காத்துக்கொண்டே இருப்போர் விதை விதைப்பதில்லை, வானிலை தக்கபடி இல்லை என்று சொல்லிக்கொண்டே இருப்போர் அறுவடை செய்வதில்லை" (11:4) என்ற வார்த்தைகள் ஒவ்வொரு மனிதனும் தான் இருக்கின்ற பொழுதைப் பற்றிக்கொண்டு அந்தப் பொழுதை முழுமையாகவும், முதன்மையாகவும் பயன்படுத்தவேண்டும் என்கிறது. வாழ்க்கையில் 'நல்ல பொழுது', 'கலக்கம் இல்லாத பொழுது', 'எல்லாம் சரியாக இருக்கின்ற பொழுது' வரும் என்று நாம் உறுதியிட்டுச் சொல்லவும் முடியாது. உறுதியின்றி இருக்கவும் முடியாது. 'நல்லது வரும்' என எதிர்பார்ப்பது நமக்குக் கலக்கத்தையும் ஏமாற்றத்தையும் உருவாக்கலாம். ஆக, இருக்கின்ற பொழுதை முழுமையாக வாழ்தல் நலம்.

#### 4.2.2. அறிய இயலாததை ஆராயாமல் விடுதல் (Letting Go the Incomprehensible)

"வாழ்க்கை இன்பமாய் இருக்கும்போது மகிழ்ச்சியோடிரு. துன்பம் வரும்போது நீ நினைவில் கொள்ளவேண்டியது: 'அடுத்து என்ன நடக்கும்' என்பதை நீ தெரிந்துகொள்ளாவண்ணம் கடவுள், இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறி வரவிடுகின்றார்'" (7:14) என்று சொல்கின்ற சபை உரையாளர், "அனைத்தையும் செய்கிற கடவுளின் செயல்களையும் உன்னால் அறிய முடியாது" (11:5) என்கிறார். ஆக, தேவையானது என்பது அறிவிற்கு உட்படாததையும் அறிவிற்கு எட்டாததையும் அப்படியே ஏற்றுக்கொள்வதே.

**4.2.3. நம்மிடம் இருப்பதை பயன்படுத்துதல்** (Utilising the Resources-at-hand)

"காலையில் விதையைத் தெளி. மாலையிலும் அப்படியே செய். அதுவோ இதுவோ எது பயன்தரும் என்று உன்னால் கூறமுடியாது. ஒருவேளை இரண்டுமே நல்விளைச்சலைத் தரலாம்" (11:6). மனித அறிவிற்கு மிஞ்சியே காரியங்கள் நடப்பதாலும், எங்கும், எதிலும் உறுதியற்ற நிலை இருப்பதாலும், மனிதர்கள் கையிலிருப்பவற்றைப் பயன்படுத்தினால் வாழ்க்கை வளமாகும்.

**4.2.4. முரண்களோடு வாழ்தல்** (Living with the Contradictions)

முரண்களால் கட்டப்பட்டதே மனித வாழ்க்கை. என்றும், முரண்கள் அல்லது இருதுருவங்களை இணைத்து முரண்களகற்றுவதும், ஒருதுருவமாக்கலும் இயலாத காரியம். இளமை என்ற குச்சியைக் கையில் எடுக்கும் இளைஞன் தன்னை அறியாமலேயே குச்சியின் அடுத்த பக்கத்தில் இருக்கும் முதுமையையும் எடுக்கிறான். குச்சியின் இந்தப் பக்கம் மகிழ்ச்சியைத் துய்க்கத் தொடங்கும் நேரம், குச்சியின் அந்தப் பக்கம் தரும் துயரம் அவனை நெருக்க ஆரம்பிக்கிறது என்ற நிதர்சனமான உண்மையை அவன் ஏற்றுத் தன் வாழ்வை முரண்களோடே வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**4.2.5. மகிழ்ந்திருத்தல்** (Rejoicing)

'மகிழ்ந்திரு' என்பதை வெறும் அறிவுரையாக அல்லது அறநெறிப் போதனையாகச் சொல்லாமல், அதை ஒரு கட்டளையாகவே ஒட்டுமொத்த மனித குலத்திற்கும், தாம் நேருக்கு நேர் உரையாடும் இளைஞனுக்கும் தருகின்றார் சபை உரையாளர். வாழ்க்கையில் மனிதர்கள் ஒருமுறை கடந்துவரும் பாதையை அவர்கள் மீண்டும் கடப்பதில்லை. எனவே, இந்தப் பாதை கடந்துபோகுமுன் இந்தப் பாதையில் உள்ள மகிழ்ச்சியான தருணங்களை மனிதன் அனுபவிக்க வேண்டும். மேலும், இளைஞன் தன் 'கண்களின் நாட்டத்தையும், மனதின் விருப்பத்தையும்' நிறைவேற்றியும், 'மனதின் கவலையை வலியை அகற்றியும்' மகிழ்ந்திருக்க வேண்டும். இந்த மகிழ்ச்சி என்பது 'இன்பம்' போல உடல் சார்ந்தோ அல்லது மிகக் குறுகியதோ அல்லது குற்றவுணர்வு தரக்கூடியதோ அல்ல.

**4.2.6. நினைத்திருத்தல்** (Remembering)

மனிதன் தன் வாழ்வு எப்படி, எந்த நிலையில் இருந்தாலும் தன் நிலையில் மகிழ்ச்சியாக இருக்கும்போது, அந்த மகிழ்ச்சியான நிலை துயரமான நிலையாக





மாறிவிடும் என்பதை நினைத்திருக்க வேண்டும். அதே வேளையில், தன்னைப் படைத்தவரை தன் இளமைப்பருவத்தில் நினைத்திருக்க வேண்டும். ஏனெனில், 'அவரே அனைத்தையும் அறிபவர்' (11:5), 'அவரே தீர்ப்பு வழங்குபவர்' (11:9), 'அவரே மனித உயிரின் உரிமையாளர்' (12:7).

## 4.3. அணுகுமுறைகள்

சஉ 11:4-12:8 முன்வைக்கும் மறைத்தூதுப்பணிக் கூறுகள் மனிதனை அவனுக்கு வெளியே உள்ள உலகிலிருந்து, அவனை அவனுக்குள் இருக்கும் உலகம் நோக்கித் திருப்புகின்றன. மேலும், மறைத்தூதுப்பணி கொண்டுவரும் மாற்றம் என்பது தனிமனித மகிழ்ச்சியும், தனிமனிதத் தன்முன்னேற்றமும், பொருளாதார, சமூக, வாழ்வியல் மாற்றமும் என்பதை நாம் இங்கே புரிந்துகொள்கிறோம். ஆக, ஆண்டவர், திருச்சட்டம், கோவில், நிலம் ஆகியவை மறைந்துபோன சபை உரையாளர் நூலின் சூழலில் புறநோக்கு, சமூக சமய மறைத்தூதுப்பணியைவிட அகநோக்கு, தனிநபர் மைய மறைத்தூதுப்பணியே முதன்மையாக இருந்தது.

சபை உரையாளரின் இந்தப் புதிய வகையான மறைத்தூதுப்பணி நம் இன்றைய மறைத்தூதுப்பணியின் அணுகுமுறைகளைப் பின்வருமாறு மாற்றிக்கொள்ளவும் நம்மைத் தூண்டுகிறது.

**4.3.1. 'தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்திலிருந்து' 'தேடுகின்ற இதயத்திற்கு'**

பழைய ஏற்பாட்டு ஐந்நூல் மற்றும் இறைவாக்கு நூல்களில் இஸ்ரயேல் இனம் தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாகவும், புதிய ஏற்பாட்டு நற்செய்தி நூல்கள் மற்றும் திருத்தூதர் பணிகளிலும், தொடர்ந்துவரும் திருஅவைப் போதனைகளிலும், திருச்சங்கங்களின், திருத்தந்தையரின் எழுத்துக்களிலும் கிறித்தவ மக்கள் புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாகவும் கருதப்பட்டு, மறைத்தூதுப்பணி என்பது 'தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்திற்கு' ஆள்சேர்க்கும் பணியாகவே பல நேரங்களில், பல இடங்களில் நடந்து வந்துள்ளது.[12] ஆனால், 'தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் இனம்' பாபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டபோது, 'தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையே' கேள்விக்குள்ளானது. ஆக, 'நான் தேர்ந்தெடுக்கப்பட்டவன் – நீ தேர்ந்தெடுக்கப்படாதவன்' என்ற நிலை மாறி, 'நீயும் தேடுகிறாய் – நானும் தேடுகிறேன்' என்று வாழ்வியல்

தேடலை மையமாக வைத்த அணுகுமுறையை சஉ 11:4-12:8 நமக்குக் கற்பிக்கிறது.

### 4.3.2. 'மனந்திரும்புதலிலிருந்து' 'மகிழ்ந்திருத்தலுக்கு'

சமயப் பன்முகத்தளத்தில் ஏற்கனவே ஒரு சமய நம்பிக்கை கொண்டிருப்பவர் மறைத்தூதுப்பணியால் மனந்திரும்புதலுக்கு அழைக்கப்படும்போது, அந்த மனமாற்றம், 'மதமாற்றம்' எனப் பெயரிடப்பட்டு, மறைத்தூதுப்பணி தடுக்கப்பட்டு, மறைத்தூதுப்பணிக்கு உள்ளங்களைத் திறந்து வைத்திருப்பவர்களையும் பின்னடைவு கொள்ளச் செய்கிறது. இச்சூழலில் 'மனந்திரும்புதல்' மையப்படுத்தப்படுவதைவிட, மறைத்தூதுப்பணியில் 'மகிழ்ந்திருத்தல்' மையப்படுத்தப்பட்டால் மறைத்தூதுப்பணி சமய, கலாச்சார, பண்பாட்டுப் பன்முகத்தளத்தில் எளிதாகத் தொடரும்.

### 4.3.3. 'நம்புவதிலிருந்து' 'நினைத்திருத்தலுக்கு'

மறைத்தூதுப்பணியால் 'மனந்திரும்புவர்' மேல் சுமத்தப்படும் அடுத்த சுமை 'வெளிப்படுத்தப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளை நம்புவது.'[14] ஏற்கெனவே ஒரு சமயத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் நபர், கிறித்தவ சமய நம்பிக்கைக்குள் வரும்போது தாம் ஏற்கெனவே தம் குடும்பம் மற்றும் பின்புலத்தில் பெற்றுள்ள நம்பிக்கையோடு வருகின்றார். வந்தவரின் சிந்தனை மாற்றம் அவ்வளவு எளிதானதன்று. இவ்வளவு காலம் இயற்கையை வழிபட்டவருக்கு மூவொரு இறைவன் கோட்பாடும், மறுபிறப்பின் மேல் நம்பிக்கை கொண்டவருக்கு இறுதிநாள் உயிர்ப்பும் எளிதாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவை அல்ல. அந்நேரத்தில் 'கோட்பாடுகளை நம்புவதை விடப்' 'படைத்தவரை நினைத்திருத்தல்' வலியுறுத்தப்பட்டால் நலம்.

### 4.3.4. 'திருமறையின் படிநிலைகளிலிருந்து' 'மனித வாழ்வியல் படிநிலைகளுக்கு'

மறைத்தூதுப்பணியால் புதிய மறையைத் தழுவும் நம்பிக்கையாளர் கிறித்தவத்தில் திருமுழுக்கின் வழியாகத் திருஅவையின் உறுப்பினர் ஆகிறார். அவர் உறுப்பினர் ஆனவுடன், ஏற்கெனவே திருஅவையில் உள்ள படிநிலையின் உறுப்பினராகவும் ஆகிவிடுகின்றார். இந்தப் படிநிலை அவர் திருஅவையில் யார், எப்படி இருக்க வேண்டும், என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்ற எல்லா வரையறைகளையும் விதித்துவிடுகிறது. ஆக, நேற்றுவரை சுதந்திரமாகக்





கட்டின்மையோடு வாழ்ந்த அவர் இன்று முதல் படிநிலையின் கட்டுக்களுக்கு ஆளாகின்றார். ஆனால், திருமறையின் அல்லது திருஅவையின் படிநிலைகள் முதன்மைப்படுத்தப்படுவதற்குப் பதிலாக மனித வாழ்வியல் படிநிலைகள் (கருவுருவாக்கம், பிறப்பு, குழந்தை, பதின்பருவம், இளமை, முதுமை, இறப்பு) கருத்தில்கொள்ளப்பட்டு அந்தந்தப் படிநிலைகளின் வாழ்வியல்நிலை கொண்டாடப்பட்டால் நம்பிக்கையாளர் தாம் இருக்கின்ற வாழ்வியல் நிலையைச் சுதந்திரமாக, முழுமையாக வாழ முடியும்.

### 4.3.5. 'பரப்பளவிலிருந்து' 'பண்படுத்துதலுக்கு'

"பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்... அனைத்தையும் ஆளுங்கள்" (தொநூ 1:28) என்ற படைப்பின் தொடக்கக் கட்டளையும், "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" (மத் 28:19) என்ற இயேசுவின் மறைத்தூதுக் கட்டளையும் 'பூமியின் பரப்பளவை' முன்னிறுத்தியே புரிந்துகொள்ளப்பட்டன. 'அதிக இடம் – அதிக நம்பிக்கையாளர்கள்' என நினைத்த மறைத்தூதுப் பணியாளர்கள் 'இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம்' என்று தங்கள் இருப்பை விசாலமாக்கிக்கொண்டே சென்றார்கள். அரசியல் மற்றும் பொருளாதார உலகில் இது காலனிய ஆதிக்கத்திற்கு வித்திட்டாலும், சமய உலகில் இது 'அடுத்தவரை அழித்துத் தன்னை நிலைநாட்டுவது' என்றும், 'அடுத்த கடவுளைப் பேயாக்கித் தன் கடவுளை ஒரே கடவுளாக்கிப்' பல இடங்களில் இரத்தமும், கண்ணீரும் சிந்தப்பட்டதை வரலாறு அறியும்.[15] ஆனால், இப்படியான பரப்பளவிற்கான மோகம் குறைந்து மனித உள்ளங்கள் பண்படுத்தப்படுதலை நோக்கி மறைத்தூதுப்பணி இருந்தால் அது அனைவரையும் உள்ளடக்கியிருக்கும்.

### 4.3.6. 'பிரிவுகளிலிருந்து' 'ஒருங்கியக்கத்திற்கு' (Synergy)

காலங்காலமாக மறைத்தூதுப்பணி 'நாம்' – 'அவர்கள்' என்ற இரண்டு காரணிகளைக் கொண்டே அமைந்துள்ளது. 'நாம் நல்லவர்கள் – அவர்கள் கெட்டவர்கள்' என்ற ஏற்றத்தாழ்வு உருவாவது இங்கேதான். ஆனால், நாம் எந்தப் பக்கத்தில் இருந்தாலும், பிறப்பு, இளமை, முதுமை, இறப்பு என்பவை நம் அனைவருக்கும் பொதுவானவை. இயற்கையின் ஓர் உறுப்பாகப் பிறக்கும் நமக்கு ஒருவர் மற்றவரோடு ஒன்றிணைப்பை ஏற்படுத்தும் மறைத்தூதுப்

பணியே 'ஒருங்கியக்கத்திற்கு' (Stnergy) சஉ 11:4-12:8 முன்வைக்கும் புதிய மறைத்தூதுப்பணி.

இவ்வாறாக, சஉ 11:4-12:8ல் நாம் காணும் மறைத்தூதுப்பணிக் களத்தின் காரணிகளும் பணியின் கூறுகளும் நம் இன்றைய மறைத்தூதுப்பணிக்குப் புதிய அணுகுமுறைகளைக் கற்றுத்தருகின்றன.

## முடிவுரை

நாம் தொடங்கிய இடத்திற்கே மீண்டும் வருவோம். மறைத்தூதுப்பணியின் நோக்கம் நிறைவேற (அ) அறிவிப்பவர், (ஆ) அறிவிப்புப் பொருள், (இ) அனுப்புபவர் என்று மூன்று காரணிகள் அவசியமாகின்றன. இங்கே, மறைத்தூதுப்பணியின் நோக்கம் அனுப்புபவரை (கடவுள், கிறிஸ்து) மையமாகக் கொண்டிருக்கிறது. ஆனால், 'கடவுள் இல்லாமல்' இருந்த சபை உரையாளர் நூலின் காலகட்டத்தில் 'அறிவிப்பவரும்,' 'அறிவிக்கப்படுபவரும்' இருந்தாலே மறைத்தூதுப்பணியின் நோக்கம் நிறைவேறிவிடுகிறது. ஏனெனில், அங்கே 'அறிவிக்கப்படுபவரின்' அகமே பணியின் நோக்கமாக இருக்கிறது. அகநோக்கு மறைத்தூதுப்பணி தனிநபர் வாழ்வியல் நிலையையே இலக்காகவும், இயங்குதளமாகவும் கொண்டிருப்பதால் பாலினம், மொழி, சமயம், இனம், நாடு என அனைத்து வரையறைகளையும் கடந்த ஒரு திறப்பை உருவாக்குகிறது. இவ்வாறாக, சஉ 11:4-12:8 என்னும் பாடம் 'மகிழ்ந்திரு,' 'நினைத்திரு' என்ற இரண்டு வாழ்வியல் கட்டளைச் சொற்களை மையமாகக் கொண்ட அகநோக்கு மறைத்தூதுப்பணி என்னும் புரிதலை நமக்குத் தருகின்றது.

## அடிக்குறிப்பு

1. சஉ 1:1, 2, 12, 7:27, 12:8, 10.
2. M. V. Fox, *A Time to Tear Down and a Time to Build Up.* A Rereading of Ecclesiastes (Grand Rapids, 1999), 372-73. SA. Fox, *Qoheleth and His Contradictions*, 312. "He may be a fictional persona or the author's mouthpiece." "In Latin, 'persona' originally was the mask through which an actor spoke; it now means a character through whom an author speaks." Fox, *Time to Tear Down,* 372.





3. J. Limburg, *Encountering Ecclesiastes*. A Book for Our Time (Grand Rapids, 2006), 9. SA. L. Mazzinghi, *Ho cercato e ho esplorato: studi sul Qohelet* (Bologna, 2001), 61.
4. A. P. Hayman, "Qoheleth and the Book of Creation," JSOT 50 (1991), 93-111.
5. Cited in C. L. Seow, *Ecclesiastes.* A New Translation with Introduction and Commentary (AB 18C Doubleday, 1997), 337.
6. Cf. K. Seybold, 'äâì,' *TDOT,* III, 313.
7. The concordance study shows that *hebel* occurs in Ecclesiastes 37 times. All the occurrences of äâì are as follows: 1:2, 14; 2:1, 11, 15, 17, 19, 21, 23, 26; 3:19; 4:4, 7, 8, 16; 5:6, 9 (Eng 7, 10); 6:2, 4, 9, 11, 12; 7:6, 15; 8:10, 14 (2x); 9:9 (2x); 11:8, 19; 12:8. But B. K. Waltke is of different opinion: The *hebel* is "the book's *leitwort* ('leading word'), occurring thirty-seven times. Not coincidentally thirty-seven is the numerical value of *hebel* (h=5, b=2, l=30). Recall also that there are 111 verses in each half, which is three times the numerical value of *hebel*." B. K. Waltke, *An Old Testament Theology.* An Exegetical, Canonical, and Thematic Approach (Grand Rapids, 2007), 955.
8. இங்கே சபை உரையாளர் 'இளமை மற்றும் முதுமை'யை 'வீண்' எனக் குறிப்பிடுகின்றார். இதற்கு முன் இந்நூலில் (1) மனித உழைப்பும், முயற்சியும் (1:12-2:26), (2) எதிர்காலம் பற்றிய மனிதரின் அறியாமை (3:1-15), (3) இவ்வுலகில் நிலவும் அநீதி (3:16-22), (4) பொருளீட்டும் முயற்சி (5:9-19), (5) தண்டிக்கப்படாத குற்றம் (8:10-15), மற்றும் (6) அனைவருக்கும் பொதுவான விதி (9:1-10) ஆகியவற்றை வீண் என்கிறார் ஆசிரியர். Cf. R. N. Whybray, "Qoheleth, Preacher of Joy," in D. J. A. Clines (ed.) *The Poetical Books.* A Sheffield Reader (Sheffield, 1997), 195.For the entire discussion on 'hebel,' see V. Onwukeme, *Searching for Meaning with Qoheleth* (Longford, 2012).
9. Fox, *Time to Tear Down*, 114.
10. ஏனெனில் மறுவுலகு பற்றிய புரிதல் சபை உரையாளர் நூல் எழுதப்பட்ட காலத்தில் இல்லை.
11. Cf. R. N. Whybray, *Ecclesiastes* (Sheffield, 1997), 194.
12. Cf.P. Pinto, "Election and Mission," in J. Kavunkal – F. Hrangkhuma (eds.), *Bible and Mission in India Today* (Mumbai, 1993), 56-61.
13. Cf. T. Dabre, "Religious and Cultural Pluralism," in S. M. Michael – J. Joseph (eds.), *Emerging Challenges to Christian Mission Today.* Revisioning Mission from Religious, Cultural, Historical, and Women Perspectives (Pune, 2016), 39-50.
14. Cf. S. M. Michael, "Culture, Nation, and Conversion Issues in Mission Today," in R. E. Hedlund – P. J. Bhakiaraj (eds.), *Missiology for the 21st Century.* South Asian Perspectives (New Delhi, 2004), 359-368.
15. For a detailed study on colonial missions, christianization, civilization, and commerce, see S. W. Sunquist, *Understanding Christian Mission.* Participation in Suffering and Glory (Grand Rapids, 2013), 23-131.

# 4. இறையாட்சி முழக்கம் இயேசுவின் திருத்தூதுரைப்பணி

*அருள்பணி. முனைவர் ச. ஸ்தனிஸ்லாஸ்*
*அதிபர், நல்லாயன் குருத்துவக் கல்லூரி*
*கோயம்புத்தூர்*

Giulio Base இயக்கத்தில் உருவான "St. Peter" திரைப்படத்தில் உரோமைக்குச் சென்ற பவுலிடம் மக்கள் இயேசுவைப் பற்றிப் பல கேள்விகள் கேட்கிறார்கள்: அவருடைய குரல் எப்படி இருந்தது? அவர் என்ன தொழில் செய்தார்? அவருடைய முகம் எப்படி இருந்தது? பவுல் சொல்கிறார்: "நான் அவரைப் பார்த்ததில்லை" என்று. அவர்களுடைய முகம் வாடிவிடுகின்றது. பிறகு தொடர்கிறார், "எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு இயேசுவைப் பற்றி நன்றாய்த் தெரியும். ஏனெனில் அவர் அவரோடு வாழ்ந்தார்" என்று கூறிப் பேதுருவை உரோமைக்கு வரவழைப்பதாகத் திரைப்படத்தில் பார்க்கிறோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கலிலேயாவைத் தம் பணித்தளமாகக் கொண்டு வாழ்ந்த நாசரேத்தூர் இயேசு எத்தகைய தூதுரைப்பணியைச் செய்தார்?எவ்வாறு செய்தார்? என்று நமக்குத் தெரியாது. திருவிவிலியத்தில் உள்ள நான்கு நற்செய்திகள்தாம் நமக்கு ஆதாரம். வெறுமனே இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்வது அவற்றின் நோக்கமல்ல. இயேசுவின் உயிர்ப்பின் ஒளியில் அவருடைய போதனைகளும், வல்ல செயல்களும் நமக்கு உணர்த்தும் பொருள் என்ன என்று சொல்லி, அவரில் நம்பிக்கை கொள்ள நம்மை அழைப்பதே அவற்றின் முதன்மையான நோக்கம் (யோவா 20:30-31). நாசரேத்தூர் இயேசுவின் தூதுரைப்பணியை நான்கு நற்செய்தி நூல்களும் விரிவாகக் கூறுகின்றன. இருப்பினும் வரலாறும்,





இறையியலும் அவற்றில் கலந்திருக்கின்றன. அதை விவரிப்பதில் நற்செய்தியாளர்களிடத்தில் வேறுபாடுகளும் இருக்கின்றன. இருப்பினும், இயேசுவிடமிருந்து வராமல் எந்தச் செய்தியையும் புதிதாக அவர்கள் புனையவில்லை. மரபுவழி தாங்கள் பெற்ற செய்தியைப் பிரமாணிக்கத்தோடு (creative fidelity) எழுத்து வடிவில் நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். எனவே, இக்கட்டுரைக்கு ஒத்தமைவு நற்செய்தி நூல்களும், யோவான் நற்செய்தியுமே ஆதாரங்களாக இருக்கின்றன. அவர் ஆற்றியது மெசியாவிற்குரிய பணி என்பதைத் தொடக்ககாலக் கிறித்தவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

## பழமையும் புதுமையும்

பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர் வரிசையில் வந்த திருமுழுக்கு யோவானுடைய பணி இயேசுவின் பணிக்கு முகவுரையாக அமைவது சிந்திக்கத்தக்கது. மனமாற்றத்திற்கான திருமுழுக்கு கொடுத்து, தமக்குப்பின் வருபவர் தம்மைவிட வலிமைமிக்கவர் என்பதை அறிக்கையிட்டார் திருமுழுக்கு யோவான் (மாற் 1:4-8). யோவான் கையால் இயேசுவும் திருமுழுக்குப் பெற்று தந்தை அனுபவத்தோடு (மாற் 1:11; லூக் 3:22) தூய ஆவியாரால் நிரப்பப்பெற்றவராக ஆட்சி, பணம், பொருள், அதிகாரம், உலக மாட்சி இவற்றால் இறையாட்சியை நிறுவும் சோதனையைத் தொடக்கத்திலேயே முறியடித்தார் இயேசு (மத் 4:11; லூக் 4:1-13; யோவா 6:15).[1]

திருமுழுக்கு யோவான் கைது செய்யப்பட்டபின் இயேசு தம் பணியைத் தொடங்குவதாக மாற்கு குறிப்பிடுகிறார் (மாற் 1:14). ஒரு விதத்தில் இயேசுவின் பணி திருமுழுக்கு யோவானுடைய பணியின் தொடர்ச்சி. இருவருடைய பணியையும் ஒரேவிதமாக மத்தேயு பதிவு செய்திருப்பது இங்குக் கவனிக்கத்தக்கது: "மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது" (மத் 3:2; 4:17). இருப்பினும், இரண்டுக்கும் அடிப்படையான வித்தியாசம் இருப்பதையும் நற்செய்தியில் காண்கிறோம். மனமாற்றத்திற்கு மக்களை அழைத்த திருமுழுக்கு யோவான் வரப்போகும் இறைவனின் தண்டனைத் தீர்ப்பை எடுத்துச் சொல்லி அவர்களை எச்சரித்தார் (மத் 3:10; லூக் 3:9). ஆனால், இயேசு இறைவனின் இரக்கத்தைப் போதித்தார். திருமுழுக்கு யோவான் எதிர்பார்த்தபடி இயேசுவின் பணி அமையவில்லை. எனவேதான் 'வரப்போகிறவர்

நீர்தாமோ?' என்று தம் சீடர் வழியாக இயேசுவிடம் அவர் கேட்டனுப்பினார். தம்முடைய பணி வேறு என்பதை இயேசு தெளிவுபடுத்தினார். ''எவரும் பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப்போடுவதில்லை. பழைய தோற்பைகளில் எவரும் புதிய திராட்சை மதுவை ஊற்றி வைப்பதில்லை'' (மாற் 2:21-22).

## ''இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது''

இயேசுவின் போதனையின் மையப்பொருள் இறையாட்சி என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.[2] இயேசுவின் தூதுரைப்பணியின் மையப் பொருளும் இறையாட்சி என்றால் அது மிகையாகாது. இயேசுவின் பணிவாழ்வு முழுவதையும் ''இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது'' என்ற சொற்றொடரில் சுருக்கமாகச் சொல்கிறார் மாற்கு (1:15). தமது நற்செய்தி முழுவதையும் இதன் விளக்கமாகவும், விரிவாக்கமாகவும் அமைத்திருக்கிறார் மாற்கு.[3]

## ''காலம் நிறைவேறிவிட்டது''

பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள் 'ஆண்டவரின் நாள் வரும்' என்று முன்னறிவித்தனர். அது தண்டனைத் தீர்ப்பின் நாளாக இருக்கும் என்று உரைத்தார்கள் (ஆமோ 5:18-20; 8:9; எசா 2:11; 13:9-10; யோவே 2:30-31; 4:14). அதே சமயம் பாபிலோனில் அடிமைப்பட்டுக்கிடந்த மக்களுக்கு ஆறுதல் செய்தியாக இறையாட்சியை முன்னறிவித்தார் இறைவாக்கினர் எசாயா: ''இதோ என் தலைவராகிய ஆண்டவர் ஆற்றலுடன் வருகின்றார். அவர் ஆற்றலோடு ஆட்சி புரிய இருக்கிறார்... ஆயனைப்போல் தம் மந்தையை அவர் மேய்ப்பார். ஆட்டுக் குட்டிகளைத் தம் கையால் ஒன்று சேர்ப்பார்...'' (எசா 40:10-11). ''நற்செய்தியை அறிவிக்கவும் நல்வாழ்வைப் பலப்படுத்தவும், நலம்தரும் செய்தியை உரைக்கவும், விடுதலையைப் பறைசாற்றவும், சீயோனை நோக்கி 'உன் கடவுள் அரசாளுகின்றார்' என்று கூறவும் வருவோனின் பாதங்கள் மலைகள்மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன!'' (எசா 52:7). ஆட்சியாளர்களின் அடக்கு முறைகளுக்கும் சுரண்டல்களுக்கும் அடிமையாகிவிட்ட மக்களுக்கு இறைவாக்கினர் தானியேலும் ஆறுதல் வார்த்தைகளைச் சொல்கிறார்: ''வானத்தின் மேகங்களின் மீது மானிட மகன்





போன்ற ஒருவர் தோன்றினார்... ஆட்சியும், மாட்சியும், அரசும் அவருக்குக் கொடுக்கப்பட்டன... அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும்'' (தானி 7:13-14; தானி 2:44; 4:3-31,34; 6:26). 'ஆட்சியுரிமை ஆண்டவருடையது; அவரே நம்மை அரசாள்கிறார்' என்று இறைவாக்கினர்கள் எடுத்துரைத்தது நிறைவேறுகின்ற காலம் கனிந்து விட்டதை இயேசு முழக்கமிடுகின்றார். இறைவாக்கினர்களின் இறைவாக்கு நிறைவேறுவதற்குத் தகுந்த காலம் வந்துவிட்டதைப் பறைசாற்றுகிறார்.

## நற்செய்தி முழக்கத்தின் தனிச் சிறப்பு

இறையாட்சி பற்றிய இயேசுவின் முழக்கம் தனிச் சிறப்பு வாய்ந்தது. ''இறையாட்சி'' என்பது எபிரேய விவிலியம், பழைய ஏற்பாட்டு இணைத்திருமுறைகள், கும்ரான் இலக்கியங்கள், பிலோ, பிளேவியுஸ் யோசேப்பு மற்றும் தார்கும்கள் இவற்றில் முற்றிலுமாகக் கையாளப்படவில்லை அல்லது வெகு சொற்ப இடங்களில் காணப்படுகிறது.[4] இருப்பினும் ''ஆண்டவர் அரசாள்கின்றார்'' என்ற கருத்து எசாயா, தானியேல் இவர்களின் இறைவாக்குகளிலும், திருப்பாடல்களிலும் காணப்படுகின்றது (திபா 10:16; 24:7-10; 22:29; 29:10; 44:5; 47; 48:3; 68:25; 75:12; 95:3; 95-102,145,146). சாலமோனின் ஞானநூல் ''ஆண்டவர் அரசராக அவர்களை என்றென்றும் அரசாள்வார்'' (3:8) என்று எதிர்காலத்தில் வரப்போகும் இறையாட்சியை எடுத்துரைக்கின்றது. இறையாட்சி என்பது காட்சியாக இறைவாக்குகளிலும் இலக்கியங்களிலும் காணப்பட்டது. ஆனால் ''இறையாட்சி'' என்பது இயேசுவின் போதனை மற்றும் பணிவாழ்வின் மையமாக இருந்தது. அவரது போதனைகள், வல்ல செயல்கள், பாடுகள், இறப்பு, உயிர்ப்பு அனைத்தும் அதைப் பறைசாற்றின. இறையாட்சி என்ற கிரேக்கச் சொல்லை மாற்கு 14 முறையும் மத்தேயு 33 முறையும் (விண்ணரசு என்ற சொல்லும் இதில் அடங்கும்) கையாள்கின்றனர். ஒத்தமைவு நற்செய்திகளில் பெரும்பாலும் இயேசுவின் அச்சொல்லை அழுத்தம் கொடுத்துப் பயன்படுத்துவதாகப் பார்க்கிறோம். அவருடைய நற்செய்தி முழக்கத்தின் மையப் பொருளும் சிறப்பம்சமும் அதுதான். ''விண்ணரசு'' என்பது மத்தேயு விரும்பிப் பயன்படுத்துகின்ற ஒரு சொல்லாக இருக்கிறது. இறையாட்சிக்கும்

விண்ணரசுக்கும் வேறுபாடு எதுவுமில்லை. யூதப் பாரம்பரியத்தைப் பின்பற்றி கடவுளின் பெயரைச் சொல்வதைத் தவிர்ப்பதற்காகவே மத்தேயு "விண்ணரசு" என்ற சொல்லைக் கையாள்கிறார். இறையாட்சி என்பது இறைவனின் அரசாட்சியைக் குறித்து நிற்கிறது. அவர் ஆட்சி செய்கிறார். எனவே, இது இறைவனின் கொடை. இறையாட்சியைக் கட்டியெழுப்புவது இறைவனின் செயல். நாம் செய்ய வேண்டியதெல்லாம் இறையாட்சிக்கு உட்படுவதுதான்.[5]

## இறையாட்சியில் நம் பணி

இறையாட்சி நெருங்கி வந்துவிட்டதை முழக்கமிட்ட இயேசு அவ்வாட்சியின்பால் நமக்கு இருக்க வேண்டிய ஈடுபாட்டைக் கூறுகிறார். திருமுழுக்கு யோவானைப் போலவே மக்களை மனமாற்றத்திற்கு அழைக்கிறார். "மெத்தநோயா" (கிரேக்கம்) அல்லது "தெஷீவா" (எபிரேயம்) என்ற சொல் கூறும் மனமாற்றம் மேலோட்டமான மனமாற்றம் அல்ல, வேரோட்டமானது. சிந்தனை, சொல், வாழ்க்கை முறையில் நிகழும் திருப்பத்தை அது கூறுகிறது. நடைமுறையில் இல்லாத திருப்பங்களும் செயல்பாடுகளும் இறையாட்சியில் நடைபெறுகின்றன. மனித எதிர்பார்ப்புகளையும் கணிப்புகளையும் கடந்து[6] இறையாட்சியைப் பற்றிய நற்செய்தி கேட்போரை முதலில் மனமாற்றத்திற்கு அழைக்கிறது. அடுத்ததாக அதில் நம்பிக்கை வைக்க அழைக்கிறது. இயேசுவின் இந்த அழைப்பு தொடக்கத் திருஅவையின் நற்செய்தி முழக்கத்திலிருந்து வந்தது என்ற விவாதம் இன்னும் அறிஞர்களிடையே தொடர்கிறது. ஆனால் இது இயேசுவின் பணிவாழ்வில் முக்கியத்துவம் பெறுவதையும் நற்செய்தி நூல்களில் காண்கிறோம். இயேசுவைச் சந்தித்த பலருடைய வாழ்வில் திருப்பம் ஏற்பட்டது (எ.கா. மத்தேயு, சக்கேயு). நோய்களிலிருந்து குணம் பெறுவதற்கு அத்தியாவசியமாக இருந்தது நம்பிக்கை (மாற் 5:34). நற்செய்திக்கு முதலில் நாம் சொல்லும் பதில் மனமாற்றம் என்றால் மனமாற்றத்தில் நிலைத்திருப்பதே நம்பிக்கை. ஆண்டவரைப் பின்பற்றுவதில் அவருடைய உளப்பாங்கு, நோக்கங்கள், மதிப்பீடுகள் இவற்றை எடுத்துக் கொண்டு மனிதப் பாதுகாப்பைவிடுத்துத் தந்தையிடம் திரும்பி வருவதே நம்பிக்கை.[7]

இயேசுவின் இறையாட்சி பற்றிய நற்செய்தியை மத்தேயு சற்று வித்தியாசத்துடன் பதிவு செய்கிறார்: "மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு





நெருங்கி வந்து விட்டது" (4:17). அறநெறிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மத்தேயு இறையாட்சியை ஏற்பதற்கு அடிப்படைத் தேவையாக மனமாற்றத்தைச் சொல்வது அவருடைய இறையியலுக்கு ஒத்திருக்கிறது. இறையாட்சியைப் பற்றிய இயேசுவின் முழக்கம் கடவுளிடமிருந்து மக்களுக்குத் தரப்படும் நற்செய்தி. "யுவாங்கெலியோன்" என்ற சொல்லை மாற்கு பயன்படுத்துகிறார். பெயர்ச்சொல்லை முற்றிலும் தவிர்த்து 'நற்செய்தி அறிவிப்பது' (யுவாங்கெலிசோமாய்) என்ற வினைச்சொல்லினை லூக்கா அதிகமாகப் பயன்படுத்துகிறார். இயேசு வினைச்சொல்லையே பயன்படுத்தியிருக்க வேண்டும் (மத் 11:5; லூக் 7:22).[8] இயேசு அறிவிக்கும் செய்தி நற்செய்தி என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார் மாற்கு (1:1, 8:35, 10:29, 13:10). பழைய ஏற்பாட்டில் *bassar* என்ற எபிரேயச் சொல் அரசனுக்கு வாரிசு பிறந்ததையோ, எதிரிகளின் மீது வெற்றி கொண்டதையோ (2சாமு 18:19-20), ஆண்டவர் அரசாள்கிறார் என்ற செய்தியையோ (எசா 40:9-10; 52:7-8) குறித்துக்காட்டியது. இயேசுவின் காலத்தில் சமய, சமூக, அரசியல், பொருளாதார ரீதியாக அடிமைப்பட்டுக் கிடந்த ஏழை எளிய மக்களுக்கு இறையாட்சி ஒரு பெரிய நற்செய்தியே. லூக்கா தனது நற்செய்தியில் இதற்கு அழுத்தம் கொடுத்துக் கூறியிருக்கிறார். எசா 61:1-2ன் பின்னணியில் இயேசுவின் பணியை நற்செய்தி முழக்கமாகச் சித்தரிக்கிறார்.

"ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக் 4:18-19). யூபிலி ஆண்டின் விடுதலையை அறிவிப்பதே இயேசுவின் பணி. இந்நற்செய்தியானது லூக்கா நற்செய்தி முழுவதும் எதிரொலிக்கிறது: "ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர்" என்று பறைசாற்றுகின்றார் (6:20). கடவுள் வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்; தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்புகிறார்; செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார் என்பதையும் லூக்கா தமது நற்செய்தி நூலில் பதிவு செய்கிறார் (லூக் 1:50-53). தமது நற்செய்தி முழக்கத்தில் இயேசு இலக்கியச் சிந்தனைகளையும், அரசியல் சார்புச் சிந்தனைகளையும் கவனமாகத் தவிர்க்கிறார்.[9] இயேசு பறைசாற்றிய நற்செய்தி ஏற்கெனவே நிறைவு கண்டு

விட்டதா?[10] அல்லது எதிர் காலம் சார்ந்ததா? (மத் 6:10; மாற் 14:25)[11] என்பது இப்போது விவாதத்திற்குரிய பொருளாக இல்லை. மனித வரலாற்றை இறைவனே வழிநடத்துகிறார். இறையாட்சி நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய இரண்டையும் சார்ந்தது; நிறைவை நோக்கி அது பயணிக்கிறது என்பதே கவனத்தில் கொள்ள வேண்டிய கருத்து.[12] லூக்கா நற்செய்தியின்படி சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் இயேசுவின் பணியில் சிறப்பிடம் பெறுகிறார்கள். சமாரியர், வரிதண்டுவோர், பாவிகள் இவர்களோடு இயேசுவின் தோழமை, அவருடைய நற்செய்தி ஆகியவை புதிய சமுதாயம் படைக்கும் ஆற்றல் பெற்றவை என்பதைச் சொல்கிறது. யோவான் நற்செய்தியின்படி இயேசுவின் தூதுரைப்பணி மாந்தருக்கு நிலைவாழ்வைக் கொடுப்பதாக உள்ளது (யோவா 3:16; 1 யோவா 4:9);[13] இயேசுவில் நம்பிக்கை கொள்வோர் நிலைவாழ்வைக் கண்டடைகின்றனர்: சமாரியப்பெண் (யோவான் 4), பார்வை பெற்றவர் (யோவான் 9), லாசர் உயிர் பெற்றது (யோவான் 11). இயேசுவில் நம்பிக்கை வைப்பதே நிலைவாழ்வு பெற ஒரே வழி (20:31).

## வார்த்தை வழி நற்செய்தி முழக்கம்

இறையாட்சி பற்றிய நற்செய்தியை இயேசு வாய்மொழியாகப் பறைசாற்றுகிறார். இயேசுவின் போதனையில் சிறப்பிடம் பெறுவது மலைப்பொழிவு. மத்தேயு கூறும் எண்பேறுகளில் முதலாவதும் கடைசியும் விண்ணரசு (kingdom of heaven) என்ற வார்த்தையைக் கொண்டிருக்கின்றன (5:3-10). விண்ணரசுக்கு உரியவராக விரும்புவோர் உள்ளத்தளவில் ஏழையாக இருக்கவேண்டும். உலகின் பாவங்கள் மற்றும் பிறரின் துன்பத்தின் பொருட்டும் துயரப்பட வேண்டும்.[14] கனிவு, தந்தையின் விருப்பத்தின்பால் வேட்கை, இரக்கம் காட்டுவது, தூய்மையான உள்ளம், அமைதியை ஏற்படுத்துவது, இறை விருப்பத்திற்காகத் துன்புறுவது இவை விண்ணகத்திற்கான திறவுகோல்கள். விண்ணரசுக்குள் புக வேண்டும் என்றால் மறைநூல் அறிஞர், பரிசேயர் இவர்களின் நெறியைவிட மேலான நெறியைக் கொண்டு ஒழுக வேண்டும் (5:20).

மறைநூல் அறிஞர் மற்றும் பரிசேயர்களின் நெறி மோசேவின் சட்டங்களைக் கடைபிடிப்பதில் அடங்கியுள்ளது. அதை வழுவாமல்





கடைப்பிடிப்பவர் நெறியாளராகக் கருதப்பட்டார். புதிய மோசேவாக இயேசு வாழ்க்கை நெறியைப் போதிக்கிறார்.[15] "... என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கின்றேன்" என்று சுய அதிகாரத்தோடு சட்டங்களின் உட்பொருளை விளக்குகிறார் இயேசு (5:21-48). பகைவரையும் அன்பு செய்வதே சட்டத்தின் நிறைவாகக் குறிப்பிடுகின்றார் (5:48). பரிசேயர் போன்று பெயர், புகழுக்காகச் சட்டத்தைக் கடைப்பிடிப்பதை விட்டு இறைவேண்டல், தர்மம், நோன்பு ஆகியவற்றை பிறருக்குத் தெரியாமல் வானகத் தந்தைக்கு மட்டும் தெரியும் வண்ணம் செய்வதே விண்ணரசுக்கு ஏற்புடையது (மத் 6:1-18). இறையாட்சி வாழ்வின் முதல் தேடலாக இருந்தால் நமக்குத் தேவையானது அனைத்தும் வானகத் தந்தை கொடுப்பார் (மத் 6:33). "பிறரன்புக்கான பொன் விதியையும் இயேசு கொடுக்கிறார்; பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும், திருச்சட்டமும் கூறுவது இதுவே" (மத் 7:12). லூக்காவும் தமது நற்செய்தியில் சுருக்கமாகப் பிறரன்பையும் பகைவருக்கு அன்பு செய்தலையும் வலியுறுத்துகிறார் (லூக் 6:27-42). வானகத்தந்தை இரக்கமுள்ளவர் என்ற செய்தி லூக்கா நற்செய்தியில் அழுத்தம் பெறுகிறது (லூக் 6:36; 15:1-32). மலைப்பொழிவு நடைமுறைக்கு ஒத்து வராது என்று ஒதுக்க முடியாது.[16] அது சட்டத்தின் விளக்கமல்ல, இறையாட்சியைப் பற்றிய நற்செய்தி.[17] ஏற்கெனவே கடவுளின் அன்பையும், மன்னிப்பையும் அனுபவித்தவருக்குப் பகைவரை அன்பு செய்வதும், மன்னிப்பதும் கடினமல்ல.[18]

## உவமைகள்

இயேசுவின் உவமைகளின் முக்கிய போதனை இறையாட்சி என்பதை C.H. Dodd என்ற அறிஞர் எண்பித்துக் காட்டுகிறார் (மாற் 4:11; மத் 13:11; லூக் 8:9).[19] இயேசு உவமைகளில் பேசுவதன் நோக்கத்தை நற்செய்தியாளர்கள் வெவ்வேறு விதமாகக் கூறுகின்றார்கள். மாற்கு நற்செய்தியில் இயேசுவின் உவமைகளைக் கேட்போர் எசாயா கூறியது போன்று, "கண்ணால் தொடர்ந்து பார்த்தும் கண்டு கொள்ளாமலும், காதால் தொடர்ந்து கேட்டும் கருத்தில் கொள்ளாமலும்" இருந்து மனம் மாறி மன்னிப்புப் பெறத் தவறுகிறார்கள் (மாற்

4:11-12). "உண்மையில் வெளிப்படாது மறைந்திருப்பது ஒன்றுமில்லை. விளக்கைக் கொளுத்தி யாரும் மரக்காலின் கீழ் வைக்கமாட்டார்கள். அவ்வாறே இயேசுவின் உவமைகளும் கேட்கச் செவியுள்ளோருக்குத் தெளிவாகின்றன (மாற் 4:21-25). அவர்களது கேட்டறியும் திறனுக்கேற்ப "உவமைகளால் இறைவார்த்தையைப் போதித்தார்" என்று குறிப்பிடுகிறார் மாற்கு (4:33-34). உவமைகள் வழியாக இயேசு போதிப்பதன் நோக்கத்தை மத்தேயு தெளிவாகக் கூறுகிறார்: "அவர்கள் கண்டும் காண்பதில்லை; கேட்டும் கேட்பதில்லை; புரிந்து கொள்வதுமில்லை. இதனால்தான் நான் அவர்களோடு உவமைகள் வாயிலாகப் பேசுகிறேன்" (மத் 13:13). "இறையாட்சிக்குப் பல்வேறு நெருக்கடிகளும் எதிர்ப்புகளும் வந்தாலும் நிச்சயம் இறையாட்சி வந்தே தீரும், பலன் தரும். எனவே நம்பிக்கையோடு நற்செய்தியை அறிவிக்க வேண்டும்" என்ற செய்தியைச் சொல்வதாக 'விதைப்பவர் உவமை' அமைந்துள்ளது (மாற் 4:1-9,13-20 மத் 13:1-9,18-23; லூக் 8:4-8,11-15). இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியைப் போதிக்க வேண்டியது தன் பணி; ஆனால், பலன் தருபவர் கடவுள். எனவே, மனம் தளராது நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்ற செய்தியைத் தானாக முளைத்து வளரும் விதையில் பார்க்கிறோம்.

இறையாட்சி என்பது கண்ணுக்குப் புலப்படும் விதத்தில் ஆடம்பரத்தோடு கூடிய பெரிய நிகழ்வாக இல்லாவிட்டாலும், கடுகு விதை போன்று அது பெரிதாக வளர்ந்து எல்லாவற்றையும் காக்கும் (மாற் 4:30-32; மத் 13:31-32; லூக் 13:18-19); புளிக்காரம் போன்று அது பரவக் கூடியது. மக்களிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது (மத் 13:33; லூக் 13:20-21). இறையாட்சி அடுத்தவர் நிலத்தில் இருக்கின்ற புதையல் போன்றது. மேலும், அது விலையுயர்ந்த முத்து போன்றது. அதற்கு உட்பட வேண்டுமென்றால் உள்ளதெல்லாம் இழக்கத் துணிவு தேவை (மாற் 10:17-31; மத் 13:44-46). மீன் வலை போன்ற இறையாட்சிக்குத் தீயவரும் நல்லவரும் உட்படுகிறார்கள் (மத் 13:47-50).[20] பாவிகளை அழைப்பதே தன் பணி (மாற் 2:17) என்பதை உவமைகள் வாயிலாகத் தெளிவுபடுத்தினார். வானகத்தந்தை போன்றே தாமும் பாவிகள் மேல் இரக்கம் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தினார் (லூக் 15:1-32). பாவிகள் மனம் மாறவேண்டும் என்று வானகத்தந்தை பொறுமையோடு இருப்பதையும் கூறுகிறார் (மத் 13:36-43).[21] மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்கிறார் (மாற் 11:12-14,20-25; லூக் 13:1-9). இக்கட்டான சூழ்நிலையில் முன்மதியோடு செயல்பட்ட





வீட்டுப் பொறுப்பாளன் போன்று இறையாட்சிக்குச் சார்பாக முடிவெடுக்கத் தூண்டுகிறார் (லூக் 16:1-8).[22] தந்தையின் விருப்பத்தைச் செய்பவர் வரிதண்டுவோர் மற்றும் பாவிகளாக இருந்தாலும் அவர்கள் முதலில் இறையாட்சிக்குள் செல்வார்கள் (மத் 21:28-32). இறையாட்சியில் முதலானோர் கடைசியாவர், கடைசியானோர் முதலாவர் என்பதைத் திராட்சைத் தோட்டத்தொழிலாளர் உவமை கற்பிக்கின்றது (மத் 20:1-16). இயேசுவின் போதனை அவருடையது அல்ல, அவரை அனுப்பிய தந்தையுடையது என்பதை யோவான் நற்செய்தியில் காண்கிறோம் (யோவா 7:16; 8:26; 12:19; 14:24; 17:8). இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியை ஏற்பதற்குக் குழந்தை உள்ளம் தேவை (மாற் 10:15; மத் 11:25-27; 19:14; லூக் 18:16). முதல்வர் கடைசியாவதும், அனைவருக்கும் தொண்டராவதும் இறையாட்சியின் நடைமுறை (மாற் 10:35).

## வல்ல செயல்கள்வழி நற்செய்தி முழுக்கம்

இயேசுவின் போதனை அதிகாரம் கொண்ட ஒன்றாக இருந்ததாக மக்கள் ஆச்சரியப்பட்டனர் (மாற் 1:27). ஏனெனில் அது வெறும் வார்த்தையைக் கொண்ட போதனையல்ல. அவருடைய வார்த்தை செயலில் வெளிப்பட்டது; வார்த்தை நிகழ்வானது (performative nature of the word). வார்த்தையால் முழங்கிய அதே இறையாட்சியை வல்ல செயல்களாலும் அறிவித்தார் இயேசு. "வரவிருப்பவர் நீர்தாமா? அல்லது வேறு ஒருவரை எதிர்பார்க்க வேண்டுமா?" என்று தம் சீடர்கள் வழியாக திருமுழுக்கு யோவான் எழுப்பிய கேள்விக்கு இயேசுவின் பதில், "நீங்கள் கேட்பவற்றையும் காண்பவற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள்; பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர்; கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர்; தொழுநோயாளர் நலமடைகின்றனர்; காது கேளாதோர் கேட்கின்றனர்; இறந்தோர் உயிர்பெற்று எழுகின்றனர்" (மத் 11:3-5; லூக் 7:18-35; காண் மாற் 1:32-34; 6:5). இறையாட்சி நெருங்கி வந்து விட்டதைப் பறைசாற்றிய இயேசு (மாற் 1:14-15; மத் 4:17; லூக் 4:18; காண் எசா 61:1-2; 35:5-6), இதோ அதற்குச் செயல் வடிவம் கொடுக்கிறார் தனது பணியில்.

இயேசுவின் வல்ல செயல் ஒவ்வொன்றும் ஒரு நற்செய்தி முழக்கம். ஏழைகளுக்குச் செயல் பூர்வமாக நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. 8ஆம் மற்றும் 9ஆம் அத்தியாயங்களில் இயேசுவின் பத்துப் புதுமைகளை விவரிக்கும் மத்தேயு, 10ஆம் அத்தியாயத்தில் இயேசு தம் சீடர் பன்னிருவருக்கும் தீய ஆவிகளை ஓட்டவும், நோய்களைக் குணமாக்கவும் அதிகாரம் அளித்து அவர்களைத் தூதுரைப்பணிக்கு அனுப்புவதாகக் கூறுகின்றார். அதனைத் தொடர்ந்து 11ஆம் அத்தியாயத்தின் தொடக்கத்திலேயே இயேசுவின் வல்ல செயல்கள் அனைத்தும் இறையாட்சி நெருங்கி வந்துவிட்டதை அறிவிப்பதாக இயேசு கூறுவது முக்கியம் வாய்ந்தது.[23] இயேசுவின் குணமளிக்கும் புதுமைகளில் நோய்வாய்ப்பட்டுத் துன்பப்படும் மக்கள் மீது கடவுளுக்கு இருக்கும் அக்கறை வெளிப்படுகிறது. இறைவனின் இரக்கத்தின் அடையாளங்கள் அவை; நோய்கள் தீய சக்தியின் விளைவே என்று நம்பிய சமுதாயத்தில் இயேசுவின் குணமளிக்கும் புதுமைகள் இறையாட்சி தீய சக்திகள் மீது கொள்ளும் வெற்றியைப் பறைசாற்றுகின்றன.[24]

மேலும், பாவங்களை மன்னிப்பதற்கு இயேசுவுக்கு அதிகாரம் உண்டு என்பதை முடக்குவாதமுற்றவர் குணம்பெறும் புதுமை உறுதி செய்கிறது (மாற் 2:1-12). மனித உயிரைக் காப்பது ஓய்வு நாள் சட்டத்தை மீறுவதாக ஆகாது என்பதைச் சூம்பிய கையுடையவர் குணம்பெறும் புதுமை பறைசாற்றுகிறது (மாற் 3:1-5).[25] இயேசு தீய ஆவிகளை விரட்டுவது (மாற் 5:1-20), கடல் மீது நடப்பது (மாற் 6:45-52), ஆகியவை தீய சக்திகள் மீது இறைவனின் வல்லமையைப் பறைசாற்றுகின்றன. சமய, சமூக, அரசியல், பொருளாதாரம் சார்ந்த தீமைகள் மற்றும் இயற்கைக்கு எதிராகச் செய்யப்படும் தீமைகளும் தீய சக்திகளின் வெளிப்பாடுகளே. பிறப்பு, பாலினம், கல்வி, பொருளாதார நிலை இவற்றின் அடிப்படையில் எழும் ஏற்றத்தாழ்வுகளும் தீய சக்திகளின் வெளிப்பாடே. இறையாட்சி மனித வாழ்வின், ஏன் இந்தப் பிரபஞ்சத்தின் எல்லாப் பரிணாமங்களையும் ஊடுருவுகிறது. அப்பம் பலுகுகின்ற புதுமை, நல்லாயனாகிய இயேசு மக்கள் மீது உள்ள பரிவினால் இறையாட்சி பற்றிய மறை உண்மைகளை அவர்களுக்குப் போதித்து அக்கறையோடு அவர்களது வயிற்றுப் பசியையும் போக்குவதைச் சொல்கிறது (மாற் 6:34-44). மேலும், ஆயனில்லா ஆடுகள் போன்று உள்ள மக்களை நல்லாயன் ஒன்று





சேர்ப்பதையும், நற்கருணையானது திருஅவையை ஒன்று கூட்டி ஒரு குடும்பமாகக் கட்டியெழுப்புவதையும் முன்னறிவிக்கிறது (மாற் 6:34,39-41).[36] இறந்தோரை உயிர்ப்பிக்கும் புதுமையானது சாவின் மீதும் இறைவன் வெற்றி கொள்கிறார் என்பதை உணர்த்துகிறது (மாற் 5:21-23,35-43; யோவா 11).

இயேசுவின் புதுமைகளை யோவான் அரும் அடையாளங்கள் - சேமெய்யா - (யோவா 2:11) என்றழைக்கிறார். இயேசு தம் புதுமைகளைச் செயல்கள் (எர்கா) என்றழைக்கிறார். தாம் செய்யும் செயல்கள் தந்தையே அவரை அனுப்பியுள்ளார் என்பதற்குச் சான்று என்றும் (யோவா 5:36), அவர் செய்வது அனைத்தும் தந்தைக்குரிய செயல்களே என்றும் மொழிகிறார் (யோவா 10:37). மாற்கு நற்செய்தியில் உள்ள 666 வசனங்களில் 209 வசனங்கள் இயேசுவின் புதுமைகளை விவரிக்கின்றன. பாடுகள் பகுதியை நீக்கினால், 405 வசனங்களில் ஏறத்தாழ 200 வசனங்கள் புதுமைகளைப் பற்றிக் கூறுகின்றன. அதாவது ஏறக்குறைய 47%.[27] இயேசுவின் தூதுரைப்பணியில் புதுமைகள் முக்கிய இடம் பெற்றதையே இது காட்டுகிறது.

## இயேசுவின் வாழ்க்கையும் நற்செய்தியே

இயேசு எருசலேமுக்குள் நுழைந்தது (மாற் 11:1-11), அத்திமரத்தைச் சபித்தது (மாற் 11:12-14), கோவிலைத் தூய்மைப்படுத்தியது (மாற் 11:15-19; மத் 21:12-14; லூக் 19:45-48; யோவா 2:13-22). ஓய்வு நாள் பற்றித் தர்க்கம் செய்தது (மாற் 3:1-6), பாவிகளோடு உணவு உண்டது யாவும் நற்செய்தியே.[28] அறிவிக்கப்படும் நற்செய்தியின் உட்பொருளைவிட அறிவிப்பவரின் வாழ்க்கை நெறியே மிகச் சிறந்த நற்செய்தி அறிவிப்பு. அதனால்தான் இயேசு தம் பன்னிரு சீடர்களைத் தூதுரைப்பணிக்கு அனுப்பும் பொழுது அவர்கள் என்ன அறிவிக்க வேண்டும் என்பதை விட அவர்கள் வாழ்க்கை முறை எப்படியிருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் (மாற் 6:8-11; மத் 10:9-14; லூக் 9:3-5).

இறைவாக்கினர் தம் இறைவாக்குப் பணிக்குரிய விலையைக் கொடுக்க வேண்டும். தாம் அறிவித்த வார்த்தையின் பொருட்டு எரேமியா துன்புறுத்தப்பட்டார் (எரே 26:1-24; காண். மத் 23:30). திருமுழுக்கு யோவானும் தம் இறைவாக்குப் பணியின் விலையாகத் தம் உயிரைக் கொடுத்தார் (மாற் 6:17-29). இயேசுவும் இறையாட்சி பற்றிய நற்செய்தி அறிவிப்புக்கு ஏற்ற விலையைக்

கொடுக்கவேண்டும். மெசியா பாடுபட்டு, இறந்து, உயிர்க்க வேண்டும் என்பதை முன்னறிவித்தார் (மாற் 8:31; 9:30-31; 10:32-34). இயேசுவின் இறப்பும் உயிர்ப்பும் கூட அவருடைய திருத்தூதுரை என்று சொன்னால் மிகையாகாது. இயேசு உரக்கக் கத்தி உயிர் துறந்ததைக் கண்ட நூற்றுவர் தலைவன், "இம் மனிதர் உண்மையாகவே இறைமகன்" என்று இயேசுவின் மீது இருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தினார் (மாற் 15:37-39). இயேசுவின் உயிர்ப்பே ஒரு திருத்தூதுரை; உயிர்ப்பும் திருத்தூதும் இரண்டு தருணங்கள் அல்ல. இரண்டும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை என்று லெக்ரான் கூறுவது சிந்திக்கத்தக்கது.[29] மாற்கு நற்செய்தியின் முடிவுரை (16:9-20) பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்பதில் முரண்பாடு கிடையாது. ஏனெனில் மாற்கு நற்செய்தி திடீரென முடிகிறது (மாற் 16:8). 'திறந்த கல்லறையில் வெண் தொங்கல் ஆடை அணிந்த இளைஞரைக் கண்ட பெண்கள் கல்லறையை விட்டு ஓட்டம் பிடித்தார்கள்; நடுக்கமுற்று மெய்மறந்து யாரிடமும் ஒன்றும் கூறவில்லை; அச்சம் கொண்டிருந்தார்கள்' என்பதோடு நற்செய்தி முடிவடைகிறது. உயிர்த்த இயேசு சீடர்களுக்கு முன் கலிலேயாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்; அங்கே அவர்கள் அவரைச் சந்திப்பார்கள் என்ற செய்தியைக் கூட அவர்கள் சொல்லவில்லை. பயத்தினால் அதையும் செய்யத் தவறிவிட்டார்கள். "நாசரேத்தூர் இயேசு உயிருடன் எழுப்பப்பட்டார்" என்ற செய்தியை வானதூதர் பெண்களுக்கு அறிவித்தார் (மாற் 16:6). இங்கு உயிர்த்தெழுதலே இயேசுவின் தூதுரையாக அமைகிறது. மனித பலவீனத்தில் வார்த்தையின் வல்லமை குறைவதில்லை.[30] உயிர்ப்பில் இயேசு ஆண்டவராகவும், மெசியாவாகவும் (தி.பா 2:34), வல்லமையுள்ள இறைமகனாகவும் (உரோ 1:4) ஆக்கப்பட்டார். எல்லா அதிகாரமும் பெற்றிருக்கிறார் (மத் 28:16); பகைவரை அடிபணிய வைக்கும் வரை ஆட்சி செய்வார் (1 கொரி 15:24-25). யூதரையும் பிற இனத்தாரையும் பிரித்த சுவரைத் தகர்த்தெறிந்தார் (எபே 2:14-17).

பழைய ஏற்பாட்டுப் பின்னணியில் நேர்மையாளரின் உயிர்ப்பு அவரைப் பற்றிய உலகின் தீயோரின் தீர்ப்பு தவறானது என்பதையே எடுத்துரைக்கிறது (சாஞா 1:3). இயேசுவைப் பற்றி உலகமும் யூதத்தலைவர்களும் கொண்டிருந்த கருத்து அவரைப் பற்றிய அவர்களுடைய கணிப்பு அனைத்தையும் தவறு என்பதை இயேசுவின் உயிர்ப்பு பறைசாற்றுகிறது. யோவான் இக்கருத்தை





அழுத்தம் கொடுத்துச் சொல்கிறார்: உலகின் தீர்ப்பு தவறானது என்று தூய ஆவியானவர் சாட்சி கூறுகிறார் (யோவா 16:8-11).[31] இயேசு அறிவித்த இறையாட்சி இறைத்திட்டத்தின் செயல்; அவருடைய மதிப்பீடுகள், கொள்கைகள், போதனைகள் அனைத்தும் மீட்புத்திட்டத்தின் நிறைவு என்பதை உயிர்ப்பு பறைசாற்றுகிறது. தன் ஆள்தன்மையிலேயே இயேசு நற்செய்தியைக் கொண்டிருக்கிறார். உயிர்த்த ஆண்டவரே மாபெரும் நற்செய்தி.[32]

## படைபிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்

தம் தூதுரைப்பணி தமக்குப்பின்னும் தொடரவேண்டும் என்று இயேசு விரும்பினார். எனவேதான் சீடர்களை அழைத்தார் (மாற் 1:16-20; 2:13-14). அவர்களில் பன்னிருவரைத் தேர்ந்து கொள்கிறார் (மாற் 3:13-19). இறையாட்சி பற்றிய மறையுண்மைகளை அவர்களுக்கு விளக்கிச் சொல்லுகிறார் (மாற் 4:11). தம் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு பற்றியும் சீடத்துவ வாழ்வு பற்றியும் போதித்து அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறார் (மாற் 8:31-38; 9:30-37; 10:32-45). இருப்பினும், அவர்களால் அவர் சொன்னதைப் புரிந்து கொள்ள முடியவில்லை (மாற் 8:14-21; 10:32; 6:11,13-14). சிலுவை பெரும் இடறலாகவே இருந்தது (மாற் 8:32; 9:33-34; 10:35-41). இருப்பினும், நற்செய்தி பரவுவதற்கு அவர்களது பலவீனம் தடையாயிருக்க முடியாது. உயிர்த்த இயேசு அப்பொறுப்பை அவர்களிடமே ஒப்படைக்கிறார். இயேசு அவர்களுக்குக் கொடுத்த கட்டளையை நற்செய்தியாளர்கள் வெவ்வேறு விதமாகப் பதிவு செய்கிறார்கள். "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15); "எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்... திருமுழுக்குக் கொடுங்கள்... கற்பியுங்கள்" (மத் 28:19-20); 'பாவ மன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்' என எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும்... பறைசாற்றப்பட வேண்டும், இவற்றுக்கு நீங்கள் சாட்சிகள்" (லூக் 24:46-48; திப 1:8); "எவருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும்" (யோவா 20:22-23) என்று சொல்கின்றார்.

திருத்தூதர்களின் தூதுரைப்பணி உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும் என்று உயிர்த்த இயேசு அவர்களுக்கு அறிவுறுத்துகிறார். இது இயேசுவின் பணிக்காலத்தில் அவர் கையாண்ட அணுகுமுறைக்கு

முரண்பட்டதாக உள்ளது. ‘மற்ற ஊர்களிலும் இறையாட்சி பற்றிய நற்செய்தியை அறிவிக்கவே அனுப்பப்பட்டிருக்கிறேன்’ (மாற் 1:38) என்று கூறிய இயேசு கானானியப் பெண்ணிடம் “பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல” என்கிறார் (மாற் 7:27). மத்தேயு நற்செய்தியில் இதே பகுதியில் இஸ்ரயேலில் தவறிப்போன மக்களுக்காகத் தாம் அனுப்பப்பட்டதாகக் கூறுவது வியப்பைத் தருகிறது (மத் 15:24). ‘பிற இனத்தார் வாழும் எப்பகுதிக்கும், சமாரியாவின் நகர்களிலும் நுழைய வேண்டாம்; வழி தவறிப்போன இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள்’ என்று சீடர்களுக்கு அறிவுறுத்தினார் (மத் 10:5-6). தொடக்ககாலத் திருஅவையில் இருந்த யூதக் கிறிஸ்தவர்களின் மனநிலையை எதிரொலிப்பதாக இது இருந்தாலும், லெக்ரான் கூறுவது போன்று இயேசுவின் அணுகுமுறையும் அப்படித்தான் இருந்திருக்கிறது. தம்முடைய பணியைக் கலிலேயாக் கடலைச் சுற்றியுள்ள அந்த நகர்களோடு நிறுத்திக் கொண்டார். அவ்வப்போது தீர், சீதோன், தெக்கபோலி போன்ற நாடுகளுக்குச் சென்றது தூதுரைப்பதற்காக அல்ல; மாறாக, மறைந்து வாழ்வதற்கே.[33] தம்மைத் தேடி வந்த பிற இனத்தவர்க்கு நன்மை செய்தார். ஏன் அவர்களுடைய நம்பிக்கையையும் பாராட்டினார் (மத் 15:28; 8:10). ஆனால், பிற இனத்தாருக்கு இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க அவராக எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ‘உலகனைத்துக்கும் நற்செய்தி அறிவிக்கப்படும்’ என்ற கருத்து மாற் 13:10, 14:9ல் காணப்பட்டாலும் மற்ற ஒத்தமைவு நற்செய்திகளில் காணப்படவில்லை. எனவே இது மாற்குவின் திருத்தம் என்றும் கருதப்பட வாய்ப்புண்டு.[34] ‘தவறிப்போன இஸ்ரயேல் மக்களுக்காகவே அனுப்பப்பட்டேன்’ என்ற இயேசுவின் அணுகுமுறை பழைய ஏற்பாட்டுச் சிந்தனையைப் பிரதிபலிக்கிறது. இறுதிக்காலத்தில் தீர்ப்புக்காக உலக நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்படும் (ஆமோ 8:2; எசா 27:12; எரே 51:2,33; யோவேல் 4:13-14; காண் மத் 9:37-38; 12:41-42; லூக் 11:31-32; 10:12,14; மத் 25:32; 10:15; 11:24). விருந்துக்காக எல்லா மக்களும் ஒன்று சேர்க்கப்படுவர் (எசா 25:6-9; மத் 8:11-12; லூக் 13:22-30). இச்சிந்தனையைப் பின்பற்றி இயேசுவும் தம் பணியை வழிதவறிப்போன இஸ்ரயேல் மக்களோடு நிறுத்திக் கொண்டார். பிறரை மதம் மாறச் செய்து யூத சமயத்திற்குக் கொண்டுவருவதற்கு முன்னால் யூதரே மனமாற்றம் அடைய வேண்டும் என்று இயேசு கோரிக்கை விடுத்தார்.[35]





இறுதிக்காலத்தில் மக்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பது இயேசுவின் பணியில் ஆரம்பமாகிறது. எல்லார்க்கும் மீட்பின் நற்செய்தி என்பது இறுதிக்கால நிகழ்வு.[36] எனவே, உலக மக்கள் எல்லார்க்கும் நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்ற கட்டளையை உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்குக் கொடுக்கிறார்.

## முடிவுரை

இயேசுவின் தூதுரைப்பணி, அவருடைய இறையாட்சி பற்றிய நற்செய்தி முழக்கம், அவரின் வல்ல செயல்கள், பாடுகள், இறப்பு, உயிர்ப்பு அனைத்துமே அவர் யார் என்பதை வெளிப்படுத்துகின்றன. ஓர் எழுத்தாளர் தமது படைப்பில் தம்மைப் பற்றிய விவரத்தையும் அறிந்தோ அறியாமலோ பதிவு செய்கின்றார். அது போன்று இயேசுவின் தூதுரைப்பணியில் அவர் யார் என்று அறிகின்றோம். இயேசுவைப் பிடிக்காத யூத சமுதாயத் தலைவர்கள் பெயல்செபூலைக் கொண்டு அவர் பேய்களை ஓட்டுவதாகச் சொன்னார்கள் (மாற் 3:22; மத் 12:24; லூக் 11:15). இயேசுவின் இறப்பிற்குப் பின் தலைமைக் குருக்களும் பரிசேயர்களும் இயேசுவின் கல்லறைக்கு மூன்று நாள் காவலுக்குக் கட்டளையிட வேண்டும் என்று பிலாத்துவிடம் கேட்பதாகவும் இயேசுவை அவர்கள் ‘எத்தன்’ என்றழைத்ததாகவும் மத்தேயு பதிவு செய்கிறார்; ‘அந்த எத்தன் மூன்று நாளுக்குப் பின்பு நான் உயிருடன் எழுப்பப்படுவேன் என்று சொன்னது எங்களுக்கு நினைவிலிருக்கிறது’ (மத் 27:63).

இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ட்ரிபோ என்ற யூதன், இயேசுவை ‘மந்திரவாதி, மாயவித்தைக்காரன், மக்களை ஏமாற்றுபவன்’ என்று கருதினான் (*Dialogue*, 69.7).[37] நாசரேத்து மக்கள் இயேசுவின் குடும்பப் பின்னணியை வைத்து அவரைத் தச்சர் / தச்சரின் மகன் என்று கண்டார்கள் (மாற் 6:3; மத் 13:55). தீய ஆவிகள் அவரை ‘கடவுளுக்கு அர்ப்பணமானவர்,’ ‘உன்னத கடவுளின் மகன்’ என்று கண்டு கொண்டன (மாற் 1:24; 5:7). மக்கள் கூட்டம் அவரை அதிகாரத்தோடு போதிக்கிறார் (மாற் 1:27), திருமுழுக்கு யோவான் உயிருடன் எழுப்பப்பட்டிருக்கிறார் அல்லது எலியா அல்லது ஏதோ ஓர் இறைவாக்கினர் மீண்டும் வந்திருக்கிறார் என்று நம்பியது (மாற் 6:14-16; 8:28; மத் 21:46; லூக் 7:16). ‘காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே, இவர் யாரோ’ என்று சீடர்கள் வியந்தனர் (மாற் 4:41). பேதுரு இயேசுவே ‘மெசியா’

என்று அறிக்கையிட்டார் (மாற் 8:29; மத் 16:16; லூக் 9:20). தொடக்கத் திருஅவையில் சீடர்கள் இயேசுவின் உயிர்ப்பின் ஒளியில் இயேசுவை வாக்களிக்கப்பட்ட மெசியா என்று அறிக்கையிட்டனர் (திப 2:36; 3:18; 9:22; 10:36; உரோ 1:4; 10:8-9; 14:9). சட்டமும் இறைவாக்குகளும் அவரில் நிறைவேறியதைக் கண்டார்கள் (லூக் 24:25-27; காண் யோவா 1:45). மீண்டும் வர இருக்கின்ற நடுவராகவும் அறிக்கையிட்டார்கள் (உரோ 14:10; 2கொரி 5:10; 1 கொரி 4:5; 1தெச 1:9-10).

இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றியதால் அவரைச் சமூக சேவகராகவும் புரட்சியாளராகவும் சமூகப்போராளியாகவும் உண்மைக்கும் நீதிக்கும் குரல் கொடுப்பவராகவும் பார்க்கிறோம். அவரது பணியிலே இத்தனை பரிணாமங்களும் காணப்பட்டாலும், இவற்றுள் இயேசுவை அடக்கி விடமுடியாது. இதையெல்லாம் கடந்தவராக இயேசு இருக்கிறார். ஏனெனில் தந்தையே தம்மை அனுப்பியதாகவும் (மாற் 1:38; 9:37; மத் 10:40; லூக் 9:48; மத் 15:24; 21:37; யோவா 5:23; 8:42; 13:3; 3:16; 17:8) அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதே தமக்கு உணவு என்றும் கூறுகின்றார் (யோவா 4:34; காண் 8:29; 9:4; 10:37). இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியை அறிவித்த இயேசுவே நற்செய்தியாக அறிவிக்கப்படுகிறார் (மாற் 1:1; 1 கொரி 1:23).

நாசரேத்தூர் இயேசுவின் பணி திருமுழுக்கு யோவானின் பணியோடு தொடங்கினாலும் அதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. தம்முடைய வல்லமையுள்ள வார்த்தையாலும் செயல்களாலும் இறையாட்சியை நற்செய்தியாக முழங்கினார். அதுமட்டுமின்றி, அவருடைய பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பே நற்செய்தி முழக்கமாக மாறுகின்றன. இறையாட்சி பற்றிய நற்செய்தியைப் போதித்தவரே நற்செய்தியாகப் பறைசாற்றப்படுகிறார்.

### அடிக்குறிப்புகள்

1. J. Jeremias, *Théologie du Nouveau Testament*, (Paris: Cerf, 1975), 93. First published in German in 1971; According to L. Legrand, the temptations of Jesus were messianic in character (unpublished notes); காண். பவுல் லியோன், *யார் இந்த இயேசு?* (திண்டுக்கல்: வைகறைப் பதிப்பகம், 1995), 216.





2. J. Jeremias, *Théologie du Nouveau Testament*, 124; J. P. Meier, *A Marginal Jew*, Vol. 2 (New Haven and London: Yale University Press), 1994, 237.
3. L. Legrand et als., *Good News and Witness*, (Bangalore: TPI, 1973), 27; L. Legrand, *Mission in the Bible*, (Bangalore: TPI, 2016), 65.
4. J. P. Meier, *A Margianl Jew*, 238.
5. J. Weiss and G. Dalman quoted by N. Perrin, *The Kingdom of God in the Teaching of Jesus* (London: SCM Press, 1963), 17, 24; L. Legrand et als., *Good News and Witness*, 14; A. Nolan, *Jesus Before Christianity*, (Mumbai: St Paul's, 1975), 75-82; S. Savarimuthu, *A Community in Search of its Identity*, (New Delhi: ISPCK, 2007), 103-109; பவுல் லியோன், *யார் இந்த இயேசு?*, 72-76.
6. L. Legrand et als., *Good News and Witness*, 18-19, 22.
7. L. Legrand et als., *Good News and Witness*, 24.
8. L. Legrand et als., *Good News and Witness*, 12
9. J. Pathrapankal, "The Nazareth Manifesto in the Evangelizing Mission of Jesus", *ITS*, 47 (2006), 3-4, 294.
10. C. H. Dodd, *Parables of the Kingdom* (London : Fontana, 1961) 36-37.
11. W. G. Kümmel, *Promise and Fulfillment* SBT 23 (London) 23-25.
12. N. Perrin, *The Kingdom of God in the Teaching of Jesus*, 185; L. Legrand et als., *Good News and Witness*, 19.
13. W. Grossouw cited by Raj Irudaya, "Mission of Jesus in John and its Relevance today", *Dhyana: Mission Spirituality* 5, (2006), 42.
14. Benedict XVI, *Jesus of Nazareth* (London, New Delhi, New York Sydney: Bloomsbury, 2007) 86-90.
15. D. C. Allison, *The New Moses*, 283; காண். S. Savarimuthu, *A Community in Search of its Identity*, 247.
16. L. Legrand et als., *Good News and Witness*, 28.
17. J. Jeremias, *Sermon on the Mount* (Philadelphia: Facet Book, 1963) 34; L. Legrand et als., *Good News and Witness*, 28.
18. L. Legrand et als., *Good News and Witness*, 29.
19. C. H. Dodd, *Parables of the Kingdom* (London : Fontana, 1961).
20. G. Bornkamm, "End-Expectation and Church in Matthew", in G. Bornkamm et als., *Tradition and Interpretation in Matthew*, NTL, (Philadelphia: Westminister Press, 1963), 51; S. Savarimuthu, *A Community in Search of its Identity*, 154.
21. S. Savarimuthu, "Concern for the Lo(a)st and the Least Ones in the First Gospel", *Out of His Treasure* (Bangalore: ATC, 2010) 188-191.
22. J. Jeremias, *Rediscovering the Parable* (New York: Charles Scribner's, 1966) 35-36.

23. G. Keerankeri, "The Mighty Deeds of Jesus" *Vidyajoti* 69 (2005) 299.
24. எஸ். ஜே. அந்தோணி சாமி, *யார் இந்த இயேசு கிறிஸ்து?* (சென்னை: சால்ட் மீடியா, 2014) 93.
25. R. Bultmann's views as represented by D. Senior, "Jesus", *NJBC*, (Bangalore: TPI, 2005) 1370-1371.
26. L. Legrand, unpublished notes.
27. J. P. Meier, *A Marginal Jew,* 619.
28. L. Legrand et als., *Good News and Witness*, 31-32.
29. L. Legrand, *Mission in the Bible*, 51.
30. L. Legrand, *Mission in the Bible*, 76-77.
31. L. Legrand, *Mission in the Bible*, 54-55.
32. L. Legrand, *Mission in the Bible*, 59-60; Pope Francis, *Gaudete et Exsultate*, Nos. 19, 27.
33. L. Legrand, *Mission in the Bible*, 50.
34. L. Legrand, *Mission in the Bible*, 53-55.
35. பவுல் லியோன், *யார் இந்த இயேசு?* ,114.
36. J. Jeremias, *Jesus' Promise to the Nations* (SBT 24), (London, 1958), 43-46; L. Legrand et als., *Good News and Witness*, 39; L. Legrand, *Mission in the Bible*, 58, 61.
37. G. N. Stanton, *Jesus and Gospel*, Cambridge: University Press, 2004, 129-134.



# 5. இயேசுவின் மறைத்தூதுப்பணியாளர்கள்

## சபை உரையாளர்களா? சமூகப் போராளிகளா?

*அருள்பணி. முனைவர் செ. மைக்கில் ராஜ்*
*புனித பவுல் குருத்துவக் கல்லூரி, திருச்சி*

'மறைத்தூதுப்பணி' என்னும் வார்த்தையைத் திருவிவிலியத்தில் பல நிலைகளில் நாம் கற்றுக்கொள்ள முடிகிறது. விவிலியம் மறைத்தூதுப்பணியின் வரலாற்று நூல் என்று சொன்னால் அது மிகையாகாது. ஒட்டுமொத்தத் திருவிவிலிய வரலாறும் கடவுள் மக்களுக்குச் செய்த படைத்தல், மீட்டல், புதுப்பித்தல் ஆகிய மறைத்தூதுப்பணி நிலைகளைக் குறித்துப் பேசுகிறது என்று சொன்னாலும் அது தகுமே. திருவிவிலியத்தின் மையச் செய்தியாகத் தரப்படுகிற மீட்பு, விடுதலை என்னும் சொற்களையும் மறைத்தூதுப்பணியின் நீட்சிகளாக அல்லது விளக்கங்களாக நாம் எடுத்துக்கொள்ளலாம்.

### ஆய்வுக் கட்டுரையின் மையக் கேள்வி

பழைய ஏற்பாட்டில் மறைத்தூதுப்பணி மக்களை வழி நடத்துவதற்கு, கற்பிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட தலைவர்களின் பணியாக அமைந்திருந்தது. இறைவாக்கினர்களின் பணி பல்வேறு காலங்களில், பல்வேறு சூழல்களில், பலதரப்பட்ட அணுகுமுறைகளோடும் நோக்கங்களோடும் செய்யப்பட்டிருந்தாலும், 'மறைத்தூதுப்பணி' என்ற ஒற்றைக் குடைக்குள் நாம் கொண்டுவர முடியும்.

இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணிக் குறித்து நற்செய்தி நூல்கள் நமக்குச் சான்று பகர்கின்றன. இறைவார்த்தையின் அடிப்படையிலும் இயேசுவின் பார்வையிலும் நற்செய்தித் தூதுரைப்பணியைத் தொடர்வதற்காக அழைக்கப்படுகின்றவர்கள் தூதர்களா? அல்லது தொண்டர்களா? என்பதை நம்

ஆய்வுக் கட்டுரையின் முதல் கேள்வியாக எழுப்புகிறோம். இயேசுவின் பணியாளர்களாக, சீடர்களாக, திருத்தூதர்களாக உயர்த்தப்பட்டவர்கள் வெறும் தூதுரைப்பவர்களாக அனுப்பப்பட்டார்களா? அல்லது சமூக மாற்றத்திற்கான போராளிகளாக அனுப்பப்பட்டார்களா? என்பதை நாம் இங்கே ஆய்வு செய்ய விரும்புகிறோம்.

இயேசுவின் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டு, பணிக்கு அனுப்பப்பட்டவர்களை, 'தூதர்கள்' மற்றும் 'தொண்டர்கள்' என எப்படிப் பிரிப்பது? 'தூதர்கள்' என்றாலும், 'தொண்டர்கள்' என்றாலும், இவ்வார்த்தைகள் காட்டும் பொருள் ஒன்றல்லவா? தொடக்க காலத் திருஅவையின் புரிதலில் தூதர்கள் யார்? தொண்டர்கள் யார்? இன்று, அவர்களைத் திருஅவையின் பணிச் சூழலில் தூதர்களாக, தொண்டர்களாக நாம் எப்படிப் புரிந்து கொள்வது? இவ்வாறு, பல கேள்விகளை எழுப்பி அவை வெளிப்படுத்துகிற உண்மைகளை, விவிலிய, இறையியல் நிலைப்பாடுகளைத் தெரிந்து கொள்வது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைந்திருக்கிறது.

## 1. இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணியின் பரிமாணங்கள்

### 1.1. பறைசாற்றுதல்

மத் 4:17இல் இயேசுவின் பணி பறைசாற்றுகிற பணியாகக் கலிலேயாவில் தொடங்கியது. 'பறைசாற்றுதல்' என்றால் 'வார்த்தைகளை அறிவிப்பது' என்பது பொருள். அவ்வார்த்தைகள் மீட்புக்கு, விடுதலைக்கு, நல்வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்லக்கூடியவை. அவை நம்மை நெறிப்படுத்துபவை, நம் தீய வழிகளை விட்டுவிட்டு நல்வழியில் நடக்க நம்மைத் தூண்டுபவை. மத்தேயு 4:17இல் 'பறைசாற்றத் தொடங்கினார்' என்னும் பகுதி 4:23இல், ''கலிலேயப் பகுதி முழுவதும் சுற்றி வந்தார், அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் கற்பித்தார்'' என்றும் தொடர்கிறது. தம் கற்பிக்கும் பணியைத் தொடரத் தம் சீடர்களை அனுப்பும்போது, ''வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள். அப்படிச் செல்லும்போது விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது எனப் பறைசாற்றுங்கள்'' (10:6) என்று இயேசு கொடுக்கக்கூடிய பணி பறைசாற்றுகிற பணி. பறைசாற்றக்கூடியவர்களாக, அறிவிப்பாளர்களாக, தூதுரைப்பாளர்களாக,





இயேசுவின் தூதர்களாக அவர்கள் அனுப்பப்படுகிறார்கள். திருத்தூதர்களின் பறைசாற்றுதல் இறைவார்த்தையை அறிவிக்கிற பணி – வாழ்வுக்கு வழிகாட்டுகிற வார்த்தைகளை எடுத்துச் சொல்கின்ற பணி. ஆனால் இது வெறுமையான வெற்று முழக்கம் அல்ல. சமூக மாற்றத்திற்குத் தரப்படும் வீர முழக்கம்.

இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி என்பது ஒரு குறுகிய நிலையில் அறிவிப்புப்பணி என மட்டும் புரிந்துக்கொள்ளப்படக்கூடாது. இது வார்த்தையை அறிவிக்கக்கூடிய பணி மட்டுமல்ல, நன்மைச் செயல்பாடுகள் நிறைந்த பணி. சமூகத்தின் மாற்றத்திற்காக உழைக்கக்கூடிய பணி. நலமான வாழ்வை ஏற்படுத்துகின்ற பணி. ஏழை எளியோரையும், நோயுற்றவரையும், புதுவாழ்வுக்காகக் காத்திருப்பவர்களையும் கைதூக்கி எழுப்பி விடுகிற பணி. கலிலேயப் பகுதியில் இயேசுவின் பணித் தொடக்கமே சமூகத்தில் வார்த்தையை அறிவிக்கக்கூடிய பணியாக மட்டுமல்லாமல், எல்லைகளையும், இனங்களையும் கடந்து அனைவரையும் அரவணைக்கும் பணியாகவும் இருக்கிறது. கலிலேயாவிலிருந்து மட்டுமல்லாமல், யூதேயா, எருசலேம், யோர்தானுக்கு அக்கரைப் பகுதி மற்றும் தெக்கப்போலி பகுதியிலிருந்தும் இயேசுவைப் பின்பற்றினார்கள். அவரின் பணி ஒன்றிப்புக்கான, சமத்துவத்திற்கான பணி. திருஅவையும் இன்று அமைதிக்கான, ஒன்றிப்புக்கான பணிகளைத் தொடர வேண்டும் என்ற சிந்தனை இதிலிருந்தே எழும்புகிறது.

### 1.2. கற்பித்தலும் இடித்துரைத்தலும்

தூதுரைப்பில் இரண்டு முக்கியக் காரணிகள் உள்ளடங்கி இருக்கின்றன. ஒன்று எடுத்துச் சொல்லக்கூடிய பணி. வறியோருக்கும், அழுவோருக்கும், ஆதரவற்றோருக்கும் வாழ்வு தருகின்ற வார்த்தைகளை எடுத்துச் சொல்கின்ற பணி. விடுதலை தரக்கூடிய வார்த்தைகளை அறிவிக்கக்கூடிய பணி. அடுத்து, இடித்துரைத்தல் பணியும் தூதுரைத்தலில் முக்கியம் என்பதை இயேசு முன்னிறுத்துகின்றார். இயேசு தம் சீடர்களை உருவாக்கும்போதே பேதுரு இடித்துரைக்கப்பட்டார். அரியணையின் வலது மற்றும் இடதுபுறத்தில் இடம் வேண்டுமென்று சொன்ன யோவானையும் யாக்கோபையும் மற்ற பதின்மரையும் இயேசு இடித்துரைத்தார். யூதாசு இஸ்காரியோத்துவை இயேசு மிகக் கடினமாய் இடித்துரைத்தார். இவ்வாறாக, தம் குழுவில் உள்ள சீடர்களை

இடித்துரைத்து அவர்களை உருவாக்கினார். அதிகார வர்க்கத்தில், பிறரை அடக்கி ஆள்வதில், பிறரை அடிமைப்படுத்துவதில் அதிகாரம் செலுத்திய வர்க்கத்தினரை இயேசு இடித்துரைக்கிறார். சமூகத்தில் யாரெல்லாம் ஏழைகளை, எளியவர்களைக் கண்டுகொள்ளவில்லையோ அவர்களை இயேசு இடித்துரைக்கிறார். அதிகாரத்திலிருந்தாலும் ஆட்சியில் இருந்தாலும் தங்களை மட்டும் வளர்த்துக் கொண்டு பிறரின் கவலைகளை, தேவைகளை யார் புரிந்து கொள்ளவில்லையோ, அவர்களை இயேசு இடித்துரைக்கிறார். சமயத்தையும் அரசியலையும் அதிகாரத்தையும் கையில் வைத்துக்கொண்டு யார் பிறரைத் தங்களின் தேவைக்காகப் பயன்படுத்தி வளர்ந்தார்களோ அவர்கள் எல்லாம் இயேசுவின் இடித்துரைப்புக்கு ஆளானார்கள். இந்த எடுத்துரைப்பும் இடித்துரைப்பும் சமூக மாற்றத்திற்கான அடையாளங்களாக மாறின. அதையே தம் தூதர்களும் தொடர வேண்டுமென இயேசு கட்டளையிட்டார்.

மத்தேயு நற்செய்தியில், ''நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்... கற்பியுங்கள்'' *(28:19)* என்று எழுதப்பட்டிருக்கிறது. ''கற்பியுங்கள்'' என்ற கட்டளை இயேசு கொடுக்கின்ற பணி. அது திருத்தூதர்களின் பணி. இயேசுவின் பணியும், வாழ்வும் கற்பிப்பதில் இருந்தது. கற்பித்தல் என்பது வாழ்வாலும் பணியாலும் உறுதி பெற்றது. ''கற்பியுங்கள்'' எனப்படும் வார்த்தை சீடர்களைப் பணியாளர்களாக, ஊழியர்களாக, சாட்சிகளாக மாற வலியுறுத்துகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் சொல்வதுபோல், ''*நற்செய்தி அறிவிப்புப்பணி என்பது இயேசுவின் மறைபரப்புப் பணிக்கான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலில் அடங்கியுள்ளது; ஆண்டவரின் நற்செய்தியை அறிவிக்கவும், அதன் வழியாக அவர் மீது இறை நம்பிக்கை கொண்டு உலகின் எல்லா மூலைகளுக்கும் பரவவும், தமது சீடர்களை அனுப்புகிறார் என்பதைக் காண்கிறோம்*''.[1] எனவே, கற்பித்தல் நம்பிக்கையாளர்களை உருவாக்க வேண்டும். திருத்தூதர்களின் பணி புதிய நம்பிக்கைச் சமூகத்தை உண்டாக்க வேண்டும். ஆகவே, இதற்கு வார்த்தைகள் மட்டும் வெறுமையாக அறிவிக்கப்படுவதை விட, வாழ்ந்து காட்டுதல் அவசியமாகிறது.

### 1.3. செயல்வழிக் கற்பித்தல்

கற்பித்தல் என்பது இயேசுவின் பார்வையில் செயல்பாடுகளின் வழியாய்க் கற்பித்தல். வெறுமனே ஏடுகளை மட்டும் வைத்துக்கொண்டு





கற்பிப்பது இயேசுவின் கற்பித்தல் முறையல்ல. இயேசு சீடர்களுக்கும் மக்கள் கூட்டத்திற்கும் தம்மிடம் வந்து கேள்விகள் கேட்டோருக்கும், தெளிவுகள் பெற வந்தோருக்கும் கற்பித்தது, ஏடுகளை வைத்துக் கொண்டு அல்ல; செயல்பாடுகளின் வழியாக, அதிலும் குறிப்பாக, மனிதம் போற்றப்பட, மனிதம் உயர்த்தப்பட, மனித சமத்துவம் நிலைநாட்டப்பட, சமூகத்தில் மக்கள் மத்தியில் தோழமை உண்மையாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கற்பிக்கின்றார். எனவே, இயேசுவின் ''கற்பியுங்கள்'' எனப்படும் வார்த்தையைக் குறுகியநிலையில் புரிந்துகொள்ளக் கூடாது. ''கற்பியுங்கள்'' என இயேசு சொன்ன வார்த்தைகள் அவர்களை ஆசிரியர்களாக, போதகர்களாக, அறிவிப்பாளர்களாக, மறைத்தூதுவர்களாக மட்டுமல்ல, அவர்களை நற்செய்தியின் ஊழியர்களாக, நற்செய்தியின் பணியாளர்களாக, இயேசுவின் வார்த்தைகளை நிறைவு செய்கிற சாட்சிகளாக உருவாக்கியது. செயல்வழிக் கற்பித்தல் என்பது வாழ்வின் மூலமாய்க் கற்பித்தல். வார்த்தைகளை விட வாழ்வே இங்கே முதன்மை பெறுகிறது.

இறைவார்த்தை ஆற்றல்மிக்கது; புதிதாகப் படைப்பது. அதாவது, அது புதியதோர் இறையாட்சியைக் கட்டுவது மட்டுமல்ல; அதை அடைய அழைப்பும் ஆற்றலும் உந்துதலும் தருவது. அது படைப்பிற்கு, புதிய இறையாட்சி என்ற புதிய இஸ்ரயேல் சமூகத்திற்கு உருக்கொடுக்கிறது. இறையாட்சியின் புதிய உள்ளங்கள், புதிய உறவுகள், சமூக அமைப்புகளாக வாழ்வதும் அவற்றை இன்றைய சமூகத்தில் வளர்த்தெடுப்பதுமே இறைவாக்குத் தூதுரைப்பணி. இயேசுவின் படிப்பினையும் பணியும் இன்று இறையாட்சிக் குழுமங்களை உருவாக்க வேண்டும். அதன்வழி இறையாட்சியைப் படைக்க வேண்டும். அத்தகைய மாற்றுக் கலாச்சார நற்செய்திச் சமூக உருவாக்கமே தூதுரைப்பணியின் நோக்கம். அதனை வாழ்வின் வழியாய் நிறைவாக்குவதே உண்மையான மறைத்தூதுப்பணி.

### 1.4. அறிவிப்பின் நீட்சியே தொண்டு

'திருத்தூதர்' என்று சொல்கின்றபோது எப்பொழுதுமே நம் புரிதலில் 'வார்த்தையை அல்லது ஒரு செய்தியைக் கொண்டு செல்பவர்' என்றுதான் இருக்கிறது. ஒரு தலைவரின் செய்தியைப் பரிமாறுபவர்கள் செய்யக் கூடியதுதான் தூதுரைப்பணி. வார்த்தையை அறிவிப்பதோடு

தூதுரைப்பாளர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று நற்செய்தி சொல்லவில்லை. அவர்கள் பணியாளர்களாக மட்டுமின்றித் தொண்டர்களாகவும் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். நோயாளர்களைக் குணமாக்கக்கூடிய பணியாகவும், தொழுநோயாளர்களை நலமாக்குகின்ற பணியாகவும், இறந்தோரை உயிர்பெற்றெழச் செய்யக்கூடிய பணியாகவும், பேய்களை ஓட்டுகிற பணியாகவும் இது விளக்கப்படுகிறது. கொடையாகப் பெற்றுக் கொடையாகக் கொடுப்பது என்பது ஏழை, எளியோரின் மேம்பாட்டிற்காக உழைப்பது. ஏழை எளியோரின் நலனை முன்னிலைப்படுத்தி அவர்களது வாழ்வு உயர்வுக்கான திட்டங்களைத் தீட்டுவது ஆகும்.

திருவிவிலியத்தின் பார்வையில், அனுப்பப்படுகிறவர்கள், தங்களைப் பணியாளர் நிலைக்குத் தாழ்த்துவதோடு, தங்களைத் தொண்டர்நிலைக்கு கீழ்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை இயேசு வலியுறுத்துகின்றார். திருத்தூதர்கள் எதை அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களோ அதை வாழ்வாக்கி அந்த அறிவிப்பைத் தொண்டாக மலர்ச்சி பெறச் செய்ய வேண்டும். அதன் மூலமாக சமூக மாற்றத்தை நிகழ்த்த வேண்டும். எனவே, திருத்தூதராக அழைக்கப்படுகின்றவர்களும் அனுப்பப்படுகின்றவர்களும் இயேசுவைப்பற்றி அறிவிப்பதோடு, நன்மைக்கான செயல்பாடுகளை அவர்கள் தொடர்ந்து செய்யவேண்டும் என்பதை இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி உணர்த்துவதாகப் புரிந்து கொள்ளலாம். நன்மைக்கான பணியும் செயல்பாடுகளும் சமூக மாற்றத்திற்கான பணியாக இயேசுவால் செய்யப்பட்டது. சமூக மாற்றத்திற்கான பணி என்பது தூதர்களைச் சமூகப் போராளிகளாக மாற்ற வேண்டும். அறிவிப்பும் தொண்டும் தூதர்களைச் சமூக மாற்றத்திற்கான முன்னோடிகளாக உருவாக்க வேண்டும். இதற்கு அடிப்படையானது வார்த்தை அறிவிப்பு என்பதைவிடச் சாட்சிய அறிவிப்பே.

## 2. மானிட விடுதலைப் பணியே மறைத்தூதுப்பணி: பரிமாணங்கள்

### 2.1. ஏழை எளியோருக்கு நலம்தரும் பணி

இயேசு தம் பணியை ஏழை எளிய மக்களை நோக்கிக் கூர்மைப்படுத்தினார். தொழுகைக்கூடங்களில் தம்மை அடைத்துக் கொள்ளாமல், கலிலேயப் பகுதி முழுவதிலும் சுற்றி வந்தார். இயேசுவின்





நற்செய்தித் தூதுரைப்பணி என்பது தொழுகைக்கூடங்களில் கற்பிக்கிற பணியாக, விண்ணரசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றுகிற பணியாக மட்டும் நின்றுவிடாமல், நோய்களைக் குணமாக்குதல், பேய்களை ஓட்டுதல் என்று வளர்கிறது. அவர் நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார். நோய்களை மட்டுமல்ல, நொடி எனப்படுகிற மானிட வாழ்க்கையின் பல்வேறு அவலங்களைச் சந்தித்து அவற்றிலும் ஒரு மாற்றத்தை முன்னெடுக்கக் கூடிய பணியை இயேசு செய்தார். இப்படியே தூதுரைப்பதற்காக அனுப்பப்படுகிறவர்கள் எப்படிப்பட்ட சமூகப் பணிகளையெல்லாம் ஆற்ற வேண்டுமென்பதை நற்செய்தி நமக்கு எடுத்துச் சொல்கிறது. ''நலம் குன்றியவர்களைக் குணமாக்குங்கள்; இறந்தோரை உயிர்பெற்றெழச் செய்யுங்கள்; தொழுநோயாளர்களை நலமாக்குங்கள்; பேய்களை ஓட்டுங்கள்; கொடையாகப் பெற்றீர்கள்; கொடையாகவே வழங்குங்கள்''. கொடையாகப் பெற்றதைக் கொடையாக வழங்குவது என்பது இயேசுவின் பணியாளர்களுக்குரிய மனநிலையும் அவர்களது செயல்பாடுகளும் ஆகும். இன்று திருஅவையின் நலம் தரும் பணிகள் சமூகத்தின் எளியோருக்கு, ஏழைகளுக்குச் செய்யப்பட வேண்டும். ஆதாயத்தை முன்னிறுத்தாமல் அன்பை, அமைதியை முன்னிறுத்தித் திருஅவையின் பணிகள் செய்யப்பட வேண்டும்.

### 2.2. சமூக மாற்றத்திற்கான பணி

இயேசு வார்த்தையை அறிவிக்கக்கூடிய ஒரு போதகராக ('ரபி') மட்டுமல்ல, சமூக மாற்றத்தைக் கொண்டுவருகிற முன்னோடியாகத் தம்மை முன்னிறுத்துகிறார். சட்டங்களையும் மறைநூலையும் கைகளில் வைத்துக் கொண்டு அவற்றிற்குப் பொருள் கொடுக்கக்கூடிய அறிஞராக இல்லாமல், ஆதாயங்களுக்காக, சுகபோகங்களுக்காக, சட்டங்களைத் திரித்துக்கூறக்கூடிய பரிசேயரைப்போல அல்லாமல், இயேசு ஒரு சமூகப் போராளியாக, அல்லது சமூக மாற்றத்திற்கான கருவியாகத் தம்மை முன்னிறுத்துகிறார். இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி என்பது வார்த்தைகளைச் சொல்லக்கூடிய பணியாக மட்டுமல்லாமல் முடங்கிப்போன, வாழ்க்கையில் நிலைகுலைந்துபோன, கண்டுகொள்ளப்படாமலே ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களைத் தேடிச் செல்கிற சமூக மாற்றத்திற்கான பணியாக இருக்கிறது. ''இறைவனது வார்த்தை அன்றுபோல் இன்றும் ஒலிக்கிறது. அது இஸ்ரயேல் மக்களது வரலாற்றில் விடுதலைக்கான

அழைப்பாகவும் ஆற்றலாகவும் வெளிப்பட்டதுபோல் இன்று நம் வாழ்விலும் ஓங்கி ஒலிக்கிறது. இயேசுவில் மனிதராகிய இறைவனது வாக்கும் இன்று தமது இறப்பு உயிர்ப்பால் உலகுக்கெல்லாம் உறவாகி, இந்த மண்ணுக்கும் இன்றைய மாந்தருக்கும் உயிரளிக்கும் தூய ஆவியாகி நிறைவாழ்வை நோக்கி வழி நடத்துகிறது. இன்று நம் வாழ்விலும் வரலாற்றிலும் ஏழைகள், தாழ்த்தப்பட்டோரின் ஏக்கப் பெருமூச்சுகள், எழுச்சிகளில் இறைவார்த்தை உடனிருப்பதையும் உரக்க ஒலிப்பதையும் விளக்கியுரைக்க உதவும்போதுதான் அது உண்மையான, உயிருள்ள விவிலிய விளக்கம்.''[2] எனவே, நம் மறைத்தூதுப்பணியும் இன்று ஏழைகளின், எளியோரின் சமூக நலனை மேம்படுத்த வேண்டும். திருவிவிலியத் திருப்போதகப் பணியும் இறைவார்த்தை அறிவிப்புச் செய்யப்படும் சமூக மாற்றத்தை முன்னிறுத்த வேண்டும்.

## 2.3. ஏழைகளுக்கு நீதியும் சமத்துவமும் தரும் பணி

லூக்கா நற்செய்தி 4:18இல் ''ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது; ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும்... வந்தேன்'' என்று வாசிக்கின்றோம். நற்செய்தி அறிவிப்பு என்பது என்ன என்பதை இறைவாக்கினர் எசாயாவின் இறைவாக்குப் பின்னணியிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். சமூகத்தில் ஏழைகளின் உயர்வு சார்ந்த மற்றும் சமூக மாற்றம் சார்ந்த பணிகள் இங்கே முன்னிறுத்தப்படுகின்றன. ''தாங்கள் செய்யாத தவறுக்காக, திணிக்கப்பட்ட தண்டனையிலிருந்து மீட்கும் மெசியா வரவேண்டும் என்று மக்கள் தவமிருந்தனர். இந்த நசுக்கப்பட்ட மக்களின் குரலாகச் செயல்படுகின்றார் இயேசு. இறைவாக்கினர் பாணியில் குரலாகச் செயல்படுகின்றார் இயேசு. இறைவாக்கினர் பாணியில் பணியைத் தொடங்கும் இயேசு (லூக் 4:16-22), எல்லா வகை ஏழைகளுக்காகவும் நற்செய்தி அறிவிப்பதே தம் அருள்பொழிவின் நோக்கம் என்று அறிக்கையிடுகின்றார். இயேசு ஏழைகளுக்காக ஆதரவுக் குரல் மட்டும் எழுப்பவில்லை; மாறாக, அவர்களின் வாழ்வைத் தமதாக்கிக் கொண்டார். அவரின் வாழ்வும் போதனையும் ஒத்திருந்தன. குடும்பம், குலத்தொழில், மற்றும் சொத்துகளைத் துறந்த அவரின் வாழ்வே ஏழைகளுக்கு நற்செய்தியாக அமைந்தது.''[3] சிறைப்பட்டோர் விடுதலையடைய, பார்வையற்றோர் பார்வை பெற, ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்ப, ஆண்டவர் அருள்தரும் ஆண்டை முழக்கமிட்டு அறிவிக்க... என்ற நான்கு விதமான பணிகள் இயேசுவை அறிவிப்பாளராக மட்டுமல்ல; ஒரு பணியாளராக, சமூக மாற்றத்தின்





கருவியாக, சமூக நீதிக்கான ஒரு போராளியாக, ஒரு புரட்சியாளராக வெளிப்படுத்தியது. இதுவே இன்று திருஅவையின் பணியாக வெளிப்பட வேண்டும். திருத்தந்தை பிரான்சிஸ் கூற்றுப்படி, ''*மனித இனத்தின் எதிர்காலத்துக்கான மிக முக்கியமான சமூகப் பிரச்சினைகளில் தொடங்கி, மறுபடியும் நற்செய்தியின் தவிர்க்க முடியாத சமூகக் கண்ணோட்டத்தைத் தெளிவுபடுத்தவும், எல்லாக் கிறித்தவர்களும் அதைத் தங்களின் வார்த்தைகள், மனநிலைகள் மற்றும் செயல்கள் மூலம் மெய்ப்பித்துக் காட்டவும், ஊக்கமூட்டவும் முயன்றுள்ளேன்*''.[4] இயேசுவின் மறைத்தூதுப்பணிக்காக அனுப்பப்பட்ட சீடர்கள் சவால்களை எதிர்கொண்டு எதிர்ப்புகளை, புறக்கணிப்புகளை, போராட்டங்களைச் சந்திக்க வேண்டும். சமூக மாற்றத்திற்காகத் தங்களையே அர்ப்பணிக்க இன்று நாம் முன்வர வேண்டும் என்று திருத்தந்தையின் செய்தியை நாம் புரிந்துகொள்ளுதல் பொருத்தமானது.

## 2.4. மறைநூல் வாக்கு இன்று நம்மால் (நம்மில்) நிறைவேறுமா?

'நீங்கள் கேட்ட மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று' என்று இயேசு சொல்வதாக நாசரேத்து செபக்கூட நிகழ்ச்சி விவரிக்கிறது. இயேசுவின் பணி ஏழைகளுக்கான பணியாக நிறைவேறியது. அதுவே ஏழைகளுக்கான நற்செய்தியாகவும் மாறியது. ''எசாயாவின் இறைவாக்கு (6:11-13) உருக்குலைந்த ஏழைகள், கொடிய வறுமைக்குள்ளானோர், அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தோருக்கும் கூறப்படுகிறது. யூபிலி ஆண்டின் சமூகப் பார்வை (லேவி 2:5) லூக்காவால் வலியுறுத்தப்படுகிறது (லூக் 4:10-13). இயேசு இங்கே கூறும் மீட்பு முதலில் சமூக, பொருளாதார, ஒடுக்கப்பட்ட நிலையில் வறியோராக உள்ளோருக்குக் கூறப்படுகிறது. இதுதான் அவர் உண்மையாகவே ஏழைகளுக்குக் கூறும் நற்செய்தி எனக் கொள்ளலாம்''.[5] மறைநூல் வாக்கு எப்படி இன்று நிறைவேறும்? மறைநூல் வாக்கை வாசிப்பதால், அறிவிப்பதால், முழக்கமிடுவதால் மட்டும் அது நிறைவு பெற்று விடாது. அது சாட்சிய வாழ்வால் நிறைவு பெறும். பணியால், தொண்டால் நிறைவு பெறும். இழப்பால், பிறருக்காக வாழ்வதால் நிறைவு பெறும். சமூக நலனை முன்னிலைப்படுத்துவதால், சமூக நீதிக்கான செயல்பாடுகளால் அது நிறைவு பெறும். எனவே, மறைத்தூதுப்பணி இழப்பின் பணியாளர்களாக, தொண்டர்களாக, சமூக நீதிக்கான போராளிகளாக அர்ப்பணிக்க நம்மை முன்னிறுத்த அறைகூவல் விடுக்கிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க

முடியாது. இன்று திருஅவை தன் பணிகளை மறு ஆய்வுக்குட்படுத்த வேண்டும். இறைவாக்கெல்லாம் வாசிப்பாக மட்டுமல்ல, அது ஓர் மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதேபோல நம் பணிகளும் ஒரு சுய ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். மாறுபட்ட சமூகத்தைப் படைக்க நாம் முன்வர வேண்டும். ‘‘இயேசுவின் நற்செய்தியே மாறுபட்ட சிந்தனைச் செயல்பாடுகள் மூலம் (Gospel by dissent) சாத்தியமானதுதானே. புத்துலகம் படைக்க விரும்பும் புதிய தலைவர், மாற்றுப் பண்பாட்டின் மாந்த நேய விழுமியங்களை முதலில் தாமே வாழவேண்டும். பின்பு மக்கள் முன் வைக்கவேண்டும்.’’[6] சமூகத்தின் பொதுநலனுக்கு ஏற்ற நற்செய்தியின் மதிப்பீடுகள் முன் வைக்கக்கூடிய பணிகள், ஏழை எளியவர் நலனுக்கான பணிகள் இன்று முன்னுரிமை பெறுகின்றனவா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; செயலாக்க முற்பட வேண்டும்.

### 2.5. தீமைகளை எதிர்க்க, நீதியான சமூகம் படைக்க...

லூக்கா நற்செய்தி 9:1இல் ‘‘இயேசு பன்னிருவரையும் ஒன்றாக வரவழைத்து பேய்களையெல்லாம் அடக்கவும் பிணிகளைப் போக்கவும் வல்லமையும் அதிகாரமும் அவர்களுக்குக் கொடுத்தார்’’ என்று வாசிக்கின்றோம். பன்னிருவருக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரம் பேய்களை அடக்க, பிணிகளைப் போக்க என்று தொடங்குகிறது. இரண்டாவது, பறைசாற்றவும், உடல் நலம் குன்றியோரின் பிணி தீர்க்கவும் அவர்களை அனுப்பினார் என்று சொல்கிறது. லூக்காவின் பார்வையில் இயேசு அவர்களை அடிப்படையில் பணிக்காகத் தெரிந்து கொள்கிறார். பேய்களை, தீமைகளை எதிர்த்து நிற்கக் கூடிய பணி தம் சீடர்களுக்கு, அவர் கொடுத்த முக்கியமான பணி. இறைவார்த்தையை அறிவிக்கக்கூடிய தூதுரைப்பாளர்களாக மட்டுமல்ல, சமூகத் தீமைகளை எதிர்ப்பது, சமூகத்தில் நலமான மாற்றங்களைக் கொண்டு வருவது, சமூகத்தில் அநீதிகளை எதிர்த்து, அக்கிரமங்களை எதிர்த்து, நியாயமான வாழ்வை, அன்றாடச் சூழலில் ஏற்படுத்துவது சீடர்களின் முக்கியப் பணியாக, முதன்மைப் பணியாக வலியுறுத்தப்படுகிறது. அதன் அடிப்படையில் எழக்கூடிய ஒரு புதிய சமூகம் பற்றி அறிவிப்பதுதான் நற்செய்தி அறிவிப்பு என்பதாகவும் விளக்கப்படுகிறது. இன்று நம் பணிகளும் ஏழைகளின் உயர்வுக்கான அர்ப்பணச் செயல்பாடுகளும் அறிவிப்பாய் மலர வேண்டும். அர்ப்பணமே அறிவிப்பாக திருஅவை முழுவதும் செய்யப்பட வேண்டும்.





## 3. தொண்டு செய்வதே நற்செய்திப்பணி: பரிமாணங்கள்

### 3.1. தொண்டராக மாறுவதே மறைத்தூதுப்பணி

இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி என்பது இயேசுவின் முப்பெரும் பணிகளாகிய போதிக்கும் பணி, புனிதப்படுத்தும் (நலமாக்கும்) பணி, வழிகாட்டும் பணி ஆகியவையே. நற்செய்தித் தூதுரைப்பணி எனப்படும் ஒரே வார்த்தையில் முப்பெரும் பணிகளை உள்ளடக்கினாலும், இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணிக்குத் தங்களை ஈடுபடுத்தக்கூடியவர்கள், அர்ப்பணிக்கக்கூடியவர்கள் தொண்டர்களாக, பணியாளர்களாக, சமூகப் போராளிகளாகத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டுமென்பதை இயேசு மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றார். இயேசுவின் விடுதலைப் பணிகளைத் தொடரும் தொண்டர்களாக நாம் பணியாற்றுவது அவசியம்.

இயேசுவின் சிந்தனைகளையும் இயேசுவின் படிப்பினைகளையும் நாம் கூர்ந்து நோக்குகின்றபோது, அதிகாரத்தைக் கொண்டு போதிக்கக்கூடிய அறிவிப்பாளர்களாகவோ அல்லது அதிகாரத்தையும் அடக்குமுறையையும் கையாண்டு தங்களின் கருத்துகளைத் திணிப்பவர்களாகவோ சீடர்கள் இருக்கக்கூடாது என்பது தெளிவு. அதிகாரம், சட்டம் என்ற போர்வையில் மக்களை நசுக்குபவர்களாக அல்லாமல், மக்களின் நல்வாழ்விற்காக, மக்களின் உயர்விற்காக, மக்களின் மேம்பாட்டிற்காகத் தங்களை முழுமையாக அர்ப்பணிக்கக்கூடியவர்களாக, இழக்கக்கூடியவர்களாக மாற வேண்டும் என்பதை இயேசு, தொண்டர் என்னும் வார்த்தையிலும், பணியாளர் என்னும் வார்த்தையிலும் தெளிவுபடுத்துகின்றார். நம்முடைய தெளிவுகளும் நிலைப்பாடுகளும் சரியானவையாக உள்ளவை என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அடிமைப்படுத்தும் மனநிலைகளைக் களைந்து, பணியாற்றும் தொண்டர்களாக நாம் உருவெடுக்க வேண்டும். இதுவே மறைத்தூதுப்பணியின் தொடக்கம்.

### 3.2. ஆட்சியாளராய் அல்ல, பணியாளராய் மாறுவதே முதன்மை

இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணியில் தங்களை ஈடுபடுத்துகிற பணியாளர்கள் எவ்வகை மனநிலை கொண்டிருக்க வேண்டும்? எப்படிப்பட்ட மன உறுதியோடு அவர்கள் தங்களின் பணியை ஆற்ற வேண்டும்? என்று இயேசு மிகத் தெளிவான கருத்துகளை, பாடங்களை அவர்களுக்குக்

கற்றுக்கொடுத்திருக்கிறார். மத்தேயு 20:26இல் இயேசுவின் பார்வை என்பது அதிகாரத்தைக் காட்டுகிற ஒரு பார்வையல்ல, அடக்கி ஆளக்கூடிய முறையும் அல்ல. இயேசுவைப் பொறுத்தவரை அடக்கி ஆள்வது என்பது பணியே அல்ல. மற்றவர்களை நசுக்குவதும், பிறரின் உரிமைகளைத் தடுப்பதும் பணியே அல்ல. இயேசுவின் சீடர்கள் இறையாட்சியை இந்த மண்ணில் படைப்பதற்கு அவர்கள் முன்னெடுக்கக் கூடிய பணிகளில், தொண்டர்களாகவும், பணியாளர்களாகவும், போராளிகளாகவும் இருக்க வேண்டுமென்பதை இயேசு உறுதியாக அறிவுறுத்துகின்றார். நற்செய்தித் தூதுரைப்பணியில் அவரே தொண்டராக, பணியாளராகத் தம்மை வெளிப்படுத்தியதிலும், தம் செயல்பாடுகளில் அதை உண்மையாக்கியதிலும், தம் சீடர்களும் தங்களைத் தொண்டர்களாக, பணியாளர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் இயேசுவின் தியாகச் செயல்பாடுகள் நமக்கு எடுத்துச் சொல்கின்றன.

பரிசேயர்களையும் சதுசேயர்களையும் சட்டவல்லுநர்களையும் நீங்கள் பின்பற்ற வேண்டாம் என்று தம் சீடர்களுக்கு இயேசு அறிவுறுத்துகிறார். மத்தேயு 23:7இல் நீங்கள் ரபி என அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் உங்களுக்குப் போதகர் ஒருவரே என்று தரப்பட்டிருக்கிறது. மத்தேயு 23:10இல் ''நீங்கள் ஆசிரியர் எனவும் அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் கிறிஸ்து ஒருவரே உங்கள் ஆசிரியர்'' என்று இயேசு சொல்கின்றார். எனவே 'போதகர்' என்பதும், 'ஆசிரியர்' என்பதும் பரிசேயர்களும் சதுசேயர்களும் சட்ட வல்லுநர்களும் மறைநூல் அறிஞர்களும் தேடிய உலக மதிப்பு. மதிப்பைத் தேடி, அல்லது முதன்மையான இடத்தைத் தேடி நாம் சமூகத்தில் திரிவதைவிடப் பணி செய்ய வேண்டும், நம்மையே இழக்க வேண்டும் என்று இயேசு வலியுறுத்துவதாக இங்கே பார்க்கின்றோம்.

மத்தேயு 23:11இல் ''உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும்'' என்று இயேசு நிறைவு செய்கிறார். திருத்தூதுப்பணி என்பது ஒரு தொண்டு. அதைச் செய்பவர்கள் தொண்டர்களாகத் தங்களை வெளிப்படுத்த வேண்டும். தொண்டர்களாகத் தங்களைத் தாழ்த்திக்கொள்ள வேண்டும். திருத்தந்தை பிரான்சிஸ் சொல்வதுபோல், ''*முதலடி எடுக்கும் ஈடுபாட்டுடன் ஆதரவளிக்கும், பலனளித்து மகிழ்ந்திருக்கும் மறைபரப்புச் சீடர்களின் சமூகம்தான் ''வெளியேறும்'' திருஅவை ஆகும். எனவே தைரியமாக முதல் முயற்சியை மேற்கொள்ளவும் பிறரிடம் சென்றடையவும் வழிதவறிச் சென்றவர்களைத் தேடிச் செல்லவும் முக்கிய குறுக்குச் சாலைகளில் நின்று புறவினத்தாரை வரவேற்கவும் நாம் முன்னேறிச் செல்லலாம்.*[7] எனவே, இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி என்பது ஆசிரியராக, பெரியவராக, உயர்ந்தவராக, போதகராக, ரபியாக உயர்த்திக்கொண்டு செய்கிற பணி அல்ல. மாறாகத் தொண்டர்களாக, பணியாளர்களாக மாறுவதே இயேசுவின் எதிர்பார்ப்பு.





### 3.3. காலடிகளைக் கழுவும் பணியே மறைத்தூதுப்பணி

இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி என்பது பிறரன்புச் செயல்கள் மூலமாகப் போதிக்கின்ற, அறிவிக்கின்ற, கற்பிக்கின்ற பணி. இதையே யோவான் நற்செய்தி 13வது அதிகாரத்தில் இயேசு சீடரின் காலடிகளைக் கழுவிய நிகழ்ச்சி நமக்கு எடுத்துச் சொல்கிறது. ஒரு பணியாளருக்குரிய, அடிமைக்குரிய, வேலைக்காரருக்குரிய பணியை இயேசு இங்கே செய்கின்றார். பணி செய்பவராக மட்டுமல்ல, எந்த நிலைக்கும் இறங்கிச்சென்று பிறரன்புக் கடமையை வெளிப்படுத்துவதற்கும் தயாராக இருக்கக்கூடியவராக இயேசு காட்டப்படுகின்றார்.

பேதுரு ''நீர் என் காலடிகளைக் கழுவ விடவேமாட்டேன்'' என்று சொன்னவுடனே இயேசு ''நான் உன் காலடிகளைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்குப் பங்கு இல்லை'' என்று சொல்வதாக யோவான் எழுதுகின்றார். வார்த்தைகளில் மட்டுமல்ல, வாழ்விலும் தங்களைத் தாழ்த்திக்கொள்வதில் சீடர்களுக்குப் பங்கு உண்டு என்பதை நேரடியாகவே இயேசு எடுத்துச் சொல்கிறார். உடனே பேதுரு தன் காலடிகளைக் கழுவ அனுமதித்தது மட்டுமல்ல, அதன்பின் பேதுருவின் சாட்சியமும் அர்ப்பணமும் உறுதியான நற்செய்தி அறிவிப்பும் சான்று பகர்தலும் இயேசுவைப் போலவே பிறரின் காலடிகளைக் கழுவுகின்ற ஒரு பணியாளராக நாம் மாறவேண்டும் என்பதில் நிறைவு பெற்றது. காலடிகளைக் கழுவும் பணியே இன்று திருஅவையின் மறைத்தூதுப்பணி, திருப்பணியாளர்களின் திருத்தூதுப்பணி.

### 3.4. காலடிகளைக் கழுவும் கடமையே மறைத்தூதுக் கடமை

''ஆகவே ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவர்களுடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு

நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்'' என்று இயேசு சொல்கின்றார். இயேசுவின் செயல்பாடு மிக உயர்ந்த ஒரு படிப்பினையைக் கொடுக்கக்கூடிய செயல்பாடு. வார்த்தைகளில் கற்பித்த ஓர் ஆசிரியராக மட்டுமல்ல; தாழ்ச்சியும், அன்பும் நிறைந்த செயல்பாடுகள் மூலமாகக் கற்றுக் கொடுத்திருக்கிற மறைத்தூதுப் பணியாளராக அவரைப் புரிந்து கொள்கிறோம். ஒரு பணியாளராக, ஊழியராக, தொண்டராக இயேசு இங்கே தம்மை வெளிப்படுத்துவது மிகச் சிறந்த ஒரு படிப்பினையின் வெளிப்பாடு. கற்றுக்கொடுத்தலின் உச்சம் என்று இதை நாம் அழைக்கலாம். ''மனித வரலாற்றில் ஒரு திருப்பத்தைக் கொணர்ந்தவராக இயேசுவைப் பார்த்தனர் அவரது சீடர்கள். அவருக்கு முற்பட்ட காலத்தில் கூறப்பட்டவை நிகழ்ந்தவை யாவற்றையும் அவர் விஞ்சி விட்டார்''.[8] இன்றும் சமூக, சமயத் திருப்பங்கள் நம் பணிகளால் ஏற்பட வேண்டும். மாற்றங்கள் மலர வேண்டும்.

திருத்தந்தை பிரான்சிஸ் சொல்வதுபோல், ''*இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவினார். ஆண்டவர் ஈடுபாடு கொள்கிறார். அவருக்குரியவர்களை ஈடுபட அழைக்கிறார்.*'' ''*இவற்றை நீங்கள் அறிந்து அதன்படி நடப்பீர்கள் என்றால் நீங்கள் பேறுபெற்றவர்கள்'' (யோவா 13:17). நற்செய்திப் பணிபுரியும் சமூகம், மக்களின் அன்றாட வாழ்வில் தன் சொல், செயல் வழியாக ஈடுபாடுடையதாகிறது. இடைவெளியை ஒன்றிணைக்கிறது. தேவைப்பட்டால் தன்னை வெட்கத்திற்குள்ளாக்கிக் கொள்ளவும், மனித உயிரை அரவணைக்கவும், பிறரில் துன்புறும் கிறிஸ்துவின் சதையைத் தொட்டுரணவும் செய்கிறது.*''[9] காலடிகளைக் கழுவுதல் ஈடுபாடு நிறைந்த பிறரன்புப் பணி. அதுவே திருஅவையின் பணியாகும். அதை உண்மையுடன் செய்வதே நற்கருணை வழிபாடுகளுக்குப் பொருள்தர முடியும்.

### 3.5. மறைத்தூதுப்பணி இருட்டடிப்புச் செய்யப்பட வேண்டாம்

இயேசுவின் அன்பு காலடிகளைக் கழுவக்கூடிய அன்பு. இயேசுவின் அன்பு சீடர்களை வேறுபாடில்லாமல் ஏற்றுக் கொள்ளக்கூடிய அன்பு. காலடிகளைக் கழுவுதல் இயேசுவின் சீடர்களைத் திருத்தூதர்களாக மாற்றியது. 'நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன். நீங்களும் அதே முன்மாதிரியைப் பின்பற்றுங்கள். ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்' என்னும் கட்டளை இயேசு நமக்கு, திருஅவைச் சமூகங்களுக்கு, குடும்பங்களுக்கு, அருள்பணியாளர்களுக்கு, இருபால் துறவியர்களுக்கு, திருஅவையின்





திருநிலையினர், பொதுநிலையினர் அனைவருக்குமே விட்டுச்சென்றிருக்கின்ற கட்டளை. தம் அன்புச் செயல்பாடுகள் மூலமாய்த் தம்மை ஒரு பணியாளராக, தொண்டராக இயேசு உயர்த்திக் கொண்டார். அவரின் பணி மிக உயர்ந்த பாடங்களை நற்செய்தியாக இன்று மக்களுக்கு எடுத்துச் சொல்கிறது. ''நாம் வாழும் வாழ்க்கைச் சூழ்நிலையில் இறைவார்த்தையைப் போதிக்கப் பின்வரும் மூன்று வழிகளில் எது பொருத்தமானது?

(1) வார்த்தையைப் போதிப்பதன் வழியா?

(2) வெளி அடையாளங்களின் வழியா?

(3) வாழ்க்கையின் வழியா?

நம் வாழ்க்கைச் சூழலுக்கேற்றவாறு இறைவார்த்தையைப் போதிக்க மேற்குறிப்பிட்டுள்ள மூன்று வழிகளை இறைவாக்கினர்கள் அளித்துள்ளனர். இந்த மூன்று வழிமுறைகளையும் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறு நாம் பயன்படுத்த வேண்டும்.''[10] கால்களைக் கழுவுதல் சடங்காக மாறிவிடாமல் திருஅவையின் வாழ்வாக மாற வேண்டும். இயேசுவின் அன்புக்கட்டளை சடங்குகளால், சட்டங்களால் இருட்டடிப்புச் செய்யப்பட வேண்டாம்; ஈடுபாட்டால் மானிட மாண்பை நிலைநிறுத்தட்டும். பணியாற்றும் அவையாக இன்றைய திருஅவை சாட்சியம் கூறட்டும்.

## 4. மறைத்தூதுப் பணியாளர்கள்: பரிமாணங்கள்

### 4.1. தியாகத்தின், இழப்பின் பணியாளர்கள்

யோவான் நற்செய்தியில் இயேசுவுக்கும் பேதுருவுக்கும் இடையில் நிகழ்ந்த உரையாடலை யோவான் 21இல் வாசிக்கின்றோம்: ''யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?'' ''என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்'' என்று இயேசு பணிக்கிறார். ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்ப்பது பேதுருவுக்கு கொடுக்கப்படுகிற அன்பின் கடமை. ஆடுகள், ஆட்டுக்குட்டிகள் என்பதற்கிடையில் வித்தியாசங்கள் வேறுபாடுகள் உண்டு. ஆட்டுக்குட்டிகள் சிறியவை, எளிமையானவை, பராமரிக்கப்பட வேண்டியவை; ஆயரின் மிகுந்த கவனத்தை, கரிசனையை ஈர்ப்பவை. நம் சமூகத்தில் இன்று கவனம் பெற வேண்டியவர்கள் யார்? ஆட்டுக்குட்டிகளாய்க் கரிசனை பெற வேண்டியவர்கள் யார்?

எளியோர், ஆதரவற்றோர், அநாதைகள், கைம்பெண்கள், குழந்தைகள், பாவிகள், பெண்கள் என்று ஆட்டுக்குட்டிகளின் எண்ணிக்கை இயேசுவின் காலத்திலும் தொடக்கத் திருஅவை காலத்திலும் மிகுந்திருந்தது. அவர்களைப் பேணி வளர்ப்பது பேதுருவிற்கும், பேதுரு வழியாய்த் திருத்தூதர்களுக்கும், திருத்தூதர்களின் வழியாய்த் தொடக்கத் திருஅவைக்கும் அதன் மூலம் இன்றைய திருஅவைக்கும் இயேசு விட்டுச் சென்ற பணி. இதையே திருத்தந்தை பிரான்சிஸ், ''*நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்கள் 'மந்தையின் பராமரிக்கும் பண்புநலனை' (smell of the sheep) மேற்கொள்கையில், மந்தை அவர்களின் குரலுக்குச் செவிகொடுக்க மனமகிழ்வுடன் முன்வருகின்றது*''[11] என்கிறார். இயேசுவின் பார்வையில் பேதுரு தியாகத்தின் பணியாளராக மாற்றப்படுகின்றார். ஆடுகளுக்காக, நம்மையே அர்ப்பணிக்க வேண்டியது, இழக்க வேண்டியது நம் பொறுப்பு. ஆடுகளை வழிநடத்தக்கூடிய, ஆடுகளுக்காகத் தம் நேரத்தையும் உழைப்பையும், வாழ்வு முழுவதையும் இழக்கக்கூடிய தூதராக, பணியாளராக நம்மை வேறுபடுத்த வேண்டும் என்பதன் பொருளை இது நமக்கு எடுத்துச் சொல்கிறது. இழப்பின் மத்தியிலும் தியாகத்துடன் செய்யப்படும் பலியே/பணியே இயேசுவின் மறைத்தூதுப்பணி/பலி.

### 4.2. துன்பத்தின் மத்தியில், எதிர்ப்பின் மத்தியில் பணியாளர்கள்

யோவான் 21:18இல் இயேசுவின் பணியாளராக, நற்செய்தியின் தொண்டராக நம்மை ஈடுபடுத்துகின்றபோது வரக்கூடிய எதிர்ப்புகள், சந்திக்கக் கூடிய சவால்களைப் பார்க்கின்றாம். இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி என்பது நாம் விரும்புகிறதை எல்லாம் பேசக்கூடிய பணி அல்ல. நாம் நினைப்பதையெல்லாம் நடத்தி முடிக்கக்கூடிய பணி அல்ல. நாம் விருப்பமில்லாத இடத்திற்கு கூட்டிச்செல்லப்படுவோம் என்று சொன்னால் அது பணியின் நிலை. நாம் விரும்பாததெல்லாம் செய்தாக வேண்டுமென்று சொன்னால் அது பணியாளருக்குரிய மனநிலை. பேதுருவுக்கு இயேசு சொன்ன வார்த்தைகள் சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

'கட்டப்படுதல்' என்பது ஒன்றுக்கு நம்மை அர்ப்பணித்தல்; 'கட்டப்படுதல்' என்பது நம்மை நாமே இழக்கத் தயாராக இருத்தல். 'கட்டப்படுதல்' என்பது எத்தனைத் தடைகளும் மிரட்டல்களும் எதிர்ப்புகளும் வந்தாலும் நம்மைப்





பணிகளில் முழுமையாக ஈடுபடுத்துதல். அத்தகைய கடினமான பணியைப் பேதுரு ஏற்றுக்கொண்டார். பேதுருவின் மனநிலை, தான் ஒரு வெறும் அறிவிப்பாளர் மட்டுமல்ல; தாம் ஒரு பணியாளர், தாம் தம்மையே நற்செய்திக்காக இழக்க வேண்டிய பணியாளர், தொண்டர் என்பதுதான். இயேசுவின் பார்வையிலும், தொடக்க காலத் திருஅவையின் பார்வையிலும், இழப்பின் மத்தியிலும், தொண்டு செய்வதன் மூலமாகவும், தூதர்களாக நம்மை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதுதான் யோவான் நற்செய்தியில் சொல்லப்படுகிற பணியாளர்களுக்கான அறிவுரைகள்.

மறைத்தூதுப்பணி என்பது நாம் நம்மை இழந்து பிறரின் நலனை மேம்படுத்துகின்ற, முன்னிறுத்துகின்ற பணி என்று திருவிவிலியத்தின் பல கட்டங்களில் நாம் சிந்திக்கிறோம். எனவே, நம் பணியில் இன்று பிறரின் நலனை மேம்படுத்துகின்ற செயல்பாடுகள் மிக முக்கியம். நம் பணிகள் உண்மையில் மறைத்தூதுப்பணி என்றால் இரண்டு முக்கியமான அம்சங்களாகிய தூதுரைப்பணி, தொண்டுப்பணி என்று சொல்லப்படக்கூடிய பணிகள் ஏழைகளை, எளியோரை, ஆதரவற்றோரை, அநாதைகளை, சமூகத்தில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களைச் சமூகத்தின் உயர்வுக்குக் கொண்டுவரக்கூடிய பணிகளாக அமைய வேண்டும். சமூகத்தின் மாண்புக்குக் கொண்டுவரக்கூடிய, மனித மாண்பை முன்னேற்றுவதற்கான பணிகளாக அமைய வேண்டும். அது இல்லாதபோது நம் பணிகள் வெறும் முழக்கங்களாக, வெறுமனே வெளிப்படையான அறிவிப்புகளாக மட்டும் தேங்கிப்போய்விடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அப்படியெனில் நற்செய்திப் பணியில் எத்தகைய நிலைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமெனக் காண்போம்.

### 4.3. அறிவிப்பாளர்களும் பணியாளர்களும் சமூகப் போராளிகள்

திருத்தூதர் பணிகள் முதல் அதிகாரத்தில் யூதாசின் இடத்தில் இன்னொருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று ஒரு நிலை வரும்போது 1:24இல் அவர்கள் அனைவரும், ''ஆண்டவரே, யூதாசு திருத்தொண்டையும், திருத்தூதுப்பணியையும் விட்டகன்று தனக்குரிய இடத்தை அடைந்துவிட்டான்'' என்று மன்றாடுவதாக சொல்லப்படுகிறது. மத்தியா தெரிந்தெடுக்கப்படுவதற்குத் தேவை திருத்தொண்டும், திருத்தூதுப்பணியுமென மிகத் தெளிவாக நமக்குச்

சொல்லப்படுகிறது. திருத்தொண்டு என்பது நற்செய்தியை அறிவிப்பது என்பதாக நிறைவு காண வேண்டும். தாங்கள் செய்கிற பணி திருத்தொண்டு எனத் திருத்தூதர்கள் புரிந்து கொண்டனர். இயேசுவின் நற்செய்தித் தூதுவர்கள் என்பதைவிட தொண்டர்கள்தான் இயேசுவின் சீடர்கள் என்பதுதான் தொடக்க காலத் திருஅவையின் நிலைப்பாடு.

### 4.4. திருத்தூதர்களாய்... திருத்தொண்டர்களாய்...

யூதாசு திருத்தொண்டையும், திருத்தூதையும் இழந்தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிற சொற்கள் திருத்தூதர்கள் திருத்தொண்டு செய்வதற்காக, திருத்தூதுப்பணிகள் செய்வதற்காக அழைக்கப்படுகிறவர்களாக, தெரிந்தெடுக்கப்படுகின்றவர்களாக புதிய, தெளிவான பார்வையைத் தருகிறது. இன்றைய திருஅவையின் பல்வேறுபட்ட பணிகளை நாம் கணக்கில் எடுத்து ஆய்வு செய்கின்றபோது நம் திருஅவையின் செயல்பாடுகள் அறிவிப்பா? அல்லது தொண்டா? என்று ஒரு கேள்வியையும் இங்கே எழுப்ப நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைய திருஅவையில் காணப்படக்கூடிய முரண்பாடு என்ன? இன்று இறைவார்த்தையை எடுத்துச் சொல்கின்ற பணி என்பது ஆலயங்களில், செப வழிபாடுகளில், மக்கள் கூடுகிற அன்பியங்களில் அறிவிக்கப்படுகின்றது அல்லது வாசிக்கப்படுகிறது. இறைவார்த்தை ஒலி பெருக்கி மூலமாகவோ அல்லது வரக்கூடிய உறுப்பினர்களுக்கோ சொல்லப்படுகிறது. ஆனால், இறைவார்த்தை வாழ்வாக்கப்படுவதற்கு இன்று திருத்தூதர்கள் தேவைப்படுகின்றார்கள். “அனைத்திற்கும் மேலானது, மீட்பு தருவது அன்பு. அதைவிடச் சிறந்தது ஒன்றும் இல்லை. அன்பை வார்த்தையில் காட்டாது செயலில் காட்டும் நல்ல சமாரியர்கள் தேவை என்பதுதான் இயேசுவின் அன்புக் கட்டளை அறிவுறுத்தும் பாடம். பலிகளும் பக்தி முயற்சிகளும் தேவை. ஆனால், அவை அன்புச் செயல்களில் ஈடுபடுத்தாத வெறும் வெற்று வழிபாடுகளாகி விடக்கூடாது. பக்தி முயற்சிகளை மட்டும் தேடினால் இயேசுவின் வேரோட்டமான சீடராக முடியாது. அன்பை வாழ்பவர்தான் இயேசுவின் சீடர்”.[12] இயேசுவின் தொண்டர்கள் தங்களைப் பணியாளர்களாகத் தாழ்த்த வேண்டுமென்று சொல்கின்றபோது, இயேசுவின் வார்த்தை அறிவிக்கப்பட வேண்டும்; சான்று பகரப்பட வேண்டுமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அப்படியென்றால் தொண்டு என்பதும் தூது என்பதும் வேறுபட்ட நிலைகள்





என்பதாக ஒரு முடிவுக்கு வர வேண்டியதில்லை. தொண்டே தூதாக மலர வேண்டும். தூதுரைப்பது தொண்டாகச் செய்யப்பட வேண்டும். அதைத்தான் நாம் இங்கே கருத்து ஒற்றுமையின் அடிப்படையில் காண வேண்டியிருக்கிறது.

இன்று அறிவிப்பாளர்களைவிடப் பணியாளர்களாகத் தங்களை முன்னிறுத்துகின்றவர்கள் குறைவு. இயேசுவின் வார்த்தைக்கு நாம் பணியாளர்களாக மாற வேண்டும். இயேசுவின் விருப்பங்களுக்கும், வாழ்வுக்கும், பணிக்கும் நாம் தொண்டர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்று அருள்பணியாளர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளக்கூடிய குழுவிலும்கூடச் சாட்சியம் குறைந்து போகிறது. சாட்சிய வாழ்வு என்பது இன்று நலிந்து போய்விட்டது. அருள்பணியாளர்களும், துறவியர்களும் இன்று எண்ணிக்கையில் வேண்டுமானால் அதிகரித்து இருக்கலாம். நம் பகுதியை, நம் மறைமாவட்டங்களை அல்லது துறவு அவைகளைப் பொறுத்தவரை சாட்சியம் குறைந்து கொண்டே போகிறது. இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி நம்மைத் தொண்டர்களாக மாற்ற வேண்டும். பணியாளர்களாக மாற்ற வேண்டும். இயேசுவின் வாழ்வுக்கும் பணிக்கும் தொண்டர்கள் என்ற அடிப்படை மனநிலை இன்று நம்மில் அவசியம். அதற்கு எதிரான மனநிலைகளைக் களைய முற்பட வேண்டும். அநீதியான அமைப்புகளை மாற்றியமைக்க வேண்டும். பணியாற்றும் திருஅவையாக நாம் மாறவேண்டும். இதுவே திருத்தூது அவையாக நம் இறைச் சமூகத்தைக் கட்டியெழுப்பும். கீழ்த்தரமான சாதிய மனநிலைகளுக்கும், சாதியமைப்புகளுக்கும் எதிரான சமூகப் போராளிகளாக நாம் மாற வேண்டியது மிகவும் அவசியம். சாதியத்தைக் களைந்து சாட்சியப்பணியை மறைத்தூதுப்பணியாக மாற்ற வேண்டும்.

### 4.5. அனைவருமே பணியாளர்களாகத் திருஅவையில் மாறட்டும்!

அருள்பணியாளர்களாக, துறவியர்களாக, திருத்தொண்டர்களாகப் பணிகளை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். பொதுநிலையினராகவும் நம்மில் பலர் கிறித்தவ அழைப்பைப் பெற்றிருக்கிறோம். கிறித்தவ அழைப்பைப் பெற்றிருக்கிற ஒவ்வொருவரின் கடமையே மறைத்தூதுப்பணி. தூதுப்பணியை, தூதுரைப்பது என்பதோடு நாம் நிறுத்திவிடாமல் அதை வாழ்வாக்குவதும், பணியால் வெளிப்படுத்துவதும் தான் மறைத்தூதுப்பணி. ஆதாயம் தேடாமல்

சுய விருப்பங்களை, உலகத்தரமான எண்ணங்களை முன்னிலைப்படுத்தாமல், இயேசுவின் மனநிலையாகிய ஒருவருக்கொருவர் நன்மை செய்யக்கூடிய மனநிலையைக் கொண்டிருப்பதுதான் மறைத்தூதுப்பணி. பிறருக்கு முன்னால் நம்மைத் தாழ்த்தக்கூடிய காலடிகளைக் கழுவுதலைத் தொடர்வதுதான் மறைத்தூதுப்பணி. இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி திருத்தூதர்களின் மறைத்தூதுப்பணி. இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி திருஅவையின் மறைத்தூதுப்பணி. அதுதான் இன்றைய நம் மறைத்தூதுப்பணியாகவும் அமைய வேண்டுமென்பதையும் இங்கே நாம் முடிவுரையாக மேற்கொள்ளலாம். *“நமது இந்நாள்களில் இயேசு நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்” என்ற கட்டளை, இன்று உலகம் மாறுபடும் பின்னணிச் சூழமைவுகளையும், திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு எப்போதுமில்லாத புதிய சவால்களையும் எதிரொலிக்கிறது. இந்த “வெளியேறிச் செல்லும்” புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியில் நாம் அனைவரும் பங்கெடுக்க அழைக்கப்படுகிறோம். ஒவ்வொரு கிறித்தவரும், கிறித்தவச் சமூகமும் ஆண்டவர் குறித்துக்காட்டும் வழியை உய்த்துணர வேண்டும். ஆனால் நற்செய்தி ஒளியின் தேவை, உலகின் எல்லாப் புற எல்லைகளையும் சென்றடைய அனைவரும் அவரவரது “சுகமான மண்டலங்களிலிருந்து” (Comfort Zone) வெளியேறிச் செல்வதற்கான அவரது அழைப்புக்குச் செவிமடுக்கக் கேட்டுக் கொள்ளப்படுகின்றோம்* (பிரான்சிஸ், *நற்செய்தியின் மகிழ்ச்சி*, 20).”[13] நம்மை இழக்காமல் மறைத்தூதுப்பணி சாத்தியமில்லை. சுகங்களைத் தேடாமல் சுமைகளைச் சுமந்து பணிசெய்வது அவசியம். வசதிகளையும் வாய்ப்புகளையும் தேடி அலைவதைவிட, மானிட மதிப்பீடுகளை – முழு மனித விடுதலையை முன்னெடுக்கும் பணியே மறைத்தூதுப்பணி.

### 5. இயேசுவின் அடிச்சுவடுகளில் நற்செய்திப்பணி: இறையியலாக்கம்

இயேசுவின் செயல்பாடுகளிலிருந்து திருத்தூதர்கள் கற்றுக் கொண்டது என்ன? இயேசுவின் பல்வேறு பணிச் செயல்பாடுகளில் மிகுந்திருந்தது அறிவிப்பா? அல்லது முன்னுதாரணத்தைக் காட்டக்கூடிய சமூக மாற்றத்திற்கான பணிச் செயல்பாடுகளா? இன்று திருஅவை வழிபாட்டுப் பணிகளைக் கடந்து, ஆன்மிக ஆலயப்பணிகளைக் கடந்து, பிறரன்புப் பணிகளாகிய மனித





முன்னேற்றம், மனித மாண்பு சார்ந்த பணிகளை முன்னெடுத்திருக்கிறது. இந்தப் பணிகளைக்கூட இன்று துறவியர்கள் ஆய்வு செய்ய வேண்டும். “தங்களை ஆட்கொண்டுள்ள இறை இரக்கத்தினால் இவ்வுலகையே ஆட்கொள்ளத் துடிக்கும் திருத்தூதர்களாய் அழைக்கப்பட்டுள்ளவர்கள் துறவறத்தார். இறை இரக்கம் மட்டுமே படைக்கக்கூடிய அன்பின் சமூகம், பிறர் நலச்சமூகம், மன்னிப்பின் சமூகம், ஆறுதலின் சமூகம், கனிவின் சமூகம், முழுமையின் சமூகம், மனமகிழ்வின் சமூகம் உண்மையிலேயே ஒரு மாற்றுச்சமூகமே.”[14] மாற்றுச் சமூகம் படைப்பதே மறைத்தூதுப்பணி. அதுவே நம் இலக்காக மாறட்டும்.

துறவியரின் பணிகளில் மிகுந்திருப்பது வெறுமையான முழக்கமா? அல்லது உண்மையான நற்செய்தித் தொண்டா? என்ற ஒரு கேள்வி அடிக்கடி எழ வேண்டும். ஏனென்றால், இன்று நாம் நடத்தக்கூடிய கல்விக் கூடங்கள், அடிப்படைக் கல்வியைக் கற்றுக்கொடுக்கக்கூடிய பள்ளிகள், உயர்கல்வி நிறுவனங்கள், ஆதரவற்றவர்களை அரவணைக்கக் கூடிய இல்லங்கள், பிறரன்பை வெளிப்படுத்தக்கூடிய பல்வேறு உயர்நிறுவனங்கள், சுகாதாரக் கூடங்கள், மருத்துவமனைகள் யாருக்காக என்று நாம் இதை அடுக்கிக் கொண்டே போகலாம். நற்செய்திப் பணியின் விரிவாக்கமாக இதைச் செய்கிறோமா? அல்லது ஆதாயத்திற்காகவா? இதில் வெளிப்படுவது தொண்டா? இது உண்மையிலேயே பணியா? என வினவ வேண்டும். சிந்தித்துப் பார்த்தால் பல நேரங்களில் இன்றையப் போட்டி உலகத்தில், வணிக நுகர்வுக் கலாச்சாரத்தை முன்னிறுத்தக்கூடிய உலகத்தில், நாமும் தொழில் முனைவோரைப்போல வேலை செய்கிறோம் என்று சொல்லலாம். பணத்தையும் ஆதாயத்தையும் முன்னிறுத்திச் செய்யக்கூடிய முன்னெடுப்புகளும் பணிகளும் தொண்டாக அல்ல, வெறுமையான ஒரு வியாபாரமாகவே நிறைவு பெற்று விடுகிறது. “திருஅவையின் அடித்தளமே இரக்கம்தான். அவளுடைய மறைப்பணி எல்லாம் இந்தக் கனிவை மக்களுக்குப் பிரசன்னப்படுத்த வேண்டும். உலகிற்கு அவள் அளிக்கும் சாட்சியத்திலும் இந்த இரக்கம் என்றுமே வற்றாது இருக்க வேண்டும்.”[15] சமூகத்தின் எளியோர் நலனில் அக்கறை கொண்ட இரக்கச் செயல்பாடுகள் தொண்டாகச் செய்யப்பட வேண்டும். துறவியர்களும் தங்களின் அர்ப்பணிப்பைப் புதுப்பித்து, உண்மையான மறைத்தூதுப்

பணியாளர்களாக, சமூக மாற்றத்தின் போராளிகளாகத் தங்களையே மாற்றிக்கொள்ள வேண்டுமென்பதுதான் இயேசுவின் அழைப்பு.

### 5.1. மறைத்தூதுப்பணி செய்வதால் இலாபமா? இழப்பா?

திருஅவையின் செயல்பாடுகளில் நாளுக்கு நாள் நாம் எடுக்கக்கூடிய புதிய முயற்சிகள் பணத்தையும், செல்வத்தையும், ஆதாயத்தையும் இலாபத்தையும் முன்னிறுத்தி நடத்தப்படுகின்ற பணிகளாக மாறிவிட்டால் நம்முடைய நோக்கம் என்ன? இலாப நோக்கும், நிதி திரட்டுவதும் இன்று மறைமாவட்டப் பணிகளுக்கு அவசியம் என்று நியாயப்படுத்தும்போது நம்முடைய நோக்கம் என்ன? துறவு அவைகள் நடத்துகின்ற கல்வி நிலையங்களாலும், பல்வேறு பிறரன்பு இல்லங்களாலும், சாதாரண மக்களும் பயனடையத் தேவைகள் உள்ள போது, நம்முடைய நோக்கம் என்ன? நாம் அவற்றை யாருக்காக நடத்துகின்றோம்? யார் அதில் பயன்பெறுகின்றார்கள்? என்பதையும் நாம் கேள்வியாக எழுப்ப வேண்டும். சுய ஆய்வு ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். இதற்கு ஒரு சுய ஆய்வு தவிர்க்க இயலாதது. ''திருஅவை தனது நீடித்த செயல்பாடாகிய மேய்ப்புப்பணி, மனமாற்றத்திலும் இரக்கத்தின் சான்றிலும் நிலைத்திருந்து தனது முகத்தைப் புதுப்பிக்க முயலும் புதிய நற்செய்திப் பணியின் (காண். மத் 11:5) நேர்மையான அடையாளமாக இது அமையும்.''[16] திருஅவை தன் செயல்பாடுகளில் தன்னையே புதுப்பிக்க வேண்டும்.

### 5.2. தமிழகத் திருஅவையில் புதிய மறைத்தூதுக் காற்று வீசட்டும்

இன்றைய இந்தியத் திருஅவையும், குறிப்பாக, தமிழகத் திருஅவையும் தங்கள் அன்றாட ஆன்மிக நிலையிலான பணிகளைக் கடந்து, அருளடையாளப் பணிகளைக் கடந்து, சமூக மாற்றத்திற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும். சமூக மாற்றத்திற்கான பணியே நற்செய்தித் தூதுரைப்பணி என்பதாக மலர வேண்டும். திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதுபோல், ''*திருஅவையைப் பொறுத்தவரையில், ஏழைகளுக்கு முன்னுரிமை, ஏழைகள்பால் முதல் கவனம் என்பது பண்பாட்டு, சமுதாய, அரசியல், மெய்யியல் தொடர்பானது என்று கூறுவதை விட, முதன்மையான இறையியல் வகை இது. திருஅவை ஏழைகளுக்கு முன்னுரிமைக் கொள்கையை உருவாக்கியுள்ளது. இது கிறித்தவப் பிறரன்புப்பணி இருத்தலின் முதன்மையான சிறப்பிடம் பெறும் ஒரு வடிவமாக உள்ளது. இதற்கு முழுத் திருஅவையின் மரபும் சாட்சி பகர்கின்றது.''*[17]





உண்மையான மறைத்தூதுப்பணி பற்றிய தெளிவான சிந்தனையை, எண்ணத்தை நமக்குக் கொடுப்பவர் இயேசு. அதைத் தம் வாழ்வால் செயல்படுத்தியவர் இயேசு. அதற்கு உயிர் கொடுத்தவர் இயேசு. எனவே இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி இன்று நம்மைப் பணியாளர்களாக கடைநிலை ஊழியர் நிலைக்கு நம்மைக் கொண்டு போக வேண்டும். சமூக மாற்றத்திற்கான போராளிகளாக அது நம்மை மாற்ற வேண்டும். ''மண்ணையும் மக்களையும் தொடாத பணி இறையாட்சிப் பணி அல்ல. சமூக மாற்றத்தை முன்னிறுத்தாத, வெறுமையான அருள்பணிகள் இன்று இறைப்பணி அல்ல என்பதுதான் உண்மை. எனவே, மக்கள் பணியாளர்களாய் மாறுவோம்.''[18] மனித மாண்புக்காகப் போராடுவோம்.

புதிய இறையாட்சி என்ற சமத்துவ சமுதாயத்தின் ஏழை, எளியோரின் நலனை மேம்படுத்துகின்ற சமூகக் கருவிகளாக, பணியாளர்களாக, போராளிகளாக, தொண்டர்களாக, ஊழியர்களாக நம்மை முன்னிறுத்த வேண்டுமென்பது இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பணி. அதைச் செய்ய முன் வருவோம்! புதிய சமூகம் படைப்போம்!

### அடிக்குறிப்புகள்

1. பிரான்சிஸ், *நற்செய்தியின் மகிழ்ச்சி* (திருத்தூது ஊக்கவுரை) டோமி (தமிழாக்கம்) (சென்னை: நம் வாழ்வு வெளியீடு, 2014), 19.
2. தே. அல்போன்ஸ், ''விவிலியத் தகவல்களா? விடுதலைச் செய்தியா?'' எரோணிமுசு கு. இரபேல், மற்றும் எல்பின்ஸ்டன் (தொகு.), *வார்த்தைப் பணியே வாழ்வாக* (திருச்சிராப்பள்ளி: அருள்வாக்கு மன்றம், 2015), 65.
3. ஆரோக்கிய ராஜ், ''ஏழையின் சார்பான இயேசுவின் கனவுகள்'', எரோணிமுசு கு. இரபேல் மற்றும் எல்பின்ஸ்டன் (தொகு.), *வார்த்தைப் பணியே வாழ்வாக*, (திருச்சிராப்பள்ளி: அருள்வாக்கு மன்றம், 2015), 195.
4. பிரான்சிஸ், *நற்செய்தியின் மகிழ்ச்சி* , 258.
5. அ. ஸ்டீபன், ''லூக்காவும் ஏழைகளும்'', குழந்தைசாமி ராயர் (தொகு.), *நானிலம் பயனுற* (திருச்சிராப்பள்ளி: அருள்வாக்கு மன்றம், 2014), 78.
6. எக்ஸ். டி. செல்வராஜ், ''புத்துலகம் படைக்கும் புதிய தலைமை'', குழந்தைசாமி ராயர், (தொகு.), *நானிலம் பயனுற*, (திருச்சிராப்பள்ளி: அருள்வாக்கு மன்றம், 2014), 36.

7. பிரான்சிஸ், *நற்செய்தியின் மகிழ்ச்சி*, 24.

8. பவுல் லியோன், *யார் இந்த இயேசு?* (திண்டுக்கல்: வைகறை பதிப்பகம், 1995), 274.

9. பிரான்சிஸ், *நற்செய்தியின் மகிழ்ச்சி*, 24.

10. பெ. ஜோசப் டைட்டஸ், ''இறைவாக்கினர்களும் அவர்களின் இறைவாக்குப் பணியும்'', குழந்தைசாமி ராயர் (தொகு.), *நானிலம் பயனுற* (திருச்சிராப்பள்ளி: அருள்வாக்கு மன்றம், 2014), 67.

11. பிரான்சிஸ், *நற்செய்தியின் மகிழ்ச்சி*, 24.

12. தே. அல்போன்ஸ், *விவிலியத் தகவல்களா? விடுதலைச் செய்தியா?*, 65.

13. பிரான்சிஸ், *நற்செய்தியின் மகிழ்ச்சி*, 24.

14. அந்தோணி கிறிஸ்டி, ''இறை இரக்கமும் திருச்சட்டமும்'', ம. பிலோமின் தாஸ் (தொகு.), *தொடரும் இறை இரக்கம்* (திண்டிவனம்: முப்பணி மையம், 2017), 53.

15. ராஜ் இருதயா, ''ஒடுக்கப்பட்டோருக்கான இரக்கம்'', ஆனந்த், (தொகு.), *இரக்கத்தின் ஊற்று* (மதுரை: நொபிலி வெளியீடு, 2016), 192.

16. அ. ஜான் பாப்டிஸ்ட், (தமிழாக்கம்), *இரக்கமும் இழிநிலையும் - திருத்தந்தை பிரான்சிஸ் திருத்தூது மடல்*, ம. பிலோமின் தாஸ் (தொகு.), தொடரும் இறை இரக்கம், 25.

17. பிரான்சிஸ், *நற்செய்தியின் மகிழ்ச்சி*, 24.

18. மைக்கில் ராஜ், ''தத்தம் மொழியில் இறைவார்த்தை'', குழந்தைசாமி ராயர் மற்றும் லூ. அந்துவான் (தொகு.), *அமுதனுக்கும் தமிழென்று பேர்* (திருச்சிராப்பள்ளி: *இனியவை வெளியீடு*, 2018), 165.



# 6. இயேசுவின் மறைத்தூது ஆணை

## (மத் 28:16-20)

*அருள்பணி. முனைவர் ம. உபால்டு*
*செயலர், விவிலியப் பணிக் குழு*
*முப்பணி நிலையம், திண்டிவனம்*

## முன்னுரை

நற்செய்திகள் / நல்ல செயல்கள் என்றும் எங்கும் எதிர்பார்க்கப் படுகின்றன. படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் தாம் படைத்தவற்றை 'நல்லது' எனக் கண்டார். மனிதர்களைப் படைத்த பிறகு 'மிகவும் நல்லது' எனக் கண்ட (தொநூ 1:31) கடவுள் அந்த நல்லது தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று விரும்புகிறார். கடவுளின் மகன் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கலிலேயப் பணித் தொடக்கமே நற்செய்தியைப் பரப்பி மக்கள் அதனை ஏற்கச் செய்வதுதான் (மாற் 1:15). இந்த நற்செய்திக்கு இயேசு கொடுத்த பெயர் ''இறையாட்சி'' (மாற் 1:15) என்பதாகும். தாம் வாழ்ந்த காலத்தில் இறையாட்சி வருகையை வல்ல செயல்களாலும் அரும் அடையாளங்களாலும் நிரூபித்துக் காட்டினார். அதற்காகத் திட்டங்கள் வகுத்தார். ''நாம் அடுத்த ஊர்களுக்குப் போவோம், வாருங்கள். அங்கும் நான் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும்; ஏனெனில் இதற்காகவே நான் வந்திருக்கிறேன்'' (மாற் 1:38) என்றார். தாமும், தம்முடைய செய்தியும் நல்லதும் நம்பகத்தன்மையுடையதும் என்பதற்காகச் சீடர்களை இருவர் இருவராக அனுப்பத் தொடங்கினார் (மாற் 6:7). ஒட்டுமொத்தமாக அவரது வாழ்வையும் பணியையும் உடனிருந்து பார்த்த சீடர்கள் அவர் உயிர்ப்பிற்குப் பின் உயிர்பெற்றவர்களாய் அவரது வாழ்வையும் பணியையும் பெரும் நற்செய்தியாகத் துணிச்சலுடன் அறிவித்தனர். யூதர்களிடமும் பிற இனத்தவர் மத்தியிலும் இயேசுவைப்பற்றி ''எங்கும் நன்மை

செய்துகொண்டே சென்றார்'' (திப 10:38) என்று பேதுருவும் அவரைத் தொடர்ந்த சீடர் குழுமமும் இயேசுவையும் அவரின் இலக்கான இறையாட்சியையும் நற்செய்தியாக அறிவித்தனர்.

இந்தத் திருத்தூதர்களின் நற்செய்தி அறிவிப்புக் கட்டளை ஆண்டவர் இயேசுவிடமிருந்தே வந்த ஒன்று. நான்கு நற்செய்திகளிலும் சற்று வேறுபாடுகளுடன் காணப்பட்டாலும் மத்தேயு நற்செய்தியின் மறைத்தூது ஆணை பற்றி இங்குக் காண்போம்.

## 1. பின்னணி

இறையாட்சிப் பணியைத் தொடங்குவதற்கு முன்பாக இயேசுவுக்கு ஒரு நெருக்கடி உருவானது. எத்தனையோ பாதைகள், எத்தனையோ பயணங்கள், இவற்றில் இலக்குத் தெளிவு வேண்டும். அது இறைவிருப்பத்திற்குட்பட்ட இலக்காக இருக்க வேண்டும். எனவே, பணி தொடங்குவதற்கு முன்பாக எழுந்த ஒரு நெருக்கடியில் அழகான அப்பா அனுபவம் கிடைக்கிறது. யோர்தான் ஆற்றில் திருமுழுக்குப் பெற்றபின் ஆற்றிலிருந்து கரையேறிய உடனே ஏற்பட்ட அந்த அப்பா அனுபவம், ''என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்'' (மாற் 1:11) என்ற குரல் மகன் தேர்ந்து கொண்ட இலக்கை உறுதி செய்தது. உடனடியாகவே, ''காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது; மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற் 1:15) என்று பறைசாற்றினார்.

கலிலேயாவில் என்றுமே ஒரு கதாநாயகனாக வலம் வந்த ஆண்டவர் இயேசுவுக்கு மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது. இங்கேயே – கலிலேயாவிலேயே – இருப்பது நல்லது என்று (மாற் 9:5) இயேசுவின் கலிலேயப் பணி இயேசுவுக்கு ஒரு சுகமான நெருக்கடியைக் கொடுத்தது எனலாம். கலிலேயக் கதாநாயகன் இயேசு சீடர்களுக்கும் மக்களுக்கும் ஒரு மாபெரும் அரசன். ஆனால், தமக்கோ துன்புறும் ஊழியன் (மாற் 8:31; 9:12; 10:33–34) என்பது இயேசுவுக்குத் தெரியும். தெரிந்து, உணர்ந்து, ஏற்றுக் கொண்ட ஒரு பாதைதான் எருசலேமை நோக்கிய பாதை (லூக் 9:51). சீடர்கள் இத்தகைய எருசலேம் வாழ்வைத் தேர்ந்து கொள்ளவில்லை. மாறாக, யார் மிகப் பெரியவர்? (மாற் 9:33–34) என்பதும்





இங்கேயே இருப்பது நல்லது (மாற் 9:5) என்பதும் அவர்களுக்குள் விவாதப் பொருளாக இருந்தது.

இத்தகைய இயேசுவின் கதாநாயகப் பணியில், கதாநாயகப் பாணியில் நம்பிக்கையும் எண்ணமும் கொண்ட சீடர்களுக்கு இயேசுவின் கைது, சிலுவைச் சாவு, கல்லறை அனைத்தும் மாபெரும் அதிர்ச்சியாக இருந்தது. எல்லாவற்றையும் ''விட்டு விட்டு'' (மாற் 1:20) இயேசுவைப் பின்சென்ற சீடர்கள் அனைவரும் அவரது கைது, பாடுகள் தருணங்களில் அவரை 'விட்டுவிட்டுத் தப்பி ஓடினர்' (மாற் 14:50).

எல்லாம் முடிந்தது என்ற எண்ணத்தில் இருந்த இயேசுவின் சீடர்களிடம் மகதலா மரியா அவர் உயிரோடு இருக்கிறார் என்று சொன்னபோது அவர்கள் நம்பவில்லை (மாற் 16:11). எல்லாம் முடிந்தது என்ற எண்ணத்தில் இருந்தவர்களுக்கு உயிர்ப்பிற்குப் பின் ஏற்பட்ட இயேசுவின் தோற்றங்கள் 'ஆவியைக் காண்பதான' ஓர் உணர்வைத்தான் கொடுத்தது (லூக் 24:37). எல்லாம் முடிந்தது என்ற எண்ணத்தில் இருந்தவர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு எம்மாவு சென்றார்கள். வழிநெடுகப் பயணம் செய்தபோதும் இயேசுவைக் கண்டு கொள்ளமுடியாத சீடர்கள் அப்பத்தைப் பிட்டபோது இயேசுவைக் கண்டார்கள். பயணத்தின் இலக்கு மாறுகிறது. அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள் (லூக் 24:33).

யோவான் நற்செய்தியின் பிற்சேர்க்கையில் கூட எல்லாம் முடிந்துவிட்டது என்று எண்ணிய சீடர்கள் மத்தியில் இலக்கு மாறுகிறது. சீமோன் பேதுரு அங்கிருந்த பிற நண்பர் சீடர்களிடம், ''நான் மீன்பிடிக்கப் போகிறேன்'' என்றார். அவர்கள், ''நாங்களும் உம்மோடு படகில் வருகிறோம்'' என்று மீண்டும் மீன்பிடித்தல் ஆரம்பமாகிறது. இந்நிலையில்தான் இயேசு பேதுரு மற்றும் சீடர்களுக்குத் தோன்றி உறுதிப்படுத்துகிறார் (யோவா 21).

இந்தப் பின்னணியை மனதில் கொள்ளும்போது மத்தேயு நற்செய்தியில் இயேசு சீடர்களுக்குக் கொடுக்கும் இந்தக் கட்டளை (மத் 28:16–20) மிகமிக முக்கியமான ஒன்று. முடிந்தது என்று நினைத்தது மீண்டும் பிறக்கின்றதா? இந்தப் பகுதி மத்தேயு நற்செய்தியின் முடிவா? அல்லது மத்தேயு காட்டும் நற்செய்தியின் புதிய விடிவா? இல்லையெனில் இதற்கு வேறுபல அர்த்தங்களும் ஆழங்களும் உள்ளனவா என்று இக்கட்டுரையில் ஆய்வு செய்வோம்.

## 2. ஒரு மலைக்குச் சென்றார்கள்

### 2.1. ஒரு மலைக்கு

பதினொரு சீடர்களும் இயேசு தங்களுக்குப் பணித்தபடியே கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்குச் சென்றார்கள். அக்காலத்தில் மலை இறைவனின் உடனிருப்பாகக் கருதப்பட்டது.

எகிப்துக்குச் சென்று, ''என் மக்களைப் போகவிடு'' (விப 4:23), என்று பார்வோன் மன்னனிடம் துணிவோடு பேசி, அடிமைநிலை மக்களை விடுதலைக்குக் கொண்டுவர அனுப்பப்பட்டதே ஒரு மலை அனுபவம்தான். இறைவெளிப்பாட்டின் இடமாக மலை கருதப்பட்டது. மலை இறைவனுடைய உடன்படிக்கையின் இடம். சீயோன் மலை இறை இல்லத்தின் இடம். கார்மேல் மலை எலியாவின் வாழ்விடம் மற்றும் போலி இறைவாக்கினர்களைத் தோற்கடித்த இடம். இயேசு பன்னிரு தூதர்களை மலையின் மீது நிறுவுகிறார் (மாற் 3:13), மலைப்பொழிவு – புதிய மோசேயின் புதுப்பொழிவு (மத் 5, 6, 7), மலையில் நடந்த இயேசுவின் உருமாற்றம் (மாற் 9) ஆகியன மலை என்பது எல்லாம் வல்ல இறைபிரசன்னத்தின் அடையாளம் என்பதைக் காட்டுகிறது.

மத்தேயு நற்செய்தியில் மலை என்பது மிக அதிகமாக இடம் பெறும் ஒன்று. பல நிகழ்வுகள் மலையில் நடைபெறுகின்றன. ஆக, மலை என்பது இறைவெளிப்பாட்டின் மிக முக்கியமான தளமாக மத்தேயு நற்செய்தியில் விளங்குகிறது[1] (5:1; 8:1; 14:23; 15:29; 17:1, 8; 24:3).

### 2.2. மலையும் மறைத்தூதுக் கட்டளையும் (28:16)

சீனாய் மலையில் மோசேக்குக் கிடைக்கப்பெற்ற பணிக்கட்டளை போன்று கலிலேய மலையில் சீடர்களுக்குக் கிடைக்கப்பெற்ற மறைத்தூதுப்பணிக் கட்டளை என்றும் பொருள் கொள்ளலாம். மலைப்பொழிவுப் (மத் 5) பகுதியே ஒரு புதிய ஆரம்பம். அதுபோன்று மறைத்தூதுப்பணியும் மலையின்மீது நிகழும் ஒரு புதிய ஆரம்பம்.

எனவே, மலை என்பது இறைப்பிரசன்னம், இறைவெளிப்பாடு, புதிய கட்டளை, புதிய பணிப்பொழிவு என்று பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது. இங்கு, இயேசு தம் சீடர்களை மறைத்தூதுப்பணிக்கு அனுப்புகிறார் என்றால் மேலே சொன்ன எல்லா அம்சங்களும் இங்கு இடம் பெறுகின்றன.





இருப்பினும், ஒருமுறை அலகை இயேசுவை உயர்ந்த மலைமீது கொண்டு சென்று எல்லா அரசுகளையும், கொடுக்க முன்வந்தபோது மறுத்தார் இயேசு (மத் 4:8). ஆனால், இப்போது மலையில் எல்லா அதிகாரங்களையும் பெறுகிறார் (மத் 28:18). இந்த மாற்றம் தடுமாற்றம் அல்ல; மாறாக, சிலுவையின் தழும்பு ஏற்படுத்திய மாற்றம்.[2] சிலுவைகள் இன்றி அதிகாரம் இல்லை. வாழ்வு, பணிகள் இன்றிக் கட்டளைகள் இல்லை. நற்செய்தி அறிவிப்புகள் இன்றிப் புதிய உடன்படிக்கைகள் இல்லை. இலக்குகள் இன்றி இமயம் இல்லை.

## 3. கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்குச் சென்றார்கள்

இயேசுவின் பிறப்பு யூதேயாவாக – பெத்லகேம் – இருந்தாலும் அவரின் வளர்ப்பும் பணித்தொடக்கமும் கலிலேயாவில் நிகழ்ந்தன. ''யோவான் கைது செய்யப்பட்டதை இயேசு கேள்விப்பட்டுக் கலிலேயாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்'' (மத் 4:12; மாற் 1:14). இயேசுவின் வாழ்வில் கலிலேயா ஒரு புதிய தொடக்கத்தின், ஒரு புதிய பணியின் அடையாளம்.

மாற்கு நற்செய்தியில் இம்மாபெரும் கட்டளையை இறுதியாக பதினொருவரும் பந்தியில் அமர்ந்திருந்த பொழுது இயேசு வழங்குகிறார் (மாற் 16:14-15). இங்குக் கலிலேயா பற்றிய குறிப்பு இல்லை. லூக்கா நற்செய்தியில் இயேசு சீடர்களை எருசலேமில் தங்கியிருக்கச் சொல்கிறார் (லூக் 24:49). ''பாவ மன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்'' என்று எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் பறைசாற்றப் பணிக்கின்றார் (லூக் 24:47-49).

யோவான் நற்செய்தியில் இயேசு சீடர்களுக்குத் தோன்றி ''தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்'' (யோவா 20) என்று பணிக்கின்றார். யோவான் நற்செய்தியின் பிற்சேர்க்கையில் (21) இயேசு எழுவருக்குத் தோன்றுதல் மற்றும் பேதுரு நிகழ்வு காட்டப்படுகிறது. அங்கும் கலிலேயாபற்றிய குறிப்பு இல்லை.

மத்தேயு நற்செய்தியில் கலிலேயாவுக்குச் செல்லுங்கள் என்பது மூன்று இடங்களில் தெளிவாகக் குறிப்பிடப்படுகிறது (மத் 26:32; 28:7; 28:9-10). மத்தேயு நற்செய்தியில் கலிலேயாவுக்கு ஏன் இந்த அழுத்தம்?

யூதேயா, எருசலேம் என்பது யூதர்களின் அதிகாரத்தின் மையம். ஆலயம், யூத ஆளுமையின் அடையாளம். ஆக, யூதேயா, எருசலேம், ஆலயம் போன்றவை யூத ஆளுமையின், அடையாளத்தின் மையம். யூதத் தூய்மையின் மொத்தமும் அங்கிருந்தது. ஆனால், கலிலேயா இந்த நடுவத்திலிருந்து வெகுதூரத்தில் இருந்தது. கலிலேய மனிதர்களும், வாழ்வுப்பாணிகளும் யூதேய யூதர்களைக் கவரவில்லை. ஏனெனில் கலிலேயர்களின் பேச்சே அவர்கள் யாரென்று காட்டிக் கொடுத்துவிடும் (மத் 27:73; மாற் 14:70). காரணம், கலிலேயா பல நாடுகளின் சங்கமமாக, புகலிடமாக இருந்தது.[3] மத்தேயு நற்செய்தியில் கலிலேயா புற இனத்தார் வாழும் பகுதியாகவே காட்டப்படுகிறது (மத் 4:15).

### 3.1. கலிலேயா – ஒரு புதிய நடுவம்

கலிலேயா என்ற புதிய நடுவம் உருவாகக் காரணமே உயிர்ப்பும், உயிர்த்த இயேசுவுமாகும். உயிர்த்த இயேசுவே சீடர்களைக் கலிலேயாவிற்கு அழைக்கின்றார் (மத் 28:16 - 4:12-16). தம்மைப்போன்று கலிலேய அடையாளங்களால் தமது மறைத்தூதுப்பணியைத் தொடங்கச் செய்கின்றார் (மத் 2:23).[4] இந்த மாபெரும் இடமாற்றமே உயிர்ப்பின் சக்தியால் வந்தது. எனவேதான், கலிலேயாவில் மறைத்தூது சொல்லப்பட்ட காரணத்தால் புறவினத்தாரின் கலிலேயாவே இயேசுவின் உயிர்ப்பை எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லும் இடமாகிறது.[5]

மேலும், சீடர் குழுமம் கலிலேயா செல்கிறது. காரணம், எருசலேமில் இழந்ததைக் கலிலேயாவில் கண்டடைகின்றார்கள். அவருடைய பணிக்காலத்தில் குறுகலாகக் காட்டப்பட்ட அவருடைய பணி (மத் 15:24) இந்த மறைத்தூதுக் கட்டளை மூலமாக அனைத்து நாடுகளுக்கும் விரிவாக்கப்படுகிறது.

ஆனால் இயேசுவும், அவரது சீடர் குழுமமும் ஒரு புதிய தொடக்கத்தை உருவாக்குகிறார்கள். கலிலேயா இனி வரும் புனிதத்தின் நடுவம்,[6] கலிலேயா இனி புதிய மோசேயின் நடுவம், புதிய இறையாட்சியின் நடுவம்.

கலிலேயா என்பது இயேசுவின் பணித் தொடக்கம், எனவே, திருஅவையின் பணித் தொடக்கம் என்றும் கொள்ளலாம்.[7] மேலும், கலிலேயா என்பது எல்லா மக்களின் இருப்பிடம் மற்றும் இறைவெளிப்பாடுகளின்





உச்சத்தின் அடையாளம்[8] (மத் 5:1; 8:1; 14:23; 15:29; 17:1-9) என்றும் கொள்ளவேண்டும்.

கலிலேயாவின் மறைத்தூதுப்பணி வழங்கப்பட்டதன் நோக்கமே இயேசுவின் இறையாட்சிப் பணியும் வாழ்வும் பழைய உடன்படிக்கையின் மக்களுக்கு மட்டுமல்ல, உயிர்ப்பின் விளைவால் உருவான புதிய உடன்படிக்கையின் எல்லா மக்களுக்காகவுமே என்பது நிரூபிக்கப்படுகிறது.[9]

### 3.2. புதிய புனிதம்... புதிய தொடக்கம்

மரபுகள் மாற வேண்டும். 'இவன் கலிலேயன்தான்' என்ற மரபுகள் மாற வேண்டும். 'நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரக்கூடுமோ' (யோவா 1:46) என்கின்ற மரபு அடக்குமுறைகள், அழுக்குமுறைகள் மாறவேண்டும். புனிதம் நகர்கிறது. புனிதம் நகர் விட்டு நகர்கிறது. கலிலேயா யூதேயாவாகிறது. முதன் முயற்சிகள், புதிய பணிகள் புதிய நடுவத்திலிருந்து ஆரம்பிக்கட்டும். விளிம்புகளே நடுவங்களாக மாறும் ஒரு புரட்டிப்போடும் நிலை உருவாகும். அதுதான் சில வேளைகளில் புதிய விடியலுக்கான அடிப்படைகளும் அடையாளங்களுமாகும். ''முன்பு இருந்த விண்ணகமும் மண்ணகமும் மறைந்துவிட்டன... புதியதொரு விண்ணகத்தையும் புதியதொரு மண்ணகத்தையும் கண்டேன்'' (திவெ 21:1). புதிய எருசலேம் என்னும் திருநகர் கடவுளிடமிருந்து விண்ணகத்தை விட்டு இறங்கி வரும் (திவெ 21:2). இந்த நகருக்குள் கோவில் காணப்படவில்லை (திவெ 21:22). காரணம், கோவில் இடம் மாறவில்லை. மாறாக, கோவில் மனிதமாகியிருக்கின்றது. 'ஆண்டவரும், ஆட்டுக்குட்டியுமே அதன் கோவில்' (திவெ 21:22) என்றாகியது. யூதேயா, எருசலேம் தூய்மை என்பது இடம்மாறி கலிலேயாவிற்கு அத்தூய்மை பயணிக்கிறது.

## 4. அவரைக் கண்டு பணிந்தார்கள்... ஐயமுற்றார்கள்

கலிலேயாவில் மீண்டும் இயேசுவோடு ஒன்றிணைந்த சீடர்கள் இயேசுவைக் கண்டு பணிந்தார்கள். சிலரோ ஐயமுற்றனர். பணிந்ததற்கும், ஐயமுற்றதற்கும் காரணங்கள் உள்ளன. இயேசுவுக்கு ஏற்பட்ட ஒரு சிலுவை மரணமும் அதன்பிறகு நடந்த உயிர்ப்பு நிகழ்வும் சீடர்களின் இந்த இரு வேறு அனுபவங்களுக்கும் அடிப்படைகள்.

லூக்கா, யோவான் நற்செய்திகளில் இயேசு சீடர்களுக்குத் தோற்றமளிக்கிறார். அப்படியானால் இங்கு இயேசுவின் தோற்றம் மற்றும் அது சார்ந்த தரவுகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆனால், மத்தேயு நற்செய்தியின்படி சீடர்கள் இயேசுவைப் 'பார்க்கிறார்கள்'. 'காட்சி' என்பது குறைந்து இங்கு 'பார்வை' மட்டும் முக்கியத்துவம் பெறுகிறது. காரணம், இங்கு மையம் பெறுவது 'செய்தியே' தவிர, 'காட்சிகளும்', சில காட்சி சார்ந்த குறிப்புகளும் அல்ல.

### 4.1. ஐயமுற்றார்கள்

"சிலரோ ஐயமுற்றார்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "அவர்கள் பணிந்தார்கள், எனினும் ஐயமுற்றார்கள் என்றும் மொழிபெயர்க்கலாம் (மத் 2:9,14; 4:4; 9:31).[11] இது தவிர்த்து சீடர்கள் பணிந்தார்கள், வேறு சிலரோ ஐயமுற்றார்கள் என்று மொழிபெயர்த்தல்,[12] வலுக்கட்டாயமாகச் சீடர்களுக்குக் களங்கமில்லா நல்ல பெயரை வாங்கிக் கொடுக்கும் ஒரு முயற்சியாகும்.

உயிர்ப்பின் நிகழ்வுகளில் ஐயமுறுதல் என்பது சீடர்களின் இயல்பான அனுபவமாகவே இருந்தது (லூக் 24:11,12,24; யோவா 20:24-25; மாற் 16:14). எனவே, சீடர் குழுமத்தில் உயிர்த்த இயேசுவை நம்பினோர், ஐயமுற்றோர் என்ற வேறுபாடுகள் இல்லை. ஏறக்குறைய எல்லாச் சீடர்களுமே ஐயமுற்றார்கள் என்றும் எடுத்துக்கொள்ளலாம்.[13] காரணம் இயேசுவின் சாவு தந்த அதிர்ச்சியும் இயேசுவின் கொண்ட உயிர்ப்பு தந்த அதிர்வும் அவ்வாறு அமைந்திருந்தன.

மேலும், மத்தேயு நற்செய்தியைப் பொறுத்தவரை ஐயமுறுதல் சீடர்களின் ஒரு தொடர் அனுபவமாகவே இருந்துள்ளது (14:31; 16:8; 17:20; 21:30). இயேசு வாழ்ந்தபோதே சீடர்களிடம் நம்பிக்கை மிக அரிதாகவே காணப்பட்டது என்பதும் உண்மை. எனவே, சீடர்கள் ஐயமுற்றார்கள் என்பதை அப்படியே புரிந்துகொள்வது சீடர்களின் ஒட்டுமொத்த வாழ்வையும் அனுபவத்தையும் குறிக்கும் ஒரு செயலேயன்றி, அவர்களின் ஆளுமையைக் குறைக்கும் ஒன்றல்ல.

### 4.2. குறைவானதை நிறைவாக்கினார்

இயேசுவோடு வாழும்போதே குறைவான நம்பிக்கை உள்ளவர்கள் என்று இயேசு சீடர்களை விட்டுவிடவில்லை, சீடர்களும் இயேசுவை விட்டுவிடவில்லை.





இது எப்படி நடந்தது என்று பகுத்தறிவு சார்ந்த ஒரு கேள்வி கேட்டால் அதற்கு விடை இல்லை. காரணம் இருந்த குறையோடும், குறைகளோடும் இயேசு அவர்களோடு வாழ்ந்தார்; சீடர்களும் இயேசுவோடு இயல்பாகவே வாழக் கற்றுக்கொண்டனர்.

இந்த நம்பிக்கைக் குறைவை வைத்துத்தான் உயிர்த்த இயேசு உலகெங்கும் செல்லும் மறைத்தூதுப்பணிக் கட்டளையைக் கொடுக்கின்றார். இவர்களுக்கு இது எப்படிச் சாத்தியமாகும் என்ற கேள்வி எழலாம். அந்த இடத்தில் விடை தருபவரும் உருவாக்குபவரும் உயிர்த்த ஆண்டவர். மனித பலத்தால் இது நடைபெறுவது அல்ல. மாறாக, உயிர்த்த ஆண்டவர் கொடுக்கும் ஆற்றலினால் இது நடைபெறும்.

## 5. விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரம்

### 5.1. தொடர்புடைய பழைய ஏற்பாட்டுப் பகுதி

இந்தப் பகுதியோடு மிகத் தொடர்புடைய பழைய ஏற்பாட்டுப் பகுதி தானியேல் 7:14 ஆகும்.

| தானியேல் 7:14 | மத் 28:18 |
|---|---|
| ஆட்சியுரிமையும் மாட்சியும் அரசும் | அனைத்து அதிகாரமும் எனக்கு |
| அவருக்குக் கொடுக்கப்பட்டன. | அருளப்பட்டிருக்கிறது. |
| எல்லா இனத்தாரும் நாட்டினரும் | எல்லா மக்களினத்தாரையும் |
| மொழியினரும் அவரை வழிபட வேண்டும் | சீடராக்குங்கள் |
| அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும் | உலக முடிவுவரை எந்நாளும் |

**இரண்டிலும் உள்ள ஒற்றமை:** தானியேலில் வரும் மனுமகன் அனைத்து அதிகாரங்களையும் கொண்டவராகவும், மத்தேயுவின் உயிர்த்த ஆண்டவர் இயேசு அனைத்து அதிகாரம் கொண்டவராகவும் காட்டப்படுகிறார்.

**இரண்டிலும் உள்ள வேற்றுமை:** தானியேல் பகுதியில் வரும் மனுமகன் ஓர் அரசன். எனவே, பூமியின் அனைத்து மக்களும் அவருக்குப் பணிவிடை புரிவர். ஆனால் உயிர்த்த இயேசுவோ, "மனுமகன் பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரிய" (மத் 20:28) என்று காட்டுகிறார். எனவே இங்கு

அதிகாரம் என்பது பணிவிடை பெறுவதில் அல்ல. பணி புரிவதிலும், அதையே சீடர்களை உருவாக்கிப் பணிபுரிய வைப்பதிலும் அடங்கியுள்ளது.[14]

## 5.2. இயேசுவின் அதிகாரமும் சீடர்களின் அதிகாரமும்

இயேசு சீடர்களுக்குக் கொடுக்கும் அதிகாரம் இயேசுவின் அதிகாரத்தைப் போன்றதே. எப்படி இயேசுவின் அதிகாரம் முழு உலகம் தழுவியதோ அதேபோன்று மறைத்தூதுப்பணிக் கட்டளையும் முழு உலகம்- எல்லா நாடுகளையும் தழுவியதாகும்.[15]

எல்லா அதிகாரமும் எனக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்றால் இப்போது இயேசு பெற்றிருக்கும் அதிகாரம் அவரது இறப்பு, உயிர்ப்புக்கு முன் இருந்ததைவிட மேலானது. இயேசு பணி செய்தபோது அதிகாரம் கொண்டிருந்தார் (மாற் 1:27). நோய்கள், பேய்கள் நீங்க அப்போது இயேசு கொண்டிருந்த அதிகாரத்தைவிட இங்குக் கூறப்படும் அதிகாரம் மேலானது. இது உயிர்ப்பிற்குப் பிறகு அனைத்திற்கும் ஆண்டவராய் மாறிய ஒரு நிலையும் அதைத் தொடர்ந்து கிடைக்கும் அதிகாரமும் ஆகும்.[16] காரணம், தந்தையின் விருப்பத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டதால் தந்தையிடமிருந்து பெற்ற மாபெரும் பரிசு இந்த அதிகாரம். மகன் மூலமாகத்தான் தந்தையின் இந்த அதிகாரம் உலகிற்கு வழங்கப்படுகிறது.[17]

தந்தையும் மகனும் ஒருவரையொருவர் முழுமையாக அறிந்து கொண்ட குறைவில்லாத அந்த 'அறிவும்' (மத் 11:27-30) 'அதிகாரமும்' (மத் 28:18) மகனுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது.[18] இந்த மாபெரும் அதிகாரம் உலகம் முழுமையும் இயேசுவின் சீடத்துவமாக மாற்றப்பட, பயன்படுத்தப்படவேண்டிய ஓர் அதிகாரமாகும்.

## 5.3. மறைத்தூது அதிகாரமும் பொதுவான அதிகாரமும்

இயேசு திருத்தூதர்களை அனுப்பும்போது அதிகாரம் கொடுத்து அனுப்பினார். தீய ஆவிகளை ஓட்டவும் (மாற் 6:7) மேலும் நோய் நொடிகளைக் குணமாக்கவும் (மத் 10:1) அதிகாரம் கொடுத்தார். ஆனால் மறைத்தூதுக் கட்டளையில் கொடுக்கப்படும் அதிகாரம் உலகெங்கும் சென்று சீடர்களை உருவாக்கும் அதிகாரம். இரண்டிற்கும் ஒரு சிறிய வேறுபாடு உள்ளது. வெவ்வேறு பணிகளுக்காகச் சீடர்களை அனுப்பும்போது கொடுக்கப்படும் அதிகாரம் சில பணிகளுக்காக மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், மறைத்தூதுக் கட்டளையால்





வழங்கப்படும் அதிகாரம் பணிகளைத் தாண்டிய சில வாழ்வு நிலைகளைக் குறிப்பதாகும்.

இயேசு அனைத்து அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும் அவை பணிவிடை புரியவே என்பதை வாழ்வு முழுவதும் சொல்லாக, செயலாகக் கொண்டிருந்தார். பாதங்களைக் கழுவிப் பணிவிடை புரியும்போது "ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால்" என்று சொல்லியவர், 'நான் செய்ததுபோல நீங்களும் செய்யுங்கள்' என்று பணிக்கின்றார் (யோவா 13:14-15). எனவே, இயேசுவின் இந்த அதிகாரம் பணிவிடை புரியும் அதிகாரம் ஆகும்.

# 6. எல்லா மக்களினத்தாரையும்

சீடராக்குவது என்பது உலகளாவியது. யூதர்களையும் மற்றும் அனைத்து மக்களையும் உள்ளடக்கும். எல்லா மக்கள், மொழி, நாடு, இனம் என அனைத்தும் இயேசுவால் உள்ளடக்கப்பட்டது.[19] யூதர்களைத் தவிர்த்த ஒரு சீடத்துவம் இங்குக் குறிப்பிடப்படவில்லை.[20] புற இனத்தாரைத் தவிர்த்த சீடத்துவமும் குறிப்பிடப்படவில்லை. மேலும், கடவுளின் திட்டத்தில் உலகு முழுவதுமே இயேசுவின் சீடத்துவத்தில் பங்கு பெற வேண்டும். எனவே யூதர்களும் பிற இனத்தினரும் இதில் அடங்குவர் என்பது தெளிவு.[21] மத்தேயு நற்செய்தியாளரும் தமது நற்செய்தியின் தொடக்கத்தில் கீழ்த்திசை ஞானிகள் நிகழ்வு மூலமாக இயேசு அகில உலகம் தழுவும் ஒரு நபர் என்பதைக் காட்டுகிறார் (மத் 2:1-12).[22] பழைய ஏற்பாட்டில்கூடப் பிரிந்தவர்களும், பிற இனத்தவர்களும் இஸ்ரயேல் குழுமத்தோடு ஒன்றாகச் சேரும் கனவுகள் இடம் பெறுகின்றன (எசா 2:1-4; 42:1-4; 60:1-3; செப் 3:8-11; திபா 86:9).

## 6.1. இயேசுவின் பார்வையில் எல்லா மக்களினத்தாரும்

இயேசுவின் சீடத்துவத்தில் அனைவருமே பங்கெடுத்தனர். பாலஸ்தீனத்தின் பல சமூக நிலைகளிலிருந்தும் சீடர்கள் இயேசு குழுமத்தில் பங்கு பெற்றிருந்தனர். இயேசுவின் இறைவேண்டல் கூறும் 'எல்லாரும் ஒன்றாய் இருக்கும்படி' (யோவா 17:11) என்ற இயேசுவின் இறைவேண்டலே நனவாக்கப்பட வேண்டியது. இயேசுவின் பணிக்காலத்தில் ஒருவேளை

குறுகலாகப் பார்க்கப்பட்ட பணி, இலக்கு இவ்விடத்தில் எல்லா மக்களுக்கும் என்ற பணி, இலக்காக மாற்றப்படுகிறது.

ஆகையால் பிரிவு, பிளவு என்பது இறை விருப்பத்திற்கு, இயேசுவின் திட்டத்திற்கு எதிரானது. கடவுளின் பெயரால் மனம் சிதைக்கப்படுவது இறை விருப்பம் அல்ல; கடவுளைக் காப்பாற்ற மனிதம் அழிவதும் இறை இயல்பு அல்ல. வல்லவரான கடவுளுக்குத் தம்மைக் காத்துக் கொள்ளத் தெரியும். எனவே, கடவுளைக் காப்பாற்றுகிறோம் என்ற போலி வேடத்தில் மனிதம் சிதைவதும், குலைவதும் இறை விருப்பமல்ல. இது குற்றவாளி மனிதர்களின் விருப்பமே அன்றி குற்றமில்லாக் கடவுளின் எண்ணம் அல்ல. தங்களது போலியான, பொய்யான, அழுக்கான, குற்றமுள்ள ஆசைகளையெல்லாம் கடவுள்மேல் போட்டு அவற்றைக் கடவுள் எண்ணம் என்று சொல்வது தூய்மையான கடவுளையே அழுக்காக்குவது ஆகும்.

## 7. சீடராக்குவோம்

மாற்கு நற்செய்தியின் இறுதியில் (16:15) ''உலகெங்கும் சென்று'' என்றுள்ளது. மாற்கு நற்செய்தியில் இயேசுவும் பல இடங்களுக்குச் சென்று நற்செய்தியைப் பறைசாற்றுபவராகக் காட்டப்படுகிறார் (1:14,38-39). மாற்கு நற்செய்தியில் நற்செய்தியை அறிவிப்பவர் பல இடங்களுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்பவராகக் காட்டப்படுகிறார். ஆனால், மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் 'சீடர்களை உருவாக்குகிறார்'. புதிய ஏற்பாட்டில் சீடராக்குதல் என்று மொத்தம் நான்கு இடங்களில் வருகிறது. அதில் மூன்று இடங்கள் மத்தேயு நற்செய்தியிலும் (13:52; 27:57; 28:19) ஒன்று திருத்தூதர் பணி நூலிலும் (14:21) இடம் பெற்றுள்ளன. மலைப்பொழிவுப் பகுதியில் (5:1-2) இயேசு கற்பிக்கும் ஓர் ஆசிரியராகவே (அறிவிப்பாளராக அல்ல) காட்டப்படுகிறார்.[23] எனவேதான் 'சீடராக்குங்கள்' என்பது மத்தேயு நற்செய்தியின் இறுதியான மற்றும் உறுதியான மறைத்தூதுக் கட்டளையாகிறது.[24]

### 7.1. மத்தேயுவும் சீடராக்குதலும்

சீடர்கள் எனும் வார்த்தை மத்தேயு நற்செய்தியில் 73 முறை பயன்படுத்தப்படுகின்றது.[25] காரணம், மத்தேயுவின் குழுமம் ஒரு சீடத்துவக்





குழுமம் ஆகும். ஆசிரியருடைய போதனையைக் கேட்டு, சிந்தித்து, பலன் கொடுக்கும் ஒரு குழுமம் ஆகும் (7:24; 13:23). உவமைகளில் அதிகமாகப் பேசும் மத்தேயுவின் இயேசு தமது இறையாட்சியின் புதிய மறைநூல் அறிஞர்களாக விண்ணரசுபற்றிக் கற்றுக்கொண்டோரைக் குறிப்பிடுகிறார் (13:52). உண்மையான சீடன் எல்லாவற்றையும் கேட்டுக் கற்பாறையின்மீது தனது வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவான் (16:18). மத்தேயுவின் இயேசு பயணிப்பதைக் குறைத்து இறைவார்த்தையைக் கேட்டு, சிந்தித்து, தியானிப்பதை அதிகப்படுத்துபவர்.[26]

### 7.2. யூதப்பாணியும் சீடராக்குதலும்

இயேசுவை ஆசிரியராக ஏற்றுக்கொண்ட யூதர்கள் தங்கள் பாணியிலேயே இயேசுவின் வாழ்வையும் வார்த்தையையும் பார்த்தனர். ராபிகளின் பின்னணியில் இயேசுவின் வார்த்தை கற்றுக் கொள்ளப்பட்டு, கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கலாம். காரணம், மத்தேயு காட்டும் திருஅவை யூதப்பாணியிலான வாசித்தல், கேட்டல், தியானித்தல் அடிப்படையில் வளர்ந்த திருஅவை. எனவே 'அமரும்' ஆசிரியரையும், மாணவரையும் முன்னிறுத்துவதேயன்றி, அவசரமாகப் பயணிக்கும் ஆசிரியரையும், மாணவரையும் அல்ல.[27] எனவே சீடராக்குங்கள் என்பது இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்ட கிறித்தவ ராபிகள் கையாண்ட வாசித்தல், கேட்டல், தியானித்தல், பிறரை உருவாக்குதல் - இதன் வழியாக இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொள்ளும் சீடத்துவ முறையைக் குறிக்கும்.

சீடர்கள் - பின்தொடர்வோர், கற்றுக்கொள்வோர் என்பது பொதுவாக இருந்தாலும் மத்தேயு நற்செய்தியில் சீடர்கள் கேட்போர், தியானிப்போர், மனதில் இருத்துவோர், இதன் மூலம் இயேசுவின் சீடராவோர் என்பதைக் குறிக்கும்.

## 8. தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரால்

மூவொரு இறைவனின் பெயர் என்பது திருஅவையின் தொடக்கக் காலத்தில் இல்லாத ஒன்றாக இருந்திருக்கலாம். தொடக்கக் காலங்களில் ''இயேசுவின் பெயரால்'' திருமுழுக்குக் கொடுத்திருக்கலாம் (திபா 2:38; 8:16; 10:48; 19:5).[28]

பெயர் – ஓர் ஆளுமையைக் குறிக்கும்; எனவே தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரால் திருமுழுக்கு எனும்போது அந்த ஆளுமையோடு ஒன்றிணைக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு என்பதற்குப் பயன்படுத்தப்படும் வார்த்தை முறைப்படி துணிகளை நிறமாற்றத்திற்காக மூழ்கி எடுப்பதைக் குறிக்கும். அதேபோன்று புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு எனும்போது மூழ்கி எடுத்தல், அதன் மூலமாக அவராக, அதுவாக மாறுதல் என்றும் பொருள் கொள்ளலாம். ஆகவே, மூவொரு இறைவன் பெயரால் திருமுழுக்கு எனும்போது திருமுழுக்குப் பெறுபவர் அந்த மூவொரு இறைவனுடைய தோழமையில் ஒன்றிணைக்கப்படுகிறார். மூவொரு இறைவனில் ஒன்றறக் கலந்துவிடுகிறார். கடவுளின் திரு அவையின் வாழ்க்கைமுறையில் ஒன்றிணைந்தவராகிறார்.[29] தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரால் ஏற்படும் திருமுழுக்கினால் அவர்கள் கிறிஸ்துவின் சீடர்களாகிறார்கள். ஒன்றறக் கலப்பது மட்டுமல்ல, மத்தேயு குறித்துக் காட்டும் சீடத்துவமுறையிலும் பணியிலும் பங்கெடுக்கின்றார்கள்.[30] காரணம், அவர்கள் இயேசுவையே மெசியாவும் ஆண்டவருமாக நம்பி ஏற்றுக்கொண்டவர்கள்.

### 8.1. அன்புக்கட்டளையும் பிற கட்டளைகளும்

தந்தை, மகன், தூய ஆவியார் என்கின்ற குடும்ப உறவில் கலப்பதும், மனிதர் எதைக் கேட்டாலும் கிடைக்கப்பெறுவதும் ஒரு நிபந்தனையில் அடங்கி உள்ளது. இயேசுவை அன்பு செய்வதே அந்த ஒரு நிபந்தனை. இயேசுவை அன்பு செய்வது என்பதே அவர் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதாகும் (யோவா 14:15).[31]

கட்டளைகளைக் கடைப்பிடியுங்கள் என்பது மீண்டும் பழைய ஏற்பாட்டுக் கட்டளைகளுக்குத் திரும்புவது அல்ல. மாறாக, இயேசுவின் புதிய கட்டளைகளைச் செயல்படுத்துவதாகும்.[32] இயேசுவின் மலைப்பொழிவுகளில் (5, 6, 7) மத்தேயு புது வாழ்வுக்கான நெறிகளைத் தொகுத்துக் கொடுக்கிறார். அவையே புதிய மோசேயின் மலைப்பொழிவுகள் (பழைய மோசே – சீனாய் மலைச்சட்டங்கள்).

இந்தப் புதிய மலைப்பொழிவுகள் பழைய ஏற்பாட்டுச் சட்டங்களைத் தாக்கிப் பேசுவன அல்ல, தாண்டிப்போவன; மீறிப்போவன அல்ல, மாறாக, அன்பில் நனைந்து மீண்டும் எழுவன. அன்று நியாயப்படுத்தப்பட்ட சில வன்முறைகள் இன்று இயேசுவின் பார்வையில் முற்றிலுமாக வேரோடு





மாற்றப்படுகின்றன. அன்றைய சட்டங்களுக்கு ஒரு புதிய பார்வையே அன்றி அன்றைய சட்டங்களைப் புதைப்பது அல்ல.

ஓய்வு நாள் சட்டங்களையும் ஆண்டவர் இயேசு மீறவேயில்லை. சூம்பிப்போன மனிதருக்கு குணம் கொடுத்ததால், அன்பின்றி வறட்சியாகிப் போன ஓய்வுநாள் சட்டத்தை அன்பால் நனைத்தார். இதனால் ஒரு பார்வையில் இரு குணங்கள், சூம்பிப்போன கையும் நீட்டப்பட்டது; சூம்பிப்போன ஓய்வு நாள் சட்டமும் நீட்டப்பட்டது. பெருங்குற்றத்தில் அகப்பட்ட பெண்ணுக்குக் கல்லடி மரணம் கொடுப்பது என்பது மோசே கொடுத்த சட்டம் (லேவி 20:10; இச 22:22-24). இயேசு அந்தச் சட்டத்தை ஒருபோதும் மீறவில்லை; ''கல் எறியட்டும்'' (யோவா 8:7) என்றுதான் சொல்கிறார். ஆனால் ஒரு நிபந்தனை. ''உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில்'' ... (யோவா 8:7) என்று இயேசு தாமாகச் சொன்னார். மீறுவதற்கு உரிமையில்லை. ஆனால், தாண்டுவதற்கு உரிமையிருந்தது. இது இயேசு எடுத்துக் கொண்ட ஓர் உரிமை. இந்த உரிமையும் இதுபோன்ற பல 'உரிமைகளும்' இயேசு எடுத்துக் கொண்டார் எனில் அதன் அடிப்படையே, அவரது பார்வை முழுவதுமே அன்பில், அன்பால் நனைந்திருந்த ஒன்றாகும்.

இவ்வாறு, எல்லா மனிதர்களிடமும் எல்லாச் சூழ்நிலைகளிலும் எல்லைகளையும் தாண்டி அன்பு செய்வதே இயேசுவின் புதிய கட்டளை. அந்தக் கட்டளையைச் சீடர்கள் கடைப்பிடிக்கும்போது (யோவா 14:15) அவர்கள் இயேசுவையே அன்பு செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்களே தந்தையின் (இறைவனின்) நிறைவைப் பெற்றுக் கொண்டவர்கள் என்பதற்கான ஒரே வழி (மத் 5:44-48).

## 9. திருமுழுக்குக் கொடுங்கள்

### 9.1. திருமுழுக்குக் கொடுங்கள்

சீடராக்குங்கள் என்பது இரு விதங்களில் செய்யப்பட வேண்டும் என்று உணர்த்தப்படுகிறது. ஒன்று: ''திருமுழுக்குக் கொடுங்கள்,'' மற்றொன்று: ''கட்டளைகளைக் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள்.''

திருமுழுக்குக் கொடுப்பது என்பது கிறித்தவச் சடங்குமுறை என்பதைவிட அதற்கு முன்பாகவே இருந்த ஒன்று என்பதே சரி. திருமுழுக்கு யோவானின்

திருமுழுக்குச் செயல்களை நற்செய்திகளில் காணலாம். இயேசுவே திருமுழுக்கும் பெற்றிருக்கிறார் (லூக் 3).

திருத்தூதர் பவுல் தாமாகப் பிறருக்கு திருமுழுக்குக் கொடுக்க வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டாதவர் (1 கொரி 1:14). அவரது காலக்கட்டத்தில் திருமுழுக்கு என்பது கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு அதிக அளவு அழுத்தம் கொடுக்கப்படாத ஒன்றாக இருந்திருக்கலாம்.[33]

பவுலடியாரைப் பொறுத்தவரை ஓர் அவசரக் காலக்கட்டத்தில் வாழ்ந்தவர். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குமுன் தாம் உலகெங்கும், உலகின் கடையெல்லைவரைக்கும் சென்று நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்ற துரித நிலையில் இருந்தார் (உரோ 15:19). அவரது பணியின் அழுத்தமும் அவசரமும் நற்செய்தி அறிவிப்பிலே அடங்கியிருந்தது. எனவேதான், தம் கடிதங்களில் நற்செய்தி (41 தடவைகள்), நற்செய்தி அறிவித்தல் (21 தடவைகள்) என்று குறிப்பிடுகிறார். சீடராக்குவோம் (14 தடவைகள்), படிப்பினை (4 தடவைகள்) மட்டுமே குறிப்பிடுவார். ஆனால், தம்மை 'அப்போஸ்தலர்' என்று சொல்வதிலே விருப்பமும் அழுத்தமும் அதிகம் கொண்டவர். எனவே பவுல் பல இடங்களுக்கும் சென்று நற்செய்தி அறிவிப்பவராகத் தோன்றுவார்.[34] இயேசுவின் விண்ணேற்பிற்குப் பிறகு உடனடியாக நடந்த முதல் அவசரச் செயல் நற்செய்தி அறிவித்தல் என்பதாகும். காலம் செல்லச் செல்ல, மத்தேயு குழுவினர் இந்த அவசர நிலையிலிருந்து விலகி இயேசுவை, அவர் கற்பித்ததைக் கேட்டு, சிந்தித்து, தியானித்து கிறித்தவ அறநெறிக்குள் மெல்லப் புகுந்து அதன் அடையாளமாகப் புகுமுகத் திருமுழுக்கையும் பெற்றுக் கொண்டனர். கற்பித்தல் இல்லாத திருமுழுக்குத் தேவையல்ல; முதலில் கற்பித்தல்; பின்னர் தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரால் திருமுழுக்கு என்பதுவே மத்தேயு குழுவினரின் சீடத்துவமாக அமைந்திருந்தது.

## 9.2. கற்பித்தவற்றைக் கற்பியுங்கள்

### 9.2.1. இயேசு ஓர் ஆசிரியர்

இயேசு ஓர் ஆசிரியர் என்பது புதிய ஏற்பாட்டில் வெளிப்படையாக விளங்கும் ஒன்று. 'ஆண்டவர்', 'மீட்பர்', 'போதகர்', 'ரபி', 'ஆசிரியர்' என்று பல விதங்களில் இயேசு அழைக்கப்படுகிறார். குறைந்தது 90 தடவைகளில் இயேசு இந்த அடைமொழிகளால் அழைக்கப்படுகிறார். அதில் 60 தடவைகள்





இயேசுவை 'ஆசிரியர்' என்று மக்களும் மறைநூல் அறிஞரும் சீடர்களும் அடையாளம் காண்கின்றனர். இயேசுவும் தம்மையே ஒருமுறை ஆசிரியர் என்று அழைத்து உறுதிப்படுத்துகின்றார். ''நீங்கள் என்னைப் 'போதகர்' என்றும் 'ஆண்டவர்' என்றும் அழைக்கிறீர்கள். நீங்கள் அவ்வாறு கூப்பிடுவது முறையே. நான் போதகர்தான், ஆண்டவர்தான்'' (யோவா 13:13-14) என்று சீடர்கள் சொன்னதைத் தாம் ஏற்று, அதை உறுதிப்படுத்துகிறார்.

சீடர்கள் கற்றுக் கொடுப்பவர்களாக / ஆசிரியராக மாற வேண்டும் என்று இயேசுவே சொல்வது இங்குதான் (மத் 28:20). புதிய ஏற்பாட்டில் ஒத்தமைவு நற்செய்திகளில் இயேசு மட்டுமே கற்றுக் கொடுப்பவராகக் (ஆசிரியராக) காட்டப்படுகிறார்.[35] இயேசுவிற்குப் பிறகு இந்த மறைத்தூதுக் கட்டளை மூலமாக, சீடர்களும் கற்றுக்கொடுக்கும் அதிகாரத்தையும் பெறுகிறார்கள். எனவே, சீடர்கள் நற்செய்தி அறிவிப்பவர்களாக, திருமுழுக்குக் கொடுக்கக்கூடியவர்களாக மட்டுமல்ல, இயேசுவின் அனைத்துக் கட்டளைகளையும் அனைத்து மக்களுக்கும் கற்றுக் கொடுக்கும் புதிய ஆசிரியர்கள்.

இயேசு கற்றுக் கொடுத்தவற்றை அப்படியே அதன் அர்த்தங்கள் அழுத்தங்கள் மாறாமல், கோணாமல் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார் (திவெ 22:18). இதுதான் இயேசு மனநிலையில் நின்று பேசுவதும், உழைப்பதும் ஆகும். நற்செய்தி அறிவித்தல் நிலையிலும், கற்பிக்கும் விதத்திலும் இயேசுவின் ஆளுமைகள், ஆள்தன்மைகள் மற்றும் எண்ணங்கள், மனநிலைகள் அப்பழுக்கின்றி வருங்கால மரபுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். வசதிக்கேற்றாற்போன்று, வாழ்விற்கேற்றாற்போன்று மாற்றுவதும், தூற்றுவதும் கிறிஸ்துவின் மனநிலை எனும் நேர்கோட்டிலிருந்து விலகுவதாகும்.

# 10. உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்

## 10.1. உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்

இயேசுவின் செய்தியைச் சுமக்கின்றவர்களுக்கு மிகுந்த ஆற்றலும் ஆறுதலும் தரும் ஒரு செய்தி, 'நான் எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்' என்பதாகும். மத்தேயு நற்செய்தியாளர் மட்டும் இயேசுவுக்குத் தமது

நற்செய்தியின் தொடக்கத்தில் இன்னொரு பெயரும் வழங்குவார். ‘அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிட்டு’ (1:23) அழைக்கிறார். “இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார்” (1:23) என்னும் வார்த்தைகளின் அழுத்தமே மத்தேயு நற்செய்தியின் இறுதியிலும் அமைகின்றது. “இதோ! உலக முடிவுரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” (28:20).

இந்தப் பெயரும் வாக்குறுதியும் பழைய ஏற்பாட்டில் தமது பெயரை வெளிப்படுத்திய கடவுளின் பெயரும் ஒன்றாகவே அமைந்துள்ளது. “இருக்கின்றவராக இருக்கின்றவர் நாமே” (விப 3:14) என்று மோசேக்கு – இஸ்ரயேல் மக்களுக்கு – தம்மை வெளிப்படுத்தி உறுதிப்படுத்திய அதே இறைவன் இவ்விடத்திலும் தம்மை வெளிப்படுத்தி ஆற்றல் தருகின்றார்.

### 10.2. ‘உலக முடிவுவரை’

‘நாம் காணும் உலகு, அதன் ஒழுங்குமுறை, அதன் வயதுகள் முடிந்தாலும்’ என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். “நான் உன்னோடு இருப்பேன்” (விப 3:12; 33:14) என்று மோசேயை உறுதிப்படுத்திய இறைவனைப்போன்று இயேசுவும் தமது மறைத்தூதுக் கட்டளையைச் சுமந்து செல்லும் அனைவரையும் உலகின் வயதும் வரம்பும் முடியும்வரை உடனிருந்து உறுதிப்படுத்துகிறார்.

## 11. மறைத்தூதுக் கட்டளையும் உயிர்ப்பும்

நான்கு நற்செய்திகளிலும் மறைத்தூதுக் கட்டளைகள் வருகின்றன. அவை இயேசுவின் உயிர்ப்பை மையமாக வைத்தே உருவானவை. காரணம், உயிர்ப்பின் இன்னொரு வடிவே மறைத்தூதுப்பணி. சாவையே தீர்த்துக் கட்டிய உயிர்ப்பு தன்னிலே முடிந்துவிட்ட ஒரு நிகழ்வு அல்ல. கடவுளின் வல்லமையும், வெற்றியும் வெளிப்பட்ட உயிர்ப்பு நிகழ்வு எருசலேம் நகருக்குள் மட்டும் பேசப்படுவது அல்ல. மாறாக, அதன் தொடர்ச்சியே பின்வரும் நற்செய்திகளில் மறைத்தூதுக் கட்டளையாக உள்ளது.

மாற்கு நற்செய்தியில் விளக்கப்படும் உயிர்ப்பு நிகழ்வில் நற்செய்திப்பணிபற்றிய பார்வை நிரம்பி உள்ளது (மாற் 16). மத்தேயு





நற்செய்தியில் உயிர்ப்பும் அதைத் தொடர்ந்து வரும் பதினொரு சீடர்களின் மறைத்தூதுக் கட்டளையும் பின்னிப்பிணைந்துள்ளன (மத் 28:16-18). லூக்கா நற்செய்தியின் இறுதியில் இயேசு சீடர்களைவிட்டுப் பிரிவதும் (24:52) திருத்தூதர்பணியில் (1:9) சீடர்களின் நற்செய்திப்பணி தொடங்குவதுமாக உள்ளது. லூக்கா நற்செய்தியில் இயேசு விட்ட இடத்தில் சீடர்களின் அறிவிப்புப்பணி ஆரம்பமாகிறது. யோவான் நற்செய்தியில் தோமா மீண்டும் சேர்க்கப்பட்டு சீடர்கள் பதினொருவரும் சேர்ந்து பிற்காலத் தலைமுறையினருக்குப் பணிகள் எடுத்துச் செல்வதாகக் காட்டப்படுகிறது (20:29).

எனவே, உயிர்ப்பு என்பது வரவிருக்கும் மறைத்தூதுப்பணியின் ஒரு தொடக்கம். நான்கு நற்செய்திகளிலும் மறைத்தூதுப்பணிபற்றிய பார்வையின்றி உயிர்ப்பு பற்றிய விளக்கம் இல்லை.

இயேசுவின் உயிர்ப்பிற்கு முதுகெலும்புச் சாட்சியாக இருந்ததே சீடர்களின் மாபெரும் உயிர்ப்புபற்றிய அனுபவம். ‘காலி கல்லறை’யும், அதற்கு பிறகு நடந்த உயிர்ப்பு அனுபவங்களும் சீடர்களை உயிர்ப்பின் சாட்சிகளாக மாற்றின. அதுவரைக்கும் அஞ்சி நடுங்கியவர்கள் இப்போது துணிச்சலாகப் பேசுகிறார்கள். இவரைத் தெரியாது என்று சொன்னவர்கள், இவரைத் தவிர வேறு எவரையும் தெரியாது என்று சொல்லுகிறார்கள். “திருத்தூதர்களின் தொடக்க அறிக்கையில் கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்” என்பதும் மெய்யாகும்.

இயேசுவின் உயிர்ப்பு சீடர்களுக்கு மாபெரும் அதிகாரத்தைக் கொடுத்தது. எப்படி இயேசுவின் பணி உலகம் தழுவியதோ அப்படியே சீடர்களின் பணியும் உலகம் தழுவியது. இப்படிப்பட்ட உலகம் தழுவும் பணிக்கு இயேசுவிடம் இருந்த அதிகாரம் சீடர்களுக்குத் தேவைப்பட்டது. இந்தப் பணியும் அதிகாரமும் இயேசுவின் உயிர்ப்பால் சீடர்களுக்கு வழங்கப்பட்ட ஒன்று.

## 12. மறைத்தூதுக் கட்டளையும் இறையாட்சிப் பணியும்

கலிலேயாவில் தொடங்கிய நாசரேத்தூர் இயேசுவின் பணி இறையாட்சிப் பணியாகும். இயேசுவிடம் இருந்த அதே இறையாட்சி நிலையே சீடர்களிடமும் இருக்க வேண்டும். சில வல்ல செயல்கள், சில உரைகள் என்பது மட்டுமல்ல; மாறாக, இறையாட்சி என்பது ஓர் இலக்கு. இது மனநிலை மட்டுமல்ல; மாறாக, இறையாட்சி என்பதுதான் ஒரு புதிய அடையாளம், ஒரு புதிய ஆளுமை.[36]

எப்படி இயேசுவின் அடையாளத்தை சில செயல்களில் முடக்கிவிட முடியாதோ, அப்படியே இறையாட்சியின் அடையாளங்களையும் சில செயல்களிலும் முடக்கிவிட முடியாது. இறையாட்சி என்பது இறை அன்பு, இறை உண்மை, இறை நீதி ஆகியவற்றை மட்டுமே இலக்காகக் கொண்டு முன்னோக்கிச் செல்லும் ஒரு பயணம் மற்றும் ஒரு பணி. எனவேதான், கல்லறை கூட இயேசுவையும் இறையாட்சியையும் அடக்கிப் போட முடியவில்லை. உயிர்ப்பின் விளைவும், வினையும் அது குறிக்கும் இறையாட்சிப் பணியில் உள்ளது.

இத்தகைய, இறையாட்சிப்பணி பற்றிய சொல்லாடல், செயலாக்கம் இன்றைய திருஅவைப் பணிகளில் குறைந்து வருவது வருத்தத்திற்குரிய ஒரு பரிமாணம். இயேசுவை விட்டு நாம் வெகுதூரம் சென்று கொண்டிருக்கிறோம். மீண்டும் ஒரு முழுமையான திருப்புமுனை போட்டு இயேசுவின் மனநிலைக்குத் திரும்புவோம். இல்லையேல் இயேசு இல்லாத கிறித்தவம் வெறும் சத்தங்களாக ஒலித்துக் கொண்டேயிருக்கும், சபதங்களாக அல்ல.

## அடிக்குறிப்புகள்

1. J. P. Meier, *Matthew* (Dublin: Veritas Publications, 1980), 368.
2. J. P. Meier, *Matthew,* 368.
3. W.F. Albright, C.S. Mann., "Matthew"*, in Anchor Bible Commentary* (New York: Doubleday, 1979), 359.
4. L. Legrand, *The Word is near you; Collected Papers of Lucien Legrand,* Vol. II, ed., A. Xavier, M.D. Stanly Kumar (Bangalore: St. Peter's Institute of Theology, 2001), 160.
5. L. Legrand, *The Word is near you,* 160.
6. L. Legrand, *The Word is near you,* 160.
7. J.P. Meier, *Matthew,* 368.
8. L. Legrand, *The Word is near you,* 175.
9. W.F. Albright, C.S. Mann, "Matthew", 362.
10. L. Legrand, *The Word is near you,* 176.
11. பவுலடியாரின் மனமாற்றம், அழைப்புபற்றித் திருத்தூதர் பணியில் ஆசிரியர் லூக்கா குறிப்பிடும்போது காட்சி மற்றும் அது சார்ந்த தரவுகளுக்கு அதிகமான அழுத்தங்கள் கொடுத்து திப 9:1-19 என்று ஒரு நீண்ட பகுதியாக விவரிக்கிறார். ஆனால், பவுல் தம்முடைய அழைப்பைப்பற்றிப் பேசும்போது (கலா 1:11-15) மிகமிகச் சுருக்கமாக இவ்வழைப்பைக்





குறிப்பிடுகிறார். ஆக, இங்கு மையம் பெறுவது காட்சியும் அதுசார்ந்த தரவுகளும் அல்ல; மாறாக, அழைப்பும் அது குறிக்கும் இலக்கும் ஆகும்.

12. L. Legrand, *The Word is near you,* 176.
13. W.C. Allen, *A Critical and Exegetical Commentary on the Gospel according to St. Matthew* (Edinburgh: T&T Clarke, 1907), 305; W. Grundmann, *Das Evangelium nach Matthäus,* THNT 1 (Evangelische Verlaganstalt, 1968), 576; J.P. Meier, *Matthew* 369; E. Schweizer, *Good News according to Matthew* (London: SPCK, 1976), 529; I.P. Ellis, "But some doubted", *NTS* 14 (1968), 580.
14. L. Legrand, *The Word is near you,* 178.
15. H.D. Ellison, *New International Bible Commentary,* ed., F.F. Bruce (Zondervan: Grand Rapids, 1979), 1154.
16. W. Hendrikson, *New Testament Commentary* (New York: Baker Academic Press, 1981), 998.
17. F. E. Gaebelen, *The Expositor's Bible Commentary* (Grand Rapids: Regency Reference Library, 1984), 595.
18. L. Legrand, *The Word is near you,* 180.
19. J. P. Meier, "Nations or Gentiles in Matthew 28:19?", *CBQ* 39 (1977), 102.
20. D. Hare - D. Harrington, "Make Disciples of all the Gentiles" (Mt 28:19)", *CBQ* 37 (1975), 359-369.
21. A. P. Robertson, *Word Pictures in the New Testament* (New York: Harper & Brother Publisher, 1930), 245.
22. மத்தேயு 10:6ல் குறிப்பிடப்படும் "மாறாக, வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள்" என்பது ஒரு தற்காலிகத்தன்மையும் குறியீடும் கொண்ட பகுதியாகும். L. Legrand, *The Word is near you,* 185. மேலும், அது மத்தேயுவைப் பொறுத்தவரை ஒரு கடந்தகால முடிந்துபோன நிகழ்வுதான். J.P. Meier, "Nations or Gentiles in Matthew 28:19?", 102.
23. P. T. O' Brien, "The Great Commission of Matthew 28:18-20, A Missionary Mandate or Not?", *Reformed Theological Review* 33 (1976), 73.
24. இயேசு தம்மையே பல நேரங்களில் ஆசிரியர் என்றழைக்கிறார் (மத் 23:8; 26:18). இயேசுவை எதிர்த்தவர்களும் இயேசுவைச் சில இடங்களில் ஆசிரியர் என்று அழைக்கின்றனர் (9:11; 12:38; 17:24; 22:16; 24:36). ஆனால், இயேசுவின் உடன் சீடர்கள் இயேசுவை ஆசிரியர் என்று அழைக்காமல், ஆண்டவரே என்று அழைக்கின்றனர் (14:28,30; 17:4; 18:21; 26:22). காரணம், 'ஆசிரியர்' என்பவரே சீடர்களின் நம்பிக்கை மற்றும் அனுபவத்தின் காரணமாக 'ஆண்டவர்' என்று அழைக்கப்படுகிறார்.
25. யோவான் தமது நற்செய்தியில் 78 முறை பயன்படுத்துகிறார்.
26. L. Legrand, *The Word is near you,* 183.
27. L. Legrand, *The Word is near you,* 184. எனவே, நீங்கள் போய்/சென்று... சீடராக்குங்கள் என்பது பொருத்தமில்லாத மொழிபெயர்ப்பாகக் காட்டப்படுகிறது. இவ்விடத்தில் "சென்று"

என்பதற்காகப் பயன்படுத்தப்படும் கிரேக்க வார்த்தையின் பொருள் ஒரு கட்டளை அல்ல; மாறாக, அது ஒரு துணைச் சொல்லே தவிர, தன்னிலே இயங்கும் ஒரு வினைச்சொல் அல்ல என்று காட்டப்படுகிறது.

28. L. Legrand, *The Word is near you,* 186.

29. J. P. Meier, *Matthew,* 372.

30. W. C. Allen, *A Critical and Exegetical Commentary,* 306.

31. L. Legrand, *The Word is near you,* 187.

32. G. Barth, "Matthew's Understanding of the Law" in *Tradition and Interpretation,* no. 3, 58-164.

33. இருப்பினும், பவுல் திருமுழுக்குச் செயலுக்கு எதிரானவர் அல்லர். அவருக்கென்றே ஒரு தனித்துவம் வாய்ந்த திருமுழுக்கு இறையியலும் இருந்தது (உரோ 6:3-5).

34. இரு இடங்களில் சீடராக்குதல்பற்றிக் குறிப்பிடுகிறார் (1திமொ 2:7; 2திமொ 1:11).

35. மாற் 6:30-ல் மட்டும் திருத்தூதர்கள் தாங்கள் செய்தவை, கற்பித்தவையெல்லாம் இயேசுவிடம் சொல்கிறார்கள். மத்தேயு நற்செய்தியில் திருத்தூதர்களுக்குக் குணமளிக்கும் அதிகாரத்தையும் (மத் 10:1-8) பறைசாற்றும் அதிகாரத்தையும் (10:7) இயேசு வழங்குகிறார். ஆனால், இயேசுவின் மண்ணகப்பணி முடிவுறும் இவ்வேளையில் கற்பிக்கும் அதிகாரத்தையும் சீடர்களுக்கு வழங்குகிறார்.

36. W. Hendrikson, *New Testament Commentary,* 998.



# 7. பவுலின் மறைத்தூதுப்பணி

*அருள்பணி. முனைவர் வ. இரபேல்*
*மூப்பணி நிலையம், திண்டிவனம்*

பவுல் முதல் கிறித்தவ இறையியலாளர் என ஜேம்ஸ் டன் என்பார் உரைக்கிறார்.[1] ஆயினும் ஓப்ரியன் என்பார் கருத்துப்படி பவுல் முதல் கிறித்தவ இறையியலாளராக விளங்குவதே அவர் முதல் மறைப்பணியாளராக விளங்குவதால்தான்.[2] ஆக, பவுல் ஓர் இறையியலாளர் என்பதையும், அவர் ஒரு மறைப்பணியாளர் என்பதையும் பிரித்துப்பார்க்க இயலாது. ஏனெனில், மறைத்தூதுப்பணியும் நற்செய்தி குறித்த இறையியல் சிந்தனையும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பவையாகும். மார்டின் கேஹ்லர் என்பார் மறைத்தூதுப்பணியே "எல்லா இறையியலுக்கும் தாய்" என்பார்.[3] பவுல் போதித்த கோட்பாடுகள் முக்கியமாக அவருடைய மறைத்தூதுப்பணிச் சூழலில் இருந்தே உருவாகின. எனவே இன்று மறைத்தூதுப்பணி செய்வதாயின் பவுலின் மறைத்தூதுப்பணியின் முறைமைகளையும் அவற்றில் பொதிந்துள்ள இறையியல் நோக்கையும் உள்வாங்கியே செய்ய வேண்டும் என ரோலண்ட் ஆலன் என்பார் உரைக்கிறார்.[4]

பவுலின் மறைத்தூதுப்பணி பண்பாடற்ற வெறுமையில் நிகழவில்லை. ரோலண்ட் ஆலன் குறிப்பிடுகிறபடி:

(1) பவுல் கவனம் செலுத்திய மாநிலங்களில் உரோமை நிர்வாகமும், கிரேக்கக் கலாச்சாரமும், யூதத் தாக்கமும் இருந்தன. அங்கெல்லாம் வணிகம் தழைத்தோங்கியது. இத்தகு மையங்கள் நற்செய்தியைப் பரவலாகக் கொண்டுசெல்ல வாய்ப்பளிப்பவையாக இருந்ததால் பவுல் அவற்றில் கவனம் செலுத்தினார்.

(2) பவுல் குறிப்பிட்ட வகுப்பினரிடமோ பிரிவினரிடமோ மட்டும் போதிக்கவில்லை. அவர் தாம் சொல்வதைக் கேட்ட எல்லாருக்கும், தம்மிடம் வினவிய எல்லாருக்கும் போதித்தார். பவுல் ஒரு யூதராகவே எந்த நகருக்குள்ளும் நுழைந்தார். யூதச் சமயத்தின் ஒரு வடிவத்தைக் கற்பிக்கும் ஆசிரியராகவே அங்குச் சென்றார். மெசியா குறித்த புது வெளிப்பாடு தமக்குக் கிடைத்ததாகக் கூறியே அவர் போதித்தார். ஆனால் இதில் அவர் கிரேக்க உயர்நிலைச் சிந்தனைக்கு விருந்தளிக்கும் வகையில் போதித்தார்.

(3) தாம் போதித்தவற்றைக் கேட்டோரின் உலகு பற்றிய பார்வையையும், தீய ஆவிகள், அறநெறி, சமயம், அடிமைத்தனம் முதலியன குறித்த நம்பிக்கைகளையும் தொட்டவாறே பவுல் போதித்தார். ஆக, பவுல் தமது தனிப்பட்ட சூழலைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் கொண்டிருந்ததால்தான் அவருடைய மறைத்தூதுப்பணி வெற்றியடைந்தது.

## மறைத்தூதுப்பணி குறித்த பவுலின் பார்வை

பவுல் 1 கொரி 3:5-15 பகுதியில் மறைத்தூதுப்பணி குறித்த தம்முடைய பார்வையின் ஏழு கூறுகளைத் தருகிறார்: (1) பவுல் தம்மைப் பணியாளர் என்கிறார் (கிரேக்கத்தில் *diakonos*). வேறு மறைப்பணியாளர்களும், போதகர்களும் ஆசிரியர்களும் உள்ளார்கள். அவர்களும் பணியாளர்களே. எனவே தாம் உயர்ந்தவர் என்னும் இறுமாப்புக்கு இடமில்லை. மறைத்தூதுப்பணி என்பது பெருமை பாராட்டுவதற்கான ஒன்றன்று; அது கடவுள் விரும்புகிறபடி அப்பணியைச் செய்து முடித்தலே.[5] (2) கடவுளே மறைத்தூதுப்பணியின் ஆண்டவர். அவரே தம்முடைய உதவியாளர்களை அப்பணியில் இயக்குகிறார். (3) தலத்திருஅவையை நிறுவுகிறவரும் (நடுகிறவர்) புதிய நம்பிக்கையாளர்களை ஊட்டி வளர்ப்பவர்களும் (தண்ணீர் ஊற்றுதல்) ஒரே பணியையே செய்கின்றனர். (4) பவுல் புதிய அவைகளை நிறுவும் முன்னோடி மறைப்பணியாளர். அவர் அடித்தளமிடுபவர். அதாவது, அவர், சிலுவையில் அறையுண்டு உயிர்த்து மாட்சியடைந்த மெசியாவைக் குறித்த செய்தியை முழங்கி அதற்கு விளக்கமும் சொல்பவர். இது *Kerygma* எனப்படுவது. அந்த மெசியா யூதருடைய பாவங்களையும், பிறவினத்தாருடைய பாவங்களையும் மன்னித்து, அனைவரையும் கடவுளுடன் ஒப்புரவாக்கி, மனந்திரும்பும்





பாவிகளுக்கு புதுவாழ்வு தருபவர். இங்கே அடிப்படையாக இருப்பவர் இயேசு கிறிஸ்துவே; குறிப்பாக, சிலுவையில் அறையுண்ட மெசியாவே அடிப்படையாக இருக்கிறார் (காண். 1 கொரி 1:23: "நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பறைசாற்றுகிறோம்;" மேலும் காண். 2:2). ஆக, மறைத்தூதுப்பணிப் போதனையின் உள்ளடக்கம் சிலுவையில் அறையுண்டு உயிர்த்த இயேசுவாகிய மெசியாவே. (5) மறைத்தூதுப்பணியில் ஏற்படும் விளைவு எல்லாம் கடவுளின் வல்லமையினால் வருவதே. (6) மறைத்தூதுப்பணியால் உருவாகும் திருஅவைகள் மறைத்தூதுப்பணியாளருக்கானவை அல்ல. திருஅவை என்பது கடவுள் பண்படுத்தும் தோட்டம்; அது கடவுள் எழுப்பும் கட்டடம் (1 கொரி 3:9). எனவே அது கடவுளுக்குரியது. (7) மறைத்தூதுப்பணியாளர்கள் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்கள். மறைத்தூதுப்பணியைப் புரிவோருக்கு ஊதியம் பெறும் உரிமை உள்ளது எனப் பவுல் சொன்னாலும், தனிப்பட்ட மறைப்பணியாளர், போதகர், ஆசிரியர் ஆகியோருக்கான வேறுபட்ட ஊதியம் குறித்து அவர் விவரமாகத் தெரிவிக்கவில்லை.

## பவுலுடைய பணியின் அளவு

லூக்கா பவுலுடன் நற்செய்திப் பணி புரிந்தவர். அவர் திருத்தூதர் பணிகள் என்னும் நூலில், பவுல் மூன்று மறைத்தூதுப் பயணங்களை மேற்கொண்டார் எனவும், இறுதியில் உரோமையில் விசாரிக்கப்படுவதற்காகச் சென்றார் எனவும் குறிப்பிடுகின்றார். பவுல் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் ஏறத்தாழ பன்னிரண்டு ஆண்டுகள் பயணித்து (கி.பி. 46 முதல் 57 வரை) முக்கிய நகரங்களில் திருஅவைகளை நிறுவினார்.

பவுல் உரோமையருக்கு கி.பி. 57ஆம் ஆண்டளவில் மடல் எழுதினார். அதில், "எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் மாநிலம்வரை எங்கும் சுற்றி, கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் பணியை முடித்துவிட்டேன்" என்று எழுதினார் (உரோ 15:19). அவர் எருசலேமுக்குச் சென்று, பின்னர் உரோமைக்குச் செல்ல விரும்புவதாக எழுதியுள்ளார் (காண் திப 19:21). திருத்தூதர் பணிகள் நூலில் அவர் எருசலேமுக்கும் உரோமைக்கும் சென்றதாக எழுதப்பட்டுள்ளது. ஆனால் உரோமையர் திருமுகத்தின்படி அவர் உரோமைக்கு அப்பால்

ஸ்பெயினுக்குப் போக விழைந்தது தெரிகிறது (உரோ 15:23). ஆக, பவுலைப் பொறுத்தவரை மறைப்பணி என்பது புவியியல் அடிப்படையில் செய்யப்படும் ஒரு நிறைவேற்றமாகவும் உள்ளது.

## தமஸ்கு வழி அனுபவம்

பவுலின் மறைத்தூதுப்பணி வாழ்வுக்கு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியது அவருடைய தமஸ்கு வழி அனுபவமாகும். அங்கே அவர் உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்தார். அவருடைய மனமாற்றம் அங்கே நிகழ்ந்தது. சிலர் அதனை அவருக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பாகப் பார்க்கின்றனர் (திப 9:1-19; 22:3-16; 26:4-18; கலா 1:11-17; பிலி 3:7-12; 1 கொரி 15:8, 44-45; 2 கொரி 4:6). ஆயினும் இரண்டுமே அதில் அடங்கியிருக்கின்றன.[6] அவர் பிறவினத்தாருக்கு நற்செய்தி அறிவிக்க அழைப்புப் பெற்றார். தம்முடைய மனமாற்றமும், தாம் பெற்ற அழைப்பும் நற்செய்தி அறிவிப்பினின்று பிரிக்கப்பட முடியாதவை என்பதை அவர் ஆழமாக உணர்ந்திருந்தார்.[7]

தமஸ்கு வழி அனுபவத்திற்கு முன்னால் பவுல் யூதச் சமய அமைப்புக்கு அர்ப்பணிக்கப்பட்டவராக இருந்தார். அதற்குப்பின் அவர் இயேசு கிறிஸ்துவின் ஆளுமைக்கு அர்ப்பணிக்கப்பட்டவராக மாறினார். பிலி 3:4-11 பகுதியில் இந்த வேரோட்டமான மாற்றத்தைப் பவுல் சொல்கிறார். அவருடைய விழுமியம் தலைகீழாக மாறியது. திருச்சட்டம் மீட்புதரும் என்னும் நம்பிக்கை மாறியது. அவருடைய வாழ்வு புதிய பாதையில் சென்றது. அந்நிகழ்வுக்குப் பின் அவருடைய வாழ்வு கிறிஸ்துவையே மையமாகக் கொண்டிருந்தது. ''எனக்கு ஆதாயமான இவை அனைத்தும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பு எனக் கருதினேன்... கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறேன்... திருச்சட்டத்தின் அடிப்படையில் நான் கடவுளுக்கு ஏற்புடையவனாக இயலாது. கிறிஸ்துவின்மீது கொண்டுள்ள நம்பிக்கையால்தான் அவருக்கு நான் ஏற்புடையவன் ஆகமுடியும்'' (பிலி 3:7-9).

கலா 1:11-17 பகுதியில் பவுல் கூறுகிறபடி இயேசு கிறிஸ்து தனிப்பட்ட முறையில் தமக்கு அருளிய வெளிப்பாட்டால் அவரை அறிவிக்க அழைப்புப் பெற்ற பவுல் இறைவாக்கினர் எரேமியாவைப்போல் தாயின் வயிற்றில்





இருக்கும்போதே நற்செய்தியை அறிவிக்கக் கடவுளால் தமக்கென ஒதுக்கி வைக்கப்பட்டவராக உள்ளார். பிறவினத்தாருக்கும் நற்செய்தி அறிவிப்பதற்கு அழைக்கப்பட்ட பவுல் தம்முடைய நற்செய்தி அறிவிப்பை ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதியின் நிறைவேற்றமாகக் காண்கிறார். அவ்வாக்குறுதியின்படி, ஆபிரகாமுக்குக் கொடுத்த ஆசிகள் பிறவினத்தாரையும் வந்தடையும் (கலா 3:8; காண் 3:14-19; 4:28). உலகளாவிய பண்புநலனும் நிறைவுகாலப் பண்புநலனும் கொண்ட அவருடைய மறைத்தூதுப்பணி எசாயா அதிகாரம் 40-55 பகுதியில் சொல்லப்படும் ஆண்டவரின் துன்புறும் ஊழியருக்குரிய பணியாகும்.

## பவுல் கடவுளைச் சார்ந்து பணியாற்றினார்

### அ. திருத்தூதருக்குரிய இறைவேண்டல்

பவுலின் இறைவேண்டல் அவருடைய திருத்தூதுப்பணி சார்ந்ததாக இருந்தது.[8] அவர் தம்முடைய திருத்தூதுப்பணியைத் தொடங்குமுன் அரேபியாவுக்குச் சென்று, உயிர்த்த ஆண்டவர் குறித்த அனுபவத்தை அமைதியில் ஆழப்படுத்தினார் (கலா 1:17). அவர் ஆண்டவருடைய உடனிருப்பில் இருந்த திருத்தூதர்; இறைவேண்டலில்தான் பவுல் பணிசார்ந்த தம்முடைய வல்லமையை உணர்ந்தார்; இறைவேண்டலில்தான் அவர் தம்முடைய வலுவின்மையையும் அடையாளம் கண்டார் (2 கொரி 12:8-11; பிலி 4:13). தம்முடைய அழைப்பும் பணியும் கடவுளின் அருள்சார்ந்தவை என்பதை அவர் அறிந்திருந்தார் (உரோ 15:15; கலா 1:15; 2 கொரி 4:1; எபே 3:2).[9] இயேசு தம்முடைய சீடர்களுக்காக மன்றாடியதைப்போல் பவுலும் தாம் ஏற்படுத்திய கிறித்தவச் சமூகங்கள் கிறிஸ்துவில் வளர்வதற்காக மன்றாடினார் (பிலி 1:9). அவர் தாம் ஏற்படுத்திய கிறித்தவச் சமூகத்திற்காக மன்றாடுமாறு திமொத்தேயுவைக் கேட்டுக்கொண்டார் (1 திமொ 2:1).

### ஆ. தூய ஆவியாரால் வழிநடத்தப்படுதல்

திருத்தூதர் பணிகள் நூலில் நாம் காண்கிறபடி, பவுல் தூய ஆவியாரின் வழிகாட்டுதலுக்கு முற்றிலும் பணிந்திருந்தார் (திப 16:6 19:21).[10] தூய ஆவியார் பவுலையும் பர்னபாவையும் ஒரு தனிப்பட்ட பணிக்காக அழைத்தார். அதற்காக அவர்களை ஒதுக்கிவைக்குமாறு வேண்டினார் (திப 13:2). அவர்களுடைய

திருத்தூதுப் பயணங்களில் தூய ஆவியார் இடையீடு செய்தார் (திப 16:6-10). தூய ஆவியாரின் கைதியாக அவர் இருந்தார் (திப 20:22). புதிய இடங்களில் பணிசெய்வதற்கான வழி தூய ஆவியாராலேயே திறந்துவிடப்பட்டது (திப 16:6-10).

### இ. நற்செய்தியின் வல்லமை

கடவுளின் வார்த்தையாகிய நற்செய்தி மீட்பளிக்கும் வல்லமை கொண்டது என்று பவுல் அறிவித்தார் (உரோ 1:16; 2 கொரி 2:4-5; 1தெச 1:5).[11] நற்செய்தியை அறிவிப்பதன் இன்றியமையாமையை அவர் முற்றிலும் உணர்ந்திருந்ததால், ''நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ, எனக்குக் கேடு!'' என்று அவர் எழுதினார் (1 கொரி 9:16). திருமுழுக்குக் கொடுப்பதற்காக அல்லாமல், நற்செய்தியை அறிவிப்பதற்காகவே கிறிஸ்து தம்மை அனுப்பியதாக அவர் எழுதினார் (1 கொரி 1:17). நற்செய்தியை அறிவிப்பது தம்முடைய குருத்துவப் பணி என அவர் அறிவித்தார் (உரோ 15:16). இவ்வாறு, சடங்குசார்ந்த பணிக்கும் மற்றப் பணிகளுக்கும் இடையே இருந்த எல்லைக்கோட்டை அவர் உடைத்தார்.[12] வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இறைவார்த்தையை அறிவிப்பதில் கருத்தாயிருக்குமாறு திமொத்தேயுவுக்கு அறிவுறுத்தினார் (2 திமொ 4:2-3). பவுல் உண்மையிலேயே இறைவார்த்தையின் பணியாளர்.[13]

### ஈ. துன்புறுதலும் பணியும்

இறைப்பணி செய்வோருக்குத் துன்பங்கள் நேரும் என்பது பவுல் தம்முடைய திருமுகங்களில் அடிக்கடி வெளிப்படுத்திய கருத்தாகும். துன்புறுதல் என்பது நற்செய்தியோடு பின்னிப்பிணைந்தது என்பதைப் பவுல் வெளிப்படுத்துகிறார் (1 கொரி 1:23-25; 2:1-2). துன்புறுதலைப் பவுல் நற்செய்தி அறிவித்தலோடு தொடர்புபடுத்துகிறார் (1தெச 2:1; 1 கொரி 4:9-13; 2 கொரி 4:8-12). துன்புறுதல் பவுலின் செய்தியை உண்மையானதாக மாற்றியது.[14] எதிர்ப்பும் துன்புறுத்தலும் பவுலின் சமூகங்களிலிருந்தே அவருக்கு வந்தன. அவருடைய உடன்பணியாளர்களிடம் இருந்தும் வந்தன. அவை சமயத் தலைவர்களிடமிருந்தும் அரசியல் தலைவர்களிடமிருந்தும் வந்தன. யூதர்களிடமிருந்தும் பிறவினத்தாரிடமிருந்தும் வந்தன.[15] இயற்கைச் சீற்றங்களாலும் அவருடைய உயிருக்கு ஆபத்து வந்தது.[16] பவுலுடைய





துன்பங்கள் உடல்சார்ந்தனவாக மட்டுமல்லாமல் உள்ளம் சார்ந்தனவாகவும் அமைந்திருந்தன. அவர் மனத்தளவில் மிகவும் காயப்பட்டிருந்தார் (1 கொரி 2-3; 2 கொரி 10-13). கூடாரத் தொழில் செய்வதில் இருந்த இழுக்கு தொடர்பானதாகவும் அவருடைய துன்பம் இருந்தது (2 தெச 2:9; 2 கொரி 12:13-14).[17] ஆயினும், துன்பங்களில்தான் தாம் கடவுளின் தூதுவராக விளங்குவதாக அவர் கொரிந்தியருக்குச் சொன்னார் (2 கொரி 4:10-12; 6:4-10; 11:23-28).

### உ. எடுத்துக்காட்டால் நற்செய்தி அறிவித்தல்

பவுல் ஒரு தந்தைபோல் இருந்து நற்செய்திப்பணி ஆற்றினார். அதனால் தம் மக்களுக்கு அவர் எடுத்துக்காட்டாக விளங்கி, தம்மைப்போல் அவர்களும் நடக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்; ''நீங்கள் என்னைப் போலாகுங்கள் என அறிவுரை கூறுகிறேன்'' (1 கொரி 4:16). ஒரு தந்தையைப்போல் அவர் விளங்கியதால், இயேசுவைத் தம்மில் வெளிப்படுத்தி, கிறித்தவ வாழ்வின் மாதிரியைக் காட்டினார்.[18] திருத்தூதுப்பணியாளர்கள் என்னும் முறையில், ''இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்குச் சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம்'' என்று அவர் எழுதினார் (2 கொரி 4:10). ''நான் கிறிஸ்துவைப்போல் நடப்பது போன்று நீங்களும் என்னைப்போல் நடங்கள்'' என்று அவர் எழுதினார் (1 கொரி 11:1). இறுதியில் அவர்கள் கடவுளைப்போல் ஆகவேண்டும் என்றார்; ''நீங்கள் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப்போல் ஆகுங்கள்'' (எபே 5:1). தம் உடன்பணியாளர்களும் எடுத்துக்காட்டான மாதிரிகளாய் விளங்கிட வேண்டினார் (2 திமொ 4:17; பிலி 2:19-23; 1 தெச 3:1-2; 2 கொரி 8:22-24). கிறித்தவச் சமூகமும் மாதிரியாக விளங்குமாறு பணித்தார் (பிலி 1:3-7; 4:14-18). அது உண்மையான கிறித்தவ வாழ்வுக்கு மாதிரியாக விளங்க வேண்டும் என்றும் நற்செய்திப்பணியில் உடனிருப்பதில் மாதிரியாக இருக்கவேண்டும் என்றும் விழைந்தார்.[19]

### ஊ. தம் கையாலேயே உழைத்தல்

நற்செய்திப் பணியாளர்கள் ஊதியம் பெறுவதற்கு உரிமை உடையவர்கள் என்பதைப் பவுல் உணர்ந்திருந்தாலும் (1 கொரி 9:15) அவர் கூடாரப் பணியைச் செய்து அதன் வருமானத்தினால் தம்முடைய தேவைகளை நிறைவுசெய்து கொண்டார் (காண். திப 18:3). பவுல் சென்ற இடங்களில் எல்லாம்

கூடாரத் தொழிலுக்குத் தேவை இருந்ததால் மக்கள் அவரை ஏற்றுக்கொண்டார்கள். ஓரிடத்தில் சென்று, வாடகைக்கு ஓர் அறையைப் பெற்று, ஒரு தொழில் ஆடையை அணிந்துகொண்டு, தம்மிடம் தொழில் காரணமாக வருவோருக்கு நற்செய்தியையும் அறிவித்தார். "இந்த என் கைகளே உழைத்தன" (திப 20:34) என்று அவர் கூறினார். "உங்களுள் எவருக்கும் சுமையாய் இராதபடி, இராப்பகலாய்ப் பாடுபட்டு உழைத்தோம்" என்று அவர் எழுதினார் (2 தெச 3:8). கிரேக்க மெய்யியலாளர்கள் போதித்துக்கொண்டே செல்வர். வரவேற்பாளர்கள் வழங்கும் அன்பளிப்புகளை ஆவலோடு பெற்றுக்கொள்வர். இதனால் பலர் அவர்களைக் கேலி செய்வதுண்டு. தாம் வழங்கும் நற்செய்தி உண்மையானது என்பதால், அதற்கு எந்த இழிவும் வரலாகாது என எண்ணிய பவுல் இவ்வாறு நற்செய்திக்காக எக்கூலியையும் பெறாமல், தமக்கு வேண்டியதைத் தாமே உழைத்துப் பெற்றுக்கொண்டார். பவுலின் வாழ்க்கை ஒரு பட்டறை வாழ்வாகவே இருந்தது என்று ஹோக் என்பார் குறிப்பிடுகிறார்.[20]

## பவுலின் மறைத்தூதுப்பணி வழிமுறைகள்

### அ. நற்செய்தி அறிவிப்புப்பணிக்கு முக்கிய நகரங்களைத் தேர்ந்தெடுத்தல்

உரோமைப் பேரரசின் பல மாநிலங்களில் நற்செய்தி அறிவித்த பவுல் ஒவ்வொரு மாநிலத்திலும் முக்கிய நகரங்களைத் தேர்ந்துகொண்டார். பிசீதியாவில் அந்தியோக்கு, சைப்பிரசு தீவில் பாப்போ, பிலிப்பி, ஏதென்ஸ், கொரிந்து, எபேசு, மாசிதோனியா, செசரியா போன்ற முக்கிய நகரங்களைத் தேர்ந்தெடுத்தார். இறுதியாக, அன்றைய நடுநிலக்கடல் நாடுகளின் தலைநகராயிருந்த உரோமைக்குச் சென்று தடையின்றி ஈராண்டுகள் நற்செய்தியை எடுத்துரைத்தார் (திப 28:30-31). இவ்வாறு, பவுல் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சென்று எருசலேமிலிருந்து இல்லிரிக்கம்வரை போதித்தார். இது உரோமைப் பேரரசின் கிழக்குப் பகுதி முழுவதுமாகும். மெய்யியலாளர் ஃபீலோ மெய்யியல் கற்பிப்பதற்குச் சில மையங்களைத் தேர்ந்தெடுத்திருந்தார். அதுபோலப் பவுல் சந்தைகள், தொழுகைக்கூடங்கள், பேச்சரங்குகள், இல்லங்கள் ஆகியவற்றில் போதித்தார். அதன்மூலம் அருகிலுள்ள நகரங்களுக்கும் ஊர்களுக்கும் அவருடைய செய்தி





எளிதாகச் செல்ல முடிந்தது. யூதருக்கும் பிறவினத்தாருக்கும் செல்ல முடிந்தது. அவர், உரோமைப் பேரரசின் தலைநகராகிய உரோமையையும் தேர்ந்தெடுத்தார். அதன்மூலம் பேரரசின் மேற்குப் பகுதிக்கு நற்செய்தி அறிவிக்க விழைந்தார். எல்லா இடங்களிலும் அவர் வரவேற்பையும் எதிர்ப்பையும் ஒருங்கே பெற்றார். வரவேற்பு கிடைத்த இடங்களில் சிறிதுகாலம் அதிகமாகத் தங்கினார். எதிர்ப்பு இருந்த இடங்களிலிருந்து விரைவிலேயே வெளியேறிவிட்டார். அவர் தொடர்ந்து பயணம் செய்துகொண்டே இருந்தார்.

### ஆ. முதலில் யூதருக்கும் பின்னர் பிறவினத்தாருக்கும்

பவுல் சென்ற நகரங்கள் பலவற்றில் முதலில் தொழுகைக்கூடத்திற்கே சென்றார். அங்கே அவர் யூதர்களைச் சந்தித்து முதலில் நற்செய்தியை அறிவிக்க முடியும். இது நல்ல வழிமுறையாகும். உடன்படிக்கையின் மக்களாகிய யூதர்களுக்கு முதலில் போதிப்பது, "யூதரிடமிருந்தே மீட்பு வரும்" என்னும் இறையியல் கோட்பாட்டைச் சார்ந்ததாகும்.[21] யூதர்கள் மட்டில் அவர் பெரும் கரிசனை கொண்டிருந்தார். அவர்கள் மீட்கப்பெற வேண்டும் என அவர் உளமார விழைந்தார் (உரோ 10:1). யூதர்கள் அதிகமாக அவருடைய நற்செய்தியை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் கிரேக்கராகிய பிறவினத்தார் அதிகம் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் பெரும்பாலும் 'இறைப்பற்றுள்ளவர்கள்'; 'கடவுளுக்கு அஞ்சி நடந்தவர்கள்'. அதாவது, அவர்கள் விருத்தசேதனம் செய்து யூதர்களாக மாறாவிடினும், யூதர்கள் வழிபட்ட 'யாவே' கடவுளை உளமார ஏற்றுக்கொண்டவர்கள்; யூதர்களின் மறைநூலாகிய பழைய ஏற்பாட்டையும் வாசித்துவந்தவர்கள். இவர்களுள் சிலர் யூதம் தழுவும் நிலையில் சில புகுமுகச் சடங்குகளை ஏற்கெனவே நிறைவேற்றியவர்கள் (திப 13:43; 14:1; 16:14; 17:4; 18:7). பல நேரங்களில் யூதர்கள் பவுலை எதிர்த்தார்கள். அவரைத் துன்புறுத்தி அவருடைய செய்தியைப் புறக்கணித்தார்கள் (திப 9:20-25; 13:45,50; 14:2,19; 17:5; 18:12; 21:27; 23:12). அந்தியோக்கியாவிலிருந்தும் இக்கோனியாவிலிருந்தும் லிஸ்திராவுக்கு வந்த யூதர்கள் மக்களைத் தூண்டிவிட்டு, பவுல்மேல் கல் எறிந்தார்கள்; அவர் இறந்துவிட்டார் என்று எண்ணி நகருக்கு வெளியே அவரை இழுத்துப்போட்டார்கள் (திப 14:19). கொரிந்து நகரில் யூதர்கள் பவுலை எதிர்த்ததோடு அவரைப் பழித்துரைக்கவும் செய்தார்கள் (திப 18:6). எனவே பவுலின் தொடக்க காலப் பணியின்போதே பவுல் பர்னபாவுடன் சேர்ந்து, பிறவினத்தாரிடம் செல்ல முடிவெடுத்துவிட்டார். இதனை லூக்கா

எழுதியுள்ளார்: ''பவுலும் பர்னபாவும் துணிவுடன், 'கடவுளின் வார்த்தையை உங்களுக்குத்தான் முதலில் அறிவிக்க வேண்டியிருந்தது. ஆனால், நீங்கள் அதனை உதறித்தள்ளி நிலைவாழ்வுக்குத் தகுதியற்றவர்கள் என்று உங்களுக்கு நீங்களே தீர்ப்பளித்துக் கொண்டீர்கள். எனவே, நாங்கள் பிறஇனத்தாரிடம் செல்கிறோம்'' என்று எடுத்துக் கூறினார்கள் (திப 13:46). பவுலடியார் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலும் இக்கருத்தைக் குறிப்பிடுகிறார் (உரோ 1:16: 'முதலில் யூதருக்கும் அடுத்துக் கிரேக்கருக்கும் அந்த மீட்பு உண்டு;' காண் 2:9; 11:7-31).

பவுல் தாம் பிறவினத்தாருக்குத் திருத்தூதராய் இருக்கக் கடமைப்பட்டவர் என்பதைத் தொடக்கத்திலேயே நன்கு உணர்ந்திருந்தார். அதுகுறித்துத் தாம் பெருமைப்படுவதாகவும் எழுதினார் (உரோ 11:13). ஆயினும் பிறவினத்தாருக்கு நற்செய்தி அறிவிப்பது என்பது அவருடைய உலகளாவிய பணியின் ஒரு பகுதி என்பதையும் அவர் அறிந்திருந்தார். எனவேதான், ''கிரேக்கருக்கும் கிரேக்கரல்லாதாருக்கும், அறிவாளிகளுக்கும் அறிவிலிகளுக்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்'' (உரோ 1:14) என்று அவர் எழுதினார். நற்செய்தி என்பது உலகளாவிய முறையில் போதிக்கப்பட வேண்டும் என்பதால், நற்செய்திப்பணி என்பது மாந்தர் எல்லாருக்குமானது; அது கற்றறிந்த கிரேக்கருக்கும் கல்லாதாருக்குமானது. அவர் பிறஇனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக இயேசுவின் பெயரை எடுத்துச்சொல்ல இயேசுவே தேர்ந்துகொண்ட கருவியாக இருந்தார் (திப 9:15). அதாவது, உலகில் உள்ள அனைவர் முன்பும் அவர் சாட்சியாக இருக்க வேண்டும் (திப 22:15). எனவேதான், மனமாற்றத்திற்கான நற்செய்தியை அவர் யூதருக்கும் பிறவினத்தாருக்கும் அறிவித்தார் (திப 20:21; 26:20). இத்தகு பரந்துபட்ட சூழலில்தான் பிறவினத்தாருக்கான பவுலின் பணியை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

யூதருக்கு முதலிலும் பின்னர் கிரேக்கருக்கும் என்று பவுல் நற்செய்தி அறிவித்தது பிறவினத்தார் முழுமையாக இறைவனிடம் வந்துசேரவேண்டும் என்னும் கடவுளின் திட்டம் நிறைவேறுவதற்காகவே (உரோ 11:25).[22] பிறவினத்தாரின் மீட்புக்காகப் பவுல் உழைத்தது யூதரிடம் பொறாமையைத் தூண்டிவிடுவதற்காகவே (உரோ 11:11). கிறிஸ்துவில் நடந்தேறும் நிறைவுக்கால மீட்புச் செயல் யூதருக்கும் யூதர் அல்லாதாருக்கும் கிடைக்கவே பவுல் இவ்வாறு





செய்தார். ஆக, பவுலின் திருத்தூதுப்பணியில் நிறைவுக்கால விளைவுகள் இருந்தன.[23]

### இ. திருஅவைகளின் ஒருங்கிணைந்த நலன்சார்ந்த கரிசனை

பவுலின் மறைத்தூதுப்பணி நற்செய்தி அறிவிப்பு என்னும் குறுகிய நிலையில் மட்டும் அமைந்துவிடவில்லை. அது மேய்ப்புப்பணிக் கரிசனையைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. அவர் திருஅவைகளை நிறுவுவதோடு மட்டும் நிறைவடைந்துவிடவில்லை. அவற்றைத் தொடர்ந்து பேணிக்காப்பதில் அவர் கருத்தாய் இருந்தார். போதித்தல், ஆற்றுப்படுத்துதல், அறநெறிகுறித்த அறிவுறுத்தல்களோடு திருமுகங்கள் எழுதுதல் ஆகியவை வழியாக இறைவார்த்தையை எடுத்துரைத்து அவர் அவற்றைப் பேணி வளர்த்தார். பவுல் பர்னபாவிடம், ''நாம் ஆண்டவரின் வார்த்தையை அறிவித்த அனைத்து நகரங்களுக்கும் திரும்பிப்போய் அங்குள்ள சகோதரர் சகோதரிகள் எவ்வாறு இருக்கிறார்கள் என்று கவனிப்போம் வாரும்'' என்றார் எனத் திருத்தூதர் பணிகள் நூலில் சொல்லப்பட்டுள்ளது (திப 15:36). ''சிரியா, சிலிசியா வழியாகச் சென்று திருஅவைகளை உறுதிப்படுத்தினார்'' எனவும் சொல்லப்பட்டுள்ளது (திப 15:41). அவர் அந்தியோக்கியாவில் சிலகாலம் செலவிட்டபின் அங்கிருந்து புறப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாகக் கலாத்தியா, பிரிகியாப் பகுதிகள் வழியாகச் சென்று சீடர்கள் அனைவரையும் உறுதிப்படுத்தினார் (திப 18:23).

'எவாங்கேலிசேஸ்தாய்' என்னும் சொல்லும், அதன் கிளைச்சொற்களும் நற்செய்தி அறிவிப்பதை நேரடியாகக் குறிப்பிட்டாலும், பவுலைப் பொருத்தவரை அச்சொற்களை அவர் தொடக்கநிலை நற்செய்தி அறிவிப்பிற்காக மட்டும் பயன்படுத்தவில்லை; அவர் அவற்றை நற்செய்தி அறிவித்தல், கற்பித்தல் ஆகிய முழுப்பணியைக் குறிக்கும் சொற்களாகவும் பயன்படுத்தினார். அதாவது, தொடக்கத்தில் நற்செய்தியை அறிவிப்பது, நம்பிக்கையாளராம் இறைமக்களைக் கட்டியெழுப்புவது. அவர்களை நம்பிக்கையில் உறுதியாக ஊன்றியிருக்கச் செய்வது ஆகிய முழுப்பணிக்கும் அச்சொற்களை அவர் பயன்படுத்தினார். நற்செய்தியை அறிவிப்பது மீட்பு குறித்த தொடக்கநிலை அனுபவத்தைத் தருகிறது. அதோடு, அவ்வாறு அறிவிக்கப்படும் அதே நற்செய்தியால் கிறித்தவ வாழ்வு உருவாக்கப்படுகிறது. எனவேதான், கிறிஸ்துவைச் சார்ந்த உங்களுக்கு ஆசிரியர்கள் பல்லாயிரம் இருக்கலாம்;

ஆனால், தந்தையர் பலர் இல்லை. நற்செய்தி வழியாக நான் உங்களைக் கிறித்தவர்களாக ஈன்றெடுத்தேன் (1 கொரி 4:15) என்கிறார்.[24] ''கிறிஸ்துவின் அளவற்ற செல்வத்தைப்பற்றிய நற்செய்தியைப் பிறவினத்தாருக்கு அறிவிக்க... எனக்கு இந்த அருள் வழங்கப்பட்டது'' எனப் பவுல் உரைக்கிறார் (எபே 3:8). இவ்வாறு அறிவிப்பது ஒருதடவை நற்செய்தியை அறிவிப்பதால் மட்டும் நிகழ்ந்துவிடுவதில்லை. இதில் கவனத்துடன்கூடிய கற்பித்தல், அறிவுரை கூறுதல், நடைமுறை வாழ்க்கைக்குப் பொருத்திக் கூறுதல் ஆகியவையும் அடங்கியுள்ளன. அதன் வழியாகவே, கிறிஸ்துவின் அளவற்ற செல்வத்தைப் பிறவினத்தார் சரியாகப் புரிந்துகொண்டு அவற்றைத் தங்களுடையன ஆக்கிக்கொள்ள இயலும். இக்கருத்தை உறுதிப்படுத்தும் வண்ணமாக, கொலோசையருக்கு எழுதிய திருமுகத்தில், ''கிறிஸ்துவைப்பற்றியே நாங்கள் அறிவித்துவருகிறோம். கிறிஸ்துவோடு இணைந்து ஒவ்வொருவரும் முதிர்ச்சிநிலை பெறுமாறு ஒவ்வொருவருக்கும் அறிவுரை கூறி முழு ஞானத்தோடு கற்பித்துவருகிறோம்'' (கொலோ 1:28) என்கிறார். இதன் பொருள் என்னவெனில், நற்செய்தியை அறிவிப்பது என்பது எச்சரிக்கை செய்தல், அறிவுறுத்தல் ஆகியவற்றையும், திருஅவையின் உறுப்பினர்கள் கிறிஸ்து இயேசுவின் முழு நிறைவைக் காண்கிறவரை செய்யக்கூடிய எல்லா மறைத்தூதுப்பணிகள் ஆகிய யாவற்றையும் உள்ளடக்கியது என்பதாகும். பிற மக்களிடையே தாம் செய்த பணியால் பயன் விளைந்ததுபோல உரோமையில் உள்ளோரிடையேயும் பயன் விளைய வேண்டும் என்பதற்காக உரோமையில் உள்ளவர்களுக்கும் நற்செய்தி அறிவிக்க ஆவல் கொண்டிருப்பதாகப் பவுல் எழுதுகிறார் (உரோ 1:13-15). அது நற்செய்தி அறிவிப்பதன் இறுதிவிளைவாகிய கிறித்தவப் பண்புநலன்களை விளைவிப்பது ஆகும்.

பவுல் உரோமையருக்கு நற்செய்தி அறிவிக்க விழைந்தது அவர்கள் தொடக்கநிலை மீட்புப் பெறவேண்டும் என்பதற்காகவன்று; மாறாக அவர்கள் ஆவிக்குரிய முறையில் உறுதிப்படுத்தப்படுவதற்காக அவர் அங்குச் செல்ல விழைகிறார். ஒருவர் மற்றவர்க்கு உறுதியூட்ட வேண்டும் என்பதும் அவருடைய நோக்கமாய் இருந்தது. எனவேதான், ''நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையில் நானும், நான் கொண்டுள்ள நம்பிக்கையில் நீங்களும் ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டப்பெற வேண்டுமென விழைகிறேன்'' என அவர் எழுதுகிறார் (உரோ 1:12). அவர் மேய்ப்புப்பணி கரிசனையையும், திருஅவையின் முழுவளர்ச்சி





குறித்த கரிசனையையும் கொண்டிராவிடில் இது நடவாது. பவுலின் திருத்தூதுப்பணி திருஅவைகளை நம்பிக்கையில் உறுதிப்படுத்துவது ஆகும். தம்முடைய எடுத்துக்காட்டான வாழ்வாலும், அறிவுரைகள் அடங்கிய திருமுகங்களாலும் திருஅவைகளைக் கீழ்ப்படிதலுக்கு இட்டுச்செல்வது அவருடைய மறைத்தூதுப்பணியில் உள்ளடங்கி இருந்தது. எனவேதான், ''என்மூலம் இறைவார்த்தையை முழுமையாக உங்களுக்கு வழங்கும் பொறுப்பைக் கடவுள் எனக்குக் கொடுத்தார். எனவே நான் திருத்தொண்டன் ஆனேன்'' என்கிறார் பவுல் (கொலோ 1:25).

இத்தகு முழுமையான கிறித்தவ வாழ்வை வழங்குவதற்குப் பவுல் மூன்று வழிகளில் செயல்பட்டார்:

அ. தாம் நிறுவிய திருஅவைகளைப் பவுல் தம்முடைய உடன்பணியாளர்களுடன் சேர்ந்து மீண்டும் சந்தித்தார். ஏனெனில், பவுலுடைய மறைத்தூதுப்பணி வழிமுறையின் இதயமாகத் திருஅவை இயங்கியது. லூக்கா கூறுகிறபடி, பவுலும் பர்னபாவும் தெருபைக்குச் சென்று நற்செய்தி அறிவித்தபின் லிஸ்திரா, இக்கோனியா, அந்தியோக்கியா ஆகிய நகரங்களுக்குத் திரும்பி வந்தனர். அங்குள்ள சீடர்களின் உள்ளத்தை அவர்கள் உறுதிப்படுத்தி, நம்பிக்கையில் நிலைத்திருக்கும்படி அவர்களை ஊக்குவித்தார்கள் (திப 14:21-22). அந்தத் திருஅவைகளுக்குப் பவுல் தம்முடைய இரண்டாம் தூதுரைப்பயணத்தின்போதும் சென்றார். எருசலேமில் திருத்தூதர்கள் எடுத்த முடிவை அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு உறுதிப்படுத்துவதற்காக இம்முறையும் அங்குச் சென்றார் (திப 16:1-5). தாம் ஏற்படுத்தாத திருஅவைகள்மட்டிலும் பவுல் மேய்ப்புப்பணிக் கரிசனையைக் கொண்டிருந்தார். எடுத்துக்காட்டாக, பர்னபாவின் அழைப்பை ஏற்றுக்கொண்ட பவுல், சிரியாவின் அந்தியோக்கியாவுக்குச் சென்று கற்பிக்க விழைந்தார் (திப 11:25-26). தாம் ஏற்படுத்தவில்லை எனினும் பவுல் உரோமைத் திருஅவையைச் சந்திக்க விழைந்தார் (உரோ 1:10-15; 15:21-24).

ஆ. புதிதாக மனமாற்றம் பெற்றவர்களுக்கு மேய்ப்புப்பணி புரியவும் கற்பிக்கவும் பவுல் மூப்பர்களை நியமித்தார் (திப 14:23; 20:17). தலத்திருஅவையில் உள்ள கிறித்தவர்கள் தம்மோடு நற்செய்திப்பணியில் பங்கேற்பவர்கள் எனப் பவுல் எண்ணினார் (பிலி 1:5). மூப்பர்களுக்கு அவர்

ஏற்கனவே பயிற்சி அளித்திருக்காவிடில் அவர்களிடம் தலத்திருஅவையின் பொறுப்பை ஒப்படைத்திருக்க இயலாது. அவர் அவர்களுக்குப் பயிற்சி அளித்திருந்தார் என்பதைத் திப 20:17-38 பகுதியிலிருந்து அறிகிறோம். ‘‘மூன்று ஆண்டுக் காலமாக அல்லும் பகலும் இடைவிடாது கண்ணீரோடு நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்திவந்ததை நீங்கள் நிறைவேற்றிக் கொள்ளுங்கள்’’ எனப் பவுல் தம் பிரியாவிடையின்போது எபேசு மூப்பர்களுக்குச் சொன்னார் (திப 20:31). கடவுளின் திருஅவையைக் கட்டிக்காப்பதில் அவர்கள் விழிப்பாய் இருக்கவேண்டும் என்று அவர் அவர்களுக்கு அறிவுறுத்தினார் (திப 20:27-32). மறைத்தூதுப்பணியில் உள்நாட்டினருக்கும் பயிற்சி அளிப்பது இன்றியமையாத திட்டமாகும்.[25] இது அந்தந்த நாடுகளுக்கு ஏற்றவாறு திருஅவைகளை உருவாக்குவதற்கு வழிவகுக்கும். கிறித்தவ மறைத்தூதுப்பணி பல நேரங்களில் இதை ஒதுக்கிவிட்டது. அன்னிய மறைத்தூதுப்பணிக்குப் பதிலாக அந்தந்த நாடுகளுக்குரிய மறைத்தூதுப்பணியைச் செய்யவேண்டும் என்பது பவுலின் பார்வையாக இருந்துள்ளது. இதன்மூலம் கிறித்தவ நம்பிக்கை மக்களுக்கு அவர்களின் மொழியிலும் பண்பாட்டிலும் வழங்கப்பட முடியும்.[26]

இ. பவுல் என்னும் மறைத்தூதுப்பணியாளர் ஆன்மிக நலன்கள் மட்டுமல்லாது, உடல்சார்ந்த நலன்களையும் குறித்த கரிசனை கொண்டிருந்தார். எனவே எருசலேம் திருத்தூதர்கள் தம்மைப் பணிப்பதற்கு முன்பாகவே ஏழைகளுக்கு உதவுவதில் அவர் ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தார் (கலா 2:10). தாம் ஏற்படுத்திய திருஅவைகளுடன் நல்லுறவு கொண்டிருந்த அவர் அவற்றிடமிருந்து நன்கொடைகள் பெற்று, வறுமையில் வாடும் எருசலேம் கிறித்தவர்களுக்கு உதவிட விழைந்தார். அது அச்சபைகள் நல்லுறவுடன் விளங்கிட வழியமைக்கும் என அவர் நம்பினார். அதை ஒரு திருத்தொண்டு என்று அவர் வருணித்தார். யூதரிடமிருந்து ஆன்மிக நலன்களைப் பெற்ற பிறவினத்தார் இப்போது பொருள்சார்ந்த முறையில் அவர்களுக்கு உதவிடுமாறு அவர் எழுதினார். இது ஒரு வழிபாடு என்றும் அவர் வருணித்தார். (காண். 2 கொரி 8-9; 1 கொரி 16:1-4). இவ்வாறு பவுலின் மறைத்தூதுப்பணி ஒருங்கிணைந்த நலன்சார்ந்த கரிசனையைக் கொண்டிருந்தது.





## மறைத்தூதுப்பணியில் கிறித்தவச் சமூகத்தின் பங்கேற்பு

### அ. இல்லத் திருஅவைத் தலைவர்கள்

தனிப்பட்டவர்களுடைய இல்லங்களில் வழிபாட்டிற்காக இறைமக்கள் கூடியது அவர்கள் ஒரே குடும்பத்தினர் என்னும் உறவு நெருக்கத்தை உருவாக்கியது. அங்குக் கூடிய உறுப்பினர்கள் பணிகளைப் பகிர்ந்துகொண்டார்கள். திருஅவையின் இத்தகு மாதிரியிலிருந்துதான் தலத் தலைவர்கள் உருவானார்கள்; முக்கியமாக, பொதுநிலையினர் தலைவர்களும் பெண்தலைவர்களும் உருவானார்கள்.[27] இல்லத்திருஅவையின் தலைவர் பெரும்பாலும் வசதிபடைத்தவராகவும், நம்பகத்தன்மை உடையவராகவும், செல்வாக்கு உடையவராகவும் விளங்கினார். எனவே, நற்செய்தி அறிவிக்கப்பட்டபோது அதைக் காதுகொடுத்துச் சிலராவது கேட்டனர். இல்லத் திருஅவைகள் தொடர்புக்கு மிகவும் உதவியாய் இருந்தன. இல்லத் திருஅவைத் தலைவர்கள் மறைத்தூதுப்பயணங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொடுத்தார்கள்.

### ஆ. தனிப்பட்ட உடன்பணியாளர்கள்

உரோ 16ஆம் அதிகாரத்தில் பவுல் பங்கேற்புப்பணி குறித்த தரவுகள் சிலவற்றைத் தருகிறார். உண்மையும் அர்ப்பண உள்ளமும் கொண்ட உடன்பணியாளர்களைப் பவுல் மிகக் கவனமாகத் தேர்ந்துகொண்டார் (1 கொரி 4:17 ‘‘திமொத்தேயுவை உங்களிடம் அனுப்பியுள்ளேன். அவர் என் அன்பார்ந்த பிள்ளை. ஆண்டவருடன் இணைந்து வாழும் அவர் நம்பிக்கைக்குரியவர்;’’ காண் பிலி 2:19). ஏறத்தாழ 100 உடன்பணியாளர்களின் பெயர்களை லூக்காவும் பவுலும் குறிப்பிடுகின்றனர். அவர்களுள் 36 பேர் சிறப்பு அடைமொழிகளுடன் குறிப்பிடப்படுகின்றனர். அவர்கள் யூதக் கிறித்தவச் சமூகங்களையும், பிறவினத்துக் கிறித்தவச் சமூகங்களையும் சார்ந்தவர்கள். அவர்கள் திருநிலைப்படுத்தப்பெற்ற ஆண்களும் பெண்களுமான அருள்பணியாளர்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அடைமொழிகளால் அவர்கள் கிறித்தவச் சமூகங்களைக் கட்டியெழுப்பி உறுதிப்படுத்துவதில் தனிப் பொறுப்புப் பெற்றிருந்தார்கள் என்பதை அறியமுடிகிறது. அவர்களுடைய பணிப்பொறுப்பு என்பது கிறித்தவச் சமூகங்கள் கூடுவதற்கு இல்லத்தில் இடமளித்து உபசரித்தல், இறைமக்களுக்கு அறிவுரை தருதல்,

அனுப்பப்பட்டவர்களாகச் செயல்பட்டு, தலத் திருஅவைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் அடங்கியிருந்தது. இவ்வாறு, உடன்பணியாளர்களைச் சிறப்புறப் பயன்படுத்துதல் பவுலின் பணித்திறனாக இருந்தது.

பர்னபாதாம் பவுலைத் திருத்தூதர்களிடம் அறிமுகம் செய்துவைத்தார் (திப 9:27). பர்னபாவே பவுலின் முதற்கட்ட மறைத்தூதுப்பணியை வழிநடத்தினார் (திப 11:25-26; 13:50). இருவரும் எருசலேம் சென்று பிறவினத்தாரைத் திருஅவையில் சேர்ப்பது குறித்து எழுந்த சிக்கலைத் திருத்தூதர்களிடம் எடுத்துரைத்தார்கள் (திப 15:2; கலா 2:9). சில்வானு (சீலா) பவுலின் இரண்டாம் தூதுரைப்பயணத்தில் உடன்சென்றார் (திப 15:40). சில்வானு பவுலுடன் மிகவும் தொடர்பில் இருந்ததால், பவுலின் திருமுகங்கள் சிலவற்றை அவரும் சேர்ந்து அனுப்புவதுபோல் எழுதப்பட்டுள்ளது.

### இ. பொதுநிலையினர் தலைவர்களை உருவாக்குதல்

பவுலின் உடன்பணியாளர்களில் பொதுநிலையினர் தலைவர்களும் இருந்தார்கள் (உரோ 16:1-16). பிரிஸ்கா, அக்கிலா என்போர் நன்கு அறியப்பட்டோரில் இருவர் (உரோ 16:3-5).[28] அப்பொல்லோ தம்முடைய தவறான இறையியல் கருத்துகள் சிலவற்றைக் களைவதற்கு அவர்கள் அவருக்கு அறிவுரை கூறினார்கள் (திப 18:26). எப்பப்பிராதித்து உடன் உழைப்பாளரும் உடன் போர்வீரரும் என வருணிக்கப்பட்டுள்ளார் (பிலி 2:25). எப்பப்பிரா என்பவரின் சிறந்த நற்செய்தி அறிவிப்பும் சொல்லப்பட்டுள்ளது (கொலோ 1:6-8; 4:13; பில 23).

பவுல் பெண்களுடைய தலைமைத்துவத்தின் சிறப்பையும் நன்கு உணர்ந்திருந்தார். பெயிபா, பிரிஸ்கா, யூனியா என்போர் குறிப்பிடப்பட்டுள்ளனர். பெயிபா செயலூக்கம் கொண்ட நற்செய்திப் பணியாளர்; அவர் பவுலைப்போலவே திருத்தொண்டர் என வருணிக்கப்பட்டுள்ளார் (உரோ 16:1-2).[29] பெயிபா பலருக்கு உதவிசெய்தவராகக் காட்டப்பட்டுள்ளார். கெங்கிரேயா திருஅவையில் பெயிபா முக்கியப் பொறுப்பு வகித்துள்ளார். பிரிஸ்கா என்பவர் பவுலுக்குக் கொரிந்திலும் எபேசிலும் தங்க இடமளித்து உதவியவர். பிரிஸ்கா குறித்த ஆறு குறிப்புகளில் நான்கில் அவர் அவருடைய கணவரான அக்கிலாவுக்குமுன் குறிப்பிடப்படுவது அவர் ஆற்றிய பணியின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. முக்கிய உடன்பணியாளர்களைப் பவுல்





'சினர்கோஸ்' என்னும் சொல்லால் அழைத்துள்ளார். அவர் பிரிஸ்காவையும் அச்சொல்லால் அழைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.[30] மறைத்தூதுப்பணியைப் பொறுத்தவரை, பவுல் இத்தகைய பெண்களை அவர்களுடைய கணவர்களைப்போல் முக்கியமானவர்களாகக் கருதினார். ஆண்-பெண் வேறுபாடு மறைத்தூதுப் பணிக்குத் தடையாக இருந்த காலத்தில், பவுல் அதனை அப்பணிக்கு உகந்ததாகக் கண்டார்; அதாவது, ஒருவரின் பணியை மற்றவர் நிறைவடையச் செய்வதாகக் கண்டார்.

### ஈ. உறவுகளை வளர்த்தல்

பவுல் தலைமைத்துவத்தை உறவுநிலையாகக் கண்டார். உடன்பணியாளர் பணி என்பது வெறுமனே சில செயல்களைச் சிறப்புறச் செய்வதற்கானது அன்று. உடன்பணியாளர்கள் வெறுமனே கருவிகளாகவோ முகவர்களாகவோ பார்க்கப்படவில்லை. பவுல் உறவுகளின் வழியாகச் செயல்பட்டார். பவுல் தாம் உருவாக்கிய சமூகங்களுடனும் தம்மோடு பணியாற்றியவர்களுடனும் ஆழ்ந்த, உண்மையான உறவைக் கொண்டிருந்தார். அவர் பணிகளைப் பகிர்ந்துகொண்ட தலைவர். உடன்பணியாளர் குறித்துப் பவுல் குறிப்பிடும் அடைமொழிகள் பணிவாழ்வின் உறவுப் பரிமாணத்தைச் சொல்கின்றன; பவுல் உடன்பணியாளர்களை உண்மையாகவே மதித்துப் பாராட்டியதையும் சொல்கின்றன.

ஆயினும் உடன்பணியாளர்களுடன் நெருடல்களும் சில நேரம் உருவாயின. மாற்கு குறித்துப் பவுலுக்கும் பர்னபாவுக்கும் இடையே நெருடல் ஏற்பட்டது (திப 15:36-41). ஆனால், பவுல் பின்னாளில் அதைச் சரிசெய்து கொண்டார் (1 கொரி 9:6 கொலோ 4:10). அவர் மாற்குவை வரவேற்க விழைந்தார் (1 திமொ 4:11). நற்செய்தியை முன்னிட்டு எயோதியாவும் சிந்திக்காவும் தங்கள் கருத்து வேற்றுமைகளைக் களைந்துவிட்டு இணைந்து ஒருமனத்தவராய் இருக்கவேண்டும் என்று பவுல் கேட்டுக்கொண்டார் (பிலி 4:2-3). அப்பொல்லோவுடன் முன்பு கருத்துவேற்றுமை இருந்தாலும் (1 கொரி 1:10-17), பின்பு அவரைக் குறித்துப் பாராட்டுரை எழுதினார் (1 கொரி 126:2). பேதுருவுடன் கடுமையான கருத்து வேறுபாடு அவருக்கு இருந்தாலும், அவர் பேதுருவின் தலைமை அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டவராகவே விளங்கினார் (கலா 2:6-14).

## முடிவுரை

13-ஆம் திருத்தூதர் என அழைக்கப்படும் பவுல் இயேசுவை நேரடியாகக் கண்டவரல்லர். எனினும் தமஸ்கு வழி அனுபவத்தால் திருத்தூதராக இருக்க அழைக்கப்பெற்ற பவுல் பிறவினத்தாருக்கு முக்கியமாக நற்செய்தி அறிவித்தார். பவுலுடைய பணி தனியாக ஒதுங்கி நடக்கவில்லை. அது உரோமைப் பேரரசெங்கும், அதற்கு அப்பாலும், பரவிக் கிடந்த யூதச் சமூகங்களுடன் தொடர்பில் நடந்தது. அது இயேசுவின் ஆர்வத்தையும் தொடக்கத் திருஅவையின் ஆர்வத்தையும் தொடர்ந்தது. கிரேக்க மெய்யியலாளர், பௌத்த மறைப்போதகர்கள் ஆகியோருடைய முறைகளில் (proselytizing methods) பவுல் போதித்தார். ஆயினும் அவற்றோடு ஒப்புமை செய்யும்போது பவுலின் பணியில் தனித்தன்மை தெரிகிறது. இயேசுபோலும் தொடக்கத் திருஅவைபோலும் அல்லாமல் முறைப்படுத்தப்பட்ட வகையில் (systematically) நாடுகளுக்குப் (இனங்களுக்கு) பவுல் நற்செய்திப்பணி ஆற்றினார். யூத மதம் எண்ணியதுபோல் பிறவினத்தார் வருவது விதிவிலக்கு என எண்ணாமல், அதுவே முறையானது எனப் பவுல் எண்ணினார். விருத்தசேதனத்தையோ சட்டத்தையோ ஏற்றுக்கொள்ள அவர் அவர்களைக் கட்டாயப்படுத்தவில்லை. தொடக்ககாலக் கிரேக்க மறைப்பணியாளர்கள்போலும் ஏழு திருத்தொண்டர்போலும் அல்லாமல் அவர் முறைமைப்படுத்தப்பட்ட வகையில் நற்செய்திப்பணி ஆற்றினார். மெய்யிலாளர்போல் அவர் தம்மைப் போதிக்காமல் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் போதித்தார். அதை ஒரு தத்துவமாகப் போதிக்காமல் 'செய்தி'யாகப் போதித்தார். அவர் அறிவைப் பயன்படுத்துவதைவிட இடறலாகவும் மடமையாகவும் தோன்றும் சிலுவையை முதன்மைப்படுத்திப் போதித்தார்.

பவுலின் திருத்தூதுப்பணி திருஅவையின் மறைத்தூதுப்பணிக்கு 'மாதிரி'யாக உள்ளது. அவர் முழுமையான மனிதநலம் சார்ந்த முறையில் போதித்தார். அவர் திருஅவைகளை ஏற்படுத்தி அவற்றை மீண்டும் மீண்டும் சந்தித்து, திருமுகங்கள் எழுதி, அவற்றை உறுதிப்படுத்தினார். நற்செய்தி அறிவிப்பது சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வை அழிப்பது என்பதையும், வறுமையை அகற்றுவது என்பதையும் பவுல் உணர்ந்து செயல்பட்டார். நாமும் பவுலைப்போல் தமஸ்கு அனுபவம் பெற்று, இயேசுவின் நற்செய்தியை உள்வாங்கி, அதைக் கிறித்தவர்களுக்கும் மற்றவர்க்கும் அறிவிக்க வேண்டும்.





பவுல் முதலில் யூதர்களுக்குப் போதித்து, பின் பிறவினத்தாருக்குப் போதித்தார். பவுலைப்போல் எதிர்ப்புகளிலும் துணிவுடன் நற்செய்தியை அறிவிக்க வேண்டும். திருஅவையின் கட்டளையைச் சிரமேற்கொண்டு, கூட்டுப்பணியாக நாம் நற்செய்திப்பணி ஆற்ற வேண்டும். பவுல் அதற்குச் சிறந்த தூண்டுதலாக உள்ளார்.

## அடிக்குறிப்புகள்

1. J. D. G. Dunn, *The Theology of Paul the Apostle* (Grand Rapids, MI/ Cambridge, UK: Eerdmans, 1998) 2.
2. P. T. O'Brien, *Gospel and Mission in the Writings of Paul: An Exegetical and Theological Analysis* (Grand Rapids, MI: Baker Books / Carlisle: Paternoster Press,1995) xi.
3. Martin Kähler, *Schriften zur Christologie und Mission* (Munich: Verlag, 1971) 190.
4. Roland Allen, *Missioanry Methods: St. Paul's or Ours?* 2nd ed. (Grand Rapids: Eerdmans, 1962) 6-7.
5. See Andrew D. Clarke, *Secular and Christian Leadership in Corinth: A Socio-Historical and Exegetical Study of 1 Corinthians 1-6,* AGJU 18 (Leiden: Brill, 1993) 119-20.
6. D. Horrell, *An Introduction to the Study of Paul* (London: Continuum, 2002) 26-27.
7. P. T. O'Brien, *Gospel and Mission in the Writings of Paul*, 5.
8. L. M. Bermejo, *Paul, Missionary, Mystic, Martyr* (Anand: Gujarat Sahitya Prakash, 2007) 310-319.
9. P. T. O'Brien, *Gospel and Mission in the Writings of Paul*, 30.
10. L. Legrand, *Unity and Plurality*: *Mission in the Bible* (Maryknoll: NY: Orbis, 1988) 111.
11. J. Murphy O'Connor, *Paul, A Critical Life* (Oxford: Oxford University Press, 1997) 124.
12. O'Brien, *Gospel and Mission*, 30-32, 39-41; Barton, "Paul as Missionary and Pastor," in J. D. G. Dunn, (ed.) *Cambridge Companion to St. Paul* (Cambridge: Cambridge University Press, 2003) 39.
13. L. Legrand, *Unity and Plurality*, 111.
14. T. R. Schreiner, *Paul Apostle of God's Glory in Christ: A Pauline Theology* (Downer Grove: IL / Leicester: InterVarsity / Apollos, 2001) 88.

15. See Crossan & Reed, *In Search of Paul: A New Vision of Paul's Words and World* (New York, NY: HarperOne, 2004) 39-40.

16. மேலும் விபரங்களுக்குக் காண் Gloria Patmuri, *The Disappointments of Paul in his Missionary Endeavour* (Bangalore: Asian Trading Corporation, 1992) 28-29.

17. See R. F. Hock, *The Social Context of Paul's Ministry: Tentmaking and Apostleship* (Philadelphia: Fortress, 1980) 31-37.

18. S. C. Barton, "[19] T. R. Schreiner, *Paul Apostle of God's Glory in Christ: A Pauline Theology* (Downer Grove: IL / Leicester: InterVarsity / Apollos, 2001) 88.

19. "Paul as Missionary and Pastor" in J. D. G. Dunn (ed.) Cambridge Companion to St. Paul (Cambridge: Cambridge University Press, 2003) 45.

20. Murphy-O'Connor, *Paul A Critical Life*, 124.

21. R. F. Hock, *The Social Context of Paul's Ministry*, 31-37.

22. R. Hedlund, *Mission to the Man in the Bible* (Madras: Evangelical Literature Service, 1985) 241-242.

23 C. E. B. Granfield, *Romans: A Shorter Commentary* (Edinburgh: T & T Clark, reprint 1995) 274.

24 காண் D. Senior and Stuhlmueller, *The Biblical Foundation for Mission* (New York: Orbis Books, 6th print, 1995) 171-185.

25 O'Brien, *Gospel and Mission in the Writings of Paul*, 62-63,

26. H. R. Cook, *Strategy of Mission: An Evangelical View* (Chicago: Moody Press, 1963) 31.

27. Jey K. Kanagaraj, "The Strategies of Paul the Missionary," WWW.mhs.no/ uploads/ SNTS 2008-Kanagaraj.

28. T. Manjali, "The Pauline House Church: Some Pastoral Reflections," in G. Kottupallil and J. Varickaseril (eds.) *He Taught: A Festschrift in Honour of Sylvanus Sngi Lyngdoh, SDB* (Shillong: Vendrame Institute Publications, 1996) 12-41.

29. P. A. Sampathkumar, "Aquila and Priscilla: A Family at the Service of the Word," *Indian Theological Studies* 34; 1-3 (1997) 185-201.

30. பவுல் 1 திமொ 3:8-13 பகுதியில் திருத்தொண்டருக்கான பண்புநலன்களைக் கூறுவதன் அடிப்படையில், பெயிபா என்பவரைத் திருஅவையின் திருப்பணியாளருள் ஒருவராகக் கருதலாம். காண். R. Bieringer, "Women Leadership in Romans 16: The Leading Roles of Phoebe, Prisca and Junia in Early Christianity" *East Asian Pastoral Review* 44 (2007) 228-230.

31. T. Manjaly, *Collaborative Ministry: An Exegetical and Theological Study of Synergos in Paul* (Bangalore: Asia Trading Corporation, 2001) 256-58 and 282-91.



# 8. திருஅவையின் படிப்பினைகளில் மறைத்தூதுப்பணி

*அருள்பணி. முனைவர் சந்தியாகு ராசா*
*தலைவர், இறையியல் துறை*
*புனித பவுல் குருத்துவக் கல்லூரி, திருச்சி*

## முன்னுரை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகப் பாலஸ்தீனப் பகுதியில் இயேசு ஆற்றிய பணி நற்செய்திப்பணி ஆகும். அவரின் நற்செய்திப்பணியின் மையம் இறையாட்சிச் சமூகத்தை உருவாக்குவதே. அவரின் இறப்பு-உயிர்ப்புக்குப் பின்பு தொடக்கத் திருஅவைக்கு அவர் வழங்கியதும் அதே பணிதான்: "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15). எனவேதான், திருஅவை தன்னை எப்பொழுதும் இயேசுவாகிய நற்செய்தியை அறிவிக்க அனுப்பப்பட்ட ஓர் இயக்கமாக உணர்ந்து செயல்பட அழைக்கப்படுகின்றது. இவ்வாறு, இயேசுவின் வழிநின்று நற்செய்திப்பணியாற்றி, இறையாட்சிச் சமூகத்தை உருவாக்குவதில்தான் திருஅவையின் இயல்பு, இருப்பு, இயக்கம், அமைப்புகள், செயல்பாடுகள் ஆகியவை அடங்கியுள்ளன.

இருப்பினும், "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" (மத் 28:19) என்ற உயிர்த்த ஆண்டவரின் கூற்றை மனதில் தாங்கித் திருஅவையை / கிறித்தவச் சமயத்தை விரிவாக்கம் செய்வதே திருஅவையின் மறைத்தூதுப்பணி எனத் திருஅவை நீண்ட காலமாக எண்ணிப் போதித்தது, செயல்பட்டது. ஆனால், இரண்டாம் வத்திக்கான் சங்கம்தான் மறைத்தூதுப்பணி என்ற வார்த்தைக்குப் பதிலாக நற்செய்தி அறிவிப்புப்பணி என்ற சொல்லைப் பயன்படுத்தியது. மேலும், நற்செய்தி அறிவிப்புப்பணி

என்பது திருஅவையின் விரிவாக்கம் என்பதையும் தாண்டி, அது இறையாட்சிச் சமூகத்தை உருவாக்குவதே என்பதற்கு அழுத்தம் கொடுத்தது. இக் கட்டுரை இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதல் பிரிவில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்புவரை திருஅவை மறைத்தூதுப்பணியை எவ்வாறு புரிந்து கொண்டது, அதை எவ்வாறு போதித்தது என்றும், இரண்டாம் பிரிவில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திலும் அதற்குப் பிந்தைய திருஅவையின் படிப்பினைகளிலும் நற்செய்தி அறிவிப்புப்பணிபற்றிய புதிய பார்வைகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பது பற்றியும் காண்போம்.

## I. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்புவரை மறைத்தூதுப் பணிபற்றிய திருஅவையின் படிப்பினைகள்

'மிஷன்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'அனுப்புதல்', 'அனுப்பப்படுதல்', 'தூதுக்குழு', 'இறையருள் கட்டளைப்பணி' என்பதே மூலப்பொருள் ஆகும். இதற்கு இணையான தமிழ்ச்சொல்தான் 'நம்பிக்கைப் பரப்புதல்', 'மறை அறிவிப்புப்பணி', 'நற்செய்தி அறிவிப்புப்பணி' ஆகும். அதாவது, கிறித்தவம் வேரூன்றாத தளங்களுக்குச் சென்று இயேசுவாகிய நற்செய்தியை அறிவித்து, திருஅவைச் சமூகங்களை உருவாக்கி, ஒருங்கிணைத்து, நிலைநிறுத்துவதைத்தான் திருஅவை மறைபரப்புப்பணி என்றது. இவ்வாறு, திருஅவையை விரிவாக்கம் செய்வது, திருஅவையை நிறுவுவது ஆகியவைதான் திருஅவையின் மறைபரப்புப்பணியில் நீண்டகாலம் அழுத்தம் பெற்றன.

நான்காம் நூற்றாண்டில் உரோமைப் பேரரசின் அரசுச் சமயமாக கிறித்தவச் சமயம் மாறியபோது, புதிதாக வந்து சேர்ந்த செர்மானிய இனத்து மக்களுக்கும் பேரரசின் எல்லைக்கு வெளியே வாழ்ந்தவர்களுக்கும் திருஅவை நற்செய்தியை அறிவித்து கிறித்தவச் சமயத்தை விரிவாக்கம் செய்வதில் கவனத்தைத் திருப்பியது. 5ஆம் நூற்றாண்டு தொடங்கி 11ஆம் நூற்றாண்டு வரையிலான ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் கிறித்தவம் பரவியது. 1300ஆம் ஆண்டிற்குள்ளாகப் பால்டிக் பகுதிகள் அனைத்தும் கிறித்தவச் சமயத்துக்குள் வந்தன.[1] 15,16ஆம் நூற்றாண்டுகளில் புதிய பகுதிகளாகிய அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்குக் கடல்வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது மறைபரப்புப்பணிக்குப் புதிய எல்லைகளைக்





கொடுத்தது. இப்பகுதிகளைப் போர்த்துக்கல் நாடும் ஸ்பெயின் நாடும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன. 1493ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் அலெக்சாண்டர் அவர்கள் போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு எல்லைப் பகுதிகளை வரையறுத்துக் கொடுத்து மறைபரப்புப்பணியை ஆற்றக் கட்டளையிட்டார்: "நமது காலத்தில் கத்தோலிக்கச் சமயம் எல்லா இடங்களிலும் போதிக்கப்பட்டுப் பரப்பப்படுவதாக; ஆன்மாக்கள் மீட்கப்படுவனவாக; எல்லா நாடுகளும் கிறித்தவ நம்பிக்கைக்கு அடிபணிவனவாக"[2] என்றார். இவ்வாறு, கிறித்தவமல்லா நாடுகள் மீது போர் தொடுத்து வெற்றி கொண்டு கிறித்தவச் சமயமே உண்மையான சமயம் என்பதையும் பிற சமயங்கள் பொய்யானவை என்பதையும் நிலைநாட்ட அறிவுறுத்தினார். மேலும், 'திருஅவைக்கு வெளியே மீட்பு இல்லை' என்பதைக் கூறிச் சில வேளைகளில் கட்டாயச் சமயமாற்றமும் செய்யப்பட்டது. இவ்வாறாக, திருஅவையின் இடைக்காலத்து மறைத்தூதுப்பணியின் வரலாறு என்பது சில பழங்குடி இன மக்கள் அடக்கப்பட்ட ஆதிக்க வரலாற்றையும் உள்ளடக்கியது எனக் கூறுவதில் தவறு இல்லை.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பாக எழுதப்பட்ட திருத்தந்தையர்களின் ஆறு சுற்றுமடல்களையும், ஒரு திருத்தூது மடலையும் காணும்போதும் திருஅவையின் மறைத்தூதுப்பணியில் பெரும்பாலும் அழுத்தம் பெறுவது திருஅவையின் விரிவாக்கம்தான்.

(1) புதுக்காலத்தின் கத்தோலிக்க மறைத்தூதுப்பணியின் தந்தையாகக் கருதப்படும் திருத்தந்தை 16ஆம் கிரகோரி அவர்கள் 1840ஆம் ஆண்டு, தாம் எழுதிய *நீ அறிவாய்* (*Probe Nostis*) எனும் நம்பிக்கையைப் பரப்புவதுபற்றிய சுற்றுமடலில் அருள்பணியாளர்கள், இருபால் துறவு அவையினர், பொதுநிலையினர் ஆகியோர் திருஅவையில் ஆற்றவேண்டிய மறைத்தூதுப்பணிக்குப் புதிய வழிகளையும் உத்வேகத்தையும் வழங்கினார். மேலும், ஆயர்கள் தங்களின் மறைமாவட்ட எல்லைக்குள் மட்டுமே மறைபரப்புப்பணியைச் சுருக்கிவிடாது உலகம் முழுவதும் மறைபரப்புப்பணி ஆற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.[3]

(2) 1919ஆம் ஆண்டு திருத்தந்தை 15ஆம் பெனடிக்ட் அவர்கள் தாம் எழுதிய *ஒப்புயர்வற்ற (Maximum Illud)* எனும் திருத்தூது மடலில் உலகம் முழுவதும் நம்பிக்கையைப் பரப்புவதுபற்றி எழுதினார். இவர் தம் மடலில் 16ஆம்

நூற்றாண்டில் இந்தியாவில் பிரான்சிஸ் சேவியரும், வட மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் பார்தலோமே தெ லாஸ் காசாஸ் ஆகியோரும் மறைப்பணியாற்றினார்கள்; பல மறைப்பணியாளர்கள் நம்பிக்கைக்காக இரத்தம் சிந்தி இறந்தனர்; பலர் புனித வாழ்வு வாழ்ந்து இறந்தனர் எனச் சுட்டிக்காட்டி, இரண்டாம் உலகப்போர் நிறைவுற்ற அத்தருணத்தில் உலகின் கடை எல்லைவரை சென்று மறைப்பணியாற்ற அழைப்பு விடுத்தார். இதற்குப் பல்வேறு மறைபரப்புப் பணித்தளங்களில் பணியாற்றும் ஆயர்கள், துறவு அவைத் தலைவர்கள் அந்தந்த இடம்சார் அருள்பணியாளர்களை (local clergy) உருவாக்கப் பயிற்சி வழங்கவேண்டும் என்றார். காரணம், அந்தந்த இடம்சார் அருள்பணியாளர்கள் இருந்தால்தான் மறைப்பணித்தளங்களின் பண்பாட்டிற்கு ஏற்ப மறைப்பணியாற்றிப் புதிய தலத் திருஅவைகளை உருவாக்க முடியும் என்றார். மேலும், அந்த மக்களில் ஒருவராக இருப்பவர்தான் அந்த மக்களின் ஏக்கம், துன்பம், வாழ்வுநிலை ஆகியவற்றை அறிந்து அவர்களின் நம்பிக்கை வாழ்வை வளப்படுத்த முடியும்; அந்தந்த இடங்களில் வாழக்கூடிய ஏனைய சமய மக்களுடன் கலந்துரையாடி கிறித்தவ மறை உண்மைகளைத் தெளிவுபடுத்த முடியும்; தவிர, வெளிநாட்டு மறைப்பணியாளர்கள் செல்ல முடியாத இடங்களுக்குச் சென்று மறைப்பணியாற்றி அவர்கள் புதிய திருஅவைகளை நிறுவ முடியும் என்றார். தவிர, அந்நிய நாட்டு மறைப்பணியாளர்கள் ஒரு மறைப்பணித்தளத்திற்குப் பணியாற்றச் செல்லும் முன்பாக அந்த மறைப்பணித்தளத்தில் பேசப்படும் மொழியைக் கட்டாயம் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும் என்றார். மேலும், இத்தகைய மறைத்தூதுப்பணி என்பது வெறுமனே மறைப்பணியாளர்களுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல; இது இறை அழைத்தலுக்கு நபர்களை அனுப்புதல், பண உதவி செய்தல், செப உதவி செய்தல் மூலமாக எல்லாக் கத்தோலிக்கர்களுக்கும் வழங்கப்பட்ட பணியாகக் காணப்பட வேண்டும் என்றார்.[4]

(3) திருத்தந்தை 11ஆம் பயஸ் தாம் எழுதிய *திருஅவை சார்ந்தவை* (*Rerum Ecclesiae*) எனும் சுற்றுமடலில் புதிய திருஅவைகள் உருவாக்கம், உறுதிப்படுத்துதல், சுதந்திரமாய்ச் செயல்படுதல்பற்றி எழுதியுள்ளார். அவர் தம் சுற்றுமடலில் புதிய திருஅவைகள் தன்னிறைவு பெற்று, தனித்து இயங்கும் சூழல் உருவாகும்போது, அதாவது, ஒரு தலத் திருஅவை அந்த இடம்சார் தலைவர், இடம்சார் அருள்பணியாளர்கள், பொருளாதாரம் ஆகியவற்றில் தன்னிறைவு





பெறும்போது அங்குப் பணியாற்றும் அந்நியநாட்டு மறைப்பணியாளர்கள் தங்கள் மறைப்பணியை அங்கு நிறைவு செய்ய வேண்டும் என்றார். இதற்கு ஏதுவாக அந்தந்த இடம்சார் அருள்பணியாளர்கள், துறவு அவையினர், மறைக்கல்வி ஆசிரியர்கள், கற்றுத்தேர்ந்தோர் ஆகியோருக்கு முறையான பயிற்சி வழங்குவது அந்தந்தத் திருஅவைக்குத் தேவையான ஒன்று என்று கூறினார்.[5]

(4) 1951ஆம் ஆண்டு திருத்தந்தை 12ஆம் பயஸ் தாம் எழுதிய *நற்செய்திப் பணியாளர்கள்* (*Evangelii Praecones*) எனும் சுற்றுமடலில் இரண்டாம் உலகப்போரின் தாக்கங்களுக்கு மத்தியிலும் 1926ஆம் ஆண்டு தொடங்கி 1951ஆம் ஆண்டுவரை மறைத்தூதுப்பணியால் திருஅவையின் விரிவாக்கத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகளைச் சுட்டிக்காட்டினார்: மறைத்தூதுப்பணி மையங்களின் எண்ணிக்கை 400லிருந்து 600ஆக வளர்ச்சி பெற்றிருந்தது – 50% வளர்ச்சி; இம் மறைத்தூதுப்பணி மையங்களில் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை 15 மில்லியனிலிருந்து 21 மில்லியனாக உயர்ந்திருந்தது. இடம்சார் அருள்பணியாளர்கள் எண்ணிக்கை 14,800லிருந்து 26,800ஆக உயர்ந்தது, 1951ஆம் ஆண்டுக் கணக்குப்படி மறைப்பரப்புத் தளங்களில் இடம்சார் ஆயர்கள் 81 பேர் இருந்தார்கள்; பல புதிய அருள்பணிப் பயிற்சியகங்கள் – இளம், மெய்யியல், இறையியல் அருள்பணிப் பயிற்சியகங்கள் – தொடங்கப்பட்டன. மேலும், மறைத்தூதுப்பணியாளர்கள் தாங்கள் பணியாற்றும் இடங்களில் காணப்படும் பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை மதித்து நற்செய்திப்பணி ஆற்றவேண்டும்; அதுமட்டுமல்ல, மறைத்தூதுப்பணியாளர்கள் தாங்கள் பணியாற்றும் மறைப்பணித்தளங்களில் சமூகநீதியை நிலைநாட்ட முற்படவேண்டும்; இதற்காக, மறைத்தூதுப் பணியாளர்கள் பொதுநிலையினரோடும் சமூக நீதிக்காக உழைக்கும் பல்வேறு அமைப்புகளுடனும் இணைந்து செயல்பட வேண்டும் என்றார்.[6]

(5) 1957ஆம் ஆண்டு திருத்தந்தை 12ஆம் பயஸ் அவர்கள் தாம் எழுதிய *நம்பிக்கையின் கொடை* (*Fidei Donum*) எனும் சுற்றுமடலில் அன்றைய காலத்து மறைத்தூதுப்பணியின் நிலையைப்பற்றி, குறிப்பாக, ஆப்பிரிக்க நாடுகளின் மறைத்தூதுப்பணியைப்பற்றி எழுதினார். ஆப்பிரிக்க நாடுகள் குடியேற்ற ஆதிக்கத்தில் இருந்து விடுதலை அடைந்த அந்தக் காலக்கட்டத்தில் கிறித்தவம் அங்கு இன்னும் வளர்ச்சி அடையா நிலையில் கிறித்தவத்தைப் பரப்பும்

முயற்சியை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார். பெரும்பாலும் ஆப்பிரிக்காவில் திருஅவைத் தலைவர்களாக ஐரோப்பியர்களே இருந்த நிலையில் இடம்சார் திருஅவைத் தலைவர்களை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்றார். மேலும், கிறித்தவ விழுமியங்களின் அடிப்படையில் சமூகநீதி நிலைநாட்டப்பட அவர் அறிவுறுத்தினார்.[7]

(6) 1959ஆம் ஆண்டு திருத்தந்தை 23ஆம் ஜான் எழுதிய *முதன்மை மேய்ப்பர்* (*Princeps Pastorum*) எனும் சுற்றுமடலில் மறைத்தூதுப் பணித்தளங்களில் இடம்சார் திருஅவைத் தலைவர்கள் பணியமர்த்தப்பட வேண்டும் என்றார். அவ்வாறே, ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் ஏற்ப அந்தந்த இடம்சார் அருள்பணியாளர்கள் பணியாற்ற வேண்டும் என்றார். அப்போதுதான் கிறித்தவ நம்பிக்கைகளை அந்தந்த இடத்தின் விழுமியங்களுக்கு ஏற்ப வழங்க முடியும் என்றார். மேலும், அந்நிய நாட்டு மறைப்பணியாளர்களும் இடம்சார் அருள்பணியாளர்களும் இணைந்து மறைப்பணியாற்ற வேண்டும் என்றார். தவிர, அனைத்து அருள்பணியாளர்களுக்கும் மறைத்தூதுப்பணிபற்றிப் போதிய கல்வி வழங்க வேண்டும்; கல்விக் கூடங்கள், பண்பாட்டு மையங்கள் ஆகியவை மூலமாக எவ்வாறு மறைத்தூதுப்பணி ஆற்றவேண்டும்; நம்பிக்கையைப் பரப்புவதில் எவ்வாறு புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும் போன்றவை இம்மடலில் வலியுறுத்தப்பட்டன. மேலும், மறைபரப்புப் பணியில் பொதுநிலையினரின் பங்கு அறிவுறுத்தப்பட்டது.[8]

(7) 1964ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பால் எழுதிய *அவரின் சொந்தத் திருஅவை* (*Ecclesiam Suam*) எனும் சுற்றுமடலில் திருஅவை நவீன உலகில் எப்படிச் செயல்பட வேண்டும் எனவும், திருஅவை உலகோடும் ஏனைய சமயங்களோடும் உரையாடல் நடத்த வேண்டியதன் முக்கியத்துவம்பற்றியும் கூறினார். இவ்வாறு, ஏனைய சமயங்களுடன் உரையாடல் நடத்தும்போது கிறித்தவர்கள் தங்களது நம்பிக்கையில் உறுதியான நிலைப்பாடு கொண்டிருக்க வேண்டும்; அந்த நிலைப்பாட்டுடன்தான் பிற சமயத்தவருடன் உரையாடல் நடத்த வேண்டும் என்றார். இருப்பினும், உரையாடல் நடத்தும்போது தாழ்ச்சி, பொறுமை, அன்பு ஆகிய நற்பண்புகளை மனதில் கொண்டிருக்க வேண்டும் என்றார். இவ்வாறு, ஏனைய சமயங்களுடன் கிறித்தவச் சமயம் எவ்வாறு இணைந்து செல்கிறது என்பதையும் கடந்து கிறித்தவ நம்பிக்கைகளின் உண்மைகளைப் பிறருக்கு நாம் எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளோம்.[9]





## II.இரண்டாம் வத்திக்கான் சங்கம் தொடங்கி மறைத்தூதுப்பணிபற்றிய திருஅவையின் படிப்பினைகள்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்புவரை, பெரும்பாலும் மறைத்தூதுப்பணி என்ற சொல்லே மறைதூதுப்பணியாளர்களின் பணியைக் குறிக்கத் திருஅவையின் பயன்பாட்டில் காணப்பட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் தொடங்கித்தான் அது 'நற்செய்திப்பணி' என அழைக்கப்படுகின்றது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் நற்செய்திப்பணிபற்றி குறிப்பாக ஐந்து ஏடுகளில் கூறுகின்றது: *திருஅவைபற்றிய கோட்பாட்டு விளக்கம்* (*Lumen Gentium*), *திருஅவையின் நற்செய்திப்பணிபற்றிய விதித்தொகுப்பு* (*Ad gentes*), *கிறித்தவமல்லாச் சமயங்களோடு திருஅவைக்குள்ள உறவுபற்றிய அறிக்கை* (*Nostra Aetate*), *பொதுநிலையினரின் திருத்தூதுப்பணிபற்றிய விதித்தொகுப்பு (Apostolicam Actuositatem), இன்றைய உலகில் திருஅவைபற்றிய கோட்பாட்டு விளக்கம் (Gaudium et spes).* இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்பு நற்செய்தி அறிவிப்புப்பணிபற்றி மூன்று திருத்தந்தையர்கள் எழுதியுள்ளார்கள்: திருத்தந்தை ஆறாம் பால் எழுதிய *இன்றைய உலகில் நற்செய்தி அறிவிப்பு* (*Evangelii Nuntiandi*) எனும் திருத்தூது ஊக்கவுரை (1975), திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் எழுதிய *மீட்பரின் பணி* (*Redemptoris Missio*) எனும் சுற்றுமடல் (1990), ஆயர் மாமன்றத்தைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட *கிறிஸ்துவின் நம்பிக்கையாளர்களாகிய பொதுநிலையினர்* (*Christifideles Laici*) எனும் திருத்தூது ஊக்கவுரை (1988), ஆயர் மாமன்றத்தைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட *ஆசியாவில் திருஅவை* (*Ecclesia in Asia*) எனும் திருத்தூது ஊக்கவுரை (1999), திருத்தந்தை பிரான்சிஸ் எழுதிய *நற்செய்தியின் மகிழ்ச்சி* (*Evangelii Gaudium)* எனும் திருத்தூது ஊக்கவுரை (2013). இங்கு நற்செய்தி அறிவிப்புப்பணிபற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் தொடங்கி இன்றுவரை திருஅவையின் படிப்பினைகள் என்ன என்பதைக் காண்போம்.

### 1) திருஅவை நற்செய்திப்பணி ஆற்றவே

திருஅவை உருவான பெந்தகோஸ்து நாளிலிருந்தே நற்செய்திப்பணி தொடங்கிவிட்டது. ஆவியாரே நற்செய்திப்பணி உணர்வை நம்பிக்கை கொண்டோரின் இதயங்களில் எழுப்புகின்றார்; பல்வேறு வழிகளில்

திருத்தூதுப்பணியை இடைவிடாது தொடர்ந்து நடத்துகின்றார்'' (*திருஅவையின் நற்செய்திப்பணி*, 4).[10] எனவே, நற்செய்திப்பணி என்பது திருஅவையின் பல பணிகளில் ஒன்றல்ல; மாறாக, ''நற்செய்தி அறிவிப்பதே பயணம் செய்யும் திருஅவையின் இயல்பான பணி'' (*திருஅவையின் நற்செய்திப்பணி*, 2); காரணம், ''திருஅவையின் உள்ளியல்பிலிருந்தே நற்செய்திப்பணி பிறக்கிறது'' (*திருஅவையின் நற்செய்திப்பணி*, 6) என இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது. எனவே, நற்செய்தி அறிவிப்புப்பணி என்பது சுயவிருப்பத்தின் அடிப்படையில், விரும்பினால் செய்யலாம் என்பது அல்ல; இது இயேசு கிறிஸ்துவே நமக்கு வழங்கியுள்ள தனிப்பெரும் கட்டளை. எனவே, அதை எல்லாரும் கட்டாயம் ஆற்றவேண்டும்.

எனவேதான், மறைத்தூதுப்பணிக்கு முன்னுரிமை (Missionary option) வழங்கும் திருஅவையாக, மறைத்தூது வழியாக எல்லாவற்றையும் மாற்றும் ஒன்றாகத் திருஅவை அமைய வேண்டும் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் *நற்செய்தியின் மகிழ்ச்சி* (எண் 27)[11] எனும் தமது திருத்தூது ஊக்கவுரையில் கூறுகின்றார். எனவே, இன்றைய உலகில் நற்செய்திப்பணி ஆற்றுவதற்கு ஏற்றவகையில் மறைத்தூதுப்பணியை மையமாகக் கொண்டே திருஅவையின் பழக்க வழக்கங்கள், மொழி, பங்கின் செயல்பாடுகள், அருள்பணி அமைப்புகள் செயல்பாடுகள், திருத்தந்தையின் பணிகள், பேராயங்களின் பணிகள், செயல்பட வேண்டும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். காரணம், திருஅவை என்பது வெறும் கோட்பாடுகள்சார் அல்லது நிறுவனம்சார் அமைப்பு அல்ல; அது மறைத்தூதுப்பணிசார் இயக்கம். எனவே, திருஅவை தன் இயல்பில், பணியில் மறைப்பணிசார் தூண்டுதலுடன் இயேசுவின் இதயத்தைப் பின்பற்றி மறைத்தூதுப்பணிசார் திருத்தூதராகச் (missionary disciple) செயல்பட வேண்டும் (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, 27). மறைத்தூதுப்பணியே திருஅவையின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் திறவுகோலாக இருக்கவேண்டும். எனவே, திருஅவையின் இன்றைய அமைப்புகள் வழங்கும் பாதுகாப்பான நிலையில் இருந்து, கடுமையான நீதிபதியாய் இருந்து கண்டனமும் தண்டனையும் வழங்கும் நிலையில் இருந்து, நற்செய்திப் பணியாற்ற மறைப்பணியாளர்கள் வெளியே வரவேண்டும். பழைய முறையில் இருந்து பணியாற்றுவதில் இருந்து வெளியேறி, இன்றையப் புதிய சூழலில் புதிய முறையில் பணியாற்றத்





திருஅவை முன்வரவேண்டும். அப்போதுதான் திருஅவை தனது அழைப்புக்கு ஏற்பப் பிரமாணிக்கமாக வாழ முடியும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## 2) எல்லாருக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நற்செய்தி அறிவிப்புப்பணிபற்றி பரந்துபட்ட பார்வையைக் கொண்டிருந்தாலும் கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது: ''நற்செய்தியைப் பறைசாற்றி கிறிஸ்துவை இன்னும் நம்பாத நாடுகள், குழுக்கள் நடுவே திருஅவையை நிறுவவும், அனைத்துலகிற்கும் திருஅவையால் அனுப்பப்பட்ட நற்செய்தித் தூதர்களின் தனிப்பட்ட முயற்சிகள் ''நற்செய்திப்பணி'' எனப் பொதுவழக்கில் அழைக்கப்படுகின்றன. இம்முயற்சிகள் நற்செய்திப் பணியின் மூலம் நிறைவாக்கம் பெறுகின்றன. திருஅவை இன்னும் வேரூன்றா நாடுகள் அல்லது குழுக்கள் நடுவே அதை நிறுவுவதும், நற்செய்தியைப் பறைசாற்றுவதும் இந்த நற்செய்திப் பணிக்குரிய குறிக்கோள் ஆகும்'' (*திருஅவையின் நற்செய்திப்பணி*, 6).

இருப்பினும், திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் *மீட்பரின் பணி* எனும் தமது சுற்றுமடலில்தான் முதன்முதலாக 'புதிய நற்செய்தி அறிவிப்புப்பணி'பற்றிக் கூறுகின்றார். அவர் மூன்று நிலைகளில் நற்செய்தி அறிவிப்புப்பணி நடைபெற வேண்டும் என்கிறார். முதலாவதாக இயேசுவை, நற்செய்தியை அறியாத, அறிய விரும்பாத மக்களுக்கு, அதாவது, கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்கின்றார். இருப்பினும், கட்டாயச் சமயமாற்றம் செய்வது என்பதல்ல இங்கு பொருள்; மாறாக, நமது சாட்சிய வாழ்வால் தூண்டப்பட்டு, கிறிஸ்துவைப் பின்பற்ற அவர்கள் ஈர்க்கப்படவேண்டும்.

இரண்டாவதாக, திருமுழுக்குப் பெற்று நம்பிக்கை வாழ்வு வாழ்பவர்களுக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும். காரணம், இவர்களின் நம்பிக்கை இன்னும் ஆழப்படுத்தப்பட்டு வளமைப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறாக, இறைநம்பிக்கையாளர்களின் இதயத்தைப் பற்றியெரியச் செய்திட அவர்களுக்கும் நற்செய்தி அறிவிக்கப்படவேண்டும் என்கிறார். இறுதியாக, ''புதிய'' நற்செய்தி அறிவிப்புப்பணிபற்றிக் கூறுகின்றார். அதாவது,

திருமுழுக்குப் பெற்று நம்பிக்கையை இழந்தவர்களுக்கு மீண்டும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்கிறார். இன்றைய சூழலில் சமயச் சார்பற்றநிலை அதிகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது (குறிப்பாக, ஐரோப்பா, வட அமெரிக்க நாடுகள்). இத்தகைய சமயச் சார்பற்ற மக்கள் மத்தியில் நற்செய்தியின் மதிப்பீடுகளாகிய அன்பு, ஒற்றுமை, சமத்துவம், தோழமை போன்றவை மங்கிக் கொண்டிருக்கின்றன; இதற்கு மாற்றாக, இன்றைய நவீன சமூகத்தின் விழுமியங்களாகிய வளர்ச்சி எனும் வீக்கம், வெற்றி, நுகர்வுத்தன்மை இன்று பெருகிக் கொண்டிருக்கின்றன. இவர்கள் இயேசுவிடமிருந்தும், நற்செய்தியிடமிருந்தும் தொலைவில் உள்ளார்கள். எனவே, இவர்களுக்கு மீண்டும் நற்செய்தி அறிவிக்கப்பட்டு அவர்களைச் சிறுசிறு கிறித்தவச் சமூகங்களாகக் கட்டியெழுப்பி மீண்டும் திருஅவைக்குக் கொண்டுவர வேண்டும் என்கிறார் (*மீட்பரின் பணி,* 33-34).[12]

## 3) எல்லாருமே நற்செய்திப் பணியாளர்கள்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்புவரை நற்செய்திப்பணி ஆற்றுவது என்பது அருள்பணியாளர்களின் கடமையாக மட்டுமே பார்க்கப்பட்டது; பெரும்பாலும் பொதுநிலையினர் பங்கேற்கவில்லை. ஆனால், நற்செய்திப்பணி ஆற்றுவது திருமுழுக்குப் பெற்ற அனைவரின் கடமையாகும் (*பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி, 2*)[13] என இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது. எனவே, சமூகத்தின் எல்லா நிலைகளிலும் வாழும் அனைவருமே நற்செய்திப்பணிக்குத் தேவையானவர்கள் (மத் 20:1-16) எனத் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் தாம் எழுதிய *கிறித்தவ நம்பிக்கையாளர்களாகிய பொதுநிலையினர்* (*Christifideles*) எனும் திருத்தூது ஊக்கவுரையில் கூறுகின்றார்.[14]

திருத்தந்தை பிரான்சிஸ் நற்செய்தி அறிவிப்புப்பணி அனைவருக்கும் உரியது என்பதைக் குறிக்கும் விதமாகத் தமது *நற்செய்தியின் மகிழ்ச்சி* எனும் திருத்தூது ஊக்கவுரையை வெளியிட்டபோது 18 நாடுகளைச் சார்ந்த 36 பேருக்கு அதை வழங்கினார். லாத்வியா ஆயர், டான்சானியா அருள்பணியாளர், ஆஸ்திரேலியா திருத்தொண்டர், ஒரு குடும்பத்தினர், இருபால் துறவிகளில் ஒருவர், வேதியர், கலைஞர், பத்திரிக்கையாளர், இளையோர், முதியோர்,





நோயாளி ஆகியோர் அவர்களுள் அடங்குவார்கள். எனவே, திருத்தந்தை, ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவிகள், பொதுநிலையினர், இல்லறத்தார், இளைஞர்கள், பல்வேறு நிலைகளில் பணியாற்றும் பணியாளர்கள் ஆகிய அனைவருக்கும் இங்கு, இப்பொழுதே நற்செய்தி அறிவிப்புப்பணி வழங்கப்படுகின்றது என்கிறார்.

## 4) கிறிஸ்துவுடன் நெருக்கமும் நற்செய்திப் பணியும்

ஒருவர் நற்செய்தி அறிவிப்புப்பணியைச் செய்வதற்கு ஊற்றாக இருக்க வேண்டியது உயிர்த்த, மகிமைப்படுத்தப்பட்ட இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையே (*நற்செய்தியின் மகிழ்ச்சி,* 275); கருத்தியல் அல்ல என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். யார் ஒருவர் அவரோடு ஆள்சார்ந்த உறவு கொண்டுள்ளாரோ அவர்தான் இயேசுவாகிய நற்செய்தியை அறிவிக்க முடியும். உதாரணமாக, மகதலா மரியா என்பவர் உயிர்த்த ஆண்டவரை நேரடியாகக் கண்ட சீடர்; உடனே அந்த நற்செய்தியைச் சீடர்களுக்கு அறிவித்தார் (யோவா 20:17-18). எனவேதான், திருஅவை அவரைத் 'திருத்தூதர்களுக்குத் திருத்தூதர்' என அழைக்கின்றது. இயேசுவை நேரடியாகச் சந்தித்து உரையாடிய சமாரியப் பெண் அவரைப்பற்றி அறிவித்தார்; பலரை இயேசுவிடம் கொணர்ந்து அவர்களை நம்பிக்கையாளர்களாக்கினார் (யோவா 4:1-42).

எனவே, இயேசுவாகிய நற்செய்தியைப் பரப்ப நீண்ட காலப் பயிற்சி தேவையில்லை. யார் ஒருவர் கடவுளின் மீட்கும் அன்பை உண்மையிலேயே பருகியிருக்கின்றாரோ அவர்தான் தாம் பருகிய அந்த அன்பைப் பிறருக்கு வழங்க முடியும். அதாவது, கிறிஸ்து நம்மை அன்பு செய்கின்றார் என்பதை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டும் (*நற்செய்தியின் மகிழ்ச்சி,* 164). அவர் இன்றும் நம்மை மீட்கத் தமது உயிரை வழங்குகின்றார்; இன்றும் நம் அருகில் வாழுகின்றார், வலுவூட்டுகின்றார் என்ற இயேசு அனுபவத்தைச் சொல்வதே நற்செய்தி அறிவிப்புப்பணியாகும். எனவே, தனிப்பட்ட வாழ்வில் உண்மையான நிறைவு வேண்டும் என்றால் நாம் அனைவருமே நற்செய்திப்பணி ஆற்றவேண்டும்; நாம் பெற்றுக்கொண்ட இறை அன்பைப் பிறருக்கு வழங்க வேண்டும். அப்பொழுதுதான் நம் அன்பு உண்மையாக நிறைவடையும்.

இத்தகைய இந்த ஆள்சார்ந்த உறவுக்கு நற்செய்திப் பணியாளர்கள் திருச்சிலுவை முன் மன்றாடுதல், நற்கருணையின் முன்பாக முழந்தாள்படியிட்டுச் செபித்தல், நீண்ட நேரம் ஆராதனை செய்தல், செபம் நிறைந்த இறைவார்த்தையுடனான சந்திப்பு, இறைவனுடன் உண்மையான உரையாடல் ஆகியவற்றில் ஈடுபட வேண்டும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் (*நற்செய்தியின் மகிழ்ச்சி, 262*). இவைதான் இயேசு யார் என உய்த்துணர, அவரோடு ஆள்சார்ந்த உறவுகொள்ள, அவரின் அன்பை அனுபவிக்க உதவும் என்கிறார். இவை இல்லையெனில் நாம் ஆற்றும் நற்செய்திப்பணிகள் அனைத்தும் வீணானவை, அர்த்தமற்றவை ஆகிவிடும். எனவே, ஒவ்வொரு நற்செய்திப் பணியாளரும் தாம் இயேசுவுடன் நடக்கின்றோம், பேசுகின்றோம், சுவாசிக்கின்றோம் என்ற உணர்வுடன் இயேசுவை இதயத்தில் சுமந்தவர்களாய்ப் பணியாற்ற வேண்டும். இத்தகைய இந்த இயேசு அனுபவம் பெற, அதை அறிவிக்கத் தமிழகத்தில் பல இயக்கங்கள் உள்ளன: (1) சிறுவர், சிறுமியருக்கான இயேசுவின் கண்மணிகள் இயக்கம் (2) இளையோருக்கான இயேசுவின் நண்பர்கள் இயக்கம் (3) முழுநேர நற்செய்திப் பணியாளர்களுக்கான சீடர்கள் இயக்கம் (4) மணத்துணைவர்களுக்கான நற்செய்தி மணத்துணைவர் இயக்கம் (5) திருமுழுக்குப் பெறாதோருக்கான சிறப்புப் பயிற்சியுமாகும்.

## 5) மானிடத்துடன் நெருக்கமும் நற்செய்திப் பணியும்

நற்செய்திப் பணியாளர்கள் எந்த அளவுக்கு இறைவனுடன் நெருக்கமாக உள்ளார்களோ அந்தளவுக்கு மக்களுடனும் நெருங்கிய தொடர்புடன் வாழவேண்டும்; மக்களின் நெடியை நுகர வேண்டும்; மக்களின் பண்பாட்டை உய்த்துணர வேண்டும். அப்படி வாழும்போதுதான் நற்செய்திப் பணியாளர்கள் உண்மையான பணியாளர்களாய் இருக்க முடியும். ஒவ்வொரு நற்செய்திப் பணியாளருக்கும் மானிடத்தின் அன்றாட வாழ்வு முறை, அவர்களின் நிலை, சிந்தனைப்போக்கு, உளப்பாங்கு போன்ற அனைத்தும் தெரிந்திருக்க வேண்டும். இன்றைய மானிடத்தின் நிலையை உற்றுநோக்கும்போது பலர் இன்று அன்றாடக்காய்ச்சிகளாய் உள்ளனர்; பலர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்; முதியோர்கள் வெட்டவெளியில் இறத்தல் இன்றும் நடைபெறும் நிகழ்வாக உள்ளது; நம்பிக்கையற்ற நிலை, பயம் போன்றவை





இன்றைய சமூகத்தை ஆட்டுவிக்கும் தீயசக்திகளாய் உள்ளன; வல்லவனுக்கு வாழ்வு என்பது எழுதப்படாச் சட்டமாக உள்ளது; பயன்படுத்தித் தூக்கி எறியும் பண்பாடு நடைமுறைப் பழக்கமாக மாறிவிட்டது; பணச் சிலைவழிபாடு இன்றைய எதார்த்தமாக உள்ளது. சிலர் குறிப்பிட்ட மறைமெய்யறிவுக் கொள்கையின்பால் ஈர்க்கப்படும் நிலை இன்று வளர்ந்து கொண்டு வருகின்றது; சிலர் குறிப்பிட்ட சிந்தனைத் தொகுப்புக்கு மட்டுமே ஆர்வம் காட்டும் நிலை உள்ளது (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, 209-219). இவ்வாறாக, பல்வேறு வாழ்வுநிலைகளில், சிந்தனைப்போக்கில் வாழும் மக்களின் வாழ்வுச் சூழலுக்கு ஏற்ப, சிந்தனைகளுக்கு ஏற்ப நற்செய்திப்பணி ஆற்றப்படவேண்டும். காரணம் நற்செய்தி அறிவிப்புப்பணி என்பது தான் விரும்பும் செய்தியை அல்ல; கடவுள் பேசுவதை (God-talk) ஒரு குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்ப, மக்களின் மனநிலைக்கு ஏற்ப வழங்கும் செயலாகும். எனவே, நற்செய்தி ஒன்றாக இருப்பினும் கடவுள் குறிப்பிட்ட சூழலில்தான் பேசுகின்றார். எனவே, அதைச் சூழலுக்கு ஏற்ப வழங்குவதில்தான் நற்செய்திப் பணியின் தனித்தன்மை அடங்கியுள்ளது.

## 6) போதனையாலும் வாழ்வாலும் நற்செய்திப்பணி

இயேசு ஆண்டவர் என வெளிப்படையாக அறிவிக்கவில்லையென்றால் உண்மையில் நற்செய்திப்பணி நிகழாது என்கிறார் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் (*ஆசியாவில் திருஅவை*, 19). எனவேதான், எந்தச் சூழலிலும் நற்செய்திப்பணியைத் திருஅவை தொடர்ந்து ஆற்றவேண்டுமென இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது. நற்செய்தி அறிவிப்புப்பணியில் முக்கியமானது மறையுரை ஆகும். மறையுரை சுருக்கமாக இருக்க வேண்டும்: “சுருக்கமாய் பேசு; குறைவான சொற்களில் நிறையச் சொல்” (சீரா 32:8). மறையுரை என்பது பொழுதுபோக்கு அல்ல; நீண்ட உரை அல்ல; அறநெறிசார் போதனை அல்ல; கோட்பாட்டு விளக்கமல்ல; விவிலிய வார்த்தைக்கான விளக்கம் அல்ல; ஒரு தலைப்புபற்றிய தரவுகள் தருவது அல்ல; மாறாக, இது கடவுளின் வார்த்தையைச் சந்திப்பது; இது கடவுளுடன் உரையாடல் நடத்த வழிவகுக்க வேண்டும்; இது மக்களின் இதயங்களைப் பற்றியெரியச் செய்ய வேண்டும்; மக்களின் இதயத்துடன் பேசி வாழ்வில் மாற்றத்தைக் கொணர வழிவகுக்க வேண்டும். ஒருவகையில் இது மக்களுடன் அருள்பணியாளர்

கொண்டுள்ள நெருக்கத்தை அறிவிக்கும் உரைகல் ஆகும். எனவேதான், மறையுரை வழங்குபவர்களுக்கு நீண்ட நேரம் வாசிப்பு, செபித்தல், சிந்தனை, மேய்ப்புப்பணிப் படைப்பாற்றல் ஆகியவை தேவை என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, 135-144). இத்தகைய தயாரிப்பு இல்லாதவர்கள் ஆன்மிகமற்றவர்கள் ஆவர். மறையுரை தவிர்த்து மறைக்கல்வி போதித்தல், தொடர்பு ஊடகங்கள், தனி நபருடன் தொடர்பு, அருளடையாளங்கள், பக்தி முயற்சிகள் மூலமாகவும் நாம் நற்செய்தியை அறிவிக்க வேண்டும்.

ஆனால், போதனையால் மட்டுமல்ல; நமது வாழ்வின் மூலமும் நற்செய்திப்பணி ஆற்ற வேண்டும்: ''இன்றைய மனிதர் போதிப்பவர்களுக்கு செவிமடுப்பதைவிடச் சான்று பகர்வோருக்கு அதிக விருப்பமுடன் செவிமடுக்கின்றனர். அப்படி அவர்கள் போதிப்போருக்குச் செவிமடுத்தால், அதற்குக் காரணம் அவர்கள் சான்று பகர்வோராக இருப்பதே'' (*இன்றைய நற்செய்தி அறிவிப்புபணி*, 21)[16] என்கிறார் திருத்தந்தை ஆறாம் பவுல். எனவே, இறைநம்பிக்கையற்றவர்களிடம் எத்தனை நூல்கள் கொடுத்து வாசிக்கச் சொன்னாலும், விளக்கினாலும் நம்பமாட்டார்கள். ஆனால், உண்மையான கிறித்தவ வாழ்வை வாழ்ந்தால் அது அவர்கள் சிந்தனையை / இதயத்தைத் தூண்டும்; சான்று வாழ்வு பிறரைப் பாதிக்கும். எனவேதான், போதனையைக் காட்டிலும் சான்று வாழ்வே உண்மையான நற்செய்திப்பணியாகும்.

தவிர, நற்செய்திப் பணியாளர்கள் மகிழ்வுடன் இருக்கவேண்டும். அடக்கச் சடங்கை முடித்துவிட்டு வரும் ஒருவரைப்போல் நற்செய்திப்பணியாளர் இருக்கக்கூடாது (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, 8). காரணம், இன்று நிறைய மக்கள் கவலை, நம்பிக்கையின்மை போன்றவற்றில் வாழ்கின்றார்கள். இவர்கள் சோர்வான, பொறுமையிழந்த, உற்சாகமிழந்த நற்செய்திப் பணியாளர்களிடமிருந்து நற்செய்தியைக் கேட்க விரும்பமாட்டார்கள். மாறாக, கிறிஸ்துவின் அன்பை முதலில் யார் ஒருவர் பெற்று சுடர்விடுகின்றார்களோ அவர்களிடம்தான் வருவார்கள்.

## 7) உரையாடலும் நற்செய்திப்பணியே

எல்லாருக்கும் மீட்பு என இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது. இச்சூழலில் நற்செய்திப்பணியின் அழுத்தங்கள் இன்று மாறியுள்ளன. இந்து,





இஸ்லாம், பௌத்தம், சமணம், சீக்கியம் போன்ற பல சமயங்கள் உள்ள இந்தியாவில் கிறித்தவர்கள் நேரடியாக நற்செய்தியை அறிவித்துப் பிறரை மதமாற்றம் செய்வது எந்தளவுக்கு ஏற்புடையது என்பது கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, மதமாற்றம் செய்வதை விடுத்துவிட்டு இன்று எல்லாரையும் கடவுளின் இறையாட்சிக்குக் கொணர்ந்து ஓர் அன்புச் சமூகத்தை உருவாக்குவது அழுத்தம் பெறுகின்றது. எனவேதான் உலகில் பல்வேறு தளங்களில் வாழும் அனைவருடனும் உரையாடல் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்து இரண்டாம் வத்திக்கான் சங்கம் தொடங்கி அழுத்தம் பெற்று வருகின்றது.

முதலாவதாக, உரையாடல் என்பது கத்தோலிக்கர் அல்லா ஏனைய கிறித்தவத் திருஅவைகளுடன் கத்தோலிக்கத் திருஅவை உரையாடல் நடத்த வேண்டும். ''எல்லாரும் ஒன்றாயிருப்பார்களாக'' (யோவா 17:21) என்ற இயேசுவின் கனவு இன்று சிதைவுற்று உள்ளது. 'இயேசுவே மீட்பர்' என அறிக்கையிடும் பல்வேறு கிறித்தவத் திருஅவைகள் இயேசுவின் பெயரை உச்சரித்துக்கொண்டு பல்வேறு அரசியல், பண்பாடு, பொருளாதாரம், தனி மனிதப் பாவம் போன்ற காரணிகளால் பிளவுபட்டு இருப்பது இன்று எதிர்ச்சான்றாக உள்ளது. எனவே, ஏனைய சமயத்தவர்களுக்கு நமது நம்பிக்கையை அறிவிக்கும் விதமாக எல்லாக் கிறித்தவர்களும் ஒரே சமூகமாக வாழ்வது என்பது தேவையான ஒன்று; எனவே, கத்தோலிக்கர் அல்லா ஏனைய கிறித்தவர்களுடன் உரையாடல் நடத்துவது தேவையான ஒன்று (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, 244-246).

இரண்டாவதாக, உரையாடல் என்பது பிற சமயத்தவருடன் நடைபெற வேண்டும். இரண்டாம் வத்திக்கான் சங்கம் கிறித்தவமல்லாச் சமயங்களோடு திருஅவை தனக்குள்ள உறவைப்பற்றி அதிகக் கவனத்துடன் ஆய்ந்து வருகின்றது என்கிறது. காரணம், பிற சமயங்களில் காணக்கிடக்கின்ற உண்மையானதும் தூயதுமான எதையுமே கத்தோலிக்கத் திருஅவை வெறுத்து ஒதுக்குவதில்லை என்கின்றது. இருப்பினும், கிறித்தவமல்லாச் சமயங்களைப் பின்பற்றுபவர்களோடு முன்மதியுடனும் அன்புடனும் உரையாடல் நடத்த வேண்டும் எனப் பணிக்கிறது சங்கம் (*கிறித்தவமல்லாச் சமயங்களோடு திருஅவைக்குள்ள உறவு*, 1, 2).[17] இருப்பினும், உரையாடல் நடத்தும்போது ஒருவர் தமது நம்பிக்கையில் நிலையான உறுதியோடு இருக்க வேண்டும்; அதேவேளையில் பிறரின் நம்பிக்கையைப் புரிந்துகொள்ளும் திறந்த மனம்

வேண்டும். எல்லாவற்றிற்கும் 'ஆம்' என்பது தந்திரம்; அது பயன்தராது. மாறாக, ஒருவரின் சமய நம்பிக்கை அடுத்தவரின் சமய நம்பிக்கையை வளப்படுத்த வேண்டும். திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் பல்சமய உரையாடலும் நற்செய்திப் பணியின் இன்றியமையாத கூறாகும் என்கிறார். "பல்சமய உரையாடல் திருஅவையினுடைய நற்செய்திப் பணியின் ஒரு பகுதி" என்கிறார் (*மீட்பரின் பணி*, 5; *ஆசியாவில் திருஅவை*, 31). காரணம், இறையாட்சிப் பணியை திருஅவை மட்டும் தனித்து ஆற்றமுடியாது; எல்லாச் சமயத்தினரோடும் இணைந்து ஆற்ற வேண்டும்.

யூத சமயத்துடன் கத்தோலிக்கர்கள் உரையாடல் நடத்தவேண்டும் என்கிறது திருஅவை. காரணம், யூத மக்களோடு கடவுள் செய்த உடன்படிக்கையை அவர் திரும்பப்பெறவில்லை. யூதர்களோடு சேர்ந்து நாமும் வரலாற்றில் செயல்படும் ஒரே கடவுளை நம்புகின்றோம்; வெளிப்படுத்தப்பட்ட இறைவார்த்தையை, அதாவது பழைய ஏற்பாட்டை ஏற்கின்றோம். மேலும், பல நன்னெறி நம்பிக்கைகளையும் மக்களின் வளர்ச்சிக்கும் நீதிக்கும் பொதுவான அக்கறையையும் அவர்களுடன் பகிர்கின்றோம் (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, 247-249) என்கிறது.

இஸ்லாம் சமயத்தவருடனும் உரையாடல் நடத்த வேண்டும். காரணம், இவர்களின் இறைநம்பிக்கையில் ஆபிரகாமுக்கு மைய இடம் உண்டு. இஸ்லாமியப் போதனைகள் பல கிறித்தவப் போதனைகளுடன் இணைந்து செல்கின்றன. இயேசு கிறிஸ்து, அன்னை மரியா போன்றோர்மீது ஆழமான மரியாதை கொண்டுள்ளனர். இவ்வாறாக, கத்தோலிக்கத் திருஅவை இஸ்லாமியர்களோடு கொண்டுள்ள உறவின் வெளிப்பாடாகத்தான் ஒரு காலத்தில் கிறித்தவம் மட்டுமே மேற்கத்திய நாடுகளில் மேலோங்கி இருந்த நிலைமாறி இன்று மேற்கத்திய நாடுகளில் இஸ்லாம் சமயம் பரவிக் காணப்படுகின்றது; அது அங்கு எல்லா உரிமைகளையும் கொண்டுள்ளது என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். அவ்வாறே, கிறித்தவர்கள் எல்லா உரிமைகளையும் இஸ்லாமிய நாடுகளில் கொண்டிருக்க வேண்டும், அதற்கு, சமயச் சகிப்புத்தன்மை மிக முக்கியம்; வன்முறை, அடிப்படைவாதம் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, 252-253). இவ்வாறாக, உலக அமைதிக்குப் பல்சமய உரையாடல்





முக்கியம். காரணம், பல்சமய உரையாடல் அடிப்படையில் மானிட வாழ்க்கை பற்றியது, பிற சமயத்தினரின் இன்ப துன்பங்களைப் பகிரும் ஒரு செயல் ஆகும்.

மூன்றாவதாக, சமய நம்பிக்கை உடையவர்கள் என்ற எல்லையைத் தாண்டி, இறைநம்பிக்கை இல்லாதவர்களும் மனச்சான்றுக்கு உண்மையுள்ளவர்கள். எனவே, அவர்களுடன் உரையாடல் நடத்துவதும் நற்செய்தி அறிவிப்புப் பணியே. அவ்வாறே, பகுத்தறிவாதிகளுடனும் உரையாடல் நடத்த வேண்டும். காரணம், இறைநம்பிக்கை பகுத்தறிவுமட்டில் பயம் கொண்டதல்ல; அது பகுத்தறிவைத் தேடி அதை நம்புகின்றது. மேலும், பகுத்தறிவின் ஒளியும் இறைநம்பிக்கையின் ஒளியும் கடவுளிடமிருந்தே வருகின்ற காரணத்தால் அவை முரண்பட முடியாது என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, 242). அவ்வாறே, அறிவியல் வளர்ச்சியைக் கண்டு திருஅவை மகிழ்கிறது. இறைம்பிக்கை அதை மறுப்பதில்லை (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, 243). தவிர, திருஅவை அரசுடனும் உரையாடல் நடத்த வேண்டும். இதன்மூலம் தனி மனித மாண்புக்கும் பொதுநலத்திற்கும் அரசு ஆற்ற வேண்டிய கடமையைத் திருஅவை சுட்டிக்காட்ட வேண்டும் (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, 240-241).

மனிதரானதன் மூலம் கிறிஸ்து தாம் வாழ்ந்த மக்களுடைய சமுதாய, பண்பாட்டுச் சூழ்நிலைகளோடு எவ்வித உணர்வுடன் தம்மைப் பிணைத்துக் கொண்டாரோ, அவ்விதமே திருஅவையும் அனைத்திலும் உடனிருந்து, ஊடுருவி, உருமாற்றம் செய்தல் வேண்டும் என இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது (*திருஅவையின் நற்செய்திப்பணி*, 10). காரணம், பண்பாட்டுமயமாக்கல் வழியாகத் திருஅவை தனது இயல்புக்குரிய சிறந்த அடையாளமாகவும் சிறப்பான நற்செய்திப்பணிக் கருவியாகவும் மாறுகின்றது (*ஆசியாவில் திருஅவை*, 21).[15]

## 8) சமூக மாற்றமும் நற்செய்திப்பணியும்

இன்று தன்நலம், நுகர்வுவெறி, தனக்கே பணிபுரிதல், பொருள்மையப் பண்பாடு அதிகம் உள்ளன. ஆனால், "நான்" என்ற சுயநலனிலிருந்து வெளியேறி நமது சகோதர, சகோதரிகளை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். காரணம், நற்செய்தி அறிவிப்புப்பணி என்பது இவ்வுலகில் இறையாட்சியை

உண்டாக்குவதில் அடங்கியுள்ளது (*திருஅவை,* 5).[18] இத்தகைய, இறையாட்சி உருவாக்கத்தில் பிறரன்புப் பணி முக்கியமானதாகும். காரணம், ''திருஅவை தம் மக்களின் வழியாக எல்லாச் சூழ்நிலையில் வாழும் மனிதரோடும், இன்னும் சிறப்பாக வறியவரோடும், துன்புறுவோரோடும் இணைந்து அவர்களுக்காகத் தன்னையே மனமுவந்து அளிக்கிறது. திருஅவை உண்மையாகவே அவர்களுடைய இன்பங்களிலும் துன்பங்களிலும் பங்கு கொள்கிறது. வாழ்வின் ஏக்கங்களையும் புதிர்களையும் உணர்கிறது. அவர்களோடு மரண வேதனையில் துன்புறுகின்றது (*திருஅவையின் நற்செய்திப்பணி,* 12). இவ்வாறு, மறைபரப்புப்பணியில் ஒரு முக்கியமான தனிப்பொருளாகவும் திருஅவையின் வெளிப்பாடாகவும் பிறரன்புப் பணி உள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் இது பற்றிக் கூறும்போது மக்களின் கவலையும் ஏக்கமும்தான் திருஅவையின் கவலையும் ஏக்கமும் (*இன்றைய உலகில் திருஅவை,* 1) என்கிறது. இன்று அடிப்படைத் தேவைகள் கூட இல்லா நிலையில் ஏழ்மையில் பலர் வாழ்கின்றனர். எனவே, ''ஏழைகளுக்கு உதவி செய்ய மறக்க வேண்டாம்'' (கலா 2:10) எனும் புனித பவுலின் வரிகளுக்கு ஏற்பத் திருஅவை ஏழையாக, ஏழைகளுக்குப் பிறரன்புப் பணி புரியும் ஒன்றாக இருக்கவேண்டும் (*நற்செய்தியின் மகிழ்ச்சி,* 198). ஏழைகளிலும் சிறப்புக் கவனத்துக்கு உரியவர்கள் பலவீனர்கள் ஆவர்: வீடில்லாதவர்கள், புலம்பெயர்ந்தோர், பழங்குடியினர், முதியோர், போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், பிச்சை எடுக்கும் குழந்தைகள், விபச்சார விடுதிகளில் பணியாற்றுபவர்கள், வன்முறைக்கு உள்ளாகும் பெண்கள்.

இவர்களில் துன்புறும் இயேசுவைக் காண வேண்டும். இவர்களுக்கும் இறையாட்சி உரியது என்பதைக் கவனத்தில் கொண்டு அன்புப் பணியாற்ற வேண்டும். எனவே, குடியுரிமை நிறுவனங்களான கல்வி, மருத்துவம், சமய நிறுவனங்கள், அறிவியல் ஆய்வு, விளையாட்டுத்துறை, கலை தொடர்பான மையங்கள் போன்றவற்றுடன் திருஅவை இணைந்து பணியாற்றி இறையாட்சிக்கு உழைக்கவேண்டும்.

மேலும், தனி மனிதர்களுக்குச் செய்யும் பிறரன்புப் பணிகளைத் தாண்டி நீதிக்காக உழைப்பதும் நற்செய்தி அறிவிப்புப் பணியே எனத் திருஅவை கூறுகின்றது. 1971ஆம் ஆண்டு நடைபெற்ற ஆயர் மாமன்றம் ''நீதிக்காகப் பணியாற்றுவதும், உலகை மாற்றியமைப்பதில் ஈடுபடுவதும் நற்செய்திப்பணியின் இன்றியமையாத உட்கூறாக இருப்பதை நாங்கள் உணர்கின்றோம்'' என்று





முழக்கமிட்டது (*உலகில் நீதி,* 6).[20] எனவே, நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்கள் நீதிக்கான போராட்டத்தில் இருந்து ஒதுங்கி இருக்க முடியாது, ஒதுங்கி இருக்கவும் கூடாது. இவ்வாறு, சமூக விடுதலை உருப்பெறுவதற்கு உதவுவதும், அதற்குச் சான்று பகர்வதும், அது முழுமைபெற உழைப்பதும் திருஅவையின் கடமையாகும். இது நற்செய்திப் பணிக்கு புறம்பானதன்று எனச் சங்கம் கூறுகின்றது (*நற்செய்தி அறிவிப்புப் பணி,* 3). இப்படியாக, நீதிக்கான போராட்டத்தில் பங்கெடுக்கும்போதுதான் ஏழைகளை ஊமைகளாக்குகின்ற, அல்லது சமாதானப்படுத்துகின்ற கட்டமைப்பை உடைத்துச் சீரான உலகை உருவாக்க முடியும். எனவே, சமூகத்தில் இருக்கும் முரண்பாடுகளை எதிர்கொண்டு அதை நீக்க முயற்சி செய்வதும் நற்செய்திப் பணியே: 'சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர்' (மத் 5:9)

## முடிவுரை

இயேசுவின் கனவு இறையாட்சி. அதுதான் இயேசு தொடங்கிய இறையாட்சி இயக்கத்தின் அடித்தளமாகவும் இருந்தது. ஆனால், எப்பொழுது அது ஒரு சமயமாக, அதிலும் குறிப்பாக அரசு சமயமாக மாறியதோ அப்பொழுது தொடங்கி அது தன்னை ஒரு நிறுவனமாகக் கருதி ஏனைய சமயங்களைப்போன்று தன்னை நிலைநிறுத்துவதில், தன்னை விரிவாக்கம் செய்வதில் கவனத்தைத் திருப்பியது; அதுவே உண்மையான மறைபரப்புப்பணி எனக் கண்டது. இருப்பினும், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப்பின் திருஅவை காலத்திற்கு ஏற்பத் தன்னைப் புதுப்பிக்கும் ஒன்றாக கண்டுணர்ந்து வருகின்றது. எனவேதான், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப்பின் மறைத்தூதுப்பணி என்ற வார்த்தையைத் தவிர்த்து நற்செய்திப்பணி என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றது; அதன் அழுத்தங்களையும் மாற்றியுள்ளது. இன்று நற்செய்திப்பணி என்பது திருஅவையின் விரிவாக்கம் அல்ல; மாறாக, இறையாட்சி இம்மண்ணில் மலர திருஅவை நற்செய்திப்பணி ஆற்றவேண்டும் என்கிறது. எனவே இயேசுவின் கனவாம் இறையாட்சியை நனவாக்க, நாம் வாழும் புதிய சூழலில், புதிய பார்வையில், புதிய பாணியில், புதிய அழுத்தங்களோடு பணியாற்ற வேண்டும். இது திருஅவையின் பணி மட்டுமல்ல; மாறாக, யாரெல்லாம் இறையாட்சியின் கருவிகளாகச் செயல்பட விரும்புகின்றார்களோ – பிற சமயத்தவர், இறைநம்பிக்கையற்றோர், குடிமைச்

சமூகங்கள் - அவர்கள் அனைவருடனும் இணைந்து நற்செய்திப்பணி ஆற்ற வேண்டியது திருஅவையின் கடமையாகும்.

## அடிக்குறிப்புகள்

1. ஜா. மி. பெல்லார்மின், *திருஅவை வரலாறு - 4: சீர்திருத்தக்காலத் திருஅவை (கி.பி. 1294-1648)* (திருச்சிராப்பள்ளி: தேடல் வெளியீடுகள், 2017), 153-154.
2. எஸ். தேவராஜ், ''நற்செய்திப் பணி'', *இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் சுருக்கம்*, தொகுப்பாசிரியர்கள் சூ. சந்தியாகு ராசா, ச. ஆரோக்கியராஜ், வ. இரபேல் (திருச்சி: தேடல் வெளியீடுகள், 2013), 121.
3. Gregory XVI, *Probe Nostis* (Encyclical Letter), September 18, 1840.
4. Benedict XV, *Maximum Illud* (Apostolic Letter), November 30, 1919.
5. Pius XI, *Rerum Ecclesiae* (Encyclical Letter), February 28, 1926.
6. Pius XII, *Evangelii Praecones* (Encyclical Letter), June 2, 1951.
7. Pius XII, *Fidei Donum,* (Encyclical Letter), April 21, 1957.
8. John XXIII, *Princeps Pastorum* (Encyclical Letter), November 28, 1959.
9. Paul VI, *Ecclesiam Suam* (Encyclical Letter), August 6, 1964.
10. *திருஅவையின் நற்செய்திப்பணிபற்றிய விதித்தொகுப்பு; இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்* (திருச்சி: தேடல் வெளியீடுகள், 2014).
11. பிரான்சிஸ், *நற்செய்தியின் மகிழ்ச்சி - திருத்தூது ஊக்கவுரை* (சென்னை: நம் வாழ்வு வெளியீடு-44, 2014).
12. John Paul II, *Redemptoris Missio* (Encyclical Letter), December 7, 1990.
13. *பொதுநிலையினரின் திருத்தூதுப்பணிபற்றிய விதித்தொகுப்பு: இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்* (திருச்சி: தேடல் வெளியீடுகள், 2014).
14. John Paul II, *Christifideles Laici* (Post-Synodal Apostolic Exhortation), December 30, 1988.
15. John Paul II, *Ecclesia in Asia* (Post-Synodal Apostolic Exhortation), November 6, 1999.
16. Paul VI, *Evangelii Nuntiandi* (Apostolic Exhortation), December 8, 1975.
17. *கிறித்தவமல்லாச் சமயங்களோடு திருஅவைக்குள்ள உறவு : இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்* (திருச்சி :தேடல் வெளியீடுகள், 2014).
18. *திருஅவைபற்றிய கோட்பாட்டு விளக்கம்: இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்* (திருச்சி: தேடல் வெளியீடுகள், 2014).
19. *இன்றைய உலகில் திருஅவைபற்றிய கோட்பாட்டு விளக்கம்: இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்* (திருச்சி: தேடல் வெளியீடுகள், 2014).
20. World Synod of Catholic Bishops, *Justice in the World,* 1971.



# 9. தமிழகத்தில் மறைத்தூதுப்பணி

## சவால்களும் அணுகுமுறைகளும்

*மேதகு ஆயர் நசரேன் சூசை*
*கோட்டாறு மறைமாவட்டம்*

கிறித்தவ நம்பிக்கை அடிப்படையில் ஒரு மறைத்தூது நம்பிக்கை. அஃது இயேசுவின் இறையாட்சிச் செய்தியை எந்தெந்த விதங்களில் அறிவிக்க இயலுமோ அந்தந்த விதங்களில் அறிவிக்கவும் அவரது பணியை எந்தந்த வழிகளில் தொடர இயலுமோ அந்தந்த வழிகளில் இறையாட்சிப் பணியை ஆற்றிடவும் நம்மைப் பணிக்கிறது. ''என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது'' (திப 4:19) எனப் பேதுருவும் யோவானும் தலைமைச் சங்கத்தார்முன் அச்சமின்றி கூறிய மறுமொழி இந்நம்பிக்கையில் பிறந்ததுதான். நற்செய்தியை அறிவிக்கின்ற கட்டாயம் தமக்குண்டு எனக் கூறும் பவுல், ''நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு'' (1கொரி 9:16) என உணர்ந்து உரைப்பதும் இந்நம்பிக்கையின் வெளிப்பாடுதான். ''நாங்கள் கண்டதை, நாங்கள் கேட்டதை உங்களுக்கு அறிவிக்கிறோம்'' (1யோவா 1:4) என யோவான் தம் மக்களுக்கு உணர்வு மேலிட எழுதுவதும் இந்நம்பிக்கையின் அனுபவப் பகிர்வுதான். எனவே, இயேசுவிடம் நாம் கொள்ளும் நம்பிக்கை நம்மை எவ்விதத்திலேனும் அவரை அறிவிக்கப் பணிக்கிறது. பவுல் கூறுவதுபோல, ''எப்படியும் கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார். இதனால் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆம், இனியும் மகிழ்ச்சியடைவேன்'' (பிலி 1:18) என்னும் கூற்று எல்லாச் சூழ்நிலைகளிலும் எவ்வகையிலேனும் கிறிஸ்துவை அறிவிப்பதே கிறித்துவ நம்பிக்கை விடுக்கும் அழைப்பு என்பதை நமக்கு உணர்த்துகிறது.

இயேசு தம் சீடர்களுக்குக் கொடுத்த ''உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்'' (மாற் 16:15) என்ற மறைத்தூதுப்பணிக்கான கட்டளை நாம் வாழும் சூழலில் நம்மை மறைத்தூதுப்பணியாற்ற அழைக்கிறது. இயேசுவின் மறைத்தூதுப்பணிக்கான கட்டளைகளைப் பெற்ற சீடர்கள் தாங்கள் நற்செய்தி அறிவிக்கச் சென்ற இடங்களின் சூழலுக்கேற்ப மறைத்தூதுப்பணியை ஆற்றியதுபோல, இன்றும் திருஅவை தான் வாழும் இடத்தின் சூழலுக்கேற்பப் பல்வேறு விதங்களில் அப்பணியைத் தொடர்கிறது.

அஃது இயேசு பற்றிய நற்செய்தியை நேரடியாக அறிவிப்பதாக இருக்கலாம்; சமூகப் பணிகள் வாயிலாகச் செய்வதாக இருக்கலாம்; பல்திருஅவை, பல்சமய உரையாடல் பணிகள் வழியாக இருக்கலாம்; கலை, இலக்கிய, தொடர்பு ஊடகங்கள் வழியாக இருக்கலாம். இவை போன்று மாறிவரும் காலம் மற்றும் வாழிடத்திற்கேற்பத் திருஅவை மறைத்தூதுப்பணியாற்றிக் கொண்டிருக்கிறது. எனவே, எவ்வகையில் மறைத்தூதுப்பணி செய்தாலும் இயேசுவின் பணியைத் தொடர்வதே திருஅவையின் கடமையாக உள்ளது; பிறிதொருபணி அதற்கு இல்லை. இயேசுவின் பணி என்பது ''இறைவன் தம் அன்புக் கொடையாகத் தரும் நிறைவான வாழ்வை எல்லா மாந்தரும் பெற்று (யோவா 10:10) இன்புற்றிருக்கச் செய்யும் இறையாட்சிப் பணியாகும்.''[1] அதுவே அவரது நற்செய்திப்பணி அல்லது மறைத்தூதுப்பணியாகும்.

இயேசுவின் மறைத்தூதுப்பணிக்கான கட்டளையை அவரது இலட்சிய வாழ்வு மற்றும் இறையாட்சிப் பணியின் ஒளியில் காணும்போது, இக்கட்டளை நற்செய்தியை 'நேரடியாகப் பறைசாற்றும்' ஒற்றைத்தன்மை கொண்டது அல்ல என்பதும், அது பன்முகப்பரிமாணங்களைக் கொண்ட 'நிறைவாழ்வு' அல்லது 'முழுமனித வாழ்வின்' செயலாக்கமே என்பதும் தெளிவாகப் புலனாகும். அக்கட்டளையில் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டுமென்பது அழுத்தம் பெறுதல் உண்மைதான். ஆயினும், அந்நற்செய்தி அனைவரும் நிறைவாழ்வு என்னும் 'மீட்புப்' பெறுவதற்குப் பறைசாற்றப்பட வேண்டும் என்பது அதிக அழுத்தம் பெறுகிறது (மாற் 16:16). எனவே, மறைத்தூதுப்பணி என்பது இயேசு விரும்பிய எல்லா மக்களுக்கும் நிறைவாழ்வை உறுதிப்படுத்தும் பணி; முழு வாழ்வுக்கான உத்தரவாதம் தரும் பணி. நாம் எவ்வகையில் மறைத்தூதுப்பணி





செய்தாலும், அது முழு மனித வாழ்வினை நோக்கியதாகவும் அவ்வாழ்வுக்கு எதிரான அமைப்புகளையும் முறைகளையும் வேரோட்டமாக மாற்றுவதாகவும் அமைய வேண்டும்[2] என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கு 'மறைத்தூதுப்பணி' பற்றிய திருஅவையின் புரிதல் சிறிது தேவையென எனக்குத் தோன்றுகிறது. பொதுவாகக் கூறுமிடத்து, 'மறைத்தூதுப்பணி' என்பது இரு பொருள்களில் கையாளப்படுகிறது. திருஅவையின் நீடிய வரலாற்றில் பல நூற்றாண்டுகளாக, சமீப காலம்வரை அது இயேசுவை நம்பாதவர்களுக்கு அவரைப் பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றி அவர்களைத் திருஅவையின் உறுப்பினர்களாக்குவது என்பதாக எளிதாகப் பொருள்கொள்ளப்பட்டது.[3] அதேவேளையில், நற்செய்தியைப் பறைசாற்றி திருஅவையை நிறுவுவதே மறைத்தூதுப்பணியின் முதன்மையான வழி எனக் கூறினாலும், இரண்டாம் வத்திக்கான் சங்கம், *திருஅவையின் நற்செய்திப் பணி* எனும் ஏட்டில், சூழ்நிலைகளுக்கேற்ப ''பொறுமையோடும், முன்மதியோடும், பெரும் நம்பிக்கையோடும் அன்புச் செயல்கள் மற்றும் இரக்கச் செயல்கள் வழியாகவாவது கிறிஸ்துவுக்குச் சான்று பகர முடியும்; பகரவும் வேண்டும்'' (எண். 6) என்றுரைக்கிறது. இன்னும் பரந்துப்பட்ட பார்வையில், மறைத்தூதுப்பணி எப்போதும் திருஅவை வேரூன்றி வாழ்கின்ற அல்லது வாழ வேண்டிய ஒரு குறிப்பிட்ட சமூக-பண்பாட்டுச் சூழலைக் கவனத்தில் கொள்ளவேண்டும் எனக் கூறும் சங்கம் (*இஉதி* 44), ''இன்றைய சமூக-பொருளாதார முன்னேற்றத்தில் செயல்முறையில் பங்கு கொண்டு நீதி, அன்பு ஆகியவற்றை வளர்ப்பதற்காகப் போராடும் கிறித்தவர்கள்'' இறையாட்சிப் பணியில் ஈடுபடுகின்றார்கள் எனவும், கிறிஸ்துவுக்கும் அவரது நற்செய்திக்கும் உண்மையாயிருந்து'' (*இஉதி* 72) மறைத்தூதுப்பணியாற்றுகிறார்கள் எனவும் கூறுகிறது. சுருக்கமாகச் சொல்வதானால், மறைத்தூதுப்பணி என்பது இயேசுவின் இறையாட்சிப் பணியை இன்றைய காலத்தில் தொடர்ந்தாற்றுவது எனவும், அது 'நாசரேத்துத் தொழுகைக் கூட முழக்கத்தின் செயலாக்கப்பணி' எனவும் புரிந்து கொள்ளலாம்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் மறைத்தூதுப்பணியை அல்லது இறையாட்சியின் நற்செய்திப் பணியை இன்றைய தமிழகச் சூழலில் நாம் எவ்வாறு ஆற்றவியலும் என்பதை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக இருக்கிறது. இதனை நாம் இன்றைய தமிழகச் சூழலை சற்று விமர்சனக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்து அச்சூழலில் மறைத்தூதுப்பணியையொட்டி

எழும் சில சவால்களை இனம் கண்டு நம் காலச் சூழலுக்கேற்ப இன்று நாம் முன்னெடுக்க வேண்டிய அணுகுமுறைகள் சிலவற்றை முன்மொழிவதன் வழியாக முயற்சிசெய்வோம்.

## I. தமிழகத்தின் இன்றைய நிலை

எப்போதுமில்லாத வகையில் இப்போது தமிழகம் மிகவும் சீரழிந்தும் தரம் தாழ்ந்தும் சென்று கொண்டிருப்பது வெள்ளிடை மலை; வேதனையான விடயம். ''செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே'' என்பதும், ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்பதும் அர்த்தமற்ற வெற்றுமுழக்கங்களாகவே இக்காலத்தில் நமக்குப்படுகிறது. சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் தமிழகம் மிகவும் பின்தங்கியிருக்கிறது என்பதை எவரும் மறுக்கவியலாது என்றே நம்புகிறேன். பின்தங்கியிருக்கிறது எனக் கூறும்போது, இங்கு வாழும் பெருவாரியான மக்கள் நலமாகவும் வளமாகவும் வாழ்வதற்கு அவதிப்படுகிறார்கள் அல்லது மறுக்கப்படுகிறார்கள் என்றே பொருள்படும். இந்த வாழ்வைத் தேடும் போராட்டத்திலே உடனிருந்தும் உடன் போராடியும் சாமானியரும் 'நிறைவாழ்வை'ப் பெற்றுக்கொள்ள உழைப்பதுவே தமிழகத் திருஅவையின் மறைத்தூதுப்பணியாகும். மக்களின் அவலம், அழுகை, ஆற்றாமை, உரிமைகள், மாண்பு, அடிப்படைத் தேவைகள் என்பனவற்றைப் புறந்தள்ளிவிட்டு திருஅவையால் மறைத்தூதுப்பணியாற்ற இயலாது. அவ்வாறு இன்றைய தமிழ்நாட்டிலுள்ள பெரும்பான்மையான சாமான்ய மக்களின் அன்றாட வாழ்வின் ஏக்கங்களை உணர்ந்து ஆற்றும் முழுமனித வாழ்வுக்கான பணியே அர்த்தமுள்ள மறைத்தூதுப்பணியாகும்; அதுவே இறையாட்சிப் பணியாகும்.

### அ. சாதியால் கட்டமைக்கப்பட்ட சமூகம்

இன்றைய தமிழ்நாட்டை ஊடறுத்துப் பார்க்கும்போது, நவீனமும் நாகரிகமும் அடிப்படையில் சாதிய உணர்வை இன்னும் மாற்றிவிடவில்லை என்றே கூறத் தோன்றுகிறது. அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால், ஊர்-சேரி என்கிற





சமூகக் கட்டமைப்பு இன்னும் முற்றிலுமாய் மாறிவிடவில்லை. இதுவே இன்றளவும் ஆண்டான்-அடிமை, உயர்ந்தோர்-தாழ்ந்தோர் என்னும் மாய மனநிலையைத் தக்க வைத்து மக்களைப் படிநிலை அமைப்பாக்குகிறது. தட்டிக் கேட்போரையும் திமிர்ந்து எழுவோரையும் அடக்கத் துணிகிறது; அடங்க மறுத்தால் சாதிக் கலவரத்தைத் தூண்டவும் குற்ற வழக்குகளில் சிறையில் தள்ளவும் குண்டர் சட்டத்தைப் பாய்ச்சவும் தடயமற்ற மர்மக்கொலை செய்யவும் அதிகாரத்தைப் பயன்படுத்துகிறது; தீண்டாமைச் சுவர்களை எழுப்பச் செய்கிறது; ஆணவக் கொலைகளை அரங்கேற்றுகிறது; சுடுகாட்டுக்கும் இடுகாட்டுக்கும் பாதை தர மறுக்கிறது. இப்படியாக, பிறப்பிலிருந்து இறப்பு வரை சாதி என்னும் அமைப்பால் மனித மாண்பிழந்து எண்ணற்ற மக்கள் வாழ்வது தமிழகத்தின் முதல் தலைக்குனிவு.[4]

### ஆ. வறுமையைத் தக்கவைக்கும் பொருளாதாரம்

இரண்டாவது, தமிழ்நாட்டில் பரவலாக நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வு. இந்த ஆண்டின் தேசிய சமூக நீதி ஆணையத் தரவுப்படி, தமிழ்நாட்டில் மக்களுள் 22.5 விழுக்காட்டினர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அதாவது, நகர்ப்புறத்தில் மாதத்திற்கு ரூ.538.60க்கும் கிராமப்புறத்தில் ரூ.356.30க்கும் குறைவாக வருமானம் ஈட்டுபவர்கள்; அன்றாட வாழ்வை நடத்த வாய்ப்பும் வசதியும் இல்லாதவர்கள். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வறுமைக்கும், பொருளாதாரத்தில் மிகவும் தாழ்ந்த நிலைக்கும் தள்ளப்படுகின்றனர். அரசின் பொருளாதாரத் திட்டங்களால் சொந்த மனைகளிலிருந்தும் மண்ணிலிருந்தும் விவசாய மக்கள் பலர் நகர்ப்புறத்திற்குக் கூலித்தொழிலாளர்களாய்ப் புலம்பெயர்கிறார்கள். பல விளைநிலங்கள் தொழிற்சாலைகளுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும், மருத்துவமனைகளுக்குமெனப் பெருமுதலாளிகளால் வாங்கப்படுகின்றன. சாலை விரிவாக்கம், அரசுத் திட்டங்களுக்கென விவசாய நிலங்கள் மக்கள் எதிர்ப்புகளுக்கு நடுவே அரசால் அடிமாட்டு விலைக்குக் கையகப்படுத்தப்படுகின்றன. அந்நிய மற்றும் உள்நாட்டுப் பெருநிறுவனங்களுக்குக் கனிமவளங்கள், இயற்கை எரிவாயு, ஹைட்ரோகார்பன், மீத்தேன் போன்றவற்றிற்காக விவசாய நிலங்கள் கபளீகரம் செய்யப்படுகின்றன.

இன்னொரு புறம் அரசியல் தலைவர்கள், மடாதிபதிகள், அரசு அதிகாரிகள், பெரும் வணிகர்கள், பெரும் முதலாளிகள், மருத்துவர்கள், நீதிபதிகள், திரைப்படத் துறையினர் போன்று ஆடம்பரவாழ்வைக் கொண்டாடும் சிறு விழுக்காட்டினர் இங்கு சொகுசாக வாழ்கின்றனர். இலஞ்சம், ஊழல், வருமான வரிஏய்ப்பு, கந்துவட்டி போன்ற தவறான வழிகளில் செல்வம் சேர்ப்போர், ஏழை மக்களைக் கொத்தடிமைகளாக்கி இரத்தத்தை உறிஞ்சி வாழ்வோர், ஆயிரமாயிரம் கோடி வங்கிக்கடன் பெற்று ஏமாற்றுவோர் என மக்கள் முதுகில் சவாரி செய்வோர் பகட்டாக இருக்கின்றனர். இப்படியாக, பெரும்பாலான ஏழைகள் வறுமையிலும் ஏழ்மையிலும் அல்லாட, சிலர் உல்லாசமாக வாழும் அவலமே தமிழ்நாட்டின் எதார்த்தமாக உள்ளது. கல்வித்தகுதி இருந்தும் தென் இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் வேலையில்லாதவர்கள் விழுக்காடு அதிகம் எனச் சென்னை சமூக வளர்ச்சி நிறுவனம் (MIDS) கூறுகிறது. 2016-17ஆம் ஆண்டில் வேலையில்லாதவர் எண்ணிக்கை 81.30 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.[5]

நாட்டின் நிலங்களைப் பெருநிறுவனங்களுக்குத் தாரைவார்ப்பது மட்டுமன்றி, இயற்கை அரணாய்ச் சூழ்ந்திருக்கும் கடலையும் ‘சாகர்மாலா’ திட்டத்தின் கீழ் எவ்விதக் கட்டுப்பாடுமின்றிக் களவாடக் கொடுப்பது சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மீனவர்களின் வாழ்விடங்களைப் பறிப்பதற்கும் வாழ்வாதாரங்களை அழிப்பதற்கும் வழிகோலுகிறது. கனிம வளங்களைக் கொள்ளையிட மலைகளும் காடுகளும் அழிக்கப்படுகின்றன. பிற மாநிலங்களிலிருந்து மக்கள் வாழ்வுக்கு ஆபத்து விளைவிப்பதாகக் கருதப்பட்டு விரட்டப்பட்ட அணு உலைகள், நியூட்ரினோ, ஸ்டெர்லைட், ஹைட்ரோ கார்பன்திட்டம் போன்றவை தமிழ்நாட்டில் நிறுவப்படுகின்றன. இவ்வாறு, மக்கள் வாழ்வுக்கெதிரான திட்டங்கள் பல இங்கு நிறைவேறிக் கொண்டிருப்பது இன்னோர் அவலம்.

## இ. தான்தோன்றித்தனத்தின் உச்சக்கட்ட அரசியல்

தமிழ்நாட்டில் அரசியல்நிலை பேசும் நிலைக்குத் தரமானதாக இல்லை. இந்நாட்டைத் தமிழர் ஆண்டதைவிட அதிகமாக வெளிமாநிலத்தவரே தலைமை அமைச்சராகவும் துறைகளின் அமைச்சர்களாகவும் ஆண்டிருக்கின்றனர். தமிழகத்திற்கு வந்தேறிகளாக வந்த தமிழரல்லாதவர்கள் தமிழரை ஆண்டதால், தமிழரைத் தங்களின் சொந்த மண்ணிலேயே அடிமைகளாகவும் கூலிகளாகவும் ஆக்கினர். ஆள்வதில் மட்டுமல்ல, தமிழகத்தில் அரசு அதிகாரத்திலும் ஆட்சித் துறையிலும்கூட தமிழரல்லாதோரே இன்னும் தனிக்கொற்றம் புரிந்து வருகின்றனர்.[6] நீதித்துறை, பல்கலைக் கழகங்களிலும் தமிழர் அல்லாதோரே அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர்.





தனித்தமிழ்நாடு கொள்கையைக் கைவிட்டு, ‘மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி’ என்ற சி.என். அண்ணாத்துரையின் சமரசக் கொள்கையை அடுத்து, தமிழ்நாடு இரு திராவிடக் கட்சிகளிடமே நெடுங்காலமாய்ச் சிக்கித் தவிக்கிறது. திரைப்படத் துறையினரின் தாக்கம், ஊழல், கையூட்டு, வாக்குகள் விலைபேசுதல், குடும்ப ஊடுருவல், மதவாதக் கட்சிகளோடு பேரம், ஆட்சியைத் தக்கவைக்கக் குதிரைப் பேரம் எனத் தமிழக அரசியல் தூய்மையாய் இல்லை. ஆட்சியில் இருக்க மத்திய அரசுக்கு அடிமையாய்ச் செயல்படுதல், மாநில உரிமைகளை விட்டுக்கொடுத்தல், பெரும்பான்மையானவர் மதம் சார்பாகச் செயல்படுதல், காவல்துறை அராசகங்கள் என மக்களுக்கு எதிரானவை பல அன்றாடம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மக்கள் நலத்திட்டங்களுக்குப் போதிய நிதியில்லை எனக் கூறும் அரசு, தங்கள் கட்சித்தலைவர்களுக்குப் பல கோடிகள் மக்கள் வரிப்பணத்தில் நூற்றாண்டு விழாவிற்கெனவும் இறந்தவர்க்கு நினைவு மண்டபத்திற்கெனவும் செலவிடுகிறது. அரசின் தவறான கொள்கைகளை விமர்சிப்பவர்களையும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்களையும் ‘தேசத் துரோகிகள்’ என முத்திரை குத்திக் கைதுசெய்து சிறையில் அடைக்கிறது. பதவிக்காகக் காலில் விழும் அநாகரிகம், குற்றவழக்குகள் பின்னணி, கட்சிக்குள்ளே பல கோஷ்டிகள், மக்கள் நலனில் அக்கறையின்மை எனத் தமிழ்நாட்டு அரசியல் தரம் கெட்டிருக்கிறது. ‘ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்பதுபோல, 2016ஆம் ஆண்டிலிருந்து உள்ளாட்சித் தேர்தல் நடத்தாமல் தவிர்ப்பது அரசின் மெத்தனப்போக்கிற்குத் தக்க சான்று.

## ஈ. தடுமாறும் தமிழர் பண்பாடு

பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்த வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடி போன்றது. இன்று அக்கண்ணாடி சுக்குநூறாய் உடைந்ததுபோல் தமிழர் பண்பாடு திட்டமிட்டு அழிக்கப்படுகிறது. முன்பொரு காலத்தில் பிறநாட்டு

அரசர்கள் படையெடுப்பால் தமிழர் பண்பாடு சிதைந்தது எனில், தற்காலத்தில் கண்ணுக்குத் தெரியாத வகையில் பிற மாநிலத்தவரால் பண்பாட்டுச் சீரழிவு நிகழ்த்தப்படுகிறது. அதற்கு எளிதான வழியாக அவர்கள் கையாள்வது அச்சு, அலைவரிசை மற்றும் காட்சி ஊடகங்களாக இருக்கின்றன. பண்பலை தொடங்கி திரைப்படம் ஈறாக, தமிழ் மொழியும் பண்பாடும் கொச்சைப்படுத்தப்படுகின்றன. ஊடகங்கள் பெருநிறுவனங்களிடமும் உயர்சாதியினரிடமும் கட்சி முதலைகளிடமும் இருப்பதால் பண்பாடு எதுவென அவர்களே நிர்ணயிக்கிறார்கள். சிறுபான்மை உயர்சாதி வடமொழி கலந்த மொழிவழக்கே தமிழ் வழக்காகப் பரப்புரை செய்கிறார்கள். அத்தோடு நில்லாது, தமிழ்வழிக் கல்விக்கு மூடுவிழா நடத்தி ஆங்கிலமே இன்று தூக்கிப்பிடிக்கப்படுகிறது. 'தமிழ் இனி மெல்லச் சாகும்' என்பதுபோல எங்கும் எதிலும் ஆங்கிலம் கொடிக்கட்டிப் பறக்கிறது. மொழியோடு சேர்ந்து தமிழ்மண் சார்ந்த மரபுகள், வழக்காறுகள், விளையாட்டுகள் என்பனவும் அழிக்கப்படுகின்றன. அந்நிய மொழியின் தாக்கம், அந்நிய உடை, உணவு, பழக்கவழக்கங்கள், நுகர்வுக் கலாச்சாரம் என்பன போன்றவற்றுக்கு வழிவகுக்கிறது.

தமிழ்நாட்டின் மற்றொரு சாபம் திரைப்பட மோகமும் தலைமை வழிபாடும் எனலாம். திரைப்பட நடிகர் நடிகைகளுக்காக எதையும் செய்யத் துணியும் தவறானபோக்கு இங்குப் பரவலாக உள்ளது. இன்னொருபுறம் நாம் எந்தப் பொருளை வாங்குவது, எங்கு வாங்குவது, எப்படி வாங்குவது என்பதை ஊடகங்கள் தீர்மானிக்கின்றன. உலகமயக் கலாச்சாரத்தில் நுகர்வே அனைத்துமாகிவிட்டதால், மனிதர் உட்பட அனைத்துமே பொருளாகப் பாவிக்கப்படுகின்றன. சமூக ஊடகங்களால் குடும்ப உறவுகள், சமூக அறநெறிகள் வலுவிழக்கின்றன. எது உடனடி இன்பமும் இலாபமும் தருமோ அதுவே வாழ்க்கைமுறை என்ற நிலை உருவாகிறது.

### உ. பார்ப்பனமயமாகும் சமயம்

பல சமயங்கள் ஒருங்கிணைந்து ஒற்றுமையாக வாழ்ந்தநிலை தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் வெகுவாய் மாறி வருகிறது எனலாம். அதற்கு முதன்மையான காரணங்களில் ஒன்று பல பத்தாண்டுகளாய்த் தமிழகத்தில் நீடித்திருந்த பகுத்தறிவு - சுயமரியாதை இயக்கம் போன்றவை இன்று நீர்த்துப்போகத் தொடங்கியுள்ளன. தாய்மதம், பக்தி, கடவுள் நம்பிக்கை என்பன





போன்ற பிரச்சாரங்கள் வலுப்பெறுகின்றன. அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, பல ஆண்டுகளாகத் தமிழ் மண்ணிலே காலூன்ற முடியாமல் தவித்த ஆர்.எஸ்.எஸ். தற்போதைய நிலவரப்படி (பெருநகரங்கள், நகரங்கள் மற்றும் கிராம அளவில்), 1400 இடங்களில் குழுக்கள் உருவாக்கி, அன்றாடம் பயிற்சியில் ஈடுபடுகின்றது என்பதுதான்.[7] தமிழகத்தில் கடந்த 20 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான கோவில்கள் உருவாகியுள்ளன. அக்கோவில்களில் விளக்குப்பூசைகள், ஆராதனைகள், வேள்வி-யாகங்கள், குடமுழுக்குகள், அர்ச்சனைகள், அன்னதானங்கள், ஆன்மிக வகுப்பு என்கிற பெயரில் பாமரமக்கள் தங்கள் தொன்மையான சிறுதெய்வ வழிபாட்டை மறந்து பார்ப்பனிய முறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்குகிறார்கள். இவர்களின் இந்துமத நம்பிக்கையைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயத்திற்காக அணிதிரட்டப்படுகிறார்கள்.

பாமர மக்களிடையே பக்தி உணர்வை, கடவுள் நம்பிக்கையைப் பரப்புவதை ஓர் உத்தியாகக் கொண்டு தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். செயல்படுகிறது. இதன் விளைவாக, தமிழர் கடவுளர்கள் மறக்கடிக்கப்படுகிறார்கள். வடநாட்டுக் கடவுளர்களும் பார்ப்பன வழிபாடுகளும் வேரூன்றுகின்றன. இன்னொருபுறம் சமயவெறி ஊட்டப்படுவதால் பிற சமயத்தவரை எதிரியாகப் பார்க்கும் நிலையும், இந்துக்கள் அல்லாதவர் இந்தியர் அல்ல என்ற பிரச்சாரமும் வலுப்பெறுகின்றன. சமயவெறிக் குழுக்கள் பல எண்ணிக்கையில் உருவாகின்றன. சமய நல்லிணக்கம் குறையும் நிலை உருவாகியுள்ளது. சிறுபான்மையினராக வாழும் இசுலாமியர், கிறித்தவர் போன்றோரின் சமய உரிமைகள் பறிக்கப்படும் நிலை அதிகரித்து வருகிறது.

### ஊ. சவால்களை இனம் காண்போம்

நிறைவாழ்வு அல்லது முழுமனித வாழ்வே மறைத்தூதுப்பணியின் நோக்கமெனில், மேற்கூறிய தமிழ்நாட்டின் இன்றைய நிலை நமக்கு நம்பிக்கை தருவதாக இல்லை. ஏற்றத்தாழ்வும் பாகுபாடுகளும் நிறைந்த ஒரு சமூகமாகவே தமிழகம் இன்றும் உள்ளது. எனினும், இங்கு இயேசுவின் இறையாட்சிப் பணியாற்றி வரும் தமிழகத் திருஅவை முழுமனித வாழ்வை அளிப்பதில் அளவிடமுடியாப் பங்களிப்பைச் செய்திருக்கிறது எனலாம். இன்னும் அப்பணிகளைத் தொடர்வது பல குறிப்பிடத்தக்க மாற்றங்களை

உருவாக்குமென நம்பலாம். இருப்பினும், இறையாட்சிப் பணிகளைத் திருஅவை தொடர்ந்தாற்றிடும்போது பல சவால்கள் முன்னிறுத்தப்படுகின்றன. அவை யாவை என ஒருசிலவற்றை வகைப்படுத்திக் கீழே பட்டியலிட முயல்வோம். இவை தமிழகத்தில் சிறப்புற மறைத்தூதுப்பணியாற்றிடத் தகுந்த அணுகுமுறைகளை வகுத்திட நமக்கு உதவும். முதலில், மறைத்தூதுப்பணியாற்றும் தமிழகத் திருஅவையின் பணியிலிருந்து எழும் சில சவால்களை மிகச் சுருக்கமாக வரிசைப்படுத்துவோம்.

## II. தமிழகத் திருஅவையின் பணியில் எழும் சவால்கள்

### அ. விமர்சனப் பார்வையின்மை

தமிழகத் திருஅவை நூற்றாண்டுகளுக்கு முன் தமிழகம் வந்து நற்செய்தியை அறிவித்த மறைத்தூதுப் பணியாளர்களால் மிகுந்த மனிதவளம் பெற்றுள்ளது என்பது உண்மை. அது மறைத்தூதுப்பணியை தொடர்ந்து ஆர்வத்தோடு செய்துவர பல அருள்பணிக்குழுக்களை உருவாக்கியுள்ளது. அமைப்பு ரீதியாக மாநில அளவில் மற்றும் மறைமாவட்ட அளவில் எனப் பல அருள்பணியாளர்களும் பொதுநிலையினரும் ஈடுபட்டுள்ளனர். பல திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன; பெரும் தொகை செலவிடப்படுகின்றது. இவற்றில் பல திட்டங்கள் காலத்திற்கு ஏற்ப மாறாதவையாகவே உள்ளன. காலத்தின் தேவையை ஆய்ந்தறிந்து நம் திட்டங்களைச் சுய விமர்சனங்களுக்கு உட்படுத்தும் படைப்பாற்றலோடு கூடிய பணித்திட்டங்களே இன்றைய தேவை.

### ஆ. தயக்க மனநிலை

மறைத்தூதுப்பணி என்பது திருமுழுக்குப் பெற்ற அனைவருக்குமானது.[8] அதுவே திருஅவை உறுப்பினர்களாகிய நம் முதல் கடமையுமாகும். மறைத்தூதுப்பணியை ஆர்வம் குறையாமல் அனைவரும் ஆற்றுவதால், இயேசு தொடங்கிய இறையாட்சிப் பணி இன்றும் தொடர்கின்றது. ஆனால், இன்று என்ன நடக்கிறது? திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதுபோல, மறைத்தூதுப்பணியில் பங்கெடுக்க நாம் அனைவரும் அழைக்கப்பட்டாலும், நாம் நம்முடைய ‘சுகமான மண்டலத்திலிருந்து’ (Comfort zone) வெளியேறத்





தயங்குகின்றோம்.[9] தமிழகத் திருஅவையில் மரபுகள், திருவிழாக்கள், சட்டங்கள், வழிபாடுகள் போன்றவை நம் சுகமான மண்டலங்களாக இருக்கலாம். அவற்றை மீண்டும் மீண்டும் கொண்டாடுவதாலும் கடைப்பிடிப்பதாலும் ஒருவகையான மனநிறைவு இருக்கிறதே தவிர, நாம் வெளியேறிச் செல்லும் திருஅவையாக’[10] இருப்பதில்லை. மறைத்தூதுப்பணி தீவிரமாக நடைபெறுவதில்லை.

### இ. பிரிவு மனநிலை

தமிழகத் திருஅவைக்கென அருள்பணித்திட்டங்கள் பல இருந்தாலும், ஒட்டுமொத்தத் தமிழகத் திருஅவையிலும் மறைமாவட்டங்கள் மற்றும் பங்குகளிலும் நிலவும் பல பிரிவினைகள் மறைத்தூதுப்பணிக்குப் பின்னடைவாகவே உள்ளன எனலாம். சாதியினாலும் பாலினத்தினாலும் ஏற்றத்தாழ்வுகளையும் பேதங்களையும் கோவிலிலும் வழிபாட்டிலும் திருஅவையின் பங்கேற்பு அமைப்புகளிலும் பாராட்டுவது மறைத்தூதுப்பணிக்கு எதிர்ச்சான்றாகும். அருள்பணியாளர் – பொதுநிலையினரிடையேயான பணி இடைவெளியும் இதில் அடக்கம். அருள்பணியாளர் ஆதிக்கம், ஆணாதிக்கம் என்பன போன்றவை மறைத்தூதுப்பணிக்குத் தடைகளாகும்.

### ஈ. சிறுபான்மை மனநிலை

தமிழ்நாட்டில் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் எண்ணிக்கையில் குறைவு. சொல்லப்போனால், 5 விழுக்காட்டினரே. எனினும், நாம் ஆற்றும் சமூக முன்னேற்றப் பணிகளால் தமிழகத்தில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம். ஆனால், நம்மிடையே உள்ள இயல்பான உணர்வு, சிறுபான்மையினரான நாம் என்ன செய்ய முடியும் எனத் தயங்குவதே. இதைத் தவிர்த்து, பிற கிறித்தவ திருஅவையினரோடு ஒன்றிப்பையும் பிற சமயத்தவரோடு உரையாடலையும் உருவாக்கும்போதுதான் மறைத்தூதுப்பணி நிகழும்.

இவ்வாறு, நம் தமிழகத் திருஅவை கூர்ந்து கவனிக்க வேண்டிய சவால்கள் அதனுள்ளே இன்னும் பல இருக்கின்றன. அதேவேளையில் மறைத்தூதுப்பணியாற்றும் தமிழகச் சூழலில் இருந்தும் பல சவால்கள் முன்நிற்கின்றன. அவற்றில் ஒருசிலவற்றை இவண் காண்போம்.

## III. மறைத்தூதுப்பணியாற்றும் தமிழகச் சூழலில் முன்நிற்கும் சவால்கள்

### அ. சமூகக் கட்டமைப்பும் சாதிய உணர்வும்

திருஅவை அனைவருக்கும் பொதுவானது; திருஅவையில் அனைவரும் சமமானவர்கள் என்பதே கிறித்தவத்தின் அடிப்படைச் சித்தாந்தம். அப்படியிருக்க, தமிழ்ச் சமூகத்தில் புரையோடிப் போயுள்ள மட்டுமீறிய சாதிய உணர்வும் அதைத் தக்கவைக்கும் சமூகக் கட்டமைப்பும் எப்போதுமே தமிழகத் திருஅவைக்கு ஒரு சவாலாகவே உள்ளது. சாதிக்கென ஆலயம், ஆலயத்தில் சாதிவேறுபாடு என்பன சிறிதுசிறிதாக மறைந்து வருகின்றன என்றாலும், இன்னும் சாதிய அகமணமுறையே அதிகமாக உள்ளது. இறையியலார் தே. அல்போன்சு கூறுவதுபோல, ‘‘பல மறைமாவட்டங்களில் திருப்பணியாளர்களும் பொதுநிலையினரும் துறவறசபைகளில் அவற்றின் உறுப்பினர்களும் தங்கள் சாதியினரே ஆயர்கள், மாநில அல்லது சபைத் தலைவர்கள் பதவிகளுக்கு நியமனம் பெற அல்லது தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என முயற்சிகள் செய்வது வாடிக்கையாகி வரும் வருந்தத்தக்க நிகழ்வு’’.[11] இவ்வாறு, சமூகத்தளத்தில் மிக உயிரோட்டமாகச் செயல்படும் சாதிய சமூகக் கட்டமைப்பு தமிழகத் திருஅவையில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

### ஆ. புறந்தள்ளும் நவீனப் பொருளாதாரப் போக்கு

இன்றைய பொருளாதாரம், பொதுவாகக் கூறுமிடத்து, சந்தைப் பொருளாதாரம். அளவிற்கதிகமான உற்பத்தியையும் இலாபத்தையும் மட்டுமே கொண்ட பொருள்(ஓ)மயப் பொருளாதாரம். பொருளுக்குத் தரும் முதன்மையை உற்பத்திசெய்யும் மனிதருக்கும் பயனாளிகளுக்கும் தரமறுக்கும் முகமற்ற, உணர்வற்ற பொருளாதாரம். இப்போட்டியில் வலிமையுள்ளவர் சிலர் நன்றாக வாழ்கின்றனர்; சந்தையில் வாங்கும் திறனற்ற ஏழைகள் புறந்தள்ளப்படுகின்றனர். திருத்தந்தை பிரான்சிஸ் *நற்செய்தியின் மகிழ்ச்சி* என்னும் திருத்தூது ஊக்கவுரையில் கூறுவதுபோல, ‘‘இங்கே பலமானவர்கள் பலவீனர்களைத் தின்று வாழ்கின்றனர். இதன் விளைவாக, பெருமளவில் மக்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் தங்களைக் காண்கின்றனர். வேலையின்றி, வாய்ப்புகளின்றி, தப்பிக்க எவ்வகை வழியுமின்றி வாழ்கின்றனர். மனிதர்கள்





கடைப்பொருட்களாகக் கருதப்பட்டு, பயன்படுத்திவிட்டு தூக்கி எறியப்படுகிறார்கள். இவ்வாறு, ‘பயன்படுத்தித் தூக்கி எறியும்’ கலாச்சாரத்தை உருவாக்கி இருக்கிறோம்’’.[12]

உலகமயமாதல், தனியார்மயமாதல், சந்தைமயமாதல் போன்றவை நாளுக்குநாள் தமிழகப் பாரம்பரிய வாழ்க்கை முறையில் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதுபோல, தமிழகத் திருஅவையிலும் சிறிதுசிறிதாக ஊடுருவி வருகின்றன. ஏழையர் வாழ்வும் அவர்கள்பால் சார்புநிலைப்பாடும் நம் பங்குகளில் சமரசப்படுத்தப்படுவதும் அவர்கள் வாழ்வுசார் நலத் திட்டங்களைப் போதிய அளவில் உருவாக்கத் தயங்குவதும் இதன் வெளிப்பாடு எனலாம்.

### இ. ஆளும் பதவிகளுக்கான போட்டிகள்

மக்கள் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மக்கள் பிரதிநிதிகள் தாங்கள் ஆற்றவேண்டிய பணியைத் தொண்டு எனக் கருதாமல், பதவி எனக் கருதுவதால் தங்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைப் பொதுவெளியில் நாம் காண்கிறோம். அதிகாரம் என்பது மக்களுக்குத் தொண்டாற்றக் கிடைக்கப்பெற்ற வாய்ப்பு எனக் கருதாது, மக்களை அடக்கியாளவும் தங்களைச் சுற்றி ஆள்பலத்தைப் பெருக்கிக்கொள்ளவும் தவறான வழியில் சொத்துக்களைக் குவித்துக் கொள்ளவும் கிடைத்த வாய்ப்பாகவே பலர் பார்க்கின்றனர். திருஅவையின் உயர்நிலையில் இருப்பவர்களும் பங்கேற்பு அமைப்புகளில் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களும் மக்கள் தொண்டாற்றவே அழைக்கப்பட்டுள்ளனர். ஆனால், பல வேளைகளில் இதனைத் தொண்டாற்றக் கிடைத்த வாய்ப்பு எனக் கருதுவதைவிட, பதவியெனக் கருதிப் போட்டிமனநிலையை பங்குகளிலும் மறைமாவட்டங்களிலும் உருவாக்குகின்றனர். இவ்வாறு, போட்டியில் வெற்றி பெறுவதால் தங்களுக்கெனத் தனிப்பட்ட குழுக்களை உருவாக்குவதும், தொடர்ந்து உயர்நிலையைக் கைப்பற்றுவதும் வேதனையான நிகழ்வாகத் திருஅவையில் தொடர்கிறது.

### ஈ. பெருகிவரும் நிறுவனச் சிந்தனை

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிறித்தவ நிறுவனங்கள் என்றுமே உயர்வாகவும் தரமிக்கதாகவும் பார்க்கப்படுகின்றன. அந்நிறுவனங்கள்

வாய்ப்பற்ற பல ஏழையர்க்கென்றே தொடங்கப்பட்டன. சமூகத்தில் கடைநிலையிலிருப்பவர்களுக்குப் பணியாற்றும் நோக்கம் கொண்டிருந்தமையால், பல கல்வி நிறுவனங்கள் அரசின் உதவி பெற்றன. ஆனால், இன்று சமூகத்தில் பல கார்ப்பரெட் நிறுவனங்கள் வியாபார நோக்கோடு கல்விச்சாலைகள் தொடங்கியுள்ளதுபோல, துறவற அவைகளும் சில மறைமாவட்டங்களும் ஆங்கிலவழிக் கல்வி கற்பித்து, அதன்வழி அதிகம் பணம் சம்பாதிப்பதிலே குறியாயிருக்கின்றன.

இன்றைய தமிழகச் சூழல் முன்னிறுத்தும் இன்னும் பல மறைத்தூதுப்பணிக்கான சவால்களை நம்மால் பட்டியலிட முடியும். என்றாலும், மேற்குறிப்பிட்ட சவால்களின் பின்புலத்தில் தமிழகத் திருஅவை இன்றைய காலச்சூழலில் எத்தகைய விதத்தில் அர்த்தமுள்ள மறைத்தூதுப்பணியை முன்னெடுக்க முடியும் என்பதையும் அதற்கு அது கைக்கொள்ள வேண்டிய அணுகுமுறைகளைக் கண்டுகொள்வதும் தேவையாகிறது. எந்தெந்த வழிகளில் திருஅவை மறைத்தூதுப் பணியாற்ற முடியும் எனக் கூறும் திருத்தந்தை புனித ஆறாம் பவுல், ‘‘மனிதத்தைப்புதுப்பித்தல், சான்று வாழ்வு, வெளிப்படையான அறிவிப்பு, இறைச்சமூக உறவு, மறைத்தூதுப்பணி முனைப்புகள்’’ எனப் பலவற்றைக் குறிப்பிடுகின்றனர்.[13] இவண் நம் தமிழகச் சூழலில் மறைத்தூதுப்பணியாற்ற சில அணுகுமுறைகளை முன்மொழிய முயற்சிப்போம்.

## IV. தமிழகச் சூழலில் மறைத்தூதுப்பணியாற்றச் சில அணுகுமுறைகள்

### அ. கிறித்தவரின் சான்று வாழ்வு

கிறிஸ்துவுக்காய் முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்ட ஒருவரின் எடுத்துக்காட்டான சான்றுவாழ்வே மறைத்தூதுப்பணியின் மிகச் சிறந்த அணுகுமுறையாகும். கிறித்தவர் ஒருவரின் சிறந்த வாழ்வே சிறந்த சான்றாகும். புனித பவுலும் பர்னபாவும் வாழ்ந்த எடுத்துக்காட்டான வாழ்வே அந்தியோக்கியா மக்கள் அவர்களைக் கிறித்தவர்கள் என அழைக்கத் தூண்டிற்று (திப 11:26). இயேசுவும் தம் சீடர்களின் எடுத்துக்காட்டான அன்பு வாழ்வே தம் சீடர்கள் என்ற





அங்கீகாரத்தைத் தருவதாகக் கூறுகின்றார் (யோவா 13:35). திருஅவை வரலாற்றில் புனிதர்கள் பலரும் மறைசாட்சியராய் உயிர் துறந்தவரும் தங்கள் எடுத்துக்காட்டான வாழ்வால் உலகில் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்தவர்களே; தங்கள் வாழ்வினால் மறைத்தூதுப்பணி செய்தவர்களே!

திருத்தந்தை புனித இரண்டாம் ஜாண் பால், ‘‘மக்கள் இன்று போதகர்களைவிடச் சான்றுபகர்வோரில் அதிக நம்பிக்கை வைக்கின்றனர்; அறிவுறுத்துவதைவிட அனுபவத்தை நம்புகின்றனர்; கருத்துக்களையும் கருத்தியல்களையும்விட வாழ்க்கையையும் செயல்களையும் நம்புகின்றனர்’’ என்கிறார்.[14] புனித அசிசி நகர் பிரான்சிசும், ‘‘ஒவ்வொரு நாளும் நாம் நற்செய்தியை அறிவிக்க வேண்டும்; தேவைப்பட்டால் மட்டும் வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும்’’[15] எனக் கூறுவது, மறைத்தூதுப்பணி செய்வதில் நம் வார்த்தைகளைவிட வாழ்வு எவ்வளவு உயர்ந்த சான்று என்பதை உணர்த்துகிறது. இதையே புனித ஆறாம் பவுலும், ‘‘மறைத்தூதுப்பணியின் முதல்வகை என்பது ஒருவரின் உண்மையான கிறித்தவ வாழ்வே’’[16] என்கிறார். இத்தகைய சான்று வாழ்வே ஓர் அமைதியான நற்செய்தி அறிவிப்பு எனவும் கூறுகிறார்.[17]

### ஆ. நற்செய்தி அறிவிப்பு

திருத்தூதர் தோமாவிற்குப்பின் வெவ்வேறு காலக்கட்டங்களில் வெளிநாட்டிலிருந்து பல மறைத்தூதுப்பணியாளர்கள் தமிழகம் வந்துள்ளனர். அவர்கள் தொடக்கத்தில் நிறுவனங்களைத் தொடங்கி மக்களைத் திருஅவையில் இணைக்கவில்லை. மிரட்டலைச் சந்திப்பதனாலும் உயிர் துறப்பதனாலும் வெளிப்படையான நற்செய்தி அறிவிப்பே அவர்கள் கையாண்ட மறைத்தூதுப்பணி அணுகுமுறையாகும். தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் கால்தேய நடந்து அவர்கள் ஆற்றிய கடும்பணியே இன்று நாம் காணும் விளைச்சல் எனலாம். அத்தகைய வெளிப்படையான நற்செய்தி அறிவிப்பு இன்றைய சூழலில் அதிகமாக இல்லை. இருப்பினும் மறைக்கல்வி, மறையுரை, விவிலிய முழக்கம் போன்றவை நற்செய்தி அறிவிப்பு வகைகளே. ‘‘திருஅவையை நிறுவுவதற்கு முதன்மையான வழி இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பறைசாற்றலாகும்’’ எனக் கூறுகிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம்.[18] புனித இரண்டாம் ஜான் பாலும், ‘‘நற்செய்தி அறிவிப்பே மறைத்தூதுப்பணியின் நிரந்தர முதன்மையாகும்’’ என்கிறார்.[19]

ஆண்டவர் இயேசுவின் மறைத்தூதுப்பணிக்கான கட்டளையை ஏற்று உலகின் பல நாடுகளுக்குப் பயணித்து நற்செய்தி அறிவித்த திருத்தூதர்கள் தொடங்கி இன்றளவும் இது திருஅவையால் முன்னெடுக்கப்படும் ஓர் அணுகுமுறையாகும். இன்றைய தமிழகச் சூழலில் இதற்கான சாத்தியங்கள் அதிகமாக இல்லையெனினும், இஃது இன்னும் அர்த்தம் இழந்துவிடவில்லை என்பதே உண்மை. கட்டாய மதமாற்றமோ, கையூட்டுக் கொடுத்துக் கொண்டுவரும் மக்கள் கூட்டமோ இல்லை. மாறாக, புனித பவுல் கூறுவதுபோல, "வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும்" (2 திமொ 4:2) இறைவார்த்தையை அறிவிப்பதால் கிடைக்கும் அறுவடையே இது எனப் புரிந்துகொள்ள வேண்டும்.

## இ. அர்த்தமுள்ள வழிபாடுகள்

நம் கிறித்தவ வழிபாடுகள் பல இன்று ஆடம்பரங்களாகிவிட்டன. ஏழையர் உழைப்பை உறிஞ்சிக் கோடி கோடியாய்ப் பணம்கொட்டி எழுப்பப்படும் ஆலயங்களும், பெரும் பொருட் செலவில் கொண்டாடப்படும் திருவிழாக்களும் கடவுளுக்கு அருவருப்பைத் தருகின்றவையாகி விட்டன (எசா 1:14; ஆமோ 5:21). ஆழ்ந்த நம்பிக்கையின்றிப் பக்திப்பரவசத்தால் மயங்கி நிற்கும் கூட்டங்களும் அதிகரித்துவிட்டன. இச்சூழலில் வாழ்க்கையோடு தொடர்புடைய அர்த்தமுள்ள வழிபாடுகள் மறைத்தூதுப்பணியின் இன்னுமோர் அணுகுமுறையாகும். கடவுளோடுள்ள உறவில் நிலைத்து பிற மாந்தரோடு கொண்டுள்ள அன்பில் வளர நம் வழிபாடுகள் துணைசெய்தால் அது சிறந்ததொரு மறைத்தூதுப்பணியாகும். பங்கேற்போர் கடவுள்பால் ஈர்க்கப்படுவர்; பிறர்வாழ ஈடுபடுவர். "வந்து பாருங்கள்" (யோவா 1:39) என்றழைத்த இயேசுவின் வார்த்தையை நம்பி முதல் சீடர்கள் பெற்ற அனுபவமே அவர்களை "மெசியாவைக் காண்போம்" (யோவா 1:41) எனச் சீமோனிடம் அறிவிக்கத் தூண்டிற்று. அர்த்தமுள்ள வழிபாடுகள் தரும் ஆழ்ந்த இறை அனுபவம் மறைத்தூதுப்பணியின் ஒரு முக்கியக் கூறாகும்.

## ஈ. இறைக்குழும வாழ்வு

மாறிவரும் சமூகச் சூழலில் மனிதர் 'தனியாள்-மையத்திலும்', 'தனியார்மயத்திலும்' சிக்கியுள்ளனர். விளைவாக, குடும்பம் மற்றும் குழும





வாழ்வில் பிடிப்பு இல்லை; பிணைப்பு இல்லை; அர்ப்பணம் இல்லை. எளிதில் பிரிந்துவிடும் சூழல் உருவாகிறது.[20] மக்கள் தங்களை மையப்படுத்தியும் முதன்மைப்படுத்தியும் வாழும் சூழலில், உறவில் வாழும் குழுமம் சிறந்த மறைத்தூதுப்பணி அணுகுமுறையாகும். தொடக்க காலத் திருஅவையில் "நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்த வாழ்க்கைமுறையினால்" (திப 2:42-46) நாள்தோறும் அவர்கள் குழுமத்தில் இணைந்தோரின் எண்ணிக்கை கூடியது என அறிகிறோம் (திப 2:47). நம் காலத்தில் இத்தகைய உறவில் வாழும் குழும வாழ்வுக்கான சிறந்த சான்று அன்பியங்கள் அல்லது அடித்தளக் கிறித்தவ சமூகங்கள். நம்பிக்கை கொண்டோர் எவ்வித ஏற்றத்தாழ்வும் பாராது உறவிலே இணைந்து ஒற்றுமையாக வாழும்போது மறைத்தூதுப்பணி இயல்பாக நடந்தேறுகிறது.

## உ. பண்பாட்டுமயமாக்கல்

திருத்தூதர்கள் சென்ற இடங்களிலெல்லாம் இறைவார்த்தையை மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் அவர்கள் மொழியிலும் பண்பாட்டுப் பின்னணியிலும் போதித்தார்கள். இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகப் பவுல் ஏதென்ஸ் நகர் அரயோப்பாகு மன்றத்தில் ஆற்றிய உரையைக் குறிப்பிடலாம் (திப 17:16-34). ஐரோப்பாவிலிருந்தும் பிற மேலைநாடுகளிலிருந்தும் தமிழகம் வந்த மறைத்தூதுப்பணியாளர்களும் தமிழ்மொழியைக் கற்று, பண்பாட்டை அறிந்து பணி செய்தவர்களே. அவர்கள் முன்னோடிகளாய் ஆற்றிய பண்பாட்டுமயமாக்கல் பணியின் தொடர்ச்சியாகத் தமிழகத் திருஅவை பல முயற்சிகளை எடுத்து வெற்றி கண்டுள்ளது. எனினும், இன்னும் பண்பாட்டுமயமாக்கலின் தேவை இக்காலத்தில் அதிகமாகவே உள்ளது. வெறுமனே மொழிபெயர்ப்போடும் ஆராத்திகளோடும் நின்றுவிடாது, மக்கள் வாழ்வோடு இணைந்த அனைத்து நலமான பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கி, தமிழ் மண்ணிலும் மரபிலும் முகிழ்த்தெழும் கிறித்தவ நம்பிக்கையாக மலர வேண்டும். தமிழ்மொழியைக் காக்கவும் தமிழ்மரபினைப் போற்றவும் தமிழகத் திருஅவை பல முனைப்புகளை எடுத்து வருகிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆயினும், தமிழ்ப் பண்பாட்டில் தோய்ந்து மலரும் வழிபாடும் இறையியலும் இன்றைய தேவை.

### ஊ. சமூக மற்றும் விடுதலைப் பணிகள்

இயேசுவின் அடியொற்றி, தொடக்கக் கால திருஅவை முதன்மையாய்க் கருதிய பணி ஏழையர் நலப்பணி எனலாம். அன்றாடப் பந்தியில் முறையாகக் கவனிக்கப்படாத கைம்பெண்களின்பால் கரிசனைகொண்டே திருத்தொண்டர்கள் நியமிக்கப்பட்டார்கள் (திப 6:1-7). புனித பவுல் ''இறைமக்களுக்குச் செய்யும் அறப்பணி'' (2 கொரி 8:4)யைப் புனிதமாகவே கருதினார். ''ஆர்வத்தோடு கொடுத்தால், தம் நிலைக்கேற்றவாறு எவ்வளவு கொடுத்தாலும் அது இறைவனுக்கு ஏற்புடையதாகும்'' (2 கொரி 8:12) என வறியோருக்கும் ஏழைகளுக்கும் வள்ளன்மையோடு உதவ ஊக்கப்படுத்தினார். தொடக்கக்காலத் திருஅவையில் முக்கியமாகக் கருதப்பட்ட இப்பணி இன்றளவும் தொடர்கிறது. இச்சமூகப் பணிகள் கல்வி, மருத்துவம், சமூக மேம்பாடு, நலிந்தோர் நலம் காத்தல், விழிப்புணர்வு, விடுதலைச் செயல்பாடுகள் எனப் பல்வேறு பரிமாணங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. இவை தமிழகத் திருஅவை மிகச் சிறப்பாகச் செய்து வருகின்ற மறைத்தூதுப்பணி அணுகுமுறை எனலாம்.

திருத்தந்தை புனித இரண்டாம் ஜாண் பால் கூறுவதுபோல, திருஅவையின் சமூகப் போதனையும் சமூகச் செயல்பாடுகளும் மறைத்தூதுப்பணிக்கான சிறந்த வழியாகும்.[21] கல்வித்துறையில் திருஅவை ஆற்றிவரும் பணி அளப்பரியது. தாழ்த்தப்பட்டவராகச் சமூகத்தில் கருதப்பட்டோரைக் கல்வியினால் உயர்த்திய பெருமை அதையே சாரும். கல்வியோடு நல்ல விழுமியங்களையும் கற்றுக்கொடுத்து, சிறந்த மனிதர்களையும் தலைவர்களையும் உருவாக்கியதில் அதற்குப் பெரும் பங்குண்டு. கல்வியைப் பணம் பெருக்கும் வழியாகக் கருதாமல் உயர்ந்த மானிடத் தொண்டாகக் கொண்டு தன்னலமின்றிப் பணியாற்றி வருவது பாராட்டுக்குரியது. ஆயினும், மிகச் சமீப காலமாக ஆங்கிலவழிக் கல்வி நிறுவனங்கள் பல தொடங்கி தமிழ்வழிக் கல்வியைக் கைவிடுவது என்பது அரசின் தமிழ்ப்பண்பாட்டுச் சீரழிவுக்குத் துணைபோகிறதாக உள்ளதே தவிர, ஏழைமக்களின் உயர்வில் கொண்ட அக்கறையாகப் படவில்லை.

மருத்துவத் துறையில் பற்பல புதிய தேர்வுமுறைகளும் கட்டுப்பாடுகள் நிறைந்த சட்டங்களும் அரசிடமிருந்து வந்த வண்ணமுள்ளன. தேசியப்





பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி கற்றவர்கள், போட்டித் தேர்வுகளுக்குப் பணம் அதிகம் கொடுத்துப் பயிற்சி பெறுகின்றவர்கள் அல்லது அதிகத் தொகை தந்து மருத்துவக் கல்லூரியில் இடத்தை விலைக்கு வாங்க முடிந்தவர்களே இன்று மருத்துவர்களாகும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களில் எவரும் கிராமங்களில் பணிசெய்ய முன்வருவதில்லை. இந்நிலையில் மருத்துவ வசதியில்லாத கிராமப்புறங்களில்தான் அதிகமாகத் திருஅவை தன் பணியை ஏழைகள் பயனுறச் செய்துவருகிறது. அரசின் புதிய சட்டங்களால் இப்பணி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும், ஏழைகளுக்கு ஆற்றும் இப்பணி மறைத்தூதுப்பணிக்குச் சிறந்த சான்றாகிறது.

தமிழ்நாட்டின் அனைத்து மறைமாவட்டங்களிலும் செயல்படுகின்ற சமூகச் சேவை நிறுவனங்கள் அடித்தட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டுக்குரியன. அரசு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் உதவியுடன் எண்ணற்ற மக்களின் வாழ்வு உயர்வுபெற தமிழகத் திருஅவை பெரும்பணி ஆற்றியுள்ளது. இயற்கைப் பேரிடர் அல்லது எதிர்பாராத துயரச் சம்பவங்கள் நிகழும்போது உடனடி நிவாரணம் தந்து கைதூக்கிவிடுவது சிறந்த கருணைச் செயலாகிறது. குழந்தைகள் நலக்காப்பகங்கள், மனநலம் குன்றியோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் தொழிற்பயிற்சி நிலையங்கள், இளைஞர்கள் வேலை வழிகாட்டி மையங்கள், தொழிலாளர் கூட்டமைப்புகள், கைம்பெண்கள் குழுக்கள், மீனவர் சங்கங்கள் போன்ற எண்ணிறந்த வகையிலும் தமிழகத் திருஅவை சிறந்த சமூகப் பணிகளாற்றுகின்றது எனலாம்.

சமூகப் பணிகளோடு நின்றுவிடாது தமிழகத் திருஅவை மக்களின் விடுதலைப் பணிகளில் தன்னை இணைத்துக் கொள்வதும் பாதிக்கப்பட்ட மக்களோடு தன்னை ஈடுபடுத்திக் கொள்வதும் மறைத்தூதுப்பணியின் காலத்திற்கேற்ற அணுகுமுறையாகும். வளர்ச்சி என்ற போர்வையில் மக்கள் தங்கள் வாழ்விடங்களையும் வாழ்வாதாரங்களையும் இழக்கின்ற சூழலில் அவர்கள் முன்னெடுக்கும் அறவழிப் போராட்டங்களில் உடனிருப்பதும் மக்கள் பாதிக்கப்படும்போது சாதி சமயம் கடந்து விடுதலை உணர்வோடு செயல்படுவதும் பாராட்டப்படுகின்ற சான்று வாழ்வாகும். மக்களின் நல்வாழ்வுக்கு எதிரான திட்டங்களும் எதிராகக் குரல் கொடுப்பதும் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்வதும் மறைத்தூதுப்பணியை அர்த்தப்படுத்துகிறது.

### ஏ. உரையாடல் வழி உறவுப்பணிகள்

தமிழகத்தில் பல கிறித்தவத் திருஅவைகள் செயல்படுகின்றன. இவற்றுள் சில மிதமான போக்கையும் பெந்தகோஸ்தே திருஅவைகளில் சில தீவிரப் போக்கையும் பின்பற்றுகின்றன. தங்கள் திருஅவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையைப் பெருக்கச் சில சபைகள் பகீரத முயற்சிகளை மேற்கொள்கின்றன. இவை ஒருபுறமிருக்க, கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட இரண்டாம் வத்திக்கான் சங்க ஒளியில் தமிழகத் திருஅவை கிறித்தவ ஒன்றிப்பைச் செயல்படுத்தி வருவது மறைத்தூதுப்பணியின் மற்றுமோர் அணுகுமுறையாகும். "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக!" (யோவா 17:21) என்னும் இயேசுவின் இறை வேண்டலுக்கேற்ப தமிழகத் திருஅவை பிற கிறித்தவத் திருஅவைகளுடன் ஒன்றிணைந்து இறையியல் உரையாடல்கள், கூட்டு வழிபாடுகள், இணைந்த செயல்பாடுகளை முன்னெடுத்து வருவதென்பது காலத்தின் அறிகுறிகளைக் கணித்துச் செயல்படுத்தும் மறைத்தூதுப்பணியாகும். அதைப்போன்று பிற சமயங்களோடு தமிழகத் திருஅவை நல்ல உறவினை வளர்த்துள்ளதென்பது பாராட்டுக்குரியது. இறையியலார் பெலிக்ஸ் வில்பிரட் கூறுவதுபோல, பிற சமயங்களோடு கத்தோலிக்கத் திருஅவை கொள்கின்ற உரையாடல் என்பது திருஅவை தன்னை ஒரு மனமாற்றத்திற்கு உட்படுத்த முன்வருவதாகப் பொருள்படுகிறது.[22] தமிழகத்தின் சில மறைமாவட்டங்களில் பல்சமய உரையாடலுக்கான பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. என்றாலும், கிறித்தவர்கள் சிறுபான்மையினராக வாழும் நம் நாட்டில் பிற சமயத்தவரோடு கூட்டுச் செயல்பாடுகள் மற்றும் அமைதிக்கான செபக்கூட்டங்கள் போன்றவை மறைத்தூதுப்பணியை ஆழப்படுத்தும்.

### ஏ. ஊடகங்கள் வழி மறைத்தூதுப்பணி

சமூக ஊடகங்கள் அன்றாட வாழ்க்கையை அதிகமாக ஆக்கிரமிப்பு செய்யும் பின்நவீனக் காலத்தில் நாம் இருக்கிறோம். தமிழகத் திருஅவை சமீப காலம்வரை தொலைக்காட்சி ஊடகத்தில்கூடக் கால்பதிக்கவில்லை என்பது பின்னடைவான ஒன்றுதான். தமிழகத்தின் பல மறைமாவட்டங்களும் துறவற அவைகளும் பத்திரிகைகள், செய்தி மடல்கள் வெளியிட்டாலும் பொதுவெளியில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் எந்தப் பத்திரிகையும் இல்லை என்பது





ஏமாற்றமே. எத்தனையோ சிறந்த பணியை ஆற்றிவரும் தமிழகத் திருஅவை இதுவரை ஒரு நாளிதழ் கூட நடத்த முடியவில்லை. இவையெல்லாம் ஊடகத்துறையில் நாம் இயங்குவதில் மிகவும் பின்தங்கியிருக்கிறோம் என்பதையே காட்டுகிறது. வருங்காலத் திருஅவையான இன்றைய இளைஞர்களை ஒன்றிணைக்கச் சிறந்த வழி ஊடகங்களே. ஏனென்றால், திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதுபோல "யார் அவர்களுக்குப் பொழுதுபோக்குக் காட்சிகளைத் தருகின்றனர்; தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மின்னணுக் கருவிகள் வழியாக யார் அவர்கள் அறையில் நுழைகின்றனர்; யாரோடு அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைச் செலவிடுகின்றனர் என்பவற்றில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம்![23] எனவே, நம் காலத்தில் தமிழகத் திருஅவை கலை, இலக்கியம், ஊடகம் ஆகியவற்றில் அதிகம் கவனம் செலுத்தி மக்களை நல்வழிப்படுத்துவது மறைத்தூதுப்பணியின் முக்கியமானதோர் அணுகுமுறையாகும்.

## நிறைவாக...

இயேசுவில் இறையாட்சிப்பணி எல்லாருக்குமானது; எக்காலத்திற்குமானது. அப்பணியை அனைவரும் செய்யப் பணிக்கப்பட்டிருந்தாலும், திருஅவை சிறப்பாகச் செய்யக் கடடமைப்பட்டுள்ளது. ஏனென்றால், இயேசு தொடங்கிவைத்த இறையாட்சியை மண்ணில் மலரச் செய்வதே திருஅவையின் பணி. அப்பணியைச் செய்யாத திருஅவை இயேசுவின் உடலாக இருக்கவும் இயங்கவும் வாழவும் முடியாது. இறையாட்சிப் பணியை தாம் வாழும் காலம் மற்றும் இடத்திற்கேற்ப ஆற்றும்போது திருஅவை உயிர்த்துடிப்புடன் மறைத்தூதுப்பணி செய்கிறதெனப் பொருள். அவ்வகையில், தமிழகத் திருஅவை காலத்தின் அறிகுறிகளைக் கண்டுணர்ந்து பாராட்டும் வண்ணம் பல மறைத்தூதுப்பணிகளை முன்னெடுத்திருக்கிறது. அதேவேளையில் இன்னும் அதிக ஆர்வத்துடன் எதிர்கொள்ளும் சவால்களைத் துணிவுடன் எதிர்கொண்டு, புதிய தளங்களை இனம் கண்டு காலச் சூழலுக்கேற்ற அணுகுமுறைகளைக் கையாண்டு மறைத்தூதுப்பணியாற்ற வேண்டும். அவ்வாறு பணியாற்றினால் நம் மண்ணில் இறையாட்சியின் வருகை விரைவாகும்.

### அடிக்குறிப்பு

1. தே. அல்போன்சு, "வீதியில் எரியும் விளக்காக!" *மறை அருவி 25* (ஜுலை-டிசம். 2011), 18.
2. Viju Wilson, "Evangelization as Humanization" *ABS Journal* 1 (Aug. 2009), 30.
3. Avery Cardinal Dulles, *Evangelization for the Third Millennium,* New York: Paulist Press, 2009, p.3.
4. சமூகச் செயல்பாட்டாளர் எவிடென்ஸ் கதிரின் பேட்டியின்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 187 ஆணவக் கொலைகள் நடந்துள்ளதாக அறியப்படுகிறது. காண்க https://www.dtnext.in/ News/Tamilnadu/2018/02/05.
5. http://times of india.com/city/Chennai/unemployment
6. விரிவாக அறிந்துகொள்ள *குணாவின் தமிழின மீட்சி: ஒரு வரலாற்றுப் பார்வை* புத்தகம் பரிந்துரைக்கப்படுகிறது.
7. கீழைக்காற்று, *தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். வளர்ந்தது எப்படி?* (சென்னை: கீழைக்காற்று வெளியீட்டகம்), 2014, பக்.4.
8. *திருஅவையின் நற்செய்திப் பணி*, 6.
9. Francis, *Evangelii Gaudium* (Apostolic Exhortation), no. 20.
10. Ibid.
11. தே. அல்போன்சு, "வீதியில் எரியும் விளக்காக!", 38.
12. பிரான்சிஸ், *நற்செய்தியின் மகிழ்ச்சி* (திருத்தூது விளக்கவுரை), எண். 53.
13. Paul VI, *Evangelii Nuntiandi* (Apostolic Exhortation), no. 24.
14. John Paul II, *Redemptoris Missio* (Encyclical Letter), no. 42.
15. As quoted in Avery Cardinal Dulles, *Evangelization for the Third Millennium,* p. 93.
16. Paul VI, *Evangelii Nuntiandi,* no. 41.
17. Ibid., no. 21.
18. திருச்சபையின் நற்செய்திப் பணி. 6.
19. John Paul, *Redemptoris Missio,* no. 44.
20. திருத்தந்தை பிரான்சிஸ் தனியார்மையப் பண்பாடு, ஆள் முதன்மைக்கொள்கை, தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் போன்றவற்றின் விளைவுகளை 'அன்பின் மகிழ்ச்சி' (*Amoris Laetitia*) என்ற தம்முடைய திருத்தூது ஊக்கவுரை எண் 33ல் விரிவாக எடுத்துரைக்கிறார். காண். பிரான்சிஸ், *அன்பின் மகிழ்ச்சி* (திருச்சி: தேடல் வெளியீடு), 2016.
21. John Paul, *Sollicitudo rei Socialis* (Encyclical Letter), no. 41.
22. Felix Wilfred, *Theology for an Inclusive World* (Delhi: ISPCK, 2019), 333.
23. Francis, *Amoris Laetitia,* no. 260.



# 10. இன்றைய தமிழகச் சூழலில் அருள்பணி அக்கறைகள்

*அருள்பணி. முனைவர் அ. ஆல்பர்ட்*
*புனித பவுல் குருத்துவக் கல்லூரி, திருச்சி*

## 1. தமிழகச் சூழல்

நாம் வாழும் இன்றைய தமிழகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மற்றும் தனியார்மயமாக்கக் கொள்கையினால் வறுமை, சுரண்டல், மனித மாண்பை இழத்தல் போன்ற அவலங்களை மக்கள் அனுபவித்து வருகின்றனர். நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்து நிலையற்ற தன்மையையும் பாதுகாப்பில்லா வாழ்க்கைச் சூழலையும் சந்திக்கின்றனர். மட்டுப்படுத்தப்படாத வளர்ச்சிகளும் நுகர்வுக் கலாச்சாரப்போக்கும் இயற்கை வளங்களை அழித்தொழிக்கும் அவலமும் பெருகிக்கொண்டே செல்கின்றன.

அரசின் நலத் திட்டங்கள் பல இருப்பினும் ஏழை எளிய மக்களுக்கு இவை எட்டாக்கனியாக இருப்பதே எதார்த்தம். எச்.ஐ.வி. எய்ட்ஸ், புற்றுநோய் போன்ற உயிர்க்கொல்லி நோய்களால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. பொருளாதார வளர்ச்சி என்னும் போர்வைக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் போலிமுகங்களால் ஏழை விவசாயிகள் எழவே முடியவில்லை; ஏழை மீனவர்கள் வாழ்வாதாரங்களை இழக்கும் அவலம்; சுற்றுச்சூழல் சீர்கேடுகளும் அழிவுகளும் பெருகும் அபாயம்; முயற்சிகள் முடக்கப்பட்டு அன்றாட வாழ்வில் அச்சுறுத்தலின் விளிம்பில் விழிபிதுங்கி நிற்கும் பலவகைத் தொழிலாளிகள்; சாதியின் பெயரால் தலித் மக்களும் பழங்குடி மக்களும் பலவகையான ஒடுக்குமுறைகளுக்கு ஆளாகும் நிலை; இவை எல்லாம் இன்றைய எதார்த்தமாய் உள்ளன.[1]

குடும்பங்களில் இல்லாத எதையும் நாம் சமூகத்திலோ திருஅவையிலோ எதிர்பார்க்க முடியாது. இன்று குடும்ப வாழ்வும் உறவுகளும் மிகவும் சீர்குலைந்து

காணப்படுகின்றன. அதிகரித்து வரும் மணமுறிவுகள் குடும்ப அமைப்பின் எதிர்காலம் குறித்த பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றன. தொடர்பு ஊடகங்களின் தாக்கம் குடும்பங்களில் நம்பகத்தன்மை குறையக் காரணமாகின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் சிக்கலாக உள்ளது. குடும்பங்களில் அதிகரித்து வரும் தற்கொலைகள் கவலையளிக்கின்றன. மதுப் பழக்கம் குடும்பங்களின் பொருளாதார இழப்பிற்கும், குடும்பங்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் பெருந்தடையாக உள்ளது. இவை மட்டுமன்றி, நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள், மனநலம் குன்றியோர் குறித்த கரிசனைகள் குடும்பங்களில் மிகக் குறைவாகவே காணப்படுகிறன. முதியோர்கள் மதிக்கப்படாத, கவனிக்கப்படாத சூழல்கள் நிலவுகின்றன.

அது மட்டுமன்று, நீண்டகாலமாகவே தமிழகத்தில் திருஅவை ஆற்றிவரும் கல்விப்பணி, மருத்துவப்பணி, ஏழைகள், முதியோர் மற்றும் ஆதரவற்றோரைப் பேணுதல் போன்ற அருள்பணிகளைச் செய்வோர் பெரும் நெருக்கடிகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளாவதும், மதச்சாயம் பூசி இவர்கள் ஆற்றும் பணிகளைச் செய்யவிடாமல் முட்டுக்கட்டைகளைப் போடுவதும் இன்று நாம் கண்கூடாகப் பார்க்கின்ற மிகப் பெரிய சவால் ஆகும்.

## 2. இயேசுவின் அருள்பணி

அருள்பணியின் அடித்தளமாக விளங்குபவர் இயேசுவே. ''தொண்டு ஏற்பதற்கு அல்ல. தொண்டு ஆற்றுவதற்கே'' (மத் 20:28) எனும் இலட்சிய வார்த்தைகளோடு அருள்பணியாற்ற நமக்குத் தூண்டுதலாகவும் மாதிரியாகவும் மையமாகவும் அவரே விளங்குகிறார். இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி அவரது சீடர்கள் பிறருக்காகப் பணிபுரிவதையே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டிருந்தனர். இயேசுவின் பார்வையில் மக்களுக்குத் தொண்டாற்றுவதுதான் இறையாட்சிப் பணி; இறையாட்சிப் பணிக்கான இத்தகைய தொண்டுதான் காலப்போக்கில் அருள்பணிகளாக மலர்ந்தன. ஆவியானவர் இவ்அருள்பணிகளைக் காலத்தின் சூழலுக்கேற்பப் புதுப்பித்து புது வழிமுறைகளைக் கையாண்டு உயிர்த்துடிப்புடன் பணியாற்றத் திருஅவையை எப்பொழுதும் தூண்டுகிறார்.





'Pastoral' என்பதன் புதிய மொழிபெயர்ப்பே 'அருள்பணி' என்பதாகும். மக்களுக்கு வாழ்வு வழங்கும் நோக்கோடும், பார்வையோடும் செய்யப்படும் அனைத்துப் பணிகளுமே அருள்பணிகள் ஆகும். யோவான் நற்செய்தி 10:7-30 வரையிலான இறைவார்த்தைகள் 'இயேசுவே நல்ல ஆயர்' என்று உரைக்கின்றன. இந்தப் பகுதி ஆடுகள் மீது ஆயர் கொள்ளும் அக்கறையை வெளிக்காட்டுகிறது. ஆயர் மீட்பு அளிப்பவர் (10:9); வாழ்வு அளிப்பவர் (10:10); தன் உயிரை அளிப்பவர் (10:11); ஆடுகளை அறிபவர் (10:14); ஆடுகளை எப்போதும் காப்பவர் (10:29) என உரைக்கும் நல்ல ஆயர் பகுதி அருள்பணிகளின் முதன்மை நோக்கம் மக்களுக்கு ''முழுவாழ்வு வழங்குவதே'' என்பதையே எடுத்துரைக்கிறது என்று ஆணித்தரமாகக் கூறமுடியும்.

யாயீர் மகள் உயிர்பெற்றெழும் நிகழ்வில் முழுவாழ்வு வழங்கும் அருள்பணியில் இயேசு கூறும் இனிய உரைகள் (1) அஞ்சாதீர்: நம்பிக்கையை மட்டும் விட்டுவிடாதீர் (மாற் 5:36) (2) ஏன் இந்த அமளி? ஏன் இந்த அழுகை? (மாற் 5:39) (3) சிறுமியே உனக்குச் சொல்கிறேன் எழுந்திரு (மாற் 5:4) (4) உணவு கொடுங்கள் (மாற் 5:43). இவை இயேசுவின் அருள்பணி அக்கறையின் மேன்மையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

அது மட்டுமல்ல, முப்பத்தெட்டு ஆண்டுகள் நோயில் நலிந்து (யோவான் 5:7) பாதிக்கப்பட்ட மனிதர்மேல் இயேசுவின் பார்வை பதிகின்றது. நலமாக்கும் பணிக்கு முன்னுரிமை பெற்றவர் அவரே எனும் தெளிவு இயேசுவுக்கு பிறக்கிறது. பல ஆண்டுகளாக மனிதம் சிதைக்கப்பட்டு உள்ளமும் உடலும் ஊனமுற்ற நோயாளிக்குத் தேவையான சூழல்களை அறிந்து தேவையான பணிகளைச் செய்து முழுவாழ்வு வழங்குகிறார்.

மாற்றுத் திறனாளியை நலமாக்கும் நிகழ்வில் கை சூம்பியவரை நோக்கிக் கூறும் வார்த்தை 'எழுந்து நடுவே நில்லும்' (லூக் 6:9) என்பது. சமூகத்தின் ஓரத்திற்குத் தள்ளப்பட்ட மனிதர்களை சமூகத்தின் மையத்திற்குக் கொண்டுவந்து மாண்புமிக்க மனிதனாக்கி, நம்பிக்கையூட்டி, குணப்படுத்தி முழுவாழ்வு வழங்குவது இயேசுவின் அருள்பணியின் பரந்த பார்வையைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

## 3. திருஅவையின் அருள்பணிப் பார்வை

திருஅவைப் போதனைகள் காலங்காலமாக அருள்பணிகளைப் புனிதப்படுத்தும் பணி, இறைவாக்குப் பணி. ஆளும் பணி (*tria munera*) என மூன்று வகைகளாகப் பிரித்துப் பார்க்கிறது. இந்தப் பாரம்பரியப் பார்வையைத்தாண்டி மாறிவரும் காலச் சூழலுக்கேற்ப மக்கள் தேவைகளுக்கேற்பப் புதிய அருள்பணிகளையும் புதிய அருள்பணிப் பார்வைகளையும் அணுகுமுறைகளையும் வழிமுறைகளையும் சுட்டிக்காட்டுவதில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஒரு திருப்புமுனையாக விளங்குகிறது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் காலங்காலமாகப் பழகிவிட்ட பழைய பாணியில் பயணத்தைத் தொடராமல் புதிய பாதையில் செல்லும் புதுச் சூழலை உருவாக்க முன்வந்தது. அதாவது, திருஅவையின் வாழ்விலும் பணியிலும் இருந்த தேக்கநிலையில் மாற்றமும் மறுமலர்ச்சியும் காலத்தின் கட்டாயம் எனப் பார்த்தது. இறைவார்த்தையில் ஊன்றி நின்று காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப தன்னைப் புதுப்பித்துக்கொண்டு செய்ய வேண்டிய புதிய பணிகளையும் சுட்டிக்காட்டியுள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் *இன்றைய உலகில் திருஅவை* என்னும் ஏடு இவ்வாறு கூறுகிறது: "கிறிஸ்துவின் பணியைச் செயல்படுத்துவதற்குக் காலத்தின் குறிகளைத் துழாவி அறிந்து நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலகட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருஅவையின் கடமையாகும். இவ்வாறு, இக்கால வாழ்வு மற்றும் வரவிருக்கும் வாழ்வு ஆகியவற்றின் பொருள் பற்றியும் இவை இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்தும் மக்கள் என்றும் எழுப்பும் கேள்விகளுக்குத் திருஅவையால் ஒவ்வொரு தலைமுறைக்கும் அதற்கு ஏற்ற முறையில் விடையிறுக்க முடியும். எனவே, நாம் வாழும் உலகையும் அதன் எதிர்பார்ப்புகளையும் ஏக்கங்களையும் பன்முறையும் உயிர்த்துடிப்புடன் வெளிப்படும் அதன் இயல்புப் பண்பையும் நாம் அறிந்து உணர வேண்டும்."[2] காலமும், அதன் தேவைகளும், எதிர்பார்ப்புகளும், மக்களின் தேடல்களும் புதியன என்றால் திருஅவை தன்னைப்பற்றிக் கொண்டிருக்கும் அடிப்படைப் பார்வையும் புதியதாக இருக்கவேண்டும். எனவே, புதிய இறையியல் பார்வையை





வளர்ப்பதும் புதிய அமைப்புகளை உருவாக்குவதும் புதிய பணிகளை ஆற்றுவதும் காலத்தின் கட்டாயம். இது தூய ஆவியானவர் திருஅவைக்குத் தரும் தொடர் அழைப்பு ஆகும் என்பதை ஒரு போதும் மறக்கவேண்டாம்.

திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் காலத்திலிருந்து நாம் 'புதிய நற்செய்தி அறிவிப்புக்' காலத்தில் வாழ்கிறோம் எனலாம். புதிய நற்செய்தி அறிவிப்பு புதிய வழிமுறைகளோடு புதிய முறையில் நற்செய்தியை மனிதகுலத்துக்கு வெளிப்படுத்துதல் ஆகும். நமது நம்பிக்கைகளை இன்றைய சூழலுக்கு ஏற்பப் புதுப்புது வண்ணங்களில், வடிவங்களில் பகிர்ந்து கொள்வதாகும். எனவேதான், திருத்தந்தை இரண்டாம் ஜான் பாலின் புதிய நற்செய்தி அறிவிப்பைத் தொடர்ந்து, புதிய சூழல்களுக்கு மத்தியில் 'புதிய வழியில் திருஅவையாக இருப்பது' எனும் கருத்தோட்டம் ஆசியத் திருஅவையில் செழித்தோங்க ஆரம்பித்தது. புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியில் பன்மை என்பது திருஅவையின் இயல்புக் கூறாகப் பார்க்கப்பட வேண்டும் எனும் சிந்தனை மேலோங்கியது.[3] பல சமயங்கள், பண்பாடுகள் கொண்ட சூழமைவில் காணப்படும் நலமானவற்றை, உண்மையானவற்றை மதித்து ஏற்றுக் கொள்வதால் நற்செய்திப் பணியில் புதிய சிந்தனைகள், புதிய முனைப்புகள் ஏற்பட்டதோடு அருள்பணிகளில் பரந்த கண்ணோட்டம் வளர்ந்தது. இது தமிழகத் திருஅவையின் அருள்பணி அணுகுமுறைக்கும் முற்றிலும் பொருத்தமானதே.

தமிழகத்தில் சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல், சமயத் தளங்களில் பல்வேறு மாற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. எனவே, புதிய சூழலில் புதிய சவால்களுக்கு மத்தியில் அருள்பணிகளைப் புதிய வழிமுறைகளில் செய்து நமது நம்பிக்கையை அறிக்கையிட கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் வாழ நாம் அனைவருமே அழைக்கப்படுகின்றோம். திருஅவை சமூகத்திலிருந்து தன்னை ஒதுக்கிக் கொள்ளமுடியாது. திருஅவை இறையாட்சியின் பணியாள். அது பணிவு கொண்ட பணியாள் எனும் முறையில் இந்தச் சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப அனைத்து மக்களுக்கும் பணியாற்றுவதன் மூலம் இறையாட்சிப் பணியை உயிர்த்துடிப்போடு ஆற்றிட வேண்டும்.

### 4. திருத்தந்தை பிரான்சிஸின் பார்வையில்

"உயிர்த்த கடவுளின் ஒளியிலும், வல்லமையிலும் நம்பிக்கை கொண்டுள்ள திருஅவை பாதிக்கப்பட்ட மனிதனின் காயங்களுக்கு முன் தலைவணங்கி, அவர்களைப் புரிந்துகொண்டு, நலமளித்து அவர்களுக்கு முழு வாழ்வு தருவதே அருள்பணியாகும்"[4] என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தை பிரான்சிஸின் காலத்தில் அருள்பணிகளில் பல்வேறு புதிய பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதை நாம் கண்டு மகிழ்கிறோம். அவரை 'அருள்பணி மறுமலர்ச்சியின் தந்தை' என்று பெருமையாக அழைக்கலாம். இன்றைய அதிநவீன உலகில் திருஅவை எளியோரை நோக்கித் திரும்ப வேண்டுமென திருத்தந்தை அழைக்கிறார். திருஅவை ஏழைகளுக்கு, நலிந்தோருக்கு, துயருவோருக்கு, விளிம்பு நிலையினருக்கு இரக்கச் செயல்களை மட்டும் செய்யும் தன்னார்வத் தொண்டு நிறுவனமல்ல; மாறாக, ஏழைகள் தங்கள் எதிர்காலத்தைத் தாங்களே தீர்மானிக்கும் அளவுக்கு ஆற்றல்படுத்தப்பட்டு சமூக விடுதலையைக் காண திருஅவை உழைக்க வேண்டுமெனத் திருத்தந்தை உரைப்பது புதிய அணுகுமுறையோடு அருள்பணியாற்ற திருஅவைக்கு விடுக்கப்படும் அறைகூவல். "விளிம்பிலுள்ள மக்களைத் தேடிச் செல்லுங்கள்" என்று கூறும் திருத்தந்தை, அங்கேதான் யாராலும் கவனிக்கப்படாத ஏழைகள், முதியோர், மாற்றுத்திறனாளிகள், புலம்பெயர்ந்தோர், கொத்தடிமைகள், இன வேறுபாடுகளால் பாதிப்புக்குள்ளானோர், சிறைவாசிகள் ஆகியோர் இருக்கிறார்கள் என்று அருள்பணியாளர்களுக்கு அருள்பணியின் புதிய வடிவங்களையும், புதிய அணுகுமுறைகளையும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றார். "நல்ல ஆயன் தன் ஆடுகளின் வாசனையை அறிந்தவனாக இருக்கவேண்டும்" என்றுரைத்த அவரது அருள்பணிப் பார்வையும், பாணியும் முற்றிலும் புதுமையானவை, புரட்சிகரமானது. புதிய அழுத்தங்களையும் காலத்தின் தேவைக்கேற்பப் புதிய பணி வடிவங்களையும் அறிமுகம் செய்து சூழலுக்கேற்ற அருள்பணிகளை அடையாளம்கண்டு ஆற்றுவதே திருஅவையின் முக்கிய அருள்பணியாக இருக்கட்டும் என்று கூறுகிறார்.

ஆக, அருள்பணிப் புரிந்துணர்வில் ஏற்கனவே செய்து கொண்டிருந்த பாரம்பரியப் பணிகளிலும் புதிய அணுகுமுறைகளை, அழுத்தங்களை





ஏற்படுத்துகிறார். அதே நேரத்தில் காலத்தின் மாற்றங்களுக்கும், தேவைகளுக்கும் ஏற்பப் புதிய அருள்பணி வடிவங்களுக்குப் புதிய பாதை காட்டுகிறார். ஒவ்வோர் ஆண்டும் பெரிய வியாழனன்று சிறைக்கைதிகள், புலம்பெயர்ந்தோர், எய்ட்ஸ் நோயாளிகள், பிற சமயத்தவர், பெண்கள், கருப்பினத்தவர், குழந்தைகள் ஆகியோரின் பாதங்களைக் கழுவி முத்தமிடும் செயல் அருள்பணியில் அவர் அறிமுகம் செய்யும் புதுப்புது வடிவங்களே. அது மட்டுமல்ல, இந்நிகழ்வில் எல்லோரையும் அரவணைக்கும் அவரது பரந்த அருள்பணிப் பார்வை திருஅவையின் இறையாட்சி இயல்பை எடுத்துரைக்கிறது. அவர் சொல்லும், செயலும், செய்யும் ஒவ்வொன்றிலும் பெருந்தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

ஆக, திருத்தந்தை பிரான்சிஸ் கற்றுத்தரும் அருள்பணி மாதிரிகளில் நாம் ஏற்கனவே செய்துகொண்டிருந்த பல பாரம்பரிய அருள்பணிகளுக்குப் புதிய அணுகுமுறைகள், புதிய பார்வைகள் கொடுக்கப்படுகின்றன. அதேநேரம், சவால்களுக்கு மத்தியில் தேவைகளின் அடிப்படையில் புதிய அருள்பணிகளைத் துணிவோடு முன்னெடுக்கும் அவரது வீரமும், அர்ப்பணமும் மிகச் சிறப்பாக வெளிப்படுகின்றன.

### 5. அக்கறை காட்டப்படவேண்டிய அருள்பணிகள்

இத்தகைய பின்னணியில் தமிழகத் திருஅவையில் ஆற்றப்படவேண்டிய அருள்பணிகள் ஏராளம். அதன் புதிய வடிவங்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம். இப்பணிகளை நான்கு பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

#### 5.1. நலமளிக்கும் அருள்பணிகள்

இந்தப் பகுதிக்குள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டோர் குறிப்பாக உயிர்க்கொல்லி நோய்களால் பாதிக்கப்பட்டோர், குடிநோயாளிகள், மாற்றுத்திறனாளிகள், உள்ளம் சோர்வுற்றோர், மன அழுத்தத்தில் வாடுவோர், இழப்பில் வேதனையுறுவோர், இறக்கும் தருவாயில் இருப்போர், நலம்பெற இயலாக் கடினமான நோய்களால் வாடுவோர், விபத்துக்களில் உறுப்புகளை இழந்தோர், குடும்பப் பிரச்சினைகளால் வேதனையுறுவோர், மனக்கலக்கங்களால் ஆற்றுப்படுத்துதல் தேவைப்படுவோர் – இவர்களுக்கான அருள்பணிகளை முன்னிறுத்தலாம்.

### 5.2. மறுவாழ்வளிக்கும் அருள்பணிகள்

இந்தப் பகுதிக்குள் சிறையில் வாடுவோர், திருமணத்திலிருந்து பிரிந்து வாழ்வோர்; கைம்பெண்கள்; வன்முறையின் பிடிக்குள் இறுகியிருப்போர்; பிரிந்த குடும்பங்களின் குழந்தைகள்; பெற்றோர் இல்லாக் குழந்தைகள்; பாலியல் கொடுமைக்குள்ளான சிறார் மற்றும் இளையோர்; கைவிடப்பட்டோர்; கடன் தொல்லையில் இருப்போர்; இரவலர்கள்; ஆபாசத்திற்கு அடிமைப்பட்டோர்; இணையக் குற்றங்களில் சிக்கியிருக்கும் இளையோர் இவர்களுக்கான அருள்பணிகளைக் குறிப்பிடலாம்.

### 5.3. மனித உரிமைசார் அருள்பணிகள்

சமூக, பொருளாதார, சட்ட ரீதியாகப் பாகுபடுத்தப்பட்டோர், முறைசாராத் தொழிலாளர்கள், வேலையின்றித் திண்டாடுவோர், திருநங்கையர், சமய வெறிகளால் துன்புறுவோர், சாதி மொழி மத அடிப்படையில் ஒதுக்கப்பட்டோர், குழந்தைத் தொழிலாளர்கள், கொத்தடிமைகளாக வாழ்வோர், அடிமைத்தனத்தில் வாழும் பெண்கள், பாலியல் பலாத்காரத்துக்கு ஆளானோர், வீட்டுவேலைப் பெண்கள், சேரிக் குழந்தைகள் போன்றோருக்கான அருள்பணிகளைச் சுட்டிக்காட்டலாம்.

### 5.4. சமூக மாற்றத்திற்கான அருள்பணிகள்

இப்பகுதிக்குள் வறுமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, வன்முறை ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, சாதி மறுப்புத் திருமண ஆதரிப்பு, பழங்குடி மக்கள் கலாச்சாரப் பாதுகாப்பு, ஊழல் தடுப்பு, அரசியல் விழிப்புணர்வு, பாலியல் சமத்துவம், பல்சமய உரையாடல், சுற்றுச்சூழல் பேணுதல், தொழிலாளர்கள் நலன் பேணுதல் போன்ற பல்வேறு பணிகளை சுட்டிக் காட்டலாம்.

## 6. அருள்பணியின் சில புதிய வடிவங்கள்

மேலே கூறப்பட்ட நான்கு பகுதிகளுக்குள்ளும் பெரும்பாலான அருள்பணிகள் சுட்டிக்காட்டப்பட்டாலும் அந்தந்தச் சூழல்களுக்கு ஏற்ற புது வடிவ அருள்பணிகளை அடையாளம் கண்டு நாம் ஒவ்வொருவரும் செய்திட முன்வரவேண்டும். எல்லாப் பணிகளுமே அவசியமாகச் செய்யப்படவேண்டிய அருள்பணிகளாக இருப்பினும் இந்தக் கட்டுரையில் இன்றைய சூழலில் செய்ய





வேண்டிய பத்து அருள்பணிகளை மட்டும் சுருக்கமாக அலசி அவற்றிற்கான அருள்பணி அக்கறைகளையும் விளக்கியுள்ளேன்.

### 6. 1. இயற்கைச் சுற்றுச்சூழல் பேணும் அருள்பணி

தமிழகத்தில் இன்று நிலவும் பல்வேறு சூழல்களுக்கு மத்தியில் அதிக அழுத்தம் பெறவேண்டிய ஓர் அருள்பணி ''இயற்கைச் சுற்றுச்சூழல் பேணும் அருள்பணி'' ஆகும். மனித நாகரிக வரலாறு மனிதனுக்கும் இயற்கைக்கும் பூமிக்கும் இடையே நிலவிய நல்லிணக்கத்தின் வரலாறு. ஆனால், மனிதன் இயற்கையை ஆக்கிரமிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து இயற்கை வளங்கள் சூறையாடப்பட்டு புவியும், புவிவாழ் உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. எனவே, புவியைப் பராமரிக்க எடுத்துக்கொள்ளும் நமது உலகளாவிய யுக்திகள் சுற்றுச்சூழல் நெறிமுறைகளை உள்ளடக்கியவையாகவும், மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பை வலுப்படுத்துவனவாகவும் அமைய வேண்டும். தமிழகத்தின் முதுகெலும்பாக இருப்பது விவசாயமே. ''மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த'' பண்பாட்டை உடையது தமிழர் பண்பாடு. ஆனால், இன்று அரசின் புதிய கொள்கைகளும் பன்னாட்டு நிறுவனங்களின் அணிவகுப்பும் விவசாயிகளின் நிலங்களைப் பறித்து பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரைவார்த்ததால் பறவைகள் தங்குவதற்கும் பசுமையான மரங்கள் இல்லை. விலங்குகளின் புகலிடமாகிய காடுகள் அழிந்துகொண்டு வருகின்றன. பச்சை வண்ணம் பூசிய வயல்வெளிகள் அழிந்து போயின. விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பல்வகைப்பட்ட தொழிலாளர்கள் பூமியில் எல்லாப் பகுதியிலிருந்தும் இன்று துரத்தப்படுகின்றனர். தமிழகத்தில் மக்கள் சந்திக்கும் இப்பிரச்சினை தமிழக மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனை. சில மனிதர்களின் வளர்ச்சி, முன்னேற்றம் எனும் பெயரில் மிகப் பெரிய செலவில் கட்டப்படும் தொழிற்சாலைகள், அணு ஆலைகள், துறைமுகங்கள் மற்றும் நகரமயமாக்கல் போன்ற காரணங்களுக்காக இரக்கமின்றி அழிக்கப்படுகிறது இந்த அழகான பூமி. இதனால், ஒட்டுமொத்தத் தமிழகமும் இன்று திக்கற்ற சூழலில் உயிரைக் காத்துக்கொள்ளப் போராட்டக்களமாக மாறியுள்ளது.

இச்சூழலில் முதன்மை அருள்பணியாகத் தமிழகத் திருஅவை இயற்கையை, சுற்றுச்சூழலைப் பாதுகாத்துக்கொள்ள மறைமாவட்டங்களிலும்,

பங்குகளிலும் அருள்பணி திட்டமிடுதல் அவசியமாகிறது. இயற்கையின் நீட்சிதான் மனிதன். மனிதனின் நீட்சி இயற்கை அல்ல. மனிதன் இல்லாமல் இயற்கை இயங்கும். இயற்கை இல்லாமல் மனிதன் ஆரோக்கியமாக வாழ முடியாது என்ற விழிப்புணர்வு மூலம் நாம் மட்டும் வளர்ந்தால்போதும் எனும் மனப்பாங்கை மாற்றி நாமும், நம் ஊராரும், வரவிருக்கும் சந்ததிகளும் வாழ வேண்டிய சூழலை உருவாக்க மறைமாவட்டம், மறைவட்டம், பங்குகள் என எல்லா மட்டங்களிலும் விழிப்புணர்வுப் பயிற்சிகளை முன்னெடுப்பது அத்தியாவசியமாகும். நவீன இயந்திரங்கள் மற்றும் தொழில் நுட்பத்தின் மூலம் உற்பத்தி செய்வதனால் நகரங்கள் கிராமங்களைச் சுரண்டும் சூழல் ஏற்படுகிறது. இச்சூழலில் விவசாயம், நெசவு, கைவினைத் தொழில்கள் வளர்ச்சி அடைய வேண்டுமெனில் சிறுதொழில்கள் மற்றும் கைநுட்பத் தொழில்கள் அதிகம் ஊக்குவிக்கப்படவேண்டும். சிறப்பாக இயற்கை உணவு, இயற்கை மருத்துவம் திடக்கழிவு மேலாண்மை, நீர் மேலாண்மை, இயற்கை விவசாயம், மண் வளப் பரிசோதனை, மூலிகைப் பூச்சிவிரட்டி மருந்துகள், பாரம்பரிய விதைகள், விவசாயிகளுக்கான அரசு நலத்திட்டங்கள் இவை பற்றிய பயிற்சிகள் அளித்து மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

"இப்புவியில் நமது பொதுவீட்டையும் வாழ்வையும் காப்போம்" என்ற மையச் சிந்தனையோடு சுற்றுச்சூழல் பெருங்காப்பியமாகிய "இறைவா உமக்கே புகழ்" மூலம் திருத்தந்தை பிரான்சிஸ் இயற்கையைப் பேண அழைப்பு விடுத்தார். சிறு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஆதரவு தரும் சமுதாய அமைப்புகளை உருவாக்குதல், சொந்த ஊர்களிலுள்ள சூழலியல் அமைப்புகளுக்கு இடையூறுகள் இல்லாமல் விவசாயம் செய்யும் திட்டங்கள் மற்றும் இதுபோன்ற எண்ணற்ற முயற்சிகளைச் சமுதாயம் மேற்கொள்ள வேண்டியுள்ளது என திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார். ஆம்! தொழிலாளர்களின் மாண்பைச் சிதைக்காத தொழில் முன்னேற்றம், புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குதல் ஆகியவற்றைத் திருஅவை உழைப்பாளர்களின் வளர்ச்சிக்காக ஆதரிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட உழைப்பாளிகளுக்காக உரிமைக் குரல் கொடுத்து ஆதிக்கச் சக்திகளை எதிர்த்துப் போராடுவதும் திருஅவையின் கடமை என்பதை மறக்க வேண்டாம்.[5]





### 6.2. உயிர்க்கொல்லி நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அருள்பணி

இந்தியாவில் ஓர் ஆண்டுக்கு 10 இலட்சம் பேர் புதிதாக பலவகையான புற்றுநோய்களினால் பாதிக்கப்படுகிறார்கள். இதில் 90% பேர் வலியில் துடிதுடித்து அவதியுறுகின்றனர். இந்திய தேசியப் புற்றுநோய்ப் பதிவேட்டுத் திட்டத்தின் சமீபத்திய ஆய்வறிக்கை இதைக் கூறுகிறது: இந்தியா 2020-ஐ அடையும்போது புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக உயர்ந்திருக்கும். இந்நோயாளர்களுக்குப் பணி செய்வதும், இந்நோய் வராது தடுப்புப் பணிகள் மேற்கொள்வதும் அருள்பணியே ஆகும். தமிழகத்தில் மக்களின் சாவை அதிகரிக்கும் காரணிகளில் முக்கியமான ஒன்று புற்றுநோய் ஆகும். ஒவ்வோர் ஆண்டும் இதனால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. 60% புற்றுநோயாளிகள் புற்றுநோய் முற்றிய நிலையில் உள்ளனர்; 90% புற்றுநோயாளிகள் வலியால் அவதிப்படுகின்றனர் என்று இந்திய வலிநிவாரண சிகிச்சை ஆய்வுக்கழகம் நடத்திய அறிக்கை கூறுகிறது. இச்சூழலில் 'வலிநிவாரணப்பணி' இன்று நமது மறைமாவட்டங்களில் செய்யவேண்டிய ஒரு முக்கியமான அருள்பணி ஆகும். கோட்டாறு மறைமாவட்டத்தில் 'ஆதரவு' எனும் ஒரு மையம் வலிநிவாரண சிகிச்சைக்காகச் செயல்படுவது பாராட்டுதற்குரியது. தவிர, நோயை ஏற்றுக்கொள்ளும் ஏற்புநிலைக்குத் தயாரிப்பது, மருத்துவ சிகிச்சையைத் துரிதப்படுத்த மருத்துவ சிகிச்சைக்கு உதவுவது, புற்றுநோயால் பாதிக்கப்பட்டு நம்பிக்கை இழந்த நிலையில் இருப்போருக்கு மருத்துவமையங்கள் ஏற்படுத்துவது, நோயாளிகளுக்கு ஆற்றுப்படுத்துதல் உதவிகளை ஏற்பாடு செய்துகொடுப்பது, செப உதவிகள் வழங்குவது இவை மேலான அருள்பணிக் கடமைகள் ஆகும்.[6]

அது மட்டுமல்ல, எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிக அளவில் ஆதரவும் வழித்துணையும் உளநல உதவியும் மருத்துவ உதவியும் தேவைப்படும் சூழலில் மிகக் குறைந்த அளவிலேயே இந்த வசதிவாய்ப்புகள் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் 1.43 இலட்சம் பேர் எச்.ஐ.வி. உடன் வாழ்ந்து வருகின்றனர். இது தேசிய சராசரியாக பாதிக்கப்பட்ட மக்கள் தொகையை விட 0.27 அதிகமாக உள்ளது. உயிர்க்கொல்லி நோயான எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் நோய்களைப் பொறுத்தவரையில், நோயினை ஏற்றுக்கொள்ளவும், நோயினால் வரும்

விளைவுகளை அறிந்து கொள்ளவும், மனப் பாதிப்புகளிலிருந்து வெளிவரவும் ஆற்றுப்படுத்துதல் பணி செய்யவேண்டும். குடும்பத்தினருக்கும் ஆற்றுப்படுத்துதல் வழங்க வேண்டும். எச்.ஐ.வி. நோயாளிகளை பல்வேறு அமைப்புகளுடன் இணையச்செய்து கலந்துரையாடல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் தங்கள் மீது சுமத்தப்பட்ட ஒதுக்குதல், புறக்கணித்தல் இவற்றை நீக்கிட உதவமுடியும். எய்ட்ஸ் நோய் ஒரு சாபமல்ல என்ற விழிப்புணர்வை ஊட்டி இயேசுவின் நோயாளிகளுக்கான இரக்கப்பணியை இவர்களுக்கும் இவர்கள் குடும்பத்தினருக்கும் கொடுப்பது தமிழகத் திருஅவை செய்ய வேண்டிய பணியே. திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதுபோல "இரக்கம் காட்டுவதில் இறைவன் சலிப்படைவதே இல்லை." அரசு மருத்துவமனைகளில் வெறும் மருத்துவ வசதிகள் மட்டுமே செய்து தரப்படுகின்றன. ஆனால், நமது மறைமாவட்டங்களில் மறுவாழ்வு இல்லங்கள் மூலம் மருந்துகளோடு நம்பிக்கை, அன்பு, ஆற்றுப்படுத்துதல் மற்றும் நோயைக் குணமாக்க வழிவகை செய்தல் போன்ற ஒருங்கிணைந்த நலவாழ்வுப் பணி செய்யலாம்.

இவர்களுக்குச் சத்தான, ஊட்டச்சத்து மிக்க உணவு மிகவும் அவசியம். எனவே, அதைத் தருவதற்கு நமது பங்குகளிலிருந்து ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டும். மற்றும், குழுத் தரப்பில் யோகா, தியானம், உணவைப் பற்றிய முக்கியத்துவம் இவற்றைக் கற்றுக்கொடுத்தல் வேண்டும். இந்நோயாளிகள் வாழ்வின் இறுதிக்கட்டத்தை எட்டும் நிலையும் சூழலும் திடீரென வரலாம். எதையும் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு இறைநம்பிக்கையை ஊட்டி இவர்களை வளர்ப்பது மிகவும் அவசியம்.

### 6.3. புலம்பெயர்ந்தோருக்கான அருள்பணி

புலம்பெயர்ந்த வாழ்வு என்பது வேதனையான, சிக்கலான ஒரு எதார்த்தம். புலம்பெயர்தல் பயத்தையும் பாதுகாப்பற்ற நிலையையும் சொல்லொண்ணாத் துன்பங்களையும் உருவாக்கி எதிர்காலத்தை கேள்விக்குறியாக்குகிறது. புலம்பெயர்ந்தோருக்கு எதிராகத் தொடுக்கப்படும் வன்கொடுமைகள், அநீதிகள் மனித வரலாற்றில் இன்றுபோல் என்றும் மனிதாபிமானமற்றதாக, கொடூரமாக இருந்ததில்லை. தற்போது தமிழகத்தில் மட்டும் இலங்கையிலிருந்து வந்த புலம்பெயர்ந்தவர்கள் எண்ணிக்கை 65,674ஆக உள்ளது. புலம்பெயர்ந்து 'அகதிகள்' எனும் கொடுமையான





பெயருடன் வாழும் மக்களுக்கு நாம் காட்டும் உபசரிப்பும், வரவேற்பும் தீவிரவாதத்திற்கு எதிராக நாம் கொடுக்கும் குரல் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார். 2013இல் 'அகதிகளிடமும் புலம்பெயர்ந்தவர்களிடமும் நாம் வரவேற்கும் கிறிஸ்து' என்ற மடல் எழுதிப் புலம்பெயர்ந்தோருக்கான அருள்பணிகளை முடுக்கிவிட்ட அவர், 2016இல் தமது பிறந்தநாளின்போது, புலம்பெயர்ந்த மக்களைத் தாம் வசிக்கும் சாந்தா மார்த்தா இல்லத்திற்கு அழைத்து உபசரித்து விருந்தளித்து மகிழ்ந்தார்.[7] ஆக! காலத்தின் அறிகுறிகளை நன்கறிந்து திருஅவை புலம்பெயர்ந்தோருக்கு ஆற்ற வேண்டிய அருள்பணிகளின் முக்கியத்துவத்தை முன்னிறுத்திக் காட்டும் திருத்தந்தையின் பாதச்சுவடுகளைப் பின்பற்றி தமிழகத் திருஅவை நடைபோடட்டும்.

இன்று பல துறவற அவைகள் இப்பணிகளை முன்னெடுத்துச் செய்து அளப்பரிய செயல்களைப் பல இடங்களில் செய்துவருகின்றனர். தமிழக மறைமாவட்டங்களில் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அருள்பணித்திட்டங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. புலம்பெயர்ந்தோரை, குறிப்பாக, தமிழக முகாம்களிலே உள்ளோரைச் சந்தித்து, உரையாடி அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்குவது, புலம் பெயர்க்கப்பட்ட குழந்தைகளின் கல்விக்கு உதவுவது, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களுக்கு வழிகாட்டுவது போன்றவற்றை முன்னெடுக்க வேண்டும். இன்று தமிழகத்தில் வளர்ச்சி எனும் போர்வையில் தொடங்கப்படும் பல திட்டங்களால் பலர் புலம்பெயர்ந்து சொந்த மாவட்டங்களிலே அகதிகளாகும் நிலை உருவாகிவரும் சூழலில் இது பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதும், மனிதவாழ்விடங்கள், வாழ்வாதாரங்களை அழித்தொழிக்கும் அவலங்களுக்கெதிராக உழைக்க முன்வருவதும் நமது அருள்பணிக் கடமைகளில் ஒன்றாகும்.

### 6.4. திருநங்கையர்களுக்கான அருள்பணி

திருநங்கைகள் அனுபவிக்கும் அவலமான வாழ்க்கையும் ஒவ்வொரு நாளும் அவர்கள் சுமக்கும் வலிகளும் அனுபவிக்கின்ற அவமானங்களும் பாகுபாடுகளும் எதிர்கொள்ளும் சவால்களும் நிறையவே உள்ளன. திருநங்கையராக இருப்பதாலேயே அவர்களை மனிதர்களாக வாழ்வதற்குத் தகுதியற்றவர்களாக ஆக்கிவிடுகிறது இந்தச் சமூகம். அவர்களது இருத்தலும்

நடமாட்டமும் நம்மில் பெரும்பாலோனோருக்குக் கேலிக்குரிய பொருள்களாகவே ஆகிவிட்டன.

கடவுள் மனுக்குலம் முழுமையையும் படைத்தார். தம் உருவிலே மனிதரைப் படைத்தார். தாம் படைத்த அனைத்தும் நல்லதென்றே அவர் கண்டார் (தொநூ 1:25). தொடக்க நூல் காட்டும் ஆதாம் மனிதரின் முன்மாதிரியே தவிர, விசித்திரப் படைப்பு அல்ல. அதுமட்டுமல்ல, ஆதாம் பாலின வேற்றுமைக்கான பிரதிநிதி அல்ல. மாறாக, மனித இனத்தின் பிரதிநிதி. எனவே திருநங்கையராகப் பிறக்கிற அல்லது பெண்ணாகப் பிறந்து ஆணாக, ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறுகின்ற அல்லது மாற்றப்படுகின்ற திருநங்கைகளுக்கும் ஆதாமே பிரதிநிதி.[8] திருத்தந்தை பிரான்சிஸ் எப்போதெல்லாம் திருநங்கைகளைப்பற்றிப் பேசுகிறாரோ அப்போதெல்லாம் அவர் கூறுவது, ''அவர்களும் கடவுளின் பிள்ளைகள்'' என்பதுதான்.

இயேசு முன்மொழிந்த இறையாட்சிச் சமூகம் எல்லோரையும் உள்ளடக்கியது; யாரையும் விலக்கிவிடாதது. எனவே, அவர்கள் நம் பணியில் முதன்மை பெறவேண்டும். கத்தோலிக்கத் திருஅவை இன்று பல பணிகளை முன்னெடுக்கும் நிலையில் திருநங்கைகள் சார்பாகவும் பல பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

திருநங்கையரைக் கண்டால் இயல்பாகப் பேசிப்பழகி உறவு பாராட்டுவது, அவர்களின் திறமைக்கேற்ற வேலைகளைப் பெற, அவர்கள் அரசிடம் கோரும் கோரிக்கைகள் நிறைவேற முன்னின்று முயற்சிகள் மேற்கொள்வது, நமது ஆலயங்களில் இவர்களையும் ஆலயப் பணிகள் செய்வதற்கும் வழிபாடுகளில் முன்னின்று கலந்துகொள்வதற்கும் அனுமதிப்பது என்பவை நாம் செய்யும் அருள்பணிகள் ஆகும்.

ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் உள்ள பெண்கள் பணிக்குழுவோடு, திருநங்கைகளின் வளர்ச்சிப் பணிகளை முன்னெடுக்க பணிக்குழுவை உருவாக்கி ஏன் திறம்பட மேற்கொள்ளக் கூடாது? மறைமாவட்டத்தின் பல்நோக்கு சேவை மையங்கள் திருநங்கைகளின் முன்னேற்றத்திற்காகச் சுய உதவிக்குழுக்கள் ஏற்படுத்துவது, பயிற்சிகள் வழங்குவது பற்றிச் சிந்திக்கலாம். நம்முடைய கிறித்தவக் கல்விக்கூடங்கள் மற்றும் நிறுவனங்களில் திருநங்கைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பு என அனைத்திலும் வாய்ப்பளித்தல்





வேண்டும். நம்முடைய மருத்துவமனைகளில் அவர்களுக்குச் சிறப்பு மருத்துவ உதவிகள் வழங்குதல், நமது உளவியல் மையங்களில் அவர்களுக்குத் தேவையான ஆற்றுப்படுத்துதல் பணிகள், வழிகாட்டும் பணிகள் போன்றவற்றை முன்னெடுக்க உடனடி முயற்சிகள் மேற்கொள்வது அவசியம்.

### 6.5. மாற்றுத்திறனாளிகளுக்கான அருள்பணி

மாற்றுத்திறனாளிகள் பற்றிய பார்வையும் பணிகளும் உலகளவில் பல முன்னேற்றங்களைக் கண்டிருந்தாலும் இந்தியாவிலும் தமிழகத்திலும் அப்படிப்பட்ட வாய்ப்புகளும் பணிகளும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. திருத்தந்தை பிரான்சிஸ் இத்தாலியப் பிறரன்பு அமைப்பினரைச் சந்தித்து உரையாற்றியபோது பின்வருமாறு கூறினார். ''மாற்றுத்திறனாளிகள் திருஅவையின் வளங்கள்'' என்று. கடவுளின் பரிவிரக்க முகத்தை மாற்றுத்திறனாளிகளுக்குப் பாசத்துடன் காட்டி மாண்புறச் செய்யும் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி மாற்றுத்திறனாளிகளின் மாண்பினை வளர்த்தெடுக்க மாற்றுத் திறனாளிகளுக்கான அருள்பணிகளைத் தமிழகத் திருஅவையில் முடுக்கி விடுவோம்.

தமிழகத்தில் 11.79 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். 6 வயதுக்குட்பட்டோர் 65 ஆயிரம். 4.64 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் கல்விபயிலாதோர். 2.20 இலட்சம் பேர் காது கேட்பதில் குறைபாடு உடையோர். 1.27 இலட்சம் பேர் பார்வைக் குறைபாடு உடையோர். 80 ஆயிரம் பேர் பேச்சுக்குறைபாடு உடையோர்.

மாற்றுத்திறனாளிகள் திருஅவையில் அங்கீகாரமின்றி ஓரத்தில் ஒதுங்கி உள்ளனர். மாற்றுத்திறனாளிகளைப் பங்குகளில் சமமாக மதித்து அங்கீகரிப்பதும் அவர்களுக்கு மண்டல, வட்டார அளவில் குழுக்கள் உருவாக்கி நம்பிக்கையூட்டுவதும் அவர்களை மையத்திற்குக் கொண்டு வருவதும் அவசியமானது. அன்பியங்களில் தனிப்பட்ட அக்கறைகாட்டி அவர்களை அடிக்கடி சந்தித்து ஊக்கமூட்டுவது, உதவுவது இன்றியமையாதது. தவிர, நமது ஆலயங்களில் அவர்கள் சிரமமின்றி ஏறி உள்ளே வருவதற்கான வசதிகள், மற்றும் அவர்களுக்கான சிறப்பு இருக்கை வசதிகள் செய்துகொடுப்பது அத்தியாவசியமானது. இன்று புதிதாகக் கட்டப்படும் ஒருசில ஆலயங்களில் மாற்றுத்திறனாளிகளை மனதில் கொண்டு சாய்தளம் அமைக்கிறார்கள்.

பாராட்டப்படவேண்டிய செயல். இது நமது எல்லா ஆலயங்களிலும் அறிமுகமாக வேண்டும். அரசிடமிருந்து கிடைக்கவேண்டிய உதவித்தொகையைப் பெற்றுக்கொடுக்கவும், இவர்களது உரிமைகளுக்காக முன்னின்று குரல்கொடுப்பதும், மறைமாவட்டத்திற்குள் இயங்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனங்களுக்கு ஆதரவளித்து அவர்களோடு இணைந்து தேவையான பணிகளை முன்னெடுப்பதும் நமது அருள்பணிக் கடமைகளாகும்.[9]

### 6.6. தற்கொலைத் தடுப்பு அருள்பணி

தேசியக் குற்றவியல் துறையின் அறிக்கையின்படி தற்கொலை விகிதமுறையில் இந்தியாவில் தமிழ்நாட்டிற்கு இரண்டாவது இடம். தமிழ்நாட்டில் 2009ஆம் ஆண்டு 14,424 பேர் தற்கொலை செய்தனர். 2010ஆம் ஆண்டில் 16,561 தற்கொலைகள் நடந்ததாகவும், சென்னையில் மட்டும் 1,300 பேர் தற்கொலை செய்து கொண்டதாகவும் அரசின் தகவல் அறிவிக்கிறது. விவசாயிகள், பள்ளி மாணவர்கள், அரசு அதிகாரிகள், சாதாரணக் குடிமக்கள் என்று மன அழுத்தத்தால் தற்கொலை செய்து கொள்ளும் நபர்களின் பட்டியல் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. நவீன காலத்துச் சிறார்கள், இளையோர் மைதானம் சென்று வியர்வை சிந்தி விளையாடுதல் என்பதை மறந்து நவீன ஊடகங்கள், ஆன்ட்ராய்ட் கைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக விளையாடி விபரீத முடிவுகளுக்கு ஆளாகின்றனர்.[10] தற்காலப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு தற்கொலை எனும் தவறான, அவசர, அகால முடிவுகளைத் தடுத்து நிறுத்தத் தற்கொலைத் தடுப்பு அருள்பணி முக்கிய தேவையாக உள்ளது.

தற்கொலை எண்ணம் கொண்டவர் தனியாக இல்லை என அருகிலிருந்து தைரியம் கொடுத்தல், நிபந்தனையற்ற நேர்நோக்குடன் கூடிய கரிசனையான செவிமடுப்பு, தீவிர மனஅழுத்தத்தில் இருந்தால் உடனடியாக மனநலமருத்துவரிடம் அழைத்துச் செல்ல உதவுவது ஆகியவை முக்கியமானவை. விவசாயிகளின் தற்கொலைகள் தமிழகத்தில் அதிகரித்துக் கொண்டுவரும் சூழலில் அருள்பணியாளர்கள் அவர்களுக்கான பொருளாதார முன்னேற்றப் பணிகளை முன்னெடுத்து உடனிருந்து பயிற்றுவித்தல், வழிகாட்டுதல் ஆகிய முயற்சிகளின் மூலம் தற்கொலையைக் கைவிட்டு வாழ உதவலாம். பதின்பருவத் தற்கொலைகளைத் தடுத்திடும் வகையில்





பங்குகளிலுள்ள அருள்பணியாளர்கள் குழந்தைகளின் பெற்றோர்களின் கடமைகள் பற்றிய புரிந்துணர்வைத் தெளிவுபடுத்துவது அவசியம். போட்டிகள் நிறைந்த சூழலில் குழந்தைகள் பெற்றோரிடம் அதிகம் எதிர்பார்த்து மனஅழுத்தங்களுக்கு ஆளாவதால் குழந்தைகளின் தனித்தன்மை மிளிரும் ஆளுமைப் பண்புகளை வளர்க்கும் பயிற்சிகளைப் பலமட்டங்களில் மறைமாவட்டங்களில் முன்னெடுப்பது அவசியம். கடுஞ்சொற்கள், ஏமாற்றம், தோல்விகள், மற்றும் வலிகளைத் தாங்கிக்கொள்ளக் குழந்தைகளை தயார் செய்து குழந்தைகள் உருவாக்கத்தில் முனைப்புடன் செயல்பட மறைமாவட்டச் சிறார் பணிக்குழுக்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

பள்ளி மாணவ மாணவிகளை அணுகும் அருள்பணியாளர்கள் பள்ளிப்பருவம் மதிப்பெண்கள் எடுப்பவர்களை உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் அல்ல, மாறாக, அவர்களிடம் காணப்படும் மூளை வளர்ச்சிக்குறைபாடு, அதீத சுறுசுறுப்பு, கற்றல் குறைபாடு ஆகிய பாதிப்புகளைக் கண்டறிந்து ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும்படி மறைமாவட்டங்களின் பள்ளிகளில் ஆசிரியர்களோடு இணைந்து அருள்பணியாளர்கள் மற்றும் அருள்சகோதரிகள் மாணவர்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுவது அன்றாட அருள்பணிக் கடமையாகும்.

### 6.7. சிறைவாசிகளுக்கான அருள்பணி

இயேசு கூறினார்: ''நான் சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்'' (மத் 25:36) என்று. சிறைப்பணி என்பது ஓர் ஆள்மையப்பணி. இழந்த ஆட்டைத் தேடும் கதைதான் சிறைப்பணி. இன்றைய இந்தியச் சிறைச்சாலைகள் மனிதக் கிடங்குபோல அதிகக் கூட்டமாக உள்ளன. தற்போது நம் சிறைச்சாலைகளில் 3,68,998 கைதிகள் இருந்தாலும் இதன் கொள்ளளவானது 3,20,450 என்பதும், 48,548 கைதிகள் அதிகமாக உள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கடந்த 10 வருடங்களில் தமிழ்நாட்டில் 95 பேர் மரணதண்டனைக் கைதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். ஒரு சிறு அரங்கானது கதவில்லாக் கழிப்பறையைக் கொண்டு, சுமார் 40 முதல் 50 கைதிகளை உள்ளடக்கியுள்ளது. கைதிகளின் மாற்றத்திற்கான சூழ்நிலையைவிட அவர்கள் குற்ற வளர்ச்சிக்கான சூழல்தான் அதிகம் உள்ளது.[11] சிறைக்கைதிகள் மனவிரக்திக்கு ஆளாக்கப்பட்டு, சமூகத்தால் ஒதுக்கப்பட்டு, சாகும்வரை சிறைவாசி எனும் முத்திரை குத்தப்பட்டு எதிர்காலத்தை இழந்து நிற்கும்

வேளையில் சிறைக்கைதிகளிலும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் திருமுகத்தைக் காண்பதன் மூலம் தமிழகத் திருஅவையில் எல்லா மறைமாவட்டங்களிலும் சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு வழங்கவும், அதே நேரம், குற்றமில்லாத் தமிழகத்தை உருவாக்கும் விழிப்புணர்வையும் இவ்வருட்பணி மூலம் ஏற்படுத்துவது தமிழகத் திருஅவையின் கடமை ஆகும்.

ஆற்றுப்படுத்துதல் பணிகள் மூலம் தவறிழைத்தோர் தன்னுணர்வு பெற, தவறை உணர, தன்னைத் தானாக ஏற்றுக்கொள்ள சிறைவாசிகளுக்கு உதவமுடியும். மட்டுமல்ல, மன்னித்து ஏற்றுக்கொள்ளவும், சந்தித்து உரையாடவும், உறவாடவும் சிறைவாசியின் குடும்பங்களையும் இப்பணி சென்றடைய வேண்டும். அதோடு, பாதிக்கப்பட்ட குடும்பங்களையும் மன்னித்துச் சூழ்நிலையை ஏற்க உதவுவது மிக அவசியமான ஒன்றாகும்.

கல்வி மற்றும் சுயதொழில் கற்க உதவுதல் மூலமாக சிறைவாசியை ஆற்றல்படுத்தலாம். பொருளாதாரப் பணியாகச் சிறைவாசிகளுக்குக் கல்விப்பொருட்கள், அடிப்படைத் தேவையான பொருட்கள் மற்றும் சிறைவாசியின் குடும்பங்களுக்கும் குழந்தைகளின் கல்விக்கும் உதவுதல், அரசின் சலுகை பெற உதவுதல் போன்ற காரியங்களைச் செய்துகொடுக்க ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் உள்ள சிறைப்பணி குழுக்கள் முன்வர வேண்டும். ஆன்மீகப் பணியாக, தன்னை மீறிய, அறிவுக்கு அப்பாற்பட்ட சக்தியில் அபார நம்பிக்கை வைக்கச் சிறைவாசிகளைப் பக்குவப்படுத்துதல் ஒரு தலைசிறந்த பணியாகும்.

மேலும், மறைமாவட்டங்களில் தன்னார்வக் குழுக்களை ஏற்படுத்தி சிறைக்கைதிகளின் குடும்பம், அவர்களால் பாதிக்கப்பட்ட குடும்பம் இவற்றைச் சந்தித்து அன்புறவு ஏற்படுத்த முயலுதல், தண்டனை வழக்கிற்காக வழக்கறிஞர்கள் மூலம் உதவுதல், பக்த சபைகள் இணைந்து சிறைக்கைதிகளைச் சந்திக்க ஊக்குவித்தல், சுயதொழில், கைத்தொழில் பயிற்சி பெற உதவுதல், வேலைவாய்ப்புப் பயிற்சி பெற உதவுதல், அரசு விடுமுறை நாட்களில் கலைவிழா நடத்தி சிறைக்கைதிகளின் திறமைகள் வளரவும், சூழ்நிலை மாற்றம் ஏற்படவும் முயலுதல், சிறைப்பணி நாள் கொண்டாட்டத்தைப் பங்குகளில் கொண்டாடி இப்பணிக்காகச் சிறப்புக் காணிக்கைகள் வழங்கி உதவுவது – இவை போன்ற பல்வேறு பணிகள் மூலம் இவர்களுக்குச் சிறப்பு அக்கறை காட்டலாம்.





## 6.8. குடிநோயாளிகளுக்கான அருள்பணி

இன்றைய சமூகத்தில் குடியும், போதையும் அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் வேகமாகப் பரவி வருகிறது. இந்தக் குடி மற்றும் போதைக் கலாச்சாரம் மாணவச் சமுதாயத்தைச் சிக்கவைத்துச் சின்னாபின்னமாக்குகிறது. விவிலியத்தில் நீதி மொழிகள் "மது, தொண்டைக்குள் செல்லும் போது இனிமையாய் இருக்கும்; பிறகோ அது பாம்பு போலக் கடிக்கும்; விரியனைப் போலத் தீண்டும்" (நீமொ 23:31-32) என்று அறிவுறுத்துகிறது.

மதுவுக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதோடு 1950-60களில் போதைப்பொருள் பயன்படுத்தத் தொடங்குபவர்களின் வயது சராசரியாக 23-26 இருந்தது. இப்போது 11-13 வயதிற்கும் குறைவான பள்ளி மாணவர்கள் மது அருந்தி அதற்கு அடிமையாவது தமிழகத்தின் அவலநிலையாக உள்ளது.

மதுத் தயாரிப்பு அதிகரிப்பதால் மது விற்பனை அதிகரிக்கிறது. மது விற்பனை அதிகரிப்பதால் மது குடிப்பவர்கள் அதிகரிப்பதால் வயது குறைந்தவர்களே குடிக்க ஆரம்பிக்கின்றனர். மதுவினால் மட்டும் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு 10,000 முதல் 15,000 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. மதுகுடிக்கும் ஒருவரால் 28 பேர் பாதிக்கப்படுவதாக ஓர் ஆய்வு கூறுகிறது. குடிநோயாளிகளின் குடும்பத்தில் உள்ளோர் சகநோயாளியாக மாறுகின்றனர். குழந்தைகள் அனாதைகளாக மாறிவிடுகின்றனர். மதுவினால் இன்று தமிழகத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. நடைபெறும் விபத்துக்களில் பலியாகும் 20 முதல் 40 வயதுக்குட்பட்டோரில் பெரும்பான்மையோர் மது அருந்தி வாகனம் ஓட்டுபவர்கள் என உறுதி செய்யப்பட்டுள்ளது.[12] குடும்பங்களின் பொருளாதார இழப்பிற்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் பெருந்தடையாக இருப்பது மதுப் பழக்கமாகும்.

தமிழகத் திருஅவையில் சில மறைமாவட்டங்கள் மற்றும் துறவற அவைகள் மிகச் சிறப்பாக குடிநோயாளிகளுக்கான சிகிச்சைகள் வழங்கி வருகின்றனர். பல குடும்பங்கள் இந்தச் சிகிச்சையைப் பெற்று குடும்பங்களில் மாற்றங்களையும், ஏற்றங்களையும் கண்டு வருகின்றன. தமிழகத்தில் எல்லா மறைமாவட்டங்களும் முழுவீச்சோடு பணிக்குழுக்களின் துணையோடு இப்பணிகளைச் செய்து ஆரோக்கியமான குடும்பங்களை உருவாக்க

முயற்சிகள் மேற்கொள்வது அவசியம். ''போதை விழிப்புணர்வு தினம்'' என ஒரு ஞாயிறு திருப்பலியைச் சிறப்பிப்பதோடு பங்குகளில் இப்பணிக்கான கடமை முடிந்துவிட்டது எனக் கருதுகிறோம். அதற்கு மாறாக, எல்லாப் பங்குகளிலும் மதுநோய் நலப்பணிக்குழுவை ஏற்படுத்தி பங்கு நிர்வாகத்தின் உதவியோடு ஏன் இந்தப் பணியை தீவிரப்படுத்தக் கூடாது? அன்பியங்கள் வழியாக மதுநோயாளிகள் பற்றிய எண்ணிக்கையைக் கணக்கெடுத்துச் சிகிச்சைக்கு அழைத்துச்செல்லும் விழிப்புணர்வைக் கொடுத்தல், சிகிச்சை செய்யப் பண வசதியில்லாதவர்களுக்கு பண உதவிகள் செய்யும் நல்மனம் கொண்ட நன்கொடையாளர்களை அடையாளம் காணுதல் - இவை எல்லாம் இப்பணிகளைச் செய்வதில் நாம் இன்று கவனிக்கவேண்டிய முக்கியமான காரியங்கள்.

குடிநோயளிகளின் தொடர்வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளுக்கு 'ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ்' (Alcoholics Anonymous), குடும்பத்தினருக்கு 'அல் அனான்' (Al-Anon), குழந்தைகளுக்கு 'அலடீன்' (Alateen), போன்ற சுயத்தோழமைக் குழுக்களோடு தொடர்பில் நிலைத்திருக்கக் களப்பணி ஆற்றுவது சிறப்பான ஒன்று.

இதன் தொடர்ச்சியாக இன்று தமிழகத் திருஅவை முன்னெடுக்கவேண்டிய ஒரு சிறப்பு அருள்பணி 'ஆற்றுப்படுத்துதல் அருள்பணியாகும்'. இன்று குடியினால் மட்டுமல்ல இன்னும் பல்வேறு குடும்பப் பிரச்சினைகளாலும் தனிப்பட்ட காரணங்களாலும் சமூகக் காரணிகளாலும் நவீன மின்னனு ஊடகங்களின் தாக்கங்களாலும் குழந்தைகள் முதல் பெரியவர் வரை பலரும் மன அழுத்தங்களுக்கு ஆளாகின்ற புதிய சூழல் உருவாகியுள்ளது. அமைதியாக வெளித்தோற்றத்தில் இருப்பதுபோலக் காட்சியளிக்கும் பலர் மனவேதனைகளோடும் மன அழுத்தங்களோடும், குமுறுகின்றனர். இந்நிலையில் குழந்தைகளை ஆற்றுப்படுத்தல், மாணவர்களை ஆற்றுப்படுத்தல், குடும்பங்களை ஆற்றுப்படுத்தல், மதுநோயாளிகளை ஆற்றுப்படுத்தல், மனநல ஆற்றுப்படுத்தல் என்று மறைமாவட்டங்களில் நிபுணத்துவம் நிறைந்த அருள்பணியாளர்கள், பொதுநிலையினரை இப்பணிக்காக உருவாக்கிக் களப்பணியில் அமர்த்துவது இன்றைய காலத்தின் கட்டாயமாக உள்ளது. இன்று ஒருசில மறைமாவட்டங்கள் ஆற்றுப்படுத்துதல்





பணிக்காகத் தனிப்பணியகம் அமைத்து, முழுநேரப் பணியாளரை நியமித்து பணிகளை முன்னெடுக்க ஆரம்பித்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

### 6.9. முதியோருக்கான அருள்பணி

இந்தியாவில் மொத்தம் 1020க்கு மேற்பட்ட முதியோர் இல்லங்கள் உள்ளன. கேரளாவில் மட்டும் 125க்கு மேல் முதியோர் இல்லங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் முதியோர் இல்லங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே செல்கின்றன.

இந்தக் கணினி உலகில் மனிதர்கள் பொருளாதாரத்தில் வளர்ந்திருக்கிறார்கள். ஆனாலும், மானிட மதிப்பீடுகள் முழுமையாக வளரவில்லை என்பதைப் பெருகிவரும் முதியோர் இல்லங்கள் உணர்த்துகின்றன. உலகில் அதிகம் உரிமை உள்ளவர்கள் முதியவர்கள். நாம் வாழ மலர்ப்பாதை அமைத்தவர்கள். ஆனால், இன்று புறக்கணிக்கப்படுகிறார்கள். நரைமுடி மதிப்பிற்குரிய மணிமுடி (நீமொ 16:31). முதியோரிடம் கடுமையாய் இராதே. அவர்களைத் தந்தையராய் மதித்து ஊக்குவி (1 திமோ 5:1). புறக்கணிப்பைத் தாங்கிக்கொள்ள முடியாமல் புண்பட்டுக் கிடக்கும் முதியோர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுவது அருள்பணியின் அத்தியாவசியக் கடமை ஆகும்.[13]

மேலும், உணவு இன்றித் தவிக்கும் முதியோர்களைப் பங்குகளில் அடையாளம் கண்டு சமைத்த உணவுப் பொட்டலங்களைச் சேகரித்து தன்னார்வத் தொண்டர்கள் மூலம் வழங்கலாம். இது முதியோரை வாழ வைக்கும் திட்டம். ''ஈதல் இனிது'', ''பெற்றோரைத் தேடி'' போன்ற திட்டங்கள் அண்மையில் ஒருசில அருள்பணியாளர்களால் இப்பணிக்காக உதயமாகியுள்ள புதிய திட்டங்கள்.

அரசின் நலத்திட்டங்களை முதியோர்பெற உதவுவது, முதியோர்களுக்கு மருத்துவ உதவிகள், பராமரிப்பு உதவிகள் போன்றவற்றைப் பங்கிலுள்ள சபைகள், இயக்கங்கள், அன்பியங்கள் திட்டமிட்டுச் செய்வது, முதியோர்களுக்குச் செவிமடுப்பது, தனிமையில், நோயில், வேதனையில் அவர்கள் அருகில் இருந்துபேசுவது, அன்புகாட்டுவது, அவர்கள் செய்த சாதனைகளை, நற்பண்புகளை குடும்பத்தில் சொல்லிப் பெருமைப்படுத்திக் கௌரவிப்பது, அருள்பணியாளர்கள் அவர்களை அடிக்கடி சந்தித்து நற்கருணை வழங்குவது,

நிகழ்காலத்தில் உள்ள செய்திகளை அறியமுடியாமல் நம்பிக்கை குன்றியோர்களுக்கு அவற்றை வாசித்துக்காட்டி நிகழ்கால இருப்பைத் தெளிவுப்படுத்துவது ஆகியவை சிறப்பான அருள்பணிகளாகும்.

### 6.10. கைம்பெண்களுக்கான அருள்பணி

போர், இயற்கைச் சீற்றம், திடீர் விபத்துகள், அகால மரணம், தற்கொலை போன்ற முக்கிய காரணிகளால் பெண்களே அதிக அளவில் தனிமைக்குத் தள்ளப்பட்டு, ஒற்றையாக நிற்பதோடு கைம்பெண்ணாகும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். நீண்டகால உடல், உளப் பாதிப்புகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். தமிழகத்தில் சுமார் 40 லட்சம் விதவைகள் உள்ளனர். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் விதவைகள் அதிகம் என்கிறது ஐ.நா. அறிக்கை.[14] சமுதாயத்தால் ஓரங்கட்டப்படும் கைம்பெண்களின் வாழ்வு மனித மாண்பில் மலர்ந்திட அவர்கள் குடும்பங்களைச் சந்தித்து, உடனிருப்பையும் வழிகாட்டுதல்களையும் கொடுத்து, உணர்வுள்ள உறவுகளையும் உணவுகளையும் பகிர்ந்து உதவுவது அவசியமாகும்.

திருவிவிலியத்தில் சமுதாயத்தில் தாழ்நிலைக்கு ஒதுக்கப்பட்ட கைம்பெண்ணான ரூத் ஆண்களின் ஆதிக்க ஆட்சிக்குச் சவால் விடுத்தார். எருசலேம் ஆலயத்தில், தாராளமாகக் காணிக்கை வழங்கிய கைம்பெண்ணைத் துன்பநெருக்கடிகளின் மத்தியிலும், நாம் நம்பிக்கை மனப்பான்மையோடு செயல்பட இயேசு நமக்கு மாதிரியாகக் காட்டுகிறார் (லூக் 21:4). நயீன் ஊர் கைம்பெண்ணின் கண்ணீர் துடைத்துப் புது நம்பிக்கை ஒளி ஏற்றிட இறந்த இளைஞனை உயிர்பெற்றெழச் செய்து தமது அக்கறையைக் காட்டுகிறார் இயேசு (லூக் 7:10-16).

இன்றைய சூழலில், கைம்பெண்களை முடமாக்கிடும், அடிமைப்படுத்திடும், சமய, பண்பாட்டு, மூடப்பழக்கவழக்கங்களை, சடங்குகளை, சம்பிரதாயங்களைத் தடைசெய்ய விழிப்புணர்வுகள் கொடுப்பது அவசியம். கைம்பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுத்திடத் திருஅவை இன்னும் அதிகமாகப் பாடுபடவேண்டும். சமுதாயத்தால் ஓரங்கட்டப்படும் கைம்பெண்கள் வாழ்வுரிமையை மீட்டெடுக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ளத் தூண்டுதல் செய்வதும் நமது அருள்பணிக் கடமையாகும்.





### அடிக்குறிப்புகள்

1. தமிழக ஆயர் பேரவை, *தமிழகக் கத்தோலிக்கத் திருஅவையின் இலட்சியமும் செயல்திட்டமும்*, சென்னை, 2005, 8.
2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு, *இன்றைய உலகில் திருச்சபை*, திருச்சி: தூய பவுல் இறையியல் கல்லூரி, எண்:4
3. ஜெராட் டீ ரொசய்ரோ, *ஆசியத் திருச்சபையும் நற்செய்தி அறிவிப்புப் பணியும்* (சென்னை: நம்வாழ்வு வெளியீடு, 2014) 52.
4. Cindy Wooden, "Pope: Mercy, Pastoral Care should guide Research on Life, Family" (Journal on Online) (Vatican: Catholic News Service, 2016, accessed October 19, Published on 16 August 2016), available from (https://www.ncronline.org/news/vatican/pope=mercy-pastoral-care-should-guide-research-life-family).
5. கசி. ராயப்பா, *இறைவா உமக்கே புகழ்: சுற்றுச்சூழல் பெருங்காப்பியம்* (சென்னை: திரு இருதயக் கல்லூரி, 2016), 289.
6. அ. ஆல்பர்ட், *தொண்டு ஆற்றிடவே* (திண்டுக்கல்: வைகறை பதிப்பகம், 2013), 38.
7. சேவியர் செல்வம், "புலம் பெயர்ந்தோரின் சவால்கள்", ராஜ் இருதயா, (தொகுப்பு) *விளிம்புகள் தேடும் விடியல்: இறையியல் சிந்தனைகள்* (திண்டுக்கல்: வைகறைப் பதிப்பகம், 2017), 127-138.
8. சூ.ம. செயசீலன், *திருநங்கைகள் வாழ்வியல் இறையியல்* (திண்டுக்கல்: வைகறை பதிப்பகம், 2010), 76.
9. A. Albert, Call to Serve (Nagercoil: Anal Publication, 2017), 91-93.
10. பிரான்சிஸ் சேவியர் நெல்சன், *தற்கொலைத் தடுப்பு விழிப்புணர்வுக் கையேடு* (நாகர்கோயில்: பிரிண்ட்பாயிண்ட், 2016), 45.
11. அ. ஆல்பர்ட், தொண்டு ஆற்றிடவே, 60.
12. பிரான்சிஸ் சேவியர் நெல்சன், *மாணவர்களே... போதையல்ல நமது பாதை* (நாகர்கோயில்: அனல் வெளியீடு, 2015), 14-20.
13. அ. ஆல்பர்ட், தொண்டு ஆற்றிடவே, 64-65.
14. ஜே. இராபர்ட், ராஜ் இருதயா, (தொகுப்பு), விடியல் தேடும் கைம்பெண்கள், விளிம்புகள் தேடும் விடியல், 15-16.